உ

சிவமயம்

ஔவையார்

அருளிச்செய்த

# நல்வழி

## மூலமும்

யாழ்ப்பாணம் — கொக்குவில்

சோதிடபரிபாலினிப் பத்திராதிபர்

**இ. சி. இரகுநாதையர் அவர்கள்**

எழுதிய

**தத்துவார்த்த விளக்க உரையும்.**

இவை

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பிரமாதி௵ ஆவணிமீ

1939

[All Rights Reserved] [விலை ரூபா ~~2-00~~.

தப 9437

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பதிவு இல. 73

10. 5. 1950

7. 6. 1968

170
ஔவை
SLIPR

உசாத்துணை நூல்கள்
இரவல் எதிர்... கன்று

# முகவுரை

இந் நிலவுலகிற் றோற்றமெடுத்த சீவகோடிகளுள் ஐம்புலவுணர்ச்சியோடு பகுத்தறிவுமுணர்ந்து ஆறறிவுடையோராய் விளங்குகின்றவர்கள் மக்களேயாம். இம் மக்கள் கல்விகாரணமாகத் தாம் விரும்பிய நித்திய வின்பத்தையடையும் தகுதியுடையராயிருக்கின்றனர். இத் தகுதிக்கேற்றவாறு அறிவுமுத்தி மேலோங்கச் செய்யும்பொருட்டு, ஈசுரனாலருளப்பட்ட வேதங்களில் கன்மகாண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டம் என மூன்று காண்டங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இக் கன்மகாண்டத்தையும், பக்திகாண்டத்தையும் சைமினி முதலிய முனிவர்கள் ஆரியமொழியில் விரிவாய் விளக்கியுள்ளார்கள். அந்நூல்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு, கன்மகாண்டிகளாலும் பக்திகாண்டிகளாலும் அனுசரிக்கப்பட்டுவருகின்றன. ஞானகாண்டம் ஸ்ரீகிருஷ்ணபகவான், வியாசபகவான் முதலிய தத்துவஞானிகளால் பகவத்கீதை, பிரமசூத்திரம் முதலிய நூல்களாக ஆரியமொழியில் ஆக்கப்பட்டுள்ளது. அம்மகான்களால் ஆக்கப்பட்ட ஞானநூல்களின் சாரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, ஞானகாண்டிகளால் அனுசரிக்கப்படுகின்றன. இம் மூன்று காண்டங்களின் சாரங்களையும் சுருக்கமாகத் தொகுத்து ஔவைப்பிராட்டியார் தமிழ்மொழியில் நாற்பது வெண்பாச் செய்யுட்களுள் அடக்கி, நல்வழி என்னும் பெயரோடு பாடியருளினர். இந்நூலுள் கன்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்றன் நியதிகளும் ஆங்காங்கு விரவியிருக்கின்றன. அவற்றின் விளக்கங்களை உண்மையாக உறுத்தவேண்டும் என்று நமது சமயாபிமானிகள் கேட்டுக்கொண்டமையால் இந் நல்வழியென்னும் நூலுக்குத் **தத்துவார்த்த விளக்கவுரை** என்னும் இப் பேருரையை எழுதி வெளியிடலானேம்.

இதில் அவதாரிகை, பதவுரை, இலக்கணமுடிபு, அகலவுரை, விசாரணையினாற் கண்ட தத்துவவிளக்கவுரை, செய்யுட்களின் பேறு என்பவை வரன்முறையே ஐயந்திரிபற விளக்கித் தெளிவிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வுரையைமக்கள் யாவரும் இனிதுணர்ந்தொழுகி, மக்கட்பிறவி எடுத்துக்கொண்ட பெருமைக் கேற்பக் கடைத்தேறும் கடமைபூண்டிருக்கின்றார்கள்.

9437

இவ்வுரையில் யாதானும் மாறுபாடுகள் காணப்பட்டால் அவற்றை நன்குணர்ந்த பெரியோர் எமக்கறிவிப்பாராயின் நன்றியறிதலோடு ஏற்று மறு பதிப்புகளில் திருத்தி வெளியிடுவேம்.

கொக்குவில்,
யாழ்ப்பாணம்;
பிரமாதிஷு ஆவணிீ. }

இங்ஙனம்
இ. சி. இரகுநாதையர்.

---

## உரைச் சிறப்புப்பாயிரம்

மண்டைதீவு
சோதிடவித்துவான்
பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள்
சொல்லியது.

ஒளவையரு ணல்வழியை யாய்ந்துதத்து வார்த்தவுரை
யெவ்வ மறவுரைத்தா னின்பமிக—விவ்வுலகின்
மிக்கசிவ ராமலிங்க வேதியன்முன் பெற்றெடுத்த
தக்கரகு நாதையன் றான்.

கொக்குவில்
ஆரியதிராவிடபண்டிதர்
பிரமஸ்ரீ சி. இரத்தினசபாபதி ஐயர் அவர்கள்
சொல்லியது.

கட்டளைக்கலித்துறை

பவமாற வௌவை பகர்ந்தரு ணல்வழிப் பண்புணர
வவதாரி கைத்தத்து வார்த்த விளக்க மரிதளித்தா
னவமார் கிரக கணிதசித் தாந்த நலன்றெரிக்குஞ்
சிவராம லிங்கையன் சேய்ரகு நாதைய தென்னியனே.

பருத்தித்துறை
அத்துவிதசித்தாந்தி
ஸ்ரீமான் வே. கணபதிப்பிள்ளைச் சோதிடர் அவர்கள்
சொல்லியது.

விருத்தம்

அத்துவித சித்தாந்த மனுபவமா யவ்வையரு ணல்வழிக்குத்
தத்துவமார் விளக்கவுரை தந்தரிதின் வெளியிட்டான றநதியாகச்
சித்தமுறு சோதிடத்தின் றிரிபகற்றி யனுபவத்திற் றெளிந்ததீய
னித்தரையிற் சிவராம லிங்கமறை யோனீன்ற ரகுநாதையனே.

உ
சிவமயம்
ஒளவையார் அருளிச்செய்த

# நல்வழி மூலமும்

## தத்துவார்த்த விளக்க உரையும்

---

### காப்பு

அவதாரிகை

மக்களின் ஈடேற்றத்திற்குரிய வேத உபநிடத தத்துவங்களை அம்மக்கள் கற்றுக் கடைத்தேறுமாறு சுருக்கமாக நல்வழி என்னும் பெயரோடு சொல்லப்புகுந்த இந் நூலாசிரியர், தாமெடுத்துக்கொண்ட காரியம் இனிது முடியுமாறும், இந்நூலைக் கற்போர் இடையூறின்றிக் கற்றுத் தெளியுமாறும், தமக்கும் பிறர்க்கும் பொருந்தக் கடவுள்வணக்கஞ் செய்கின்றார். இக் கடவுள்வணக்கச் செய்யுள் ஞானகாண்டம், பக்திகாண்டம், கன்மகாண்டம் என்னும் முத்திறத்தினருக்கும் ஏற்ற தகுதிப்படி பொருள்கொள்ளுமாறு சிலேடையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்பொருட்களை வரன்முறையே விளக்குகின்றாம்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

ஞானகாண்டிகளுக்குரிய உரை வருமாறு:—

**இதன் பொருள்:** கோலம் செய் துங்க கரிமுகத்து தூ மணியே - தோற்றமான உலகங்களை ஆக்குகின்றவரும், மேலான சாட்சியாயிருப்பவரும், எவற்றினும் பற்றுக்கோடின்றிச் சுத்தமாயிருப்பவருமான இரத்தினம் போன்ற கடவுளே,—நான் - யான்,—பாலும் - குணவிகாரமும்,—தெளிதேனும் - மனதாற் றெளிந்துகொண்ட விடயவின்பங்களும்,—பாகும் - பரந்த உலகவாழ்வும்,—பருப்பும் - அகங்காரவிருத்தியும்,—இவை நாலுங் கலந்து - ஆகிய இந்நான்கனையும் ஒருங்கு சேர்த்து,—உனக்கு தருவேன் - உம்மிடத்தில் ஒப்பிக்கின்றேன்,—எனக்கு சங்க தமிழ் மூன்றும் நீ தா - எனக்குக் கூட்டமாகிய இன்பமயமான சத்து, சித்து, ஆனந்தம் என்பவற்றின் தத்துவங்களை ஒருங்கே தரக்கடவீர். என்றவாறு.

பால் - குணவிகாரம். இது ஆகுபெயர். தெளிதேன் - இறந்தகால வினைத்தொகை. அது தெளிந்த தேனென விரியும். தேன் - ஆகுபெயர். அது இனிமையாகத் தோற்றும் அனுபவத்தை உணர்த்தி நின்றது. பா - பரந்த. கு - பூமி. அது ஆகுபெயராய் உலகவாழ்வை உணர்த்திநின்றது. பருப்பு - பருத்தல். அது ஆகுபெயராய் விடாதழுலுகின்ற அகங்காரத்தை உணர்த்திற்று. கோலம் - வடிவத்தோற்றம். கரிமுகம் - சாட்சிநிலை. தமிழ் - நிலைபெறுன இன்பதத்துவம். பாலும் தேனும் பாகும் பருப்பும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணும்மைப்பொருள. நாலும் மூன்றும் என்பவற்றிலுள்ள உம்மைகள் முற்றும்மைப்பொருள. ஏகாரம் விளி.

சிவவுணர்வின் இயக்கத்துள்ள சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களுள் யாதானுமொன்று மேலிட்டிருத்தல் மரபு. இம் மரபு என்றும் ஒரேபெற்றித்தாயிராது மாறுதலுடைத்தலின், இவற்றின் நிலையினின்று என்றும் ஒரேபெற்றித்தான ஆன்ம ஈடேற்ற நெறியைக் கூறுத லமையாது. ஆகலின், அம் முக்குணவிகாரங்களை ஒழித்து, அறிவின்வயமாக நின்று கூற வேண்டுமென்பார் **பாலும் நான் தருவேன்** என்றார்.

இஃது இன்பநிலை, இஃது இன்பநிலை என்று அனுபவிக்குந்தோறும் இன்பமாகத் தோற்றிப் பின் அவ் வனுபவநிலை இன்பம் போலாகாது மீட்டும் வேறோர் அனுபவம் இன்பமாகத் தோற்றி, அதுவும் அங்ஙனமே மாறுபடுதல் விடயானுபவங்களை மனத்தா லனுபவிக்கும் மரபு. இம்மரபினின்று கூறப்படுபவை இங்ஙனம் நிலையின்றி மாறுபடுமேயன்றி நிலையான ஆன்மலாபப் பேற்றைத் தராவாகலின், என்றும் ஒரேபெற்றித்தான இன்பம் பயக்கும் ஆன்ம ஈடேற்றத்தை இவ்விடயானுபவ நிலையினின்று கூறாது, அந்நிலையை விட்டு, அறிவுநிலையினின்று கூறவேண்டுமென்பார் **தெளி தேனும் நான் தருவேன்** என்றார்.

உலகவாழ்வை எங்ஙனம் வரையறுக்கினும் அவ்வரம்பி லடங்காது மேன்மேலும் அவாவினைப் பரப்பிக்கொண்டிருத்தல் மரபாம். இங்ஙனம் முடிவின்றிப் பரம்புகின்ற உலகவாழ்வி னின்றுகொண்டு என்றும் ஒரேபெற்றித்தான பேரின்ப நிலையைக் கூறுதல் அமையாது. ஆகலின், அப் பரந்த உலகவாழ்வின் நிலையை விட்டு, அறிவின் வயமாக நின்று கூறுவேனென்பார் **பாகும் நான் தருவேன்** என்றார்.

என்றும் நிலைபேறின்றிக் கற்பிதமாகத் தோற்றும் அவத்தைகளின் வயமாக நின்று நானென்று அகங்கரிப்பின், அந்நிலைபால் கற்பிதமான நிலையைக் கூறலாமேயன்றி, உண்மைநிலையைக் கூற முடியாமையின், உண்மை நிலையை உறுத்துமாறு அகங்காரத்தை விட்டு, அறிவின்வயமாக நின்று கூறுவேனென்பார் **பருப்பும் நான் தருவேன்** என்றார்.

மேலோதிய நான்கு குற்றங்களுள் யாதானுமொன் றுண்டாயினும் அதுகாரணமாக உண்மைநிலையை உறுத்த முடியாமையின், இந்நான்கையும் நின்மாட் டொப்பிக்கின்றேனென்பார் **இவை நாலுங் கலந்து உனக்கு நான் தருவேன்** என்றார்.

விடயானுபவங்களை ஒலிக்கின்ற பலமனதின் குற்றங்களைக் கடிந்து, விருத்திமனதின் வயமாக நின்று இவ்வுண்மையை உறுத்துகின்றேனென்பதை விளக்குவார் **நான் தருவேன்** என்றார்.

உலகம் முதலிய தோற்றப்பொருள்கட்கெல்லாம் நிமித்தோபாதான காரணமாயிருந்து, அத்தோற்றங்களுக்கெல்லாம் சாட்சியாகியும் அவற்றிற் பற்றின்றியும் இருக்கின்ற பரம்பொருளென்பார் **கோலஞ்செய் துங்கக் கரி முகத்துத் தூமணி** என்றார்.

இதில், நிமித்தோபாதான காரணராயிருப்பவர் பரம்பொருளென்றால், அவரே உலகமாயும் இருக்கின்றாரென் றேற்படுகின்றது. படவே, தம்மையே தாம் மாறுபடுத்தி உலகமாக்கினாரென்று சித்திக்கிறது. இதனால் பரம்பொருள்



தாமே இரு காரணங்களாகவும் இருக்கின்றாரென்பது புலப்படாமையின், அவர் நிமித்தகாரணராயும் உபாதானகாரணராயும் இருக்குந் திறத்தை விளக்கவேண்டிற்று.

சுத்தமாயையில் பிரமசேதனம் பிரதிபிம்பிப்பது பரம்பொருள் அல்லது ஈசுரனெனப்படும். இந்நிலையில் சேதனபாகம், மாயாபாகம் என இரு பாகங்களுள. இவற்றுட் சேதனபாகமே சத்தியசங்கற்பத்தால் உலகத்தைச் சிருட்டிக்கும் கர்த்தாவாகவிருக்கின்றது. அதனால் பரம்பொருள் உலகிற்கு நிமித்தகாரணமாகின்றது. உலகிலுள்ள பொருட்டோற்றங்களுக்கெல்லாம் காரணமாயிருப்பது மாயையின் பாகம். ஆகலின், அம் மாயாபாகம் உலகிற்கு உபாதான காரணமாயிற்று. உபாதானகாரணமெனினும் முதற்காரணமெனினும் ஒக்கும்; நிமித்தகாரணமெனினும் கர்த்தாவெனினும் ஒக்கும். ஆகவே, இவ்விளக்கத்தால் பரம்பொருள் உலகிற்கு நிமித்தோபாதானகாரணரா யிருக்கின்றாரென்பது தெளிவாகிறது.

ஒன்றையொன்று விட்டுப்பிரிதலில்லாத சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றும் உண்மையான ஒருமைநிலையில் நிற்பதே பேரின்பநிலையாதலின், அம்மூன்றின் ஒருமையை அனுக்கிரகித்தல் வேண்டுமென்பார் **சங்கத் தமிழ் மூன்றுந் தா** என்றார்.

இதில், சத்து, சித்து, ஆனந்தமென்னும் மூன்றும் ஒருமையாகுமென்றால், மூன்றாதல் கூடாது. ஆதலால், சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றும் ஒன்றா? அன்றா? என்று ஆராயப்படுகின்றது. சத்து என்றும் பொருளாயுள்ளது. சித்து அனுபவநிலையை உணர்வது. ஆனந்தம் நிலையான இன்பானுபவம்.

நிலையான இன்பானுபவம் என்றும் உளதாகலின், அது சத்தாயிற்று. அவ்வனுபவநிலைமை அறிவா லனுபவிக்கப்படுதலின், அது சித்துமாயிற்று. சத்துக்கு ஆனந்தம் வேறாயின் அது என்றும் உள்ளதாகாது. சித்துக்கு வேறாயின் அறிவி லமையாததாகும். ஆயின், அவ்வானந்தம் என்றுமுள்ளதாய் அறிவா லனுபவிக்கப்படுதலின், சத்து சித்து என்பவைகளோடு பிரிவின்றி என்றும் அமைந்திருக்கின்றதென்பது சித்தம். இவ்வாற்றால், சச்சிதானந்தம் என்பவை பிரிவின்றி ஒருமையாமென்பது வெளியாகிறது. ஆகவே, இவ் விளக்கத்தால் பாசம் சத்தெனவும், பசு சத்து சித்தெனவும், பதி சத்து சித்து ஆனந்தமெனவும் கூறுவாரது மடமை மறுக்கப்படுகின்றது.

நூல் கூறப்புகுந்த ஆசிரியர், தாம் வணங்கி வேண்டுதல்செய்தல் போலவே இந்நூலைக் கற்பாரும் கடவுளை வணங்கி வேண்டுதல்செய்தற் பொருட்டு இங்ஙனம் பொதுமையிற் கூறினார்.

## பக்திகாண்டிகளுக்குரிய உரை வருமாறு:—

இ - ள்: கோலம் செய் துங்க கரிமுகத்துத் தூமணியே - உலகத்தைத் தோற்றுவிக்கின்ற மேன்மையாகிய பிரணவவடிவம் பொருந்திய மலரகிதராகிய சோதிசொரூபியே,—நான் - யான்,—பாலும் - என்றும் ஒரே தன்மையான சத்துவகுணமும்,—தெளி தேனும் - அதனாற் றெளிந்த பேரன்

யும்,—பாகும் - அவ்வன்பினாலுண்டான பெருமகிழ்ச்சியும்,—பருப்பும் - உள்ளீடான சித்தமும்,—இவை நாலும் கலந்து - இந் நான்கையும் ஒருங்கு சேர்த்து,—உனக்கு தருவேன் - தேவரீரிடத்து ஒப்பிக்கின்றேன்,—நீ - தேவரீர்,—சங்க தமிழ் மூன்றும் எனக்கு தா - சாந்தம், தெளிவு, அநுபவம் என்ற மூன்றையும் அடியேனுக்கு அருள்வீராக. எ - று.

கள்ளமின்மையும், மாறுபடாமையும், சாந்தமும் உடைய சாத்துவிக குணமென்பார் **பால்** என்றார்.

அச் சாத்துவிகத்தாற் றெளியப்பட்ட இடையறுவன்பென்பார் **தெளி தேன்** என்றார்.

அவ்வன்பு காரணமாகத் தியானிக்குந்தோறும் உண்டாகும் மனமகிழ்ச்சியென்பார் **பாகு** என்றார்.

எவற்றிற்கும் உள்ளீடான சித்தம் என்பார் **பருப்பு** என்றார்.

இந் நான்கு சிவபோதங்களையும் நீரே யடக்கி, மேலான சிவபோதத்தைத் தந்தருளவேண்டுமென்பார் **இவை நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றுந் தா** என்றார்.

பிரணவசொரூபத்தையே திருமேனியாக உடையீர் என்பார் **துங்கக் கரிமுகத்து மணியே** என விளித்தார்.

பட்சபாதமின்றித் தகுதியறிந்து காருண்ணியமயமாக நின்று அருளுஞ் சோதிசொரூபியே என்பார் **தூமணியே** என விளித்தார்.

சாந்தம், தெளிவு, இன்பாநுபவம் என்னும் மூன்றுமே சிவபோதப் பேறாகலின், **சங்கத்தமிழ் மூன்றும்** என்றார்.

பிரணவத்திலிருந்தே நாததத்துவமுண்டாய், அத் தத்துவங் காரணமாகச் சகல ஓசைகளும் பிறந்து இயங்குதலின், ஓசை காரணமாகக் கூறப்படும் இந்நூலும் இடையூறின்றி இனிது முடியுமென்று கருதி, ஆசிரியர் ஈண்டு பிரணவசொரூபத்தை விதந்து எடுத்துத் துதித்தாரென்க.

## கன்மகாண்டிகளுக்குரிய உரை வருமாறு:—

கோலஞ் செய் துங்க கரிமுகத்து தூமணியே - அழகு விளங்குகின்ற ஒப்பற்ற யானைமுகத்தையுடைய பரிசுத்தமான இரத்தினம்போன்ற விநாயகக் கடவுளே,—நான் - யான்,—பாலும் - பசுவின்பாலும்,—தெளிதேனும் - வடித்த தேனும்,—பாகும் - வெல்லப்பாகும்,—பருப்பும் - பருப்பும்,—இவை நாலுங் கலந்து - இந்நான்கையுஞ் சேர்த்து,—உனக்கு தருவேன் - தேவரீர் முன்னிலையில் நிவேதிக்கின்றேன்,—நீ - தேவரீர்,—மூன்று சங்கத்தமிழும் - முதல் இடை கடை என்னும் முச்சங்கங்களிலும் விரித்துரைக்கப்பட்ட தமிழ் நூற்களின் பொருளாற்றல் முழுவதையும்,—எனக்கு தா - அடியேனுக்குத் தந்தருள்வீராக. எ - று.

இந்நூல் இயற்றமிழால் ஆக்கப்பட்டிருத்தலின், தமிழ் மூன்றும் என்பதற்கு இயல், இசை, நாடகம் எனப் பொருள்கொள்ளல் தகுதியன்றாம்.

---



## முதலாஞ்செய்யுள்.

### பேரின்பநெறி.

**புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை**
**மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா**
**லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்**
**தீதொழிய நன்மை செயல்.**

இ - ள்: மண்ணில் பிறந்தார்க்கு - பூமியில் பிறந்தவர்களுக்கு,—பொருள் - இன்பமானது,—எண்ணுங்கால் - (எங்ஙனங் கைகூடுமென்று) ஆராயுமிடத்து,—புண்ணியம் ஆம் - புண்ணியத்தால் உண்டாகும்,—பாவம் போம் - பாவத்தால் அழியும்,—போன நாள் செய்த அவை - முற்பிறப்பிற் செய்த அப் புண்ணியபாவங்களின் பயன்,—வைத்த - (இம்மையில் இன்ப துன்ப அநுபவங்களாக) அமைக்கப்பட்டன,—எ சமயத்து ஓர் சொல்லும் - எந்தச் சமயநூல்களின் ஆராய்ந்துணிந்த சொல்லும்,—ஈது ஒழிய வேறு இல்லை - இதுவேயன்றிப் பிறிதொன்றில்லை (ஆகையால்),—தீது ஒழிய - தீவினையை விடுக,—நன்மை செயல் - நல்வினையைச் செய்க. எ - று.

ஆகும் போகும் என்பவற்றின் நடுநின்ற குகர உயிர்மெய் கெட்டு ஆம் போம் என நின்றன. இன்பநுகருதற்குப் புண்ணியமும் நுகராமைக்குப் பாவமும் ஏதுவாகலின் கருவிப்பொருட்டரும் மூன்றாம்வேற்றுமையின் ஆல் உருபு விரித்துப் புண்ணியத்தால், பாவத்தால் என்றுரைக்கப்பட்டது. மண்ணிற் பிறந்தார்க்கு என்றதனால் போனநாள் என்பது முற்பிறப்பை யுணர்த்திநின்றது. அவை என்பது புண்ணியபாவங்களைச் சுட்டிற்று. இப்பிறப்பிற்கிடம் மண் என்றதனால் முற்பிறப்பிற்கிடம் விண்முதலிய பல விடங்களுள்ளும் யாதானுமொன்றென்பது பெறப்பட்டது. சிறப்புநோக்கிப் பிறந்தாரென உயர்திணைப் பலர்பான்மேல் வைத்தோதினாரேனும் பொதுமைநோக்கி மற்றைய திணைபால்களுக்குங் கொள்க. வைத்த என்பது செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படுவிகுதிதொக்க அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று. பொருள் - எடுத்துக்கொண்ட காரியம். அஃது உயிர்களால் என்று மிடையறாது அவாவப்படுகின்ற இன்பத்தை உணர்த்திற்று. இது என்னுஞ் சுட்டு எதுகைநோக்கி ஈதென நீண்டது. சமயம் என்பது சமயநூல்களை யுணர்த்தலின் ஆகுபெயர். அத்து என்னுஞ் சாரியை இடப்பொருளுணர்த்திற்று. ஓர்சொல் இறந்தகாலவினைத்தொகை. அஃது ஓர்ந்தசொல் என விரியும். உம்மை எச்சத்தோ டுயர்வுசிறப்பு. ஒழிய, செயல் என்பன வியங்கோளுடன்பாடுகள்.

புண்ணிய மிகுதியாகச் செய்தோர் தேவராகப் பிறந்து சுவர்க்கலோகத்துத் துன்பமின்றி இடையறாது விடயவின்ப நுகருதலால் அவ்வின்பம் நிலையானதென்றுணர்ந்து நித்திய இன்பத்தின் முயலாதிருப்பர். ஆதலினால் அவர் ஆன்ம ஈடேற்றத்திற் கருகரல்லராயினர். பாவ மிகுதியாகச் செய்தோர் நரகலோகத்திற் பிறந்து இன்பமின்றி இடையறாது விடயத்துன்ப நுகருதலால் அத் துன்பம் நிலையானதென்றுணர்ந்து நித்திய இன்பத்தின் முயலார். ஆதலின் அவரும் ஆன்ம ஈடேற்றத்திற் கருகரல்லர். பாவபுண்ணியங்களைக் கலந்து செய்தோர் மானுடராகப்பிறந்து ஒருகாற்றுன்பமும் மற்றொருகாலின்பமும் மாறி மாறி நுகர்வர். ஆதலின் இவர் இவ்விடய இன்பதுன்பங்களிரண்டும் நிலையற்றனவென்று கண்டு நித்திய இன்பத்தின் முயல்வர். ஆகவே தேவர், நரகராகிய இருபாலாரும் ஆன்ம ஈடேற்றத்திற் கேற்ற தகுதியுடையரல்லரென்பதூஉம், மானுடரே ஆன்ம ஈடேற்றத்திற் குரிய தகுதியுடையாரென்பதூஉம் உண்மையாமென விளக்குவார் விண்ணிற்பிறந்தார்க்கு அல்லது பிறந்தார்க்கு என்னாது மண்ணிற்பிறந்தார்க்கு என்று அடைகொடுத்தார்.

உயிர்கள் யாவும் இடையறாத இன்பநுகர்தற்கு முயல்வதேயன்றிப் பிறிதொன்றிலும் முயன்றில. இங்ஙனம் இடையறாது நிலைபெற்றோங்குவதாகிய இன்பமொன்றே பொருளெனப்படுமன்றி இடையீடுள்ளவையாவும் பொருளெனப்படா என்றும், இவ்வின்பம் சத்தாய் என்றுமுள்ளது என்றும், இதற்குரிய சூழ்ச்சிகளை நீதிநூல்கள் எடுத்துக்கூறுவனவென்றும் விளக்குவார் பொருள் என்றார்.

தம்மால் விரும்பப்படுமின்பம் தம்மிடத்தே யிருத்தல்வேண்டும். இருந்தால் அதனை நுகருதற்குத் தாம் விரும்பாதிருத்தல்வேண்டும். வேறிடத் துண்டெனின் அது வந்து தம்மைப் பற்றியதற்கும் தாம் பற்றப்பட்டதற்கும் காரணம் வேண்டும். இங்ஙனம் ஒன்றற்கொன்று பெரிதும் முரண்படுதலின், இன்பம் உயிர்களாகிய தம்மிடத்துள்ளதா? அன்றி வேறிடத்துள்ளதா? அன்றித் தம்மிடத்தும் வேறிடத்துமாகிய ஈரிடத்து முள்ளதா? என்றும், அதனை எவ்வாற்றா னுகரலாமென்றும் நியாயம் பொருத்தம் சோதனை என்னும் மூன்றன் முகத்தானும் ஐயந்திரிபற ஆராயுங்கால் என்பார் எண்ணுங்கால் என்றார்.

மற்றைய பொருட்களா லின்பமுண்டென்று தம்மாற் றுணியப்பட்டதன்றி அப்பொருட்களாற் றுணியப்படாமையானும், மற்றையவற்றிற் பற்றுழியும் பற்றாழியும் இன்பமுண்டென்று விரும்புவது தாமேயன்றி மற்றொன்றன்றாகலானும், தம்மாட்டில்லையேல் தமக்கு இன்பவிருப்ப முண்டாதற் கேதுவின்மையானும், "உள்ளது உள்ளதே" என்னும் தத்துவ நியாயத்தால் இன்பமானது விரும்புகின்ற தம்மாட்டுள்ளதென்பது துணிபாகிறது. ஆகவே அவ்வின்பம் பிறிதோரிடத்திலில்லையென்பதூஉம், தம்மிடத்தே நித்திய



மாயுள்ளதென்பதூஉம் பெறப்பட்டன. இவ்வாறாகவும் இன்ப நுகர விரும்பியதே அஞ்ஞானமாம். இதனால் தானல்லாதவிடத்தே இன்பமுண்டென்று துணியப்பட்டுத் தம்மையன்றி யில்லாதவையெல்லாம் தம்மின்வேறானவை யென்று கருதப்பட்டன. இவ்வாறு தமக்கன்னியமாகக் காணப்பட்டவற்றைத் தமக்குச் சுகமெனக்கொண்டு அவற்றைத் தம்மோடு பொருத்தி நுகருமாறு வினைசெய்ய நேரிட்டது. இவ் வினை செய்யுங்கால், மற்றையார் தனக்குச் செய்யலாகாவென்று தான் விரும்புபவைகளைப் பிறவுயிர்களுக்குச் செய்யாமையும், மற்றையார் தனக்குச் செய்யவேண்டுமென்று தான் விரும்புபவைகளைப் பிறவுயிர்களுக்குச் செய்தலும் புண்ணியம் எனப்படும். இவ்வாறு மற்றையவுயிரையும் தம்மைப்போற் பேணிச் செய்தலின் இது தம்மை நோக்குஞ் சாதனமாய்ப் பிறிதொன்றிற் பற்றுநீக்கிச் சித்தசுத்தம் பயக்கும். இச் சித்தசுத்தம் உண்மைவிசாரந் தரும். இவ்விசாரத்தால் தம்மாட்டுள்ளது சுகமென்னுந் திடஞானமுண்டாகும். உண்டாயின் சுகமும் தாமும் வேறுபாடின்றி அனுபவமாம். இவ்வின்பானுபவத்திற்குப் புண்ணியமே முதலேதுவென்பார் புண்ணியமாம் என்றார்.

மற்றையார் தனக்குச் செய்யலாகாவென்று தான் விரும்புபவைகளைப் பிறவுயிர்களுக்குச் செய்தலும், மற்றையார் தனக்குச் செய்யவேண்டுமென்று தான் விரும்புபவைகளைப் பிறவுயிர்களுக்குச் செய்யாமையும் பாவம் எனப்படும். இவ்வாறு தம்மாற் காணப்பட்ட பிறவுயிரின் றுன்ப நோக்காது அவற்றாற் றாஞ் சுகமடையக்கருதிச் செய்தலின் இது தம்மோடு சிறிதுமியையாத பயனையே பயக்கும். ஆதலின் இதனால் தம்மாட்டுள்ள இன்பம் கணப்பொழுதேனும் அனுபவமாகாதென்பார் பாவம்போம் என்றார்.

இம்மையிலே புண்ணியஞ்செய்வானொருவன் துன்பநுகரவும் பாவஞ்செய்வானொருவன் இன்பநுகரவும் காண்கின்றோம். புண்ணியச்செயலால் இன்பமும் பாவச்செயலாற் றுன்பமும் அடையவேண்டுவதே மரபாகவும் அம் மரபிற்கு மாறாக இங்ஙனமனுபவித்தற்குக் காரணம் முற்பிறப்பிற் செய்த வினையேயா மென்றும், அங்ஙனம் புண்ணியஞ்செய்யும்போது துன்பானுபவங் கிடைத்தலால் அதுகாரணமாகப் புண்ணியத்தை விடுதலும் பாவஞ்செய்யும்போது இன்பானுபவங் கிடைத்தலால் அதுகாரணமாகப் பாவச்செயலின் மென்மேலும் முயலுதலும் கூடாதென்றும், முன் செய்த வினைக்கீடான பயன்கள் விலக்கற்பாலனவல்லவாதலின் அவற்றை அமைதியாக நுகர்ந்துகொண்டு இம்மையில் உயிர்க்குறுதியான நன்னிலையையே கடைப்பிடித்தொழுகல் வேண்டுமென்றும் விளக்குவார் போனநாட்செய்தவை என்றார்.

ஆன்ம ஈடேற்றத்தைக் குறித்துக் கூறும் நூல்களே சமயநூல்கள். இவை யாவற்றிலும் இங்ஙனமே ஒத்த துணிபாகக் கூறப்பட்டிருக்கின்றது. முற்பிறப்பில்லையென்று வாதாடுஞ் சமயத்தினரும் புண்ணியபாவங்களை

பொப்புக்கொண்டு மறுமையில் மோக்ஷம் நரகம் உண்டென்கிறார்கள். இம்மையிற் செய்த புண்ணியங்களால் மோக்ஷவின்பமும், பாவங்களால் நரகத் துன்பமும் அனுபவித்தல் உறுதியாயின், முற்பிறப்பிற் செய்தவற்றின் பயனை இப்பிறப்பி னுகருதலுந் துணிபாம். வேறுபாடாகப் பிறத்தற்கும் இவர் யாதோர் காரணமுங் காட்டமாட்டார். கடவுள் இவ்வாறு படைத்தா ரென்பரேல் அவர் பக்ஷபாதமுடையராவர். ஆகையால் முற்பிறப்புண்டென்பது அவரது சமயநூல்களினுஞ் சொல்லாமலே முடிந்துகிடந்தது என விளக்குவார் எச்சமயத்தும் ஓர் சொல்லும் ஈது ஒழிய வேறு இல்லை என்றார்.

இஃதே சுருதிக்கு மாத்திரமன்றி யுத்தியனுபவங்களுக்கு மொத்த துணிபாதலின் இதனை விடாது கடைப்பிடித்தொழுக வேண்டுமென்பார் தீதொழிய நன்மைசெயல் என்றார்.

கன்மம், மதி விதி என இரண்டின்பாலதாய் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்துவம் என முத்திறப்படும். இம்மூன்றும் பந்தம் விடுதி என இருதிறப்படும். ஆகாமியமாவது: பிராரத்துவ சம்பந்தமின்றி மதியினால் புடைபெயர்ந்து செய்யப்படுவது. இது நல்வினையென்றும் தீவினையென்றும் இருவகைப்படும். நல்வினையாவது யாதோருயிருக்கும் துன்பம் பயவாது இன்பம் பயக்கத்தக்க தொழிலாம். தீவினையாவது யாதோருயிருக்கும் இன்பம் பயவாது துன்பம் பயக்கத்தக்க தொழிலாம். சஞ்சிதமாவது: நல்வினை தீவினைகளின் செயல் முடிந்து அவற்றின்பயன் அனுபவிக்கப்படுமுன் உள்ளநிலை. இது புண்ணியம் என்றும் பாவம் என்றும் இருதிறப்படும். புண்ணியமாவது இன்பம்பயக்கும் வினைமுடிபாம். பாவமாவது துன்பம்பயக்கும் வினைமுடிபாம். பிராரத்துவமாவது: சஞ்சிதம் பயனாக நுகரப்படுவதாம். இது இன்பம் துன்பம் என இருவகைப்படும். இன்பமாவது தற்பிரீதியோடொப்ப நுகரும் அனுபவமாம். துன்பமாவது தற்பிரீதிக்கு மறுதலையாக நுகரும் அனுபவமாம். யாதானுமோர் பயனைக் கருதிச் செய்யப்படுங் கன்மம் பந்தகன்மமெனவும், யாதொரு பயனுங் கருதாது கருணைமீதூர்ந்து செய்யப்படுங் கன்மம் (நிஷ்காமிய) விடுதிகன்மமெனவுங் கூறப்படும். பந்தசஞ்சிதத்தால் பந்தஆகாமியத்துக்குரிய குணமும், விடுதிசஞ்சிதத்தால் விடுதிஆகாமியத்துக்குரிய குணமும் உண்டாகும். ஆதலினால் பந்தசஞ்சிதத்தாலுண்டான குணத்தைத் தடுத்து விடுதிஆகாமியத்தின் முயல்வது மதியாம். இம்மதியிற் செய்துமுடிந்த சஞ்சிதப்பயனாக நுகர்வது விதியாம். ஆதலின் பந்தசஞ்சித குணத்தைத் தடுத்த விடுதிஆகாமியத்தின் முயலவேண்டுமென்பதை வலியுறுத்தற்பொருட்டு ஈற்றில் தீதொழிய நன்மைசெயல் என்றார்.

புண்ணியம் என்பது ஈண்டு நிஷ்காமிய புண்ணியத்தை என்க. பாவம் என்பது காமியத்தின் மாத்திரமேயன்றி நிஷ்காமியத்திலில்லதாம். விதி மதி



யினுடைய திறங்களைப் பின்வரும் சிவாயநம என்ற 15-ம் செய்யுளினுரையில் விரித்து விளக்குவாம். ஆண்டுக்காண்க.

தீதுக்கு இயைய நன்றென்று வேண்டுதலே சிறப்புடைமையின், தீதொழிய நன்றுசெயல் என்று சூத்திரிப்பினினிதாம்.

இச்செய்யுள் ஆன்ம ஈடேற்றத்திற்கு முதற்காரணமாய் நன்மைதீமைகளை இனிது விளக்கலின் நல்வழியாயிற்று.

## 2-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முதலாஞ் செய்யுளிற் கூறிய நல்வினை இனையதெனவும், அதன் பயன் இன்னதெனவும், வருணதருமத்தை வகுத்து அதன் உயர்வு தாழ்வுகளுக் கேற்ப நால்வகைப்படுத்தி அவ்வவ் வருணத்திற் பிறந்தோர் அவ்வவ் வருண தருமவொழுக்கங்களைக் கடைப்பிடித் தொழுகுதலே தவமென்று வலியுறுத்துகின்ற கன்மகாண்ட நியதி இந்நிஷ்காமியதவஞ்செய்பு நிலைக்கேலா தெனவும், உண்மைநெறியிற் பிறழா தொழுகுவோ ரெவரும் இதனைச் செய்தற்குத் தகுதியுடையாரெனவும், ஆகையால் வருணதருமம் இதற்குத் தடையானதன்றெனவும் தொடர்பாக இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### சாதிவிளக்கம்.

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கா
னீதி வழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

இ - ள்: பட்டாங்கில் உள்ள படி - அனுபவ வுண்மையிற் பொருந்திய வாறு,—சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை - குலம் இரண்டேயல்லாமல் மேலதிக மில்லை,—சாற்றுங்கால் - அவ்விரண்டனையுஞ் சொல்லுமிடத்து,—மேதினியில் - நிலவுலகில்,—நீதி வழுவா நெறிமுறையின் - நியாயந் தவறாத வழியினைக் கூறுகின்ற நூற்படி நின்று,—இட்டார் பெரியோர் - ஈந்தவர் உயர்ந்தசாதியினராவர்,—இடாதார் இழிகுலத்தோர் - ஈயாதவர் இழிந்த சாதியினராவர். எ - று.

வழுவாத என்பதன் ஈறு கெட்டு வழுவா என நின்றது. நெறிமுறை என்பது இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. அது நெறியினைக் கூறுகின்ற முறையென விரியும். இழிகுலம் இறந்தகால வினைத்தொகை. அது இழிந்தகுலமென விரியும். நின்று என்பது சொல்லெச்சம். பட்டாங்கு அனுபவவுண்மை. இடுதல் என்பது: அறிவுறுத்துதல், நல்வழிநடத்துதல், பொருள்கொடுத்துதவுதல் என்பவற்றை யுணர்த்திநின்றது. உயர்ந்தோர் - தாம் முன் நின்ற நிலையினின்று விலகி நித்தியவின்பநிலைக் கணித்தாக மேலோங்குவோர். இழிந்தோர் - இவ்வின்பநிலைக்கு அணித்தாகாது தாழ்வடைவோர். நீதி வழுவா நெறிமுறையின் நின்று என்பதை இடாதாருக்கும் ஒட்டியுரைக்க. உரைக்கவே, நீதி வழுவா நெறிமுறையில் நின்று இடாதோரும், அம்முறையில் நில்லாது இட்டோரும் இழிகுலத்தின ரென்றவாறாயிற்று. ஆகவே, நீதிவழுவா நெறிமுறையில் நிற்றல், இடுதல் என்னும் இரண்டு மில்லாதோரும் ஏற்போரும் முறையே கழிபேரிழிகுலத்தின ராவ ரென்பது பெற்றும். இடாதா ரிழிகுலத்தோ ரென்றமையால், பெரியோ ரென்றது உயர்குலத்தோரை யுணர்த்திநின்றது.

நால்வகைச் சாதியிற் பிறந்தாரும் தத்தம் வருண தருமத்தைப் பெரும்பாலுங் கடைப்பிடித் தொழுகினும், அவருள் இழிந்த சாதியாருட் சிலர் உயர்ந்த சாதியாருக்குரிய ஒழுக்கங்களையும், உயர்ந்த சாதியாருட் சிலர் இழிந்த சாதியாருக்குரிய வொழுக்கங்களையுங் கடைப்பிடித் தொழுகுதல் அனுபவவுண்மையாம். இதனால் பிறப்பினு லவ்வச் சாதியை வரையறுத்தல் உண்மைநிலைக் கேலாவாயிற்று. ஆகவே, எச்சாதியினராயினும் ஆன்மலாபத்தைக் கடைப்பிடிப்பாராயின், அவர் இழிந்த சாதியிற் பிறப்பினும் அச்சாதியினராக மதிக்கப்படாது உயர்வடைதலும், ஆன்மலாபத்தைக் கடைப்பிடியாதார் உயர்ந்த சாதியிற் பிறப்பினும் அச்சாதியாராக மதிக்கப்படாது இழிவடைதலும் அனுபவ வுண்மையாமென விளக்குவார் பட்டாங்கிலுள்ளபடி என்றார்.

இதில் அவ்வச் சாதியிற் பிறந்தார் யாவரும் அவ்வச் சாதித் தருமத்தை மாத்திரம் அனுசரிப்பார்களா? அன்றித் தம்மில் உயர்ந்த அல்லது இழிந்த வருண தருமங்களையும் அனுசரிப்பார்களா? என்று விசாரிக்கப்படுகிறது. சாதியாசாரத்தினின்றொழுகுவோர் அவ்வச்சாதியிற் பிறத்தலும், நிஷ்காமிய தவஞ் செய்வோர் அத்தவஞ்செய்தற் கேற்ற நிலையில் சாதிவேற்றுமையின்றிப் பிறத்தலும் நியதிகளாம். இந்நியதி, தாழ்ந்தவருணத்தினருட் சிலர் ஈதல் அறிவுறுத்துதல் நல்வழிநடத்துதல் முதலியவற்றைச் செய்தலும், உயர்ந்தவருணத்தினருட் சிலர் அங்ஙனஞ் செய்யாது ஏற்றலும் அனுபவசித்தமாகலால் நன்கு தெளியப்படும். படவே, ஒவ்வொருவரும் தாம் தாம் முன் செய்த தவத்திற் கேற்பத் தரும நெறியைக் கடைப்பிடிக்கும் நிலையிற் பிறப்பார்களேயன்றி அவ்வவ் வருணத்திற் பிறந்தார் மாத்திரம் அவ்வவ் வருண தருமத்தை யனுசரித்த லில்லையென்பது தெளிவாகிறது.



எவரும் நித்தியவின்பம் நுகர்தலையே வேண்டிநிற்றலால், அதனையே இலக்காகக் கொண்டு உயர்வு தாழ்வு என்னும் இரண்டனையும் வரையறுத்தல் வேண்டும். அங்ஙனம் வரையறுக்குங்கால் அவ்விலக்கிற்குத் தகுதியான மானுடயாக்கை யெடுத்தோருட் சிலர் விடயபோகங்களை இடையறாது நுகர்தலே தாமெடுத்துக்கொண்ட நித்தியவின்பமென்று மயங்கி அவற்றை நுகர்தற் கேற்பக் காமியத்தவத்தைச் செய்கின்றனர். சிலர் வீடுபேற்றிற்குரிய ஞானமுண்டாதற்கேற்ற சித்தசுத்தத்தைத் தருகின்ற நிஷ்காமியத் தவத்தைச் செய்கின்றனர். இவ்விருதிறத்தினருள் பின்னையர் சித்தசுத்தம் பெற்று அதுவாயிலாக ஞானமுண்டாய்த் தாமெடுத்துக்கொண்ட நித்தியவின்ப நுகருவர். இந்நுகர்ச்சிக்கு முதலேது நிஷ்காமியத் தவமாகலின், அதனைச் செய்வோர் என்றுமுள்ள இன்பநிலைக்குரியராய் மேலோங்குதலின் உயர்ந்தோராகின்றனர். முன்னையர் மீட்டும் மீட்டும் பிறந்திறந்துழலுகின்ற நிலையற்ற விடயவின்ப நுகர்தற்கேற்ற காமியத்தவஞ் செய்தலால் தாமெடுத்துக்கொண்ட நித்தியவின்ப மடைதற்குச் சிறிது மருகரல்லராய் இழிந்தோராகின்றனர். ஆகவே, ஆன்மசுகத்தை இலக்காகக்கொண்டு நோக்குழி, உயர்ந்தோர் இழிந்தோர் என்னும் இரண்டுசாதிகளுமே யுண்டென்றும், வேதத்தின் முதற்காண்டமாகிய கன்மகாண்டத்து வலியுறுத்தப்பட்ட பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகைச் சாதிகளும் இந்நிலைக் கேலாவென்றும் விளக்குவார் சாதி யிரண்டொழிய வேறில்லை என்றார்.

இதில், உயர்குலம் இழிகுலம் என்னும் இரண்டுசாதியை மாத்திரங் கொள்ளவேண்டுமோ? அன்றிக் கன்மகாண்டத்துக் கூறப்பட்ட பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்குசாதிகளைக் கொள்ளவேண்டுமோ? அன்றி இவ்விருதிறத்தையுங் கொள்ளவேண்டுமோ? என்று விசாரிக்கப்படுகிறது. முதற்செய்யுளில், நிஷ்காமியத்தவஞ் செய்தலே நித்தியவின்ப நுகர்ச்சிக்கு முதலேதுவாமென்று கூறிப்போந்தமையால் அதன் றொடர்பாகிய நிலை யாதென்று கூறுதலே மரபாம். அதனால் இவ்விரண்டாஞ் செய்யுளில் நிஷ்காமியத்தவஞ் செய்வாரை உயர்ந்தோரென்றும் செய்யாதாரை இழிந்தோரென்றும் விடுத்தார். கன்மகாண்டத்துக் கூறப்பட்ட பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நால்வகைச் சாதியினருள் உயர்ந்த வருணத்தினர் யாவரும் நிஷ்காமியத்தவஞ் செய்யாது சிலர்மாத்திரஞ் செய்கின்றனர். ஆகையால் ஆன்மசுகமாகிய இலக்கிற் கேற்ற உண்மையான உயர்வு தாழ்வுகள் வரையறைப்படாவாயின. ஆகவே, இந்நிலைக்கு நால்வகைச் சாதிகளும் அமையாவாயின. அதனால் உயர்ந்தோர் இழிந்தோர் என்னும் இருவகைச் சாதிகளுமே வேண்டப்படுவன வென்று விளக்கிற்று. விளக்கவே கன்மகாண்டநெறி நிற்பவருக்கே நால்வகைச்சாதியு முண்டென்றும், அந்நெறியினைப் பூருவபக்கமாக்கி அப்பாலுள்ள தெய்வகாண்டம், ஞானகாண்ட மென்பவற்று ளொன்றைச் சித்தாந்தபக்கமாக்கித் தத்தந் தகுதிக்கேற்ப வொழுகுவார்க்கு நால்வகைச்சாதிநெறி இல்லையென்றும் வெளியாயின.

"சாதியிரண்டொழிய வேறில்லை" என்கிறார். இதிலுள்ள "வேறில்லை"
என்னுஞ் சொல்லால் உயர்குலம் இழிகுலம் என்னும் இருசாதியுமேயன்றி
வேறு சாதியொன்றும் இல்லாமையின் வேறில்லை யென்கிறாரா? அன்றி
உள்ளதாயிருத்தலை மறுத்து வேறில்லையென்கிறாரா? என்று விசாரிக்கப்படு
கிறது. உயர்ந்தோர் இழிந்தோர் என்னும் இருசாதிகளுமன்றி வேறு சாதி
யில்லையாயின் இல்லையென்றலிற் பயனில்லை. அன்றியும் "சாதியிரண்டாகுஞ்
தாரணியிற் சாற்றுங்கால்" என்று பாடமோதல்வேண்டுமேயன்றி "வேறி
ல்லை" என்று பாடமோத லடாது. அங்ஙனமின்றி ஓதுதலின் உள்ள சாதி
யையே தாமெடுத்துக்கொண்ட நிலைக்கு அமையாமையின் மறுக்குமாறு
வேறில்லை என்றார் என்று வெளியாகிறது. ஆகவே, சன்மகாண்டிகன் மாத்தி
ரம் நான்கு சாதியினராகப் பகுக்கப்பட்டிருக்கின்றன ரென்பதை ஆசிரியர்
நன்கறிந்தே இங்ஙனம் கூறினரென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

மூன் சாதியிரண் டென்றவர், அவ்விரண்டுசாதியின் திறங்களை நியா
யம் பொருத்தம் சோதனை என்னும் மூன்றற்கு மியைய விளக்கிக்காட்டுவா
மென்பார் சாற்றுங்கால் என்றார்.

நீதி வழுவா நெறி முறை என்றது இங்கே தத்துவ சாத்திரங்களை.
நீதி - தனக்கும் பிறர்க்கும் துன்பம் பயவாது இன்பம் பயக்கு மொழுக்கம்.
இவ்வொழுக்க நெறியை ஐயந்திரிபறக் கூறுவன மேற்கூறிய தத்துவசாத்தி
ரங்களாம்.

நிஷ்காமியத்தவஞ் செய்வோர் தாம் பயனடைதல்போலப் பிறரும் பய
னடையவேண்டுமென்னும் நடுவுநிலையிற் பிறழாது நின்று செய்யவேண்டு
மென்பார் நீதிவழுவா நெறிமுறையின் நின்று என்றும், இங்ஙனம் நின்று
இடுவோர் தாங் கடைத்தேறன் மாத்திரையேயன்றி மற்றையாரையுங் கடைத்
தேறச் செய்தலினால் அவர் உயர்ச்சியுடையாயினா ரென்பார் இட்டார்
பெரியோர் என்றுங் கூறினார்.

நீதிநெறியிற் பிறழ்ந்துநின்று இடுதல் தனக்கும் பிறர்க்கும் பயன்
படாது கேடுபயத்தலின் இம்முறையிற் பிறழாதுநின்று இடுதல்வேண்டு
மென வலியுறுத்தினார். இதில் நீதிநெறியிற் பிறழ்ந்துநின்று இடு
தல் தவமாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகின்றது. நீதிநெறி
யிற் பிறழ்தல் தனக்குத் தீங்கு பயத்தலால் இடுதலைச் செய்வோர்
தம்மைத்தாம் நன்னிலைப்படுத்து மாற்றலில்லாதவராயினர் என்பது
வெளியாகிறது. இங்ஙனம் தம்மைத்தாம் நல்வழிப்படுத்தமாட்டாதார்
பிறரை நல்வழிப்படுத்தல்வேண்டுமென்பதை யுணர்ந்து செய்தா ரென்பது
பொருந்தாமையின் அவ்விடுகை நன்மை பயவாதென்பது தெளிவாயிற்று.
ஆகவே, நீதிநெறியிற் பிறழ்ந்து நின்று இடுதல் எவர்க்காயினும் உறுதிபயவா
தென்பது துணிபாகிறது.



நிஷ்காமியத்தவஞ் செய்வார் உயர்வடைவாரா? அன்று? என்று விசாரிக்
கப்படுகிறது. தமக்காயினும் பிறவுயிருக்காயினுந் துன்பம் பயவாத நிலையிலே
நிற்றல் துன்பத்தை யொழித்தற் கேதுவாம். அந்நிலையினின்று பிறவுயிருக்
கறிவுறுத்துதல் நல்வழிநடத்துதல் பொருள்கொடுத்துதவுதல் என்பவற்றை
முற்றபெற்றி செய்தல் தமக்கும் பிறர்க்கும் இன்பம்பயப்பதாம். அவ்வின்
பமே தாமெடுத்துக்கொண்ட காரியமாதலின் அப்பயனுடைய வுயர்ச்சி அவர்
வயத்ததாயிற் றென்பது துணிபாம்.

நீதிவழுவா நெறிமுறையில் நின்றும் இடாதோர் தமக்கும் பிறர்க்கும்
துன்பம் பயவாத செயலினராம். ஆகவே, தாமெடுத்துக்கொண்ட நிலையான
இன்பத்திற்கு இஃதேதன்மையின் அங்ஙனம் செய்வோர் அவ்வின்ப
நிலையை யடையாராய்த் தாழ்ந்தோராவ ரென்பார் இடாதா ரிழிகுலத்தோர்
என்றார்.

இதில் நீதிநெறியிற் பிறழாது நின்றோர் இடாராயின் பேரின்பம் நுகர்
வாரா? அன்று? என்பது விசாரிக்கப்படுகிறது. நீதிநெறியிற் பிறழா
தொழுகுவோர் தமக்கும் பிறர்க்குந் துன்பம்பயவாத நிலையில்நிற்கின்றனரே
யன்றி இன்பப்பயத்தற் கேற்ற நிலையில் நின்றிலர். அதனால் இடையறாத
இன்பமுண்டாதற்கோ ரேதுவின்மை தெள்ளிதிற் புலப்படுகின்றது. படவே
அவர் பேரின்ப நுகரமாட்டா ரென்பது துணிபாகிறது.

இடுத லென்பது, வறியவர் முதலாயினோருக்குப் பொருள்கொடுத்துத
வுதலை மாத்திரம் குறிக்குமா? அன்றித் தீநெறிச் செல்வாரைச் சாமபேத
தானதண்டமென்னும் நியதிப்படி நல்வழி நடத்துதலையும், ஒன்றை மற்
றொன்றாக முணருகின்ற அஞ்ஞானத்தைக் கெடுத்து உள்ளதை உள்
ளவாறுணருமாறு அறிவுறுத்துதலையுங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படு
கிறது. பொருள்கொடுத்துதவுதலை மாத்திரங் குறிக்குமாயின், பொருள்
கொடுத்துதவுதல் அப்பொருளை யேற்போருக்குத் தாம் பொருள்பெறுதற்
கேற்ற வழியை யுறுத்தாது என்றும் ஏற்றற்றொழிலையே கொடுத்தலின்
அஃது பெருபகார மன்றென்பது வெளியாகிறது. நல்வழிநடத்துதலும்
அறிவுறுத்துதலும் அங்ஙனம் நடத்தப்படுவோரும் உறுத்தப்படுவோரும் அப்
பொருளைத் தாமாகவே பெறுதற்கும் கடைத்தேறுதற்கும் ஏதுக்களாம்.
சிறந்த இடுகையாகிய பின்னைய இரண்டனையும் விட்டுப் பொருள்கொடுத்துத
வுதலை மாத்திரம் குறித்தல் உயிர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவ
தொன்றன்றாகலின் இம்மூன்றனையு மொருங்கேகுறித்துநிற்கின்ற தென்
பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

பெரியோரென்றதற் கேற்பச் சிறியோ ரென்றிருத்தல் சிறப்புடைமை
யின், இட்டார் பெரியோ ரிடாதார் சிறியோராம் என்றுவது, இழிகுலத்தோ

ரென்பதற் கேற்ப வுயர்குலத்தோ ரென்றிருத்தல் சிறப்புடைமையின், இட் டாருயர்குலத்தோ ரியா ரிழிகுலத்தோ ரென்றாவது பாடமோத லினிதாம்.

இச்செய்யுள் நிஷ்காமியத்தவஞ் செய்வாரை இன்பநிலை பெறுதற் கேற்ற கிளர்ச்சி யுண்டாமாறு உயர்ந்தோரென உண்மையைக் கூறுதலானும், அங்ஙனஞ் செய்யாதாரையும் அதிற் றூண்டுமாறு இடாதா ரிழிகுலத்தோ ரெனக் கடிந்துகூறுதலானும் நல்வழியாயிற்று.

## 3-ம் செய்யுள்.

அவதாரிகை.

முன்னேறிப்போந்த தவஞ்செய்யுந் தகுதியுடையார் மானுடயாக்கையி னரெனவும், அவ்வியாக்கை நிலையற்றதாகலின் விரைந்து செய்யவேண்டுமெ னவும், அச்செயலின் பயன் இனையதெனவும் இச்செய்யுளில் விளக்குகின்றார்.

யாக்கை நிலையாமை.

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
யிடும்பொய்யை மெய்யென் றிராதே—யிடுங்கடுக
வுண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

இ - ள்: இடும் பைக்கு - (முடிந்த வினையின் பயனை அனுபவிக்கு முன்) சேமித்துவைக்கின்ற சஞ்சிதத்தின்கண்,—இடும்பை இயல் உடம்பு இது அன்று - துன்பத்திற்கேதுவாகிய பாவத்தைச் சம்பாதித்துவைத்தற் குரிய யாக்கை இம் மானுடயாக்கையல்ல,—எயிடும் பொய்யை - வந்து பொருந்துகின்ற (நிலையற்ற) உடலை,—மெய் என்று இராது - நிலையான தென்று துணிகின்ற அஞ்ஞானத்தினால் (விடயப் பராக்கிற் சென்று) தாம தித்திராது,—கடுக இடும் - விரைந்து இடுதலைச் செய்மின்,—உண்டு - அதற் குரிய (சித்தசுத்தமாகிய) பயன் உண்டு,—ஆயின் - (அதுவாயிலாக) விசாரஞ் செய்தால்,—ஊழில் பெருவலி நோய் விண்டாரை - (அங்ஙனம் விசாரித் துத் தெளிந்து) விதியினும் மிக்க பேராற்றலுடைய பிறவித்துன்பத்திற் கேதுவாகிய அஞ்ஞானம் நீக்கப்பெற்றாருக்கு,—கொண்டாடும் வீடு உண் டாகும் - புகழ்ந்து விரும்புகின்ற முத்தி சித்திக்கும். எ - று.

பை - சஞ்சிதம். பைக்கு என்பதன் குவ்வுருபு கண்ணுருபாகவும், விண் டாரை என்பதன் ஐயுருபு குவ்வுருபாகவுந் திரித்துப் பொருளுரைக்கப்பட் டன. துன்பத்திற்கேதுவாகிய பாவத்தைத் துன்பம் எனக் காரியமாக



உபசரித்தார். இது என்னும் அண்மைச்சுட்டு பிறவிதோறும் கோடி தவஞ் செய்து அரிதாகப் பெற்ற பெருமையை விளக்கிநின்றது. எயிடல் - பொருந்தல். பொய்ம்மையைத் தனக்கியல்பாகவுடைய உடலைப் பொய் யென்றார். துணிகின்ற என்பது சொல்லெச்சம். இதுவும் இதற்கேதுவா கிய அஞ்ஞானமும் வருவிக்கப்பட்டுத் துணிகின்ற அஞ்ஞானத்தினால் என விளக்கப்பட்டது. உண்மைநிலையினிற்றல்வேண்டுமென வலியுறுத்துதலின், இராது என்பது விடயப்பற்றிற்சென்றிராமையை யுணர்த்திற்று. உடனே செய்யவேண்டுமென்பதைத் தெளிவித்துநிற்றலால் ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. உண்டு என்னும் வினைமுடிபிற் கேற்பப் பயனாகிய சித்தசுத்தம் வருவித்துரைக்கப்பட்டது. இல் உருபு நீக்கப் பொருள் குறி த்தது. பெருவலிநோய்க்கு ஏதுவாகிய அஞ்ஞானத்தைப் பெருவலிநோய் எனக் காரியமாக உபசரித்தார். கொண்டாடல் - தாமடையும் பயன் இது வொன்றே யென்று புகழ்ந்து போற்றல்.

சஞ்சிதத்தின் விரிவு முதலாஞ் செய்யுளின் விளக்கத்திற் கூறப்பட் டது; ஆண்டுக் காண்க. தோற்றம் அறுவகைப்படும். அவை: மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவாம். இவ்வறு வகைத் தோற்றங்களோடு தேவரையுஞ் சேர்த்து எழுவகைத் தோற்ற மென்பர் தத்துவவிசார மில்லாதார். தோற்றம் என்றால் காணப்படுவது என்பது பொருள். தேவர் இந்நிலவுலகிற் றோற்றப்படாமையால் அவரை அறுவகைத் தோற்றங்களோடு சேர்த்தல் அடாதாம். அன்றியும், அறு வகைத் தோற்றங்கள் பிரத்தியக்ஷப் பிரமாணத்து ளமைந்திருத்தலானும் தேவர் அமையாமையானும் ஒன்றற்கொன்று தொடர்புபடுத்தற் கேலாமை காண்க. தேவரைச் சேர்க்கலாமெனின், நரகரையுஞ் சேர்த்து எண் வகைத் தோற்றம் எனக் கொள்ளல்வேண்டும். அங்ஙனங் கொள்ளாமை யின், தேவரையும் சேராது நீக்கிவிடுதலே மரபாம். அறுவகைத் தோற்றங் களுள் மக்கள் ஒழிந்த ஏனைய தோற்றங்கள் இடையறாது இன்பநுகர வேண்டுமென்று புடைபெயரினும் அதனை யடைதற் கேற்ற தகுதியுடைய னவல்ல. எங்ஙனமெனின், ஓர் விலங்கு நீர்வேட்கை கொள்ளுங்கால், தெய்வசங்கற்பத்தாலுள்ள ஆறு ஏரி முதலியவற்றிற் சென்று விடாய் தீர்த்துக்கொள்ளுதலும், அவை கிட்டாவிடின், விடாயோடிருந்து வருந் துதலும் அனுபவசித்தம். இங்ஙனந் தான் விரும்பிய விடயசுகத்தையே யடையுந் தகுதியற்று இடர்ப்படுகின்ற விலங்கு நித்தியசுகத்தை யடைதற் குரிய தகுதி சிறிதுமில்லாத தென்பது சொல்லாமலே விளங்குகின்றது. மக்கள் விடாய்தீர்க்கும் பொருட்டுத் தெய்வசங்கற்பத்தாலுள்ள நீர்நிலைகள் கிட்டாவாயினும் கிணறு குள முதலியவற்றை யகழ்ந்து நீரைப் பெறுகின் றனர். ஆதலின், இவர் துன்ப நீங்கித் தாம் விரும்பிய இடையறா இன்ப நுகருந் தகுதியுடையராயினர். இத்தகுதியுண்டாதற்குக் காரணம் பகுத் தறிவாம். இப் பகுத்தறிவுண்டாதற் கேது புண்ணியமாம். எங்ஙனமெ

னில், புண்ணியம் இன்பம் பயத்தற்கேற்ற செயலாம். இச்செயல் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து மீட்டும் மீட்டும் நன்மையைச் செய்தற் கேது வாகலான் என்க. இத்தகைய பகுத்தறிவோடு யாக்கை யெடுத்தற்கு அனவிரத புண்ணியஞ் செய்தல்வேண்டுமென்பதை விளக்குவார் மானுட யாக்கையைச் சுட்டி இது என்றார். எனவே, இவ்வுடம்பிற் கேற்ற செயல் இன்பம் பயக்குஞ் செயலேயன்றித் துன்பம் பயக்குஞ் செயலன்று என்பார் இடும் பைக்கு இடும்பை இயல் உடம்பு இது அன்று என்றார்.

இதில் மானுடயாக்கை யெடுத்தார் இன்பம்பயக்குஞ் செயலை மாத்திரஞ் செய்யவேண்டுமோ? அன்றித் துன்பம்பயக்குஞ் செயலை மாத்திரஞ் செய்ய வேண்டுமோ? அன்றி இரண்டினையுஞ் செய்யவேண்டுமோ? என்று விசாரிக்கப் படுகிறது. உயிர்கள் யாவும் இடையறாது இன்பநுகரவேண்டுமென்று விரும்பு கின்றனவேயன்றித் துன்பநுகரவேண்டுமென்று யாதோருயிரும் விரும்புவ தில்லை. துன்பம் பயக்குஞ் செயலைச் செய்யும்போதும் அச்செயல் இன்பம் பயக்குமென்று மாறுபட்ட விளக்கத்துடனேயே செய்கின்றன. ஆதலின், இன்பம் பயக்குஞ் செயலை மாத்திரஞ் செய்தல்வேண்டுமென்பது மானுட யாக்கை யெடுத்தார்க்கு மாத்திரமன்றி எல்லா வுயிருக்கு மேற்றதொன் றாம். இதனால் பகுத்தறிவுடைய மானுடயாக்கை யெடுத்தார் யாவரும் எங்ஙனம் முயன்றும் இன்பம் பயக்குஞ் செயலையே செய்யவும் துன்பம் பயக்குஞ் செயலை யொழிக்கவுங் கடப்பாடுடையர் என்பது துணிபாயிற்று.

உயிர், உடலெடுத்தலையும் விடுதலையும் மாறி மாறி நுகர்தலால் அவ் வுடல் உயிருக் குறுப்பாகாது அயலிலுள்ள பற்றுக்கோட்டினால் வந்தடை ந்ததென்பார் எயிடும் பொய் என்றார்.

இதில், உடல் உயிரை நிலைக்களமாகக் கொண்டு அதினின்றுந் தோன்றி அதிலடங்குகின்றதா? அன்றி உயிரின் பற்றுக்கோட்டாற் பிறி தோரிடத்தினின்றுஞ் சம்பந்தப்பட்டு அழிகின்றதா? என்று விசாரிக்கப் படுகிறது. உடல் உயிரை நிலைக்களமாகக் கொண்டு தோன்றி யொடுங்குவ தாயின், உயிர் எஞ்ஞான்றும் அதனைத் தனக்குப் பற்றுக்கோடாகக் கொள்ள விரும்பமாட்டாது. உடலே அவ்வுயிரை என்றும் பற்றியிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி உயிர் உடலையே தனக்குப் பற்றுக்கோடென்றி ருத்தலால் உடல் உயிரினின்றுந் தோன்றி ஒடுங்கவில்லை என்று சித்தித் தது. சித்திக்கவே, உடல் உயிரின் பற்றுக்கோட்டாற் பிறிதோரிடத்தி னின்றுஞ் சம்பந்தப்பட்டழிகின்றதென்பது வெளியாகிறது.

உடம்பே உயிரின் புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்தற்கு ஏதுவாயி ருக்கின்றது. இவ்வுடம்பு பிறப்புக்கு முன்னும் இறப்புக்குப் பின்னும் இல் லாமையால் வந்து பொருந்திற் றென்பது வெளிப்படை. இப் பொய்ம்



மையாகிய உடலை நிலைக்களமாகக் கொண்டு நிலையற்ற விடயசுகங்களை மெய்யென்று துணிந்து நுகர்ந்து குறித்த நிலையான இன்பங் கைகூடாது அலைந்துதிரிதற் கேற்ற அஞ்ஞானத்தின் வயப்பட்டுத் தாமதித்திராது என்பார் மெய்யென்றிராது என்றார். பற்றுக்கோடான உடலினின்று விடயசுகத்தையே நித்தியசுகமென்று மயங்குதலால் நித்தியசுகத்திற் கேற் றவை முயலப்படா வென்பது இதனாற் சித்திக்கிறது.

இதில் பொய் என்பது மலடிமகன் போல முற்றுமின்மையைக் குறிக் குமா? அன்றிக் கயிற்றரவு போலப் பொருளாயில்லாது தோன்றிமறை யும் அநிர்வசனீயத்தைக் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. மலடி மகன் போல முற்றும் இல்லாததாயின், உடம்பு தோற்றாதிருத்தல்வேண் டும். அங்ஙனமின்றித் தோற்றுதலானும், கயிற்றின்கண் அரவு தோன்றி மறையுமாறுபோல உடம்பு தோன்றி , மறைகின்றதாகலானும் முற்றுமின் மையைக் குறியாது, பொருளாக இன்மையையும் தோற்றமாக உண்மை யையுங் குறிக்கின்ற அநிர்வசனீயத்தையே ஈண்டுப் பொய்யென்றார் என் பது விளங்கிற்று.

இதில் உயிரும் உடலும் ஒன்றா? அன்றா? என்று விசாரிக்கப்படுகி றது. ஒன்றாயின், உணர்வுண்டாகுங்கால் அவ்வுணர்வு உடலையும் உலகத் தையு முணருகின்றதேயன்றி உயிரை உணருகின்றிலது. உணரப்படுகின்ற செயப்படுபொருளும் உணருகின்ற வினைமுதலும் ஒன்றாதல் கூடாமையின் இரண்டுபொரு ளிருத்தல்வேண்டும். அவற்றுட் செயப்படுபொருள் உட லாம்; வினைமுதல் உயிராம். ஆதலால் இரண்டும் வெவ்வேறானவை என்று தெளிவாகிறது.

இம்மானுடயாக்கை பெடுத்தல் அரிதினுமரிதாகலானும், இக்கணத்தில் உடலிற் சம்பந்தப்பட்டிருக்கு முயிர் அடுத்த கணத்திலு மிருக்குமென்னுந் துணிபின்மையானும் இடுதலை உடனே செய்யவேண்டுமென்பார் கடுக இடும் என்றார்.

இதில் இப்பொழுதுள்ள மானுடயாக்கை பின்னுமிருத்தல் கூடுமோ? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. கடைத்தேறுதற்கேற்ப இடுதலைச் செய்யின் அதுகாரணமாகப் பின்னும் மானுடயாக்கை யெடுப்பது துணி பாம். அங்ஙனமின்றி வாளாவிருப்பின் அம்மானுடயாக்கை பெறுதற்கோ ரேதுவின்மையின் அதனைப் பின்னுமெடுத்தல் அரிதாமென்பது வெளியா யிற்று. அன்றியும், கடைத்தேறுதற்கேற்ற புண்ணியவயத்தாற் பெற்றுக் கொண்ட மானுடயாக்கை யிருக்கும்போதே அக் கடைத்தேறுதற்கேற்ப ஒழுகாதார் அத்தகுதியை அவமதித்த குற்றத்தின்பாற்பட்டு அவ்வியாக்கை யைப் பின்னும் எடுத்த லரிதாமென்பதுந் துணிபாகின்றது.

பயன் கருதாமற் செய்யப்படுகின்ற நிஷ்காமியத்தவத்தால் தனக்குப் பயன் தப்பாமற் பலிக்குமென்பார் உவீடு என்றார்.

இதில், பயன்கருதிச் செய்வார்க்கு அப் பயன் உண்டாவதால் பயன் கருதாமற் செய்வார்க்கு யாதொரு பயனு முண்டாகக்கூடாதென்று கொள்ளவேண்டும். கொள்ளவே நிஷ்காமியத்தவத்திற்குப் பயன் உண்டா? இல்லையா? என்று விசாரிக்க வேண்டிற்று. எத்தகைய தவஞ் செய்யினும் அத்தவத்திற்குப் பயன் உண்டாதல்வேண்டும்; இல்லையேல் அத்தவம் அவமாம். ஆகையால் நிஷ்காமியத் தவத்திற்கும் பயன் உண்டாதல்வேண்டும் என்பது துணிபாகிறது. அப்பயனே சித்தசுத்தமாம். எங்ஙனமெனின், காமியத்தவம் உடலோடு பொருந்திநின்று அநுபவித்தற்பொருட்டுச் செய்யப்படுவது. ஆதலின் அதற்குப் பிறவியும் விடயாநுபவமும் உண்டாம். நிஷ்காமியத்தவம் உடன்முதலிய சம்பந்த மொன்றுமின்றிச் செய்யப்படுவதாதலின் அதன்பயன் பிறிதொன்றிலும் பற்றுக்கோடற்றுநிற்குஞ் சித்தசுத்தமாம். இது மெய்யுணர்வு பெறுதற் கேதுவானது.

இத்தகைய சித்தசுத்த நிலையில் நிற்பவன் யார்? உணர்வுடைப் பொருளேது? உணர்வற்ற பொருளேது? இவ்விருவகைப் பொருள்களுஞ் சம்பந்தப்படுதற்குரிய பந்தநிலையுண்டானதன் காரணமென்ன? இப் பந்தநிலையை விட்டு, என்றுமழியாத பேரின்பநிலையிற் பொருந்துதற்குரிய சூழ்ச்சி யாது? என்று சுருதியுத்தி அநுபவங்களுக் கியைய ஐயந்திரிபற விசாரித்தால் என்பார் ஆயின் என்றார்.

இதில் கடைத்தேறுதற்குச் சித்தசுத்தம் மாத்திரம் போதுமா? அன்றி, அதுவாயிலாக விசாரஞ்செய்யவும்வேண்டுமோ? என்று விசாரிக்கப்படுகிறது. நிஷ்காமியத்தவமாகிய இடுதல் தற்பயன் கருதுதலாகிய அவாவையறுத்து எவ்விடத்தும் ஒரேபெற்றித்தான நிலையைக் கொடுக்கும். அவ்வாறு கொடுப்பினும் சித்தசுத்தம் மாத்திர முடைய தான் எவற்றினும் பற்றுறு நிற்கு மநுபவம் நித்தியஇன்ப மன்றாம். இங்ஙனம் நிற்குங்கால் விடயப்பற்றுக்கோடுகள் யாவு மறும். அறவே, தான் மாத்திரம் தனித்து நிற்க நேரிடும். இவ்வாறு நின்று விசாரிக்கிற் றன்னையே விசாரிக்க நேரிடும். அங்ஙனம் விசாரிக்குங்கால் தான் இன்பத்தை விரும்பிய காரணம் என்ன? அவ் வின்பம் தன்னிடத்துள்ளதா? மற்றோரிடத்துள்ளதா? என்னும் விசாரமுண்டாய் மற்றோரிடத்துண்டாயின் தான் விரும்புதற்கோ ரேதுவுமில்லை. ஆதலின், தன்னிடத்தே யுளதாதல்வேண்டும். தன்னிடத்துள்ள இன்பத்தைப் பிறிதிடத்து நுகரவேண்டுமென்று கொண்டமை அஞ்ஞானம் என்னுந் தெளிவுண்டாம். உண்டாகவே, அதனை விடுந் தகுதியுண்டாம். அஞ்ஞானத்தை விடவே ஞானம் சித்திக்கும். இஞ்ஞானம் தானே இன்பமென்று அநுபவித்தலால் நிலையுள்ள



தன்னோடு என்றும் நிலைத்திருக்கும் இன்பத்தையே பயப்பதாயிற்று. இவ்வின்பநுகர்ச்சியே முத்தியாகலின் கடைத்தேறுதற்கு நிஷ்காமியத்தவமளவி னில்லாது, விசாரமுஞ் செய்யவேண்டுமென்பது நன்கு தெளிவாகிறது.

முன்செய்த வினைப்பயன் அநுபவமாதலே ஊழாம். இவ்வூழ் அநுபவித்துழித் தீருவதாம். இதனும் தப்பாமலநுபவிக்கப்படவேண்டினும் இதனை வருவித்தற்கேற்ற வினையின் முயல்விக்கின்ற அஞ்ஞானமே மிகுந்த வலியுடைய துன்பமென்பார் ஊழிற் பெருவலி நோய் என்றார்.

இதில் ஊழ், அஞ்ஞானம் என்னு மிரண்டில் எது வலியுடைத்தென்று விசாரிப்பாம். ஊழ் அநுபவித்துத்தீருவது. அஞ்ஞானம் அநுபவிக்க மென்மேலும் பெருகுவது. ஆதலின், அஞ்ஞானமே வலியுடையதென்பது சித்திக்கிறது.

நித்திய இன்பமொன்றே எல்லாவுயிராலும் விரும்பிப் போற்றப்படுதலின் பொதுமையிற் கொண்டாடும் வீடு என்றார்.

மானுடயாக்கையுடையார் தாமடைந்த தகுதிக்கேற்ப விரைந்து நிஷ்காமியத் தவஞ்செய்து, அதன்பயனாகிய சித்தசுத்தம் பெற்று, அந்நிலையினின்று விசாரஞ்செய்து, அஞ்ஞான நீங்கப்பெற்று, மெய்ஞ்ஞானமுண்டாய்த் தாம் விரும்பிய நித்திய இன்பத்தை யடையுமாறு வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 4-ம் செய்யுள்.

### அவதாரிகை.

வீடுபெறுதற்குரிய உண்மை விசாரத்தி னருமை கூறுவான் றொடங்கி அது நிஷ்காமியத்தவப்பயனாகிய சித்தசுத்த மநுபவமாங் காலத்தன்றி ஏனைக்காலங்களில் அவ்வப்போது நனித்துச்செய்யு மாகாமியத்தி லமையாதென்றும், நிஷ்காமியத்தவப்பய னநுபவமாங்காலத்து எண்ணமின்றிச் சித்திக்குமென்றும் இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### உண்மைவிசாரத்தி னருமை.

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
யாங்கால மாகு மவர்க்கு.

இ - ள்: யார்க்கும் - எத்துணைச் சித்தியின் மேம்பட்டோர்க்கும்,— ஒரு கருமம் - நித்திய இன்பம் பயக்கும் உண்மைவிசார மென்னும் ஒப்

பற்ற செயலை,—புண்ணியம் வந்து எய்து போதல்லால் - நிஷ்காமியத் தவப் பயனாகிய சித்தசுத்தம் அநுபவமாகும் காலத்தன்றி ஏனைக் காலங்களில்,—எண்ணி - நினைந்து,—செய்ய ஒண்ணாது - செய்ய முடியாது,—ஆம் காலம் ஆகும் அவர்க்கு - நிஷ்காமியத்தவப் பயன் அநுபவமாகுங் காலம் அமையப்பெற்றார்க்கு,—கண் இல்லான் - குருடன்,—மாங்காய் விழ எறிந்த - மாங்காய் விழும்படி எறிந்த,—மாத்திரை கோல் ஒக்கும் - அளவு கோல் இலக்குநோக்காது எறிய மாங்காயிற் பட்டு அதனை விழுத்திய வாறு போல விசாரஞ்செய்யவேண்டுமென்று எண்ணாமலே உண்மைவிசாரம் சித்திக்கும். எ - று.

எண்ணி என்னும் வினையெச்சம் செய்யொண்ணாது என்னும் வினைமுற்றோடு முடிந்தது. ஒரு கருமம் - ஒப்பற்ற கருமம். ஏனைக் கருமங்களெல்லாம் வினைமுதல் குறித்த நித்தியவின்பம் தாராமையாலும், அவ்வின்பநுகர்தற்கு உண்மைவிசாரமே முக்கியகருமமாதலாலும் இப்பொருளை வலியுறுத்தி நின்றவாறு காண்க. யார்க்கும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. செய்ய என்னும் வினையெச்சத்திறு கெட்டு செய் என நின்று ஒண்ணாது என்பதன் முன்னுள்ள உகரவுயிர் வந்து புணர்ந்தழி யகரமெய் இரட்டித்துச் செய்யொண்ணாது என்றாயிற்று. கருமம் செய்யொண்ணாது என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அது கருமத்தைச் செய்ய ஒண்ணாது என விரியும். புண்ணியம் வந்தெய்தல் - புண்ணியம் பயனாக நுகரப்படுதல். கண் என்றது கட்பொறியைக் குறியாது பார்வையைக் குறித்துநிற்றலால் ஆகுபெயர். மாத்திரை - அளவு. குருடன் தனக்கும் பிறவற்றிற்கு மூறுபடாது தடவிச் சஞ்சரிக்குங் கோலை மாத்திரைக் கோலென ஆன்றோரான்ப. ஆகும் என்பதில் நடுநின்ற குகரவுயிர்மெய் கெட்டு ஆமென நின்றது. ஆகுமவர்க்கு என்பது வினையாலணையும் பெயர். விழ வென்னும் செயவெனெச்சம் காரியப்பொருட்டு. ஏகாரம் தேற்றம்.

விரும்புழி விரும்புழியெல்லா முடனுடனே யிட்டசித்திகளை யெளிதிற் பெறுகின்ற பேராற்றலுடைய யோகமுதிர்ந்தார்க்கு மென்பார் யார்க்கும் என்றார்.

சித்திகள் எட்டு. அவையாவன: அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். இவற்றுள் அணிமாவாவது அணுத்துவம்பெறுதல். மகிமாவாவது மகத்துவம்பெறுதல், இலகிமாவாவது மிகநொய்தாதல். கரிமாவாவது மிகப்பாரமாதல். பிராப்தியாவது விரும்பியவிடஞ்செல்லல். பிராகாமியமாவது விரும்பியபோகமனைத்தையும் விரும்பியவாறு பெறுதல். ஈசத்துவமாவது படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்வல்லமை பெறுதல். வசித்துவமாவது யாவற்றையும் வசப்படுத்துதல். இவற்றின் விரிவெல்லாம் யோகநூல்களிற்



கண்டுகொள்க. இத்தகைய சித்திகளனைத்தையும் ஒருங்கே யடைந்தார்க்கும் நிஷ்காமியத்தவப் பயன் அமையாக் காலத்து நினைவினாலுண்மை விசாரஞ் செய்தால் அது கைகூடுமோ? கூடாதோ? என்று விசாரிக்கப்படுகிறது. இச்சித்திகள் விளைதமாத்திரையானே மகிழ்ச்சியைத்தந் தழிவனவாகலின், அழியாத நித்தியசுகத்தைத் தருதற் கேதுவாகாவாம். உண்மை விசாரம் ஞானந்தந்து இடையறாத சுகத்தை யுதவுதலால் இடையறுந் தன்மையவாகிய இச்சித்திகள் இவ்வுண்மைவிசாரத்தைக் கொடுக்கமாட்டாவென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

நித்தியசுகம் பெறுதலை உயிர்கள் எடுத்துக்கொண்ட காரியமா[illegible] அப் பேற்றை ஏனைய கருமங்கள் தாராவென்றும், உண்மைவிசாரமெ[illegible] றுமே தருமென்றும் வற்புறுத்துவார் அவ்வுண்மைவிசாரத்தை ஒருகரு[illegible] என்று விதந்தோதினார்.

இதில் ஒருகருமம் என்பது யாதானுமோர் கருமத்தைக் குறிக்குமா[illegible] அன்றி உண்மைவிசாரத்தை மாத்திரங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. யாதானுமோர் கருமத்தைக் குறிக்குமாயின், புண்ணியப்பயனை கருமத்தைக் கைகூட்டுமென்றாகிறது. ஆகவே, அப்பயன் அநுபவத்திற்கு வாராதென்பது பெறப்படுகின்றது. படவே உயிர்களுக்கு இன்பானுபவமுண்டாதற்குப் பிறிதோர் ஏதுவுமில்லாமற்போம். அங்ஙனம் போகாது உயிர்கள் யாவுமின்பானுபவம் நுகர்தலனுபவசித்தமாகலின் புண்ணியப் பயன் யாதானுமோர் கருமத்தைக் கைகூட்டுமென்றலடாதாம். ஆயின், புண்ணியம் கருமத்தைக் கைகூட்டுதலையும் அநுபவத்தை யுதவுதலையுங் கொடுக்குமென்றால், ஒருயிர் முதன்முதல் வினை தொடங்கி அவ்வினை பயனாக முடிதற்கு முன்புண்ணிய மிருக்கவேண்டும். கருமம் யாதொன்றுஞ் செய்யாதிருந்த வுயிருக்கு முற்புண்ணியமின்மையின் கருமங் கைகூடாமற்போக நேரிடும். இங்ஙனமாயின், தொடங்கிய கருமமெல்லாம் கைகூடாமற் போகவேண்டியதே நியதி. அன்றியும் கருமங்கள் புண்ணியகருமம், பாபகருமம் என்னும் பாகுபாடுமில்லாமற்போம். பாபகருமத்தை முடித்தற்கும் புண்ணியமே வேண்டுமென்னும் பொருள்பட்டுப் பாபஞ் செய்கையிலே உயிர்கள் சித்தியடைதலுக் முற்புண்ணியமென்றாகிக் கன்மகாண்டச் சுருதிக்கும் யுத்தியனுபவங்களுக்கும் சிறிதும்பொருந்தாது மாறுதலானும், கூறப்படுகின்றநியாயங்கள் ஒன்றற்கொன்று பெரிதும் மாறுபடலானும் புண்ணியப்பேறே யாதானுமோர் கருமத்தைக் கைகூட்டிமுடிக்குமென்றல் ஒருவாற்றானும் பொருந்தாதென்பது துணிபு. நிஷ்காமியத்தவப்பேறு அநுபவமாம்போது அது ஏனைய கருமங்களின் பயன்போல அநுபவித்தழிந்தொழியாது நித்தியசுகம் பெறுதற்கேற்ற உண்மைவிசாரஞ் செய்தற்குத் தகுதியான சித்தசுத்தம் பயத்தலின் அதுவொன்றே உண்மைவிசாரமென்னுங் கருமத்தைக் கைகூட்டுவதற் கேதுவாயிற்று. ஆகவே ஒருகருமம் என்றது உண்மைவிசாரத்தையே குறிக்குமன்றி யாதானுமோர் கருமத்தைக் குறியாதென்பது

தெற்றென விளங்கிற்று. அன்றியும் ஒருகருமமென்பது உண்மை விசாரத்தைக்குறியாதாயின் ஏனைய கருமங்களொவ்வொன்றும் தனித்தனி நித்திய சுகம் பயத்தற்கேதுவாதல்வேண்டும். அங்ஙனமாயின் காமியத்தவம், பாபம் என்பனவும் நித்தியசுகத்தைத் தருதற்கேதுவாமென்று பொருள்பட்டு உயிர்கள் அடையவேண்டுமென்கின்ற நித்திய சுகத்தை அடையச்செய்யாது மாறுபடுத்துதலின் அவை உயிர்களுக்கு இன்றியமையாத கருமமல்லவென்பது துணிபாகின்றது இத்துணிபால் ஒருகருமமென்றது நித்திய சுகந் தருதற்கேதுவாகிய உண்மைவிசாரத்தையே குறித்ததென்பது ஐயந்திரிபின்றித் தெளிவாகின்றது.

இன்னும், புண்ணியப்பயன் கருமத்தைக் கைகூட்டுமோ? அன்றி ஆகாமியமாகிய புடைபெயர்ச்சி கருமத்தைக் கைகூட்டுமோ? என்று விசாரிக்கவேண்டிற்று. புண்ணியப்பயன் கருமத்தைக் கைகூட்டுமோயின், அப்புண்ணியம் வினையின்றியுண்டாதல்வேண்டும், ஒருவினை முடிதற்கு முன் புண்ணியஞ் செய்திருத்தல்வேண்டும். அப்புண்ணிய முடிபான வினை கைகூடியிருப்பதற்கு அதற்குமுன் புண்ணிய மிருந்திருத்தல்வேண்டும். அப்புண்ணிய வினை கைகூடியிருப்பதற்கு அதற்குமுன் புண்ணிய மிருந்திருத்தல்வேண்டும். என்று இங்ஙனம் முடிபின்றிச் சேறலின் அனவத்தாதோடமுண்டாம். ஆதலின் வினைகைகூட்டுதற்குப் புண்ணியம் வேண்டுமென்றல் சிறிதும் பொருந்தாது. அன்றியும், வினையே முடிபிற் புண்ணியமாவதன்றிப் புண்ணியம் வினையாகிறதில்லை. வினைகைகூட்டுதற்குப் புண்ணியம் வேண்டுமென்னில் வினையையின்றிப் புண்ணியம் உண்டாதல்வேண்டும். அங்ஙனமின்றி வினை முடிபே புண்ணியமாதலின் அவ்வினை சித்தித்தற்குப் புண்ணியம் வேண்டுமென்றல் ஒருவாற்றானும் பொருந்தாது. ஆகவே ஆகாமியப் புடைபெயர்ச்சியின் மிகுதியே கருமத்தை முடித்தற்குக் காரணமென்பதும், அதற்குப் புண்ணியப்பயன் கைகூடவேண்டாமென்பதும் இனிது தெளிவாகின்றன.

புண்ணியம் அனுபவமாக நுகரப்பட்டுத் தீர்தலேயன்றி உண்மைவிசாரத்திற்கு ஏதுவாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகிறது. இன்னபயனை யடையவேண்டுமென்று குறித்துச் செய்யுங் காமியத்தவ முடிபாகிய புண்ணியம் அப்பயனை அனுபவமாக்கித் தீருமன்றி உண்மைவிசாரத்துக்கேதுவாகாது. பயனொன்றையுங் கருதாது காருண்ணியமயத்தாற் செய்யப்படும் நிஷ்காமியத்தவமுடிபாகிய புண்ணியம் தீவினைவின்வரையறையாற் செய்யப்படாமையின் சித்தசுத்தமென்னும் அனுபவமாய் அழியாதுநின்று நித்தியசுகத்திற்கேதுவாகிய உண்மைவிசாரஞ் செய்விக்கும். ஆகவே காமியப் புண்ணிய மனுபவித்துத் தீருமென்பதும், நிஷ்காமியப் புண்ணியம் அனுபவித்துத்தீராது உண்மைவிசாரத்தொடர்பைக் கொடுத்து நித்தியசுகத்துக்கு முக்கியவேதுவாகுமென்பதும் நன்கு தெளிவாயின.



எண்ணிச்செய்யுங் கருமங்கள் மனதளவாய் நின்று பயனைக்கொடுத்தலானும், மனம் என்றும் நிலையுதலின்றித் தோன்றிமறையு மியல்பினதாதலானும் அம்மனத்தா லெண்ணிச் செய்யப்படும் கன்மம் நித்தியமில்லாமற் போகுமேயன்றி நித்தியசுகம் பயவாதென்பது சொல்லாமலே விளங்குகின்றது. இத்தகைய மனத்தில் நித்தியசுகத்துக்கேதுவாகிய உண்மை விசாரம் அமைதல்கூடாமையின் அதனால் இவ்வுண்மைவிசாரம் எவ்வாற்றானும் செய்யமுடியாதென்பார் எண்ணிச் செய்யொண்ணாது என்றார்.

மனதிலெண்ணியே யாவுஞ் செய்யவேண்டும். எண்ணமின்றி யாதுஞ் செய்தல்கூடாது. ஆகவும் எண்ணிச்செய்ய முடியாதென்றால் எண்ணமின்றி விசாரஞ்செய்தல்வேண்டும் என்றாகிறது. ஆகவே இதில் எண்ணமின்றி உண்மைவிசார முண்டாகுமா? அன்றி எண்ணி உண்டாகுமா? என்று விசாரிக்கவேண்டிற்று. விருத்தி, பலம் என்னும் இரண்டின் விகார சம்பந்தமே மனமெனப்படும். தான் விரும்புகின்ற சுகம் தன்மாட்டிருத்தல் வேண்டுமேயன்றிப் பிறிதோரிடத் திருத்தல்கூடாதென்று துணியுஞ் சுத்த நிலையே விருத்தியாம். அச்சுகந் தன்மாட்டில்லையென்று துணிந்து பிறிதோரிடத்து அனுபவிக்க முயல்கின்ற நிலையே பலமாம். விருத்திமனம் பிறிதொன்றினும் பற்றாது தன்னையே பற்றிநிற்றலின் புடைபெயர்ச்சியின்றி நிற்கும் நிலையான சித்தசம்பந்தமானதாம். பலமனம் யாவற்றினும் புடைபெயர்ந்து அவ்வவற்றின் மொத்துண்டலைந்து நிறைவுபெறாது பின்னும் பலவற்றினும் புடைபெயர்ந்துசெல்லுதலின் நிலையற்ற சடசம்பந்தமானதாம். விருத்திமனம் புடைபெயராமையின் அது எண்ணுந்தகையதன்றாம். பலமனம் புடைபெயருந் தன்மையதாதலின் அது எண்ணுந்தகையதாம். "எண்ணிச் செய்யொண்ணாது" என்றதனால் பலமனத்தையே ஈண்டு விளக்குகின்றது. இப்பலமனம் உண்மையைநோக்காது சொல்லுந்தோற்றமுமான பொய்யையே மெய்யென்று துணிந்து செல்லுதலால் உண்மைவிசாரஞ் செய்யுந் தகுதியுடையதன்றாயிற்று. விருத்திமனம் மற்றொன்றிற் பற்றாது ஆன்மாவாகிய தன்னையே பற்றுதலின் அது தானனுபவிக்கவேண்டிய நித்தியசுகம் பெறுதற்கேற்ற உண்மைவிசாரத்துக்கு இன்றியமையாத காரணமாகின்றது. ஆகவே எண்ணமின்றி உண்மைவிசார முண்டாமென்பதும் எண்ணியுண்டாகாதென்பதும் இனிது தெளிவாயின.

இனி, பலமனத்தாலுண்டாகு மெண்ணம் உண்மைவிசாரத்தைச் செய்யுமாயின் உண்மையின்றணிபு முன் அதிலே யமைந்திருந்து இஃதுண்மை யென்று கண்டுகொள்ளல் வேண்டும். அங்ஙனம் கண்டுகொண்ட மனம் பின் விசாரஞ்செய்தல் வேண்டாவாகலின், உண்மைவிசாரம் எண்ணிச் செய்யவேண்டாவாயிற்று. ஆகவே உண்மைவிசாரம் எண்ணிச்செய்யப்படுமென்றல் சிறிதும் பொருந்தாது.

நிஷ்காமியத் தவநெறியின் ஒழுகுவார்க்கும் அந்நெறியின் பயனாகிய சித்தசுத்தம் பயனாங்காலத்தன்றி ஏனைக்காலங்களில் உண்மைவிசாரஞ் செய்ய முயலினும் அஃது ஒன்றை மற்றொன்றாக வுணருகின்ற பொய்மை விசாரத்தையே தருமன்றி உண்மைவிசாரந் தாராதென்பார் புண்ணியம் வந்தெய்து போதல்லால் செய்யொண்ணாது என்றார்.

இதில், நிஷ்காமியத்தவப்பயனாகிய சித்தசுத்த மனுபவமாகாக்காலத்தில் உண்மைவிசாரஞ் செய்யில் அது கைகூடுமோ? கூடாதா? என்று விசாரிக்க வேண்டிற்று. சித்தசுத்தமில்லாத நிலையில் விடயசுகங்களை நோக்குங் கருமத்தில் மனம் பற்றுமேயன்றிப் பற்றின்றிநின் றுண்மைவிசாரஞ் செய்தல் கூடாது. கூடுமாயின் விடயப்பராக்கிற்சென்று செய்யுங் கருமங்களெல்லாம் உண்மைவிசார மாதல்வேண்டும். அதுகாரணமாக நித்திய இன்பம் பயத்தலும் வேண்டும். அங்ஙனமின்றி மனமானது நிலையுதலில்லாது மாறிமாறி நுகரும் விடயானுபவங்களினிற்ற லனுபவிக்கத்தமாகலின் நிஷ்காமியத்தவப் பயனாகிய சித்தசுத்த மனுபவமாகாக்காலத்து உண்மைவிசாரஞ் செய்தல் கூடாதென்பது வெளியாயிற்று. ஆகவே, இச்சித்தசுத்தம் பயனாங்காறும் யாது செய்யவேண்டுமெனின்? விடயவின்பங்களுக்கேற்ற காமியத்தவத்தை அறவே யொழித்துவிட்டு நிஷ்காமியத்தவத்தில் இடையறாது முயன்று கொண்டிருத்தல்வேண்டு மென்க.

குருடன் மாங்காய் நுகருதலைக் குறித்தானாயினும் அக்காய் தன்கட் புலப்படாதிருப்பத் தன்கையிலிருந்த மாத்திரைக்கோலை யெறிந்துழி அக்கோல் மாங்காயிற்பட்டு அதனை வீழ்த்தி அவன் விரும்பிய பயனைக் கொடுத்தவாறுபோல, நித்தியவின்ப நுகரவேண்டுமென்று விரும்பினோர் தாம் செய்த நிஷ்காமியத் தவப்பயனாகிய சித்தசுத்த முண்டாம்பொழுது உண்மைவிசாரஞ் செய்யவேண்டுமென் றெண்ணாமலே விசாரிக்க, அஃது உண்மைவிசாரமாய்த் தாங்குறித்த பயனைத் தடையறக் கொடுக்குமென்பார் ஆங்காலமாகுமவர்க்கு கண்ணில்லான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்கும் என்றார்.

இவ்வுவமையில் இலக்குநோக்காமையே பொதுத்தன்மையாம். காமியத்தவப்பயனாகிய மாங்காய் நுகர்தல் அனுபவமாங்காலம் நேர்ந்துழிக் குருடன் இலக்குநோக்காதெறிந்த மாத்திரைக்கோல் மாங்காயிற்பட்டு அதனோடு அவன்முன்னிலையில் வீழ்ந்தாற்போல, அனுபவமாங்காலம் நேர்ந்தார்க்கு உண்மைவிசாரஞ் செய்யவேண்டுமென்று இலக்குநோக்காது விசாரஞ்செய்ய அதுவே யுண்மைவிசாரமாய்ச் சித்திக்குமென்க.

முற்செய்யுளிற் கூறிய வீடுபேறடைதற்கு மனத்தான் முயற்சித்து ஆசாமிசையப்பட்டலையாது நிஷ்காமியத்தவத்தை அதன்பயனடையுங்காறுஞ் செய்தேதீரல்வேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.



## 5ம் செய்யுள்.

### அவதாரிகை.

நித்தியவின்ப நுகருதற்குரிய உண்மைவிசார முண்டாங்காறும் நிஷ்காமியத் தவநெறியின் ஒழுகுங்கால் ஊழா னுகருதற்கியைந்த நிலையற்ற வின்பங்களை விரும்பியும் துன்பங்களை வெறுத்தும் உழன்று சலியாது சாந்தமயமாக அவ்வவற்றை நுகர்ந்துகொண்டு தமது மானுடயாக்கை யிருக்கும்போதே உண்மைநிலையை உறுதியாகக் கடைப்பிடித்தல் வேண்டுமென்று இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### ஊழினுறுதி.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—விருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

இ - ள்: வாராத - அனுபவமாக வரப்பெறாதன,—வருந்தி அழைத்தாலும் வாரா - அரிதாய் முயன்று வரவழைத்தாலும் வரப்பெறாவாம் — பொருந்துவன - அனுபவமாக வரப்பெறுவன,—வருந்தி போமின் என்றாலும் போகா - அரிதாய் முயன்று போங்கள் என்று துரத்தினாலும் போகப் பெறாவாம்,—(ஆகவும்), மாந்தர் தொழில் - மக்களது செய்கை,—தாம் - தாங்கள்,—இருந்து - வாராதவற்றை வருவித்தற்கும் வந்தவற்றைப் போக்குதற்குமே வாழ்வுண்டு,—ஏங்கி - விரும்பியவாறு நுகருதற்கேலாமையிற் றிகைத்து,—நெஞ்சம் புண்ணாக - மனம் வேறுபடும்படி,—நெடுந்தூரம் நினைந்து - நீடித்தகாலம் முடிவின்றிச் சிந்தித்து,—துஞ்சுவதே - இறந்து விடுவதோ? எ - று.

இங்ஙனம் வாளா இறவாது, யாக்கை யிருக்கும்போதே நிலையான வின்பத்திற்கேற்பப் பெரிது முயறலே மானுடரின் கடப்பாடென்பது குறிப்பெச்சம்.

வருந்தி என்பது போமினென்றால் என்பதற்குங் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. வரப்பெறுதன வருந்தியழைத்ததற்காக வருவனவல்லவாகலின், அழைத்தாலும் என்பதிலுள்ள உம்மை அழைக்கலாகாது என்னும் எதிர்மறைப்பொருளில் வந்தது. இவ்வும்மை போமினென்றால் என்பதனிற்றினுந் தொக்குநின்றது. ஆதலின் போமினென்றாலும் என விரித்

தப் பொருளுரைக்கப்பட்டது. பொருந்துவன, வருந்திப் போமினென்றதற்காகப் போகாமையின், இதுவும் போமினென்னலாகாது என்னும் எதிர்மறைப் பொருளையே தந்தது. வாராத, பொருந்துவன என்றதனால் இவை என்றும் ஒரேபெற்றித்தாய் நிலையுதலுடையனவல்ல என்பதும், ஆதலின் இவை முறையே சிற்றின்பதுன்பங்களையே சுட்டுகின்றன என்பதும் பெற்றாம். இருத்தல் - வாழ்தல் நெஞ்சம் புண்ணாதல் - மனம் தன்னிலை தளர்ந்து வருந்துதல். நெடுந்தூரம் நினைதல் - முடிவின்றிச் சிந்தித்தல். துஞ்சுதல் - இறத்தல். ஏகாரம் வினாப்பொருளில் நின்று அவ்வினாவிற்கு இறைபயப்பதாகிய எதிர்மறைப் பொருளைக் குறிப்பா லுணர்த்திற்று.

ஏற்ற வினை முன் செய்யப்படாமையின் அவ்வப்போது எவ்வாறு முயலினு நுகருதற்கேலாத அனுபவங்களென்பார் வாராத என்றார்.

இதில், வாராத என்னுஞ் சொல் எக்காலத்தும் எவ்வாற்றானும் வரப்பெறாதவற்றைக் குறிக்குமா? அன்றி ஏற்றவினை முன்செய்து பயனுக்கிசையாது அவ்வப்போது நுகரவிரும்பிய அனுபவங்களைக் குறிக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. எக்காலத்தும் எவ்வாற்றானும் வரப்பெறாத அனுபவங்கள் இல்லாதனவாமன்றி உள்ளனவாகா. ஆகுமெனின் அவற்றிற்குரிய வினைகளிருத்தல்வேண்டும். வினைகளில்லையேல் அவை வினையின்றிய அனுபவங்களாதல்வேண்டும். வினையையின்றி அனுபவமொன்றுமின்மையின் வெறுமைகளாதல்வேண்டும். வெறுமையை அனுபவிக்க முடியாமையானும், அவ்வெறுமையை அனுபவித்தற்கு எவரும் விரும்பாமையானும், அங்ஙனம் விரும்பாதவற்றைக் கூறலிற் பயனின்மையானும் வாராத என்பது எக்காலத்தும் எவ்வாற்றானும் வரப்பெறாதவற்றைக் குறிக்கவில்லையென்பது சித்தம். ஆகவே, வாராத என்பது விரும்பிய இன்பங்களை நுகர்தற்கு ஏற்றவினை முன் செய்யப்படாமையின் அவ்வின்பங்கள் நினைவின் மாத்திரையானே முயலினும் அடையப்பெறா என்பதையே குறிக்குமென்பது துணிபு.

இனி, வாராத என்பது இன்பங்களையே குறிக்குமா? அன்றித் துன்பங்களைக் குறிக்குமா? அன்றி இரண்டனையுங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது.

உயிர்கள் இன்பத்தையே விரும்புதல் இயல்பாகலின், அழைத்தாலும் என்னுஞ் சொல்லாற்றலினால் துன்பங்களைக் குறியாது இன்பங்களையே குறித்துநின்றதென்பது வெளிப்படை.

ஏற்றவினை முன் செய்யப்பட்டமையின், தப்பாமல் அனுபவத்துக்கு வருவன என்பார் பொருந்துவன என்றார்.



இதில் பொருந்துவன என்னுஞ்சொல் இன்பங்களையே குறிக்குமா? அன்றித் துன்பங்களைக் குறிக்குமா? அன்றி இரண்டனையுங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது.

உயிர்கள் துன்பத்தையே வெறுத்தல் இயல்பாகலின், போமினென்றால் என்னுஞ் சொல்லாற்றலினால் இன்பங்களைக் குறியாது துன்பங்களையே குறித்துநின்றதென்பது வெளிப்படை.

தாம் நுகர விரும்பிய இன்பத்துக்கு இயைந்த செயலை இடையறாது அரிதின் முயன்று முடிப்பினும் என்பார் வருந்தி என்றார்.

இதில், இவ்வினை முடித்தற்குண்டான வருத்தம் ஊழால் சேர்ந்ததா? அன்றி, அவ்வப்போது செய்யும் ஆகாமியத்தால் சேர்ந்ததா? என்று விசாரிக்கவேண்டிற்று.

ஊழால் சேர்ந்ததாயின், இன்பம் நுகரவேண்டுமென்ற எண்ணமும் அதற்குரிய முயற்சியும் ஊழால் சேர்ந்திருத்தல் வேண்டும். ஆயின், இன்பநுகரவேண்டுமென்னும் இயல்பான எண்ணத்தின் பின்னே அதற்கேற்ப முயலப்படுகின்றது. படவே, வினையும் அதனாலுண்டாகும் ஊழும் இவ்வெண்ணத்தின் பின் நேர்ந்தனவாமன்றி இதற்கு முன் நேர்ந்தனவில்லையென்பது துணிபு. இத்துணிபால், இன்பமடையவேண்டுமென்னுமெண்ணத்தின்பொருட்டு வருந்திய வருத்தம் ஆகாமியத்தால் உண்டானதன்றி அதற்கோரூழிருக்கவில்லையென்பது வெளியாயிற்று

இனி இன்பமடையவேண்டுமென்னும் எண்ணமும் ஊழாலுண்டானதாகுமெனின், உயிர்கள் முன் இன்பமின்றி யிருந்து பின்பு யாதானுமோர் வினை செய்து அதன் பயனால் இன்பத்தை யடைய விரும்பியிருத்தல் வேண்டும் இன்பமடையவேண்டுமென்னுமெண்ணமின்றி வினை செய்தற்கோர் காரணமின்மையின் ஊழ் உண்டாகமாட்டாது. ஆகவே, இன்பமடையவேண்டுமென்னுமெண்ணம் ஊழாலுண்டானதென்பது சுருதியுத்தியனுபவங்களொன்றற்கேனும் ஒருவாற்றானும் பொருந்தாதென்க.

உயிர்கள் யாவும் இயல்பாகவே இன்பமடையவேண்டுமென்று விரும்பியதன் காரணத்தை முதலாஞ் செய்யுளுரையிற் கூறிப்போந்தாம். ஆண்டுக் கண்டு தெளிக.

குறித்த அனுபவநுகர்ச்சிக் கேற்ற வினைகளைச் சிறிதும் தவறாது ஒருங்கே செய்யினும் அவ்வவற்றின் பயன்கள் முன்செய்த வினையின் பயன்கள் அனுபவமாதற்கு முன் வரப்பெறா வென்பது துணிபாகலின், அவற்றை யுடனுடனே வருவிக்கவேண்டுமென்று கொண்ட இட்டம் நிறைவேறா

மையால் அங்ஙனவுகூர்தலிற் பயனின்றென்பார் எதிர்மறைப்பொருட்கு மும்மை புணர்த்தி அழைத்தாலும் என்றார்.

முன்செய்த வினைக்கீடாக வரன்முறையே அனுபவிக்கவேண்டுவன அனுபவமாகாமற் றீராவாகலின், அங்ஙனம் போக்க நினைத்தலிற் பயனில்லை யென்பார் போற்றினென் றாலும் என்றார்.

இதில், முன் செய்த வினைப்பயன்கள் வரன்முறையே அனுபவமாகுதலேயன்றி அவ்வப்போது விரும்பிய அனுபவங்களுக் கேற்ற வினைகளைச் செய்யின் அவ்வப் பயன்களை உடனுடனே பயக்குமா? பயவாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. அவ்வப்போது செய்த வினையின் பயன் அவ்வப்போது பயக்குமாயின், எவரும் தாமடைய விரும்பிய பயனை அதற்காக அவ்வப்போது செய்யும் வினையால் தப்பாமல் அடைந்திருத்தல்வேண்டும். அங்ஙனமின்றி, குறித்த பயனை அதற்கேற்பச் செய்த வினையால் அடையாது கவலுதல் அனுபவமாதலின், குறித்த பயனை உடனுடனே செய்யும் வினையால் அடைதலாகாதென்பது விளக்கிற்று.

ஆயின், மிகுந்த புண்ணியமும் மிகுந்த பாபமும் ஆகாமிய வன்மைக் கேற்ப உடனுடனே பலிக்கும். உதாரணமாக, புத்திரகாமேட்டி, நூறு அசுவமேதயாகம் ஆகிய புண்ணியங்கள் உடனே பயன்றருதலும், முனிவர், சிசு முதலியவர்களின் வதை உடனே பிரமகத்தியா தோஷத்தைக் கொடுத்தலும் அனுபவமாதல் காண்க. இவற்றைப் பயக்கும் பெரும் புண்ணியமும் பெரும் பாபமுமாகிய இரண்டும் உடனுடனே பயத்தற் கேதுவென்னை யெனின் ஏனைய முன் அனுபவங்களைத் தடுத்தற்கேற்ற வன்மையும் அவற்றைத் தம்முள்ளேயடக்கி மிகுதலுமாகிய இரண்டனாலு மெனக. உதாரணமாக, கடன்பட்டா னொருவன் அக்கடன்பொருளின் றொகைக்குட்படத் தேடிய பொருட்கள் யாவும் மிச்சமாகாது கடனிறுத் தற்கே போய்ச்சேர்தல்போல, பாபச்செய்கை மிகுதியாகச் செய்திருப்பவன் அதனை யுள்ளடக்குதற்குரிய புண்ணியஞ் செய்யும்வரையுந் தனது புண்ணியச் செய்கைகளின் பயனை யுடனுடனே யனுபவிக்கமாட்டான். தேட்டமிகுதியாகச் செய்தவன் அந்தத் தேட்டப்பொருளுக்குட்படக் கடன்படினும் அக் கடனாலாய துன்பத்தையடையாது அதனை எளிதில் இறுக்குமாறு போலப் புண்ணியமிகுதியாகச் செய்தோன் அதனையுள்ளடக்குதற்குரிய பாபஞ் செய்யும் வரையுந் தனது பாபச்செய்கைகளின் பயனை உடனுடனே யடையமாட்டான். இதுபற்றியே தீவினைகள் தீருதற்குரிய பிராயச் சித்த கன்மங்கள் வேதத்தில் விதிக்கப்பட்டன.

முன்வினைக்கீடாகிய பயன்களை அனுபவித்துக்கொண்டு வாழ்கவென் பார் இருந்து என்றார்.



வாழ்வு பூணுங்கால் இன்பதுன்பங்களிரண்டும் மாறிமாறி அனுபவிக்கப்படுகின்றன. அவற்றுள் துன்பத்தை மாத்திரம் அனுபவிக்கலாகாதென்று அஞ்சி அதனை நீக்க முயன்று முடியாமையால் செய்வதின்னதென்றறியாது திகைத்து என்பார் ஏங்கி என்றார்.

இவ்வேக்கத்தினால் செயற்பாலது யாது விடற்பாலது யாது என்னும் நிச்சயமின்றி, ஒன்றன்பின் ஒன்றாக மனம் சேர்ந்துழி சேர்ந்துழியெல்லாம் சென்று ஏற்றவற்றை யுய்த்துணராது வருந்துமாறென்பார் நெஞ்சம் புண்ணாக என்றார்.

இத்தடுமாற்றத்தினாலே செயற்பாலன ஒன்றேனும் உறுதிப்படாமையால் மீட்டும் மீட்டும் இடையறாது சிந்தித்தென்பார் நெடுந்தூரம் தாம் நினைந்து என்றார்.

இந்நினைவு மாத்திரையானே யாதும் தெளிவின்றி வேண்டியவை செய்யாது மானுடயாக்கை யெடுத்தார் இறத்தலாகா தென்பார் மாந்தர் தொழில் துஞ்சுவதே? என்றார்.

முற்செய்யுளிற் கூறியவாறு நிஷ்காமியத்தவநெறியின் றொழுகுங்கால் ஊழா னேரும் இன்பதுன்பங்களை மாற்ற முயன்று வீண்காலம் போக்காது, அவற்றைச் சாந்தமயமாக அனுபவித்துக்கொண்டு, நிலையான வின்பத்திற் கேற்பப் பெரிதுமுயறல்வேண்டுமென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 6-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் ஒவ்வொருவருக்கும் அனுபவம் ஊழினளவாமென்று வலியுறுத்தினார். அங்ஙன முறுத்தினும், வினை ஒவ்வொருவருக்கும் வேறுபாடென்பதை யுணராது, தாம் நுகரும் பயன்கள் ஊழா னேர்வனவாயின், (அவை ஈசனாலூட்டப்படுதலின்) யாவர்க்கு மொரேபெற்றித்தாதல்வேண்டும்; அவ்வாறின்றி ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைப்பட நுகருதலனுபவசித்தமாகலின், அவை ஊழானேர்வனவென்றுகோட லமையாதென்றும் அவ்வப்போது செய்யும் ஆகாமியத்தா லாவனவென்றுகோட லமையுமென்றும் மயங்கித் தமக்குநேரு மனுபவங்களி னிறைவெய்தாது, பிறர் நுகர்வனவற்றைத் தாமு நுகர விரும்பி, அவற்றிற் கேற்ப அரிதாய் முயன்று அனுபவிக்கலாமென்று துணிந்து, தேசாந்தரஞ் சென்றுழன்று வருந்த நேரிடும். அங்ஙன முழலுதலால் பிறர் நுகரு மனுபவப்பேறுமின்றி அலைவே பயனாய்க் கடைத்தேறு முறுதியுங் கெடும். ஆகலின், பிறர் நுகரும் நிலையற்ற விடயசுகங்களை விரும்பி யுழலாது நிலையான பேரின்பத்திற் கேற்றவற்றின் முயலவேண்டுமென்று இச்செய்யுளில் விளக்குகின்றார்.

## உலகவாதனை.

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
னுடலோடு வாழு முயிர்க்கு.

இ - ள்: உள்ளது ஒழிய - சத்தாக என்றுமுள்ள ஆன்மசுகமொன்றல்லாமல்,—ஒருவர் சுகம் - ஒருவர் நுகரும் விடயசுகங்கள்,—ஒருவர்க்கு கொள்ள கிடையா - மற்றொருவரால் பெற்று நுகருதற்கு அகப்படா,—குவலயத்தில் - உலகத்தில்,—வெள்ள கடல் ஓடி மீண்டு கரையேறினால் - பெருநீரையுடைய கடலில் கப்பலேறிச் சென்று (அக்கடலைக் கடந்து விரும்பிய விடத்தை யடைந்து) திரும்பிவந்து கரையேறினாலும்,—உடல் ஓடு வாழும் உயிர்க்கு என் - உடம்போடு நின்று வாழுகின்ற உயிருக்கு யாது பயன்? (ஒன்றுமில்லை.) எ - று.

உள்ளது என்பது குறிப்புவினையாலணையும்பெயர். அது என்றும் ஒரேபெற்றித்தாகவும் பொருளாகவு மிருக்கின்ற ஆன்மசுகத்தை யுணர்த்திற்று. ஒருவர்க்கு என்பதன் குவ்வுருபு ஆலுருபாகத் திரிக்கப்பட்டது. சுகம் என்பது சாதியொருமை. அது கிடையா என்னும் பன்மை வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் பொதுமையில் ஒருவர்க்கு, ஒருவர்சுகம் என்றார். இங்ஙனமன்றி உயர்வின்பொருட்டுப் பன்மையாகக் கூறினாரென்றல் பொருந்தாது. கடலோடி மீண்டு கரையேறினால் என்னும் வினையால் உடலோடுவாழுமுயிரென்றது ஈண்டு விலங்கு முதலிய பிறவுயிரைக் குறியாது மக்களுயிரையே குறித்துநின்றது. கடலோடி என்றதனால் கப்பலேறி என்று வருவித்தாம். மீண்டு என்றதனால் மாண்டுபோகாமல் விரும்பிய விடத்தை யடைந்து என்பது குறிப்பெச்சம். ஏறினால் என்பதில் உயர்வுசிறப்பும்மை தொக்குநின்றது. அது ஏறினாலும் என விரியும். எவன் என்னும் வினாப்பெயர் ஈறுநின்ற வகர வுயிர்மெய் கெட்டு என் என்றாய் ஈண்டு இன்மைப்பொருள் குறித்துநின்றது. ஆகலின், ஒன்றுமில்லை என்னும் ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது. உள்ளதொழிய என்றதனால் ஏனைய விடயசுகங்கள் தோன்றியழியு மியல்பினவென்பது பெற்றாம்.

கணந்தோறுங் கணந்தோறு மின்பம்போலத் தோன்றி மாறுபட்டழிகின்ற விடயசுகங்கள் போலாது நுகர நுகரக் குறைவுபடாதும் வேறுபடாதும் அழியாதும் என்றும் ஒரேபெற்றித்தாயிருக்கின்ற ஆன்மசுகம் என்பார் உள்ளது என்றார்.



இவ்வான்மசுகமானது சீவன்முத்தராய்த் தேகத்தோடிருக்குங்காலத்து மெவ்வாறு மொரேபெற்றித்தாக நுகரப்படுமேயன்றி ஏனைய சுகங்கள் அவ்வாறு நுகரப்படா வென்பார் ஒழிய என்றார்.

இதில் ஒருவர்க்கொருவர் சுகம் என்று பின்னர்க் கூறுதலின், உள்ளதொழிய என்பது அவரவருக்கு ஊழினாலுள்ள சுகத்தை அவரவர் நுகரலாமேயொழிய என்று பொருள்படுகின்றதா? அன்றிச் சத்தாக என்றுமுள்ள ஆன்மசுகமொன்றேயொழிய என்று பொருள்படுகின்றதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

அவரவருக்கு ஊழாலுண்டான சுகத்தை அவரவர் நுகரலாமேயொழிய என்று பொருள்கொள்ளின், சுகங்கள் என்னும் பன்மைக்கிணைய உள்ளவொழிய என்று பாடமோதல்வேண்டும். அங்ஙனமோதாது உள்ளதொழிய என ஒருமையா லோதுதலானும், தத்தமக்கு ஊழானுள்ள சுகங்களேயன்றிப் பிறிது சுகங்கள் வாராவென்று முற்செய்யுளில் வலியுறுத்தியதையே ஈண்டுங் கூறல் கூறியதுகூறலென்னுங் குற்றத்தின்பாற்படுமாகலானும் அங்ஙனங்கோட லொருசிறிதும் பொருந்தாது. நித்தியசுகமே எல்லாரிடத்தும் ஒரேபெற்றித்தாயமைந்திருத்தலானும், அஃது நுகரப்படுங்கால் யாவர்மாட்டு மொரேபெற்றித்தாய் நுகரப்படுமேயன்றி மாறுபட முடியாமையானும், சத்தாக என்றுமுள்ள ஆன்மசுகமொன்றே யொழிய என்று பொருள்கோடல்வேண்டும் என்பது துணிபாயிற்று.

பிறப்பு, உடல், பொறி, கரணம், உணர்ச்சி என்பவை பொதுமையில் யாவர்க்குமொத்திருப்பினும் காலம், இடம், தோற்றம், குணம் என்பவை சிறப்புவகையில் யாவர்க்கும் வேறுபட்டிருக்கின்றன. இவ்வேறுபாட்டிற்கிணைய அனுபவமும் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டிருக்குமேயன்றி ஒருவரைப்போல மற்றொருவர்க்கமையாதென்பார் ஒருவர்க் கொருவர்சுகங் கொள்ளக் கிடையா என்றார். எனவே ஒருவர் நுகரும் துக்கத்தையும் மற்றொருவர் நுகரமாட்டாரென்பது வெளியாகிறது. ஆயினும் துக்க நுகர்ச்சியை விரும்பி எவரும் முயலாமையின் அஃது ஈண்டு வேண்டப்படாததாயிற்று. ஆகலின் சுகத்தையே ஈண்டுக் கூறவேண்டிற்று.

இதில் மக்கள் யாவரும் தோற்றம் கரணம் என்பவற்றி லொத்திருக்கின்றனர். இவ்வொற்றுமைபற்றி இவரில் ஒருவர் நுகரும் அனுபவம் மற்றொருவரால் நுகரப்படுதல் கூடுமோ? கூடாதோ? என்று விசாரிக்கப்படுகிறது.

பொதுமையில் மக்களுக்குத் தோற்றம், கரணம், உணர்ச்சி என்பன ஒத்திருப்பினும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வடிவத்தோடு தோற்றியிருத்தலானும், ஒருவரைப் போலொருவர் தோற்றாமையானும், ஒருவர் தோற்றிய

காலமிட முதலியவற்றில் மற்றொருவர் தோற்றாமையானும், முன்னீட்டிய வினைக்கியைய வெடுத்த தேகத்திற்கேற்ப மனம் புத்தி முதலியவை வேறுபட்டிருத்தலானும், ஒருவர் நுகருஞ் சுகம் போல மற்றொருவர் நுகருதலமை யாதென்பது தெளிவாயிற்று. உதாரணமாக: பெண் ஆணாக முடியாது; ஆண் பெண்ணாக முடியாது; குருடன் காட்சியின் வனப்பை நுகரமாட்டான். பிறவும் இவ்வாறே யமைத்துக்கொள்க.

ஈண்டு சுகம் என்றது ஊழாலுண்டாகுஞ் சுகத்தைக் குறிக்கின்றதா? அன்றி, அவ்வப்போது செய்யும் ஆகாமியத்தாலுண்டாகுஞ் சுகத்தைக் குறிக்கின்றதா? அன்றி, இவ்விருவகைச் சுகத்தையுங் குறிக்கின்றதா? என்று விசாரிக்கப்படுகிறது.

ஆகாமியத்தாலுண்டாகுஞ் சுகத்தைக் குறிக்குமாயின், ஆகாமியம் அவ்வப்போது முன்னைய கன்மானுகுணங்களாற் செய்யப்படுவது. குணம் வேறுபடினும் அதனைத் திருத்தி நல்வழிப்படுத்தல் கூடும். கூடவே அதனாற் செய்யப்படுங் காரியங்களும் அவற்றால் வரும் சுகானுபவமும் ஒரேபெற்றித்தாத லமையும். ஆகலின், ஒருவர்போல மற்றொருவர் நுகருதல் கூடுகின்றது. ஆதலால் ஒருவர் நுகருஞ் சுகம்போல மற்றொருவர் நுகருதற் கமைதலின், கொள்ளக் கிடையா என்ற சுகம் ஆகாமியசுக மன்றென்பது வெளியாயிற்று.

கன்மமாகச் செய்துமுடிந்தது ஊழாதலானும், செய லனுபவித்துத் தீரவேண்டுமேயன்றிக் குணம் போல மாறுபடுத்த முடியாமையானும், அவ்வனுபவம் ஒருவர்போலொருவர் நுகருத லமையாது. ஆகவே இச்சுகம் ஊழானேருஞ் சுகம் என்பது துணிபாயிற்று.

இங்ஙனமாகவும், அனுபவங்கள் யாவும் ஊழின் பயனென்று சிலரும், இப்போது செய்யும் ஆகாமியப் பயன் என்று சிலரும் தம்முள் வாதாடித் தெளிவுபெறா திடர்ப்படுகின்றனர். ஆகலின், ஊழினனுபவ வரையறையையும், ஆகாமிய வனுபவ வரையறையையும் தெளிவாக விளக்கவேண்டிற்று.

ஊழினனுபவம் குணத்தின் வயமின்றி முடிந்தசெயலாய்த் தடுக்க முடியாமலிருப்பது. உதாரணமாக: பிறவியெடுத்தல், அங்கவீனம், தீரா நோய், பிறக்கும்போது வறுமை, சாதி, ஆயுள் என்பனவும் இவை போல்வனவுமாம். இவை ஒருவர் இவ்வாறாக வேண்டுமென்று நினையாதும் முயலாது மிருப்பத் தாமே சேர்வனவாம்.

ஆகாமியானுபவம் குணத்தின்பாற்பட்டுச் செய்யவும் ஒழியவும் தக்கதாக நிற்பது. உதாரணமாக: கல்வி, ஆசாரம், தொழில் இவற்றைப் பெறவேண்டுமென்று விரும்பினோர் பெறுதலும், விரும்பாதோர் பெறாமையும், பாவத்தை விடுதல், புண்ணியத்தின் முயலல் என்பனவும் இவை போல்வன பிறவுமாம்.



இங்ஙனம் ஆகாமியத்தால் முயலும்போது ஒரேயளவான முயற்சியினால் ஒருவர் பெறும் பயனை மற்றொருவர் பெறக்கூடாமை கண்டு தளர்ந்து யாவுமூழென் றிடர்ப்படுவோர் பலர். ஊழ் வந்ததற்குக் காரணம் முன் செய்த ஆகாமியமாதலால் ஆகாமியத்தாலேயே யாவும் வருவனவாமென்பது சொல்லாமலே விளங்கும். முன் செய்த ஆகாமியப் பயனாகிய ஊழின் ஏற்றத் தாழ்ச்சிக்கியைய வேறுபாடு காணப்படினும் அவற்றை யுற்றுநோக்கி யுணராது யாவுமூழென்று கடைத்தேறுதற்குரிய முயற்சி செய்யாதிருத்தல் அறியாமையின்பாற்படுமென்க. அம்முயற்சியும் அவரவர் முன்செய்துயர்ந்துவந்த நிலைக்கேற்ப ஒருவர்க்கு மிகுந்த பிரயாசத்தாலும் மற்றொருவருக்கு அற்ப பிரயாசத்தாலும் சித்தியாகும். உதாரணமாக: பதினாயிரம் ரூபா பெறுமதியுடன் பிறந்தவன் சீவனத்திற்கேற்ற தொழில் செய்வது மிக எளிதும், நூறு ரூபா பெறுமதியுடன் பிறந்தவன் சீவனத்திற்கேற்ற தொழில் செய்வது மிக வரிதும் ஆதல்போலென்க.

ஒருவர் போல மற்றொருவர் உயர்ச்சியடையவேண்டுமென்று இப்பிறப்பின் முயன்ற ஆகாமிய முயற்சி இப்பிறப்பிலேயே யனுபவத்தைத் தருதல் மிக வரிதென்பார் புவலயத்தில் என்றார். எனவே, இப்பிறப்பிற் செய்த ஆகாமிய முயற்சி வீண்போகாது தொழிலின் பிரயாசத்திற்கேற்ற பயனை மறுமையிற் றப்பாமற் கொடுக்குமென்பது சித்தித்தது. சித்திக்கவே விடயானுபவங்கள் பிறப்பெடுத்துத் தேகத்தானுகரப்படுதலின் அவை மறுமைக்கணி னுகரப்படுமென்பதும், ஆன்மசுகம் பிறவியறுத்தலின் இப்பிறப்பிற்றானே முயற்சியளவான பயனைக் கொடுக்குமென்பதும் பெற்றாம்.

காலானடத்தல், நீந்துதல் என்பவற்றாற் செல்ல முடியாத பெருநீரையுடைய கடலென்பார் வெள்ளக் கடல் என்றார்.

குறித்த பயனை யடையவேண்டுமென்னு மவாவினால் விழுங்கப்பட்டமையின் கப்பல் முதலியவற்றில் விரைந்துசென்றென்பார் ஓடி என்றார்.

அங்ஙனம் வெள்ளக் கடலோடித் தீவாந்தரங்களிற் சென்று திரும்பி வருதல் மிக அரிதென்பார் மீண்டு கரையேறினால் என்றார்.

இங்ஙனே முயன்று திரும்பிவரினும் பிறர் நுகர்வனவற்றைத் தாம் நுகர முடியாதென்பார் என் என்றார்.

தேகசம்பந்தத்தோடிருந்து விடயசுகங்களை நுகருகின்ற உயிர்கள் முன் செய்த வினைப்பயனி னனுபவமாக வெடுத்த தேகத்திலிருந்து முன்செய்த வினையின் பயனை யனுபவித்த பின்பே பின்செய்த வினையின் பயனை யனுபவிக்கவேண்டுமாகலின், முன்வினைப்பயனாகிய அனுபவங்களைத் தடுத்து, அவ்வப்போது செய்யும் ஆகாமியப் பயனை நுகருத லரிதென்பார் உடலோடு

வாழு முயிர்க்கு என்றார். எனவே, தேகங்களினின்று விடுபட்டு விடயசுகப் பற்றின்றி மெய்யுணருங்கால் யாவரும் ஒரேபெற்றித்தாகப் பேரின்ப நுகரலாமென்பது சித்தித்தது.

உடலோடு வாழுமுயிர் என்றதனால் உடலின்றி வாழுமுயிரு முண்டென்பது சித்தித்தது. இதில் உயிர் உடலின்றி வாழுதல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. இப்போது உடல்கொண்டு பிறவி யெடுத்தலினால் பிறப்புக்கு முன் உடலின்றி யிருந்து பின்னெடுத்ததென்பது சித்தமாதலானும், உடலோடு என்று முயிர் வாழுமாயின் பிறவி யெடுக்க நேரிடாதாதலானும், உயிர் நித்தியமும் உடல் அநித்தியமுமாக விருத்தலானும் உடலின்றியு முயிர் வாழுமென்பது தெளிவாகிறது.

ஒருவர்க்கு உள்ளது என்றதனால் அது என்றும் அவரிடத்து நிலைபெறுக விருக்கின்றதென்பதும், அதனை மறந்து அச்சுகம் அயலிடத்திலுளதென்று தேடியலைதல் வீண்முயற்சியாம் என்பதும் வெளியாகின்றன.

பிறர் நுகரும் விடயசுகங்களின் மொத்துண்டலைதலைத் தடுத்து, நித்தியசுகம் நுகருதற்கு முயலுமாறு ஏவுதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 7-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் உலகவாதனையை விடல்வேண்டுமென்று விளக்கினார். அவ் விளக்கத்தினால் அதனை விடினும், தன் தேகம் வாடல், நோய்கொள்ளல், அழிதல் என்பவை காரணமாக வருந் துன்பங்களின் மொத்துண்டு அவற்றை நீக்கவேண்டுமென்று பெரிது முயல நேரிடும். அம் முயற்சியால் ஆன்ம ஈடேற்றங் கெடுமாதலின், ஆகாமியத்தாலுண்டானவற்றை யொழித்து, ஊழாற் றமக்கு வருந் தேகக் கேடுகளைக் குறித்துக் கவலாது அனுபவித்துத் தீரவேண்டுமென்று இச்செய்யுளில் வலியுறுத்துகின்றார்.

### தேகவாதனை.

எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லா
ரறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

இ - ள்: நல்லார் - நல்வழிச் செல்வார்,—இ உடம்பு - இந்தச் சரீரத்தின் திறத்தை,—படி எல்லா ஆலும் எண்ணினால் - அளவைகள் ஒவ்வொன்றாலும் ஆராய்வராயின்,—பொல்லா புழு மலி நோய் புன் குரம்பை -



கொடிய புழுக்கள் மிகுந்த வியாதிகள் வசிக்கின்ற இழிவரவான கூடென்று,—அறிந்திருப்பார் - தெளிந்துகொள்வார்கள்,—ஆதலினால் - அங்ஙனந் தெளிதலினால்,—கமல நீர் ஆம் போல் பிரிந்து இருப்பார் - தாமரையிலையிற் சலம் பற்றின்றியிருத்தல்போல அவ்வுடம்பிற் பற்றின்றி யிருந்து வாழ்வார்கள்,—பிறர்க்கு - தீநெறிச் செல்வார்க்கு,—பேசார் - இவ்வுண்மையை விளக்கார். எ - று.

படி - அளவை. அஃது எண்வகைப்படும். அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, சம்பவம், அபாவம், ஐதிகம் என்பனவாம். படியாலும் என்பதிலுள்ள உம்மை முற்றோடெச்சம். அஃது எட்டாலும் என்று பொருள் கொள்ளுங்கால் முற்றும், ஒன்று முதல் எட்டு வரையுள்ள அளவைகள் ஒவ்வொன்றாலுந் தனித்தனி என்றும் இரண்டு முதலிய பலவாலும் என்றும் பொருள்கொள்ளுங்கால் எச்சமுமாம். இ என்னும் அண்மைச் சுட்டு உயிர்வாழுதற் கின்றியமையாத பெருமையுடையது என்னும் பொருள் குறித்து நின்றது. பொல்லாத என்னும் பெயரெச்சத் தீறு தொக்குப் பொல்லா என நின்றது. இதனை நோய்க்குங் கூட்டிப் பொல்லாப் புழு, பொல்லா நோய் என இயைக்க. புழு, நோய் என்பன சாதியொருமைகள். அவை புழுக்கள், நோய்கள் எனப்படும். புழுமலி நோய் என்றதனால் புழுக்களினால் மலிகின்ற நோய் என்றும், புழுக்களை மலிவிக்கு நோய் என்று முரைத்து அகலங் கொள்க. இவற்றின் முன்னையதில் மூன்றனுருபும் பயனு முடன்றொக்க தொகையாகவும், பின்னையதில் இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகையாகவும் அமைத்துக்கொள்க. புழுமலி குரம்பை, நோய்க் குரம்பை, புன் குரம்பை எனத் தனித்தனி யியையும். இவற்றுட் புழுமலி குரம்பை என்பது இறந்தகால வினைத்தொகை. அது மலிந்த குரம்பை என விரியும். நோய்க் குரம்பை என்பது இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. அது நோயையுடைய குரம்பை என விரியும். புன்மை என்பதனீற்றின் மைவிகுதி கெட்டுப் புன் என்றாயிற்று. புன்மை - இழிவரவு. என்று என்பது சொல்லெச்சம். அஃது தகுதி நோக்கி வருவிக்கப்பட்டது. அறிந்திருப்பார் என்பது ஒருசொல். அது, எண்ணினால் என முற்கூறியதனால் அதனுக்கமாகிய தெளிந்துகொள்ளுதலை யுணர்த்தி நின்றது. ஆகும் என்பதில் கடைநின்ற குகரவுயிர்மெய் கெட்டு ஆம் என்றாயிற்று. கமலம் என்பது அதனிலையை யுணர்த்தலாற் சினையாகுபெயர். கமலநீர் என்பது ஏழனுருபும் பயனு முடன்றொக்க தொகை. அது கமல விலையின்கண்ணுள்ள நீர் என விரியும். பிரிதல் - பற்றறுதல். முன் நல்லார் என்றமையின் பிறர் என்றது தீநெறிச் செல்வாரை யுணர்த்திற்று.

அளவைகள் ஒன்றாலாயினும் இரண்டு முதலிய பலவாலாயினும் முழுவதாலாயினும் என்பார் எல்லாப் படியாலும் என்றார். இதில் ஒரு அளவையான் மாத்திரந் தெளிந்துகொள்ளுத லமையுமா? அன்றி, இரண்டு முத

வியபல அளவைகளாற் றெளிந்துகொள்ளுதலமையுமா? அன்றி எல்லா அளவைகளாலுந் தெளிந்து கொள்ளுதலமையுமா? என்று விசாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு அளவைகளுந் தனித்தனி யுண்மையை யுணர்த்துவனவாகலின், ஓரளவையை ஐயந்திரிபின்றித் தெளிந்தார்க்கு அஃதொன்றே யமையும். அதனை ஐயந்திரிபின்றி யுணராதார்க்குத் தெளிவு பெறுங்காறும் இரண்டு முதலிய பல அளவைகளும், எல்லா அளவைகளும் தகுதி நோக்கி யமையும் என்பது விளங்குகின்றது.

உடம்பிற்றும்காழும் நிலையைக் குறித்து அஃது தாம் விரும்பிய இன்பத்தை யிடையறா தனுபவித்தற்குரிய நிலைபேறுடையதா? அன்றி நிலையற்றதா? என்பதை நியாயம் பொருத்தம் சோதனை என்னும் மூன்றன் முகத்தானு மையந்திரிபற ஆராயுங்கால் என்பார் எண்ணிறல் என்றார். இதில் இடையறாதின்பநுகரவேண்டுமென்ற உயிர் அதனையடைதற்குப் பற்றுக்கோடாகக்கொண்டுள்ள உடம்பு அவ்வின்பநுகர்ச்சிக்கேற்ற தகுதியுடையதா? என்று ஆராய்ந்து தெளிதல் வேண்டுமா? வேண்டாமா? என்று விசாரிக்கப்படுகிறது. உயிர்கள் யாவும் இடையறாத இன்பம் நுகர விரும்பியிருப்பவும், உடம்பினிற்றுங்கால் அவ்வின்பம் இடையறாது பலித்தலின்றி இன்பமென்றுந் துன்பமென்றும் மாறிமாறி நுகரப்படுதலின் அதனினின்று நித்தியவின்பநுகருதல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கவேண்டுதல் அத்தியாவசியமாயிற்று.

பிறவற்றிற் பற்று நீங்கினும் தாம் வாழுதல் கூடும். உடம்பை வெறுத்து நீங்கினல் உயிர் வாழுதற்கோர் பற்றுக்கோடில்லையென்பது போதர உடம்பென வாளா கூறாது அண்மைச்சுட்டுக் கொடுத்து இவ்வுடம்பு என விதந்தோதினர். இதில் இவ்வுடம்பென்றது பிரத்தியட்சமாகக் காணப்படுகின்ற தூலவுடம்பைமாத்திரங் குறிக்குமா? அன்றிச் சூக்கும காரணவுடம்புகளையுங் குறிக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. புழு, நோய்களையுடைய குரம்பை என்று பின் விளக்குதலானும், அவற்றைத் தன்மாட்டுடையது தூலவுடம்பேயாதலானும், ஏனைய சூக்கும காரண வுடம்புகளில் அப்புழுக்களும் நோய்களு மின்மையானும் தூலவுடம்பையே குறிக்குமென்பதும் ஏனைய சூக்கும காரண வுடம்புகளைக் குறியாதென்பதும் தெளிவாகின்றன

உடம்பிலுள்ள நிணப்பற்றுக்களையுண்டு வாழ்தலினுலே அவ்வுடம்புக்கும் அதனைப் பற்றுக்கோடாக வாழுமுயிருக்கும் அறுதி பயக்கத்தக்க கொடுமையுடையன வென்பார் பொல்லாப் புழு என்றார்.

இத்தகைய கொடுமையும் இடையறாத உபாதியும் பயக்கும் நோய்களென்பார் பொல்லா நோய் என்றார்.

எங்ஙனம் போற்றப்படினும், வெயிலாற் காய்தல், நீராலழுகல், காற்றுலைப்புண்டல், மண்ணாலருந்தப்படுதல், நெருப்பாற் சுடப்படுதல், காலத்தான் மூப்படைதல் அழிதல், விலங்கு முதலியவற்றாலும் ஆயுதங்களாலும் இடி,



பூகம்பம் முதலிய உற்பாதங்களாலும் வேறுபடுத்தப்பட்டழிதல் என்னுங் கேடுகளைக் கொடுப்பதும், நிலைபெறு சிறிதுங் கொடாததும், புழுக்களுடைமையின் அருவருக்கத்தக்கதும், நோய்களுடைமையின் மெலிவு துயர் என்பவற்றைப் பயப்பதும், இருந்தவிடத்திற்றனே யிருந்துவாழுதலன்றிச் சிறிதும் புடைபெயருதற் கிடமில்லாததும், விரும்பியபோது விட்டுச் சென்று மீண்டு வந்திருக்கக்கூடாததும் ஆகிய இழிவரவான கூடென்பார் புன்குரம்பை என்றார்.

இதில் உடம்பிற் புழுக்களுண்டா? இல்லையா? என்று விசாரிக்கவேண்டிற்று. புண் முதலிய வேறுபாடுகளிலும் மலத்திலும் புழுக்கள் பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலின் உடம்பிற் புழுக்களுண்டென்பது சித்தம். இங்ஙனங் காணப்படும் புழுக்கள் உடம்பில் இயற்கையாயுள்ளனவா? அன்றிப் பிறபொருட்களின் சம்பந்தத்தாற் செயற்கையாயுள்ளனவா? என்று விசாரிக்கப்படுகிறது. இயற்கையாயின் எல்லாக்காலத்தும் யாவரிடத்தும் புழுக்கடோன்றிக்கொண்டிருத்தல் வேண்டும்; அவைகளை யொழித்தற்குரிய மூலிகை மருந்து என்பவை ஆயுர்வேதத்தில் விதிக்கவேண்டியதில்லை. அங்ஙனம் யாவர்மாட்டும் எல்லாக்காலத்தும் புழுக்கடோன்றாமையானும், இவற்றை யொழித்தற்கேற்ற மருந்து முதலியவை ஆயுர்வேதத்திற் கூறப்பட்டிருத்தலானும் இயற்கையாக உடம்பிற் புழுக்களில்லையென்பதும், புழுக்களையுடைய பிறபொருட்களின் சம்பந்தத்தாற் செயற்கையாகவுள்ளனவென்பதுந் தெளிவாகின்றன.

இப்புழுக்களுடம்பிற்றோன்றி யூனையுண்டு விரைவிற் பலப்பலவாகப் பெருகுவனவென்பார் மலி என்றார்.

பதனழிந்தவுணவை யுட்கொள்ளல் ஆசாரமின்மை முதலியவற்றாற் புழுக்கடோன்றி அவை நோயை விளைவிக்குமென்றும், தீயகன்மப் பயனுய்ப் பெருவியாதி குட்டம் பிளவை முதலிய நோய்கள் தேகத்தை யழுகச்செய்தலால் புழுக்களை வருவிக்குமென்றும் இருபொருள் போதரப் புழுமலிநோய் என்றார். எனவே புழுக்களாலுண்டாகும் நோய்கள் அவ்வப்போது செய்யும் ஆகாமியத்தாலுண்டாவன வென்பதும், புழுக்களை மலிவிக்கும் நோய்கள் பிராரத்தத்தாலுண்டாவன வென்பதும் பெற்றாம்.

இதில் புழுக்கள் மலிதலால் நோயுண்டாகுமா? உண்டாகாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. புழுக்கள் ஊனையுண்டு விடத்தையுமிழுதலால் அவ்விடம் உடலிற்செறிந்து உள்ளுறுப்புக்களைத் தாக்கி அவற்றின் றொழிலைத் தளரச்செய்தலின் அப்புழுக்களால் நோய் உண்டாகுமென்பது சித்தம். தற்காலத்தும் காட்டுச்சுரம், மூன்றுநாட்சுரம், வசூரி, பேதி, கொள்ளை நோய், சிரங்கு, பீனிசம், கசம் முதலியன ஒவ்வோர்வகைக் கிருமிகளாலுண்டாகி அக்கிருமிகள் மூலமாக ஒருவரிலிருந்து மற்றொருவருக்குத்

தோற்றி அவ்வந்நோய்களை விளைவிக்கின்றன என்று மேனாட்டு வைத்திய தத்துவசாத்திரிகள் பூதக்கண்ணாடி, புகைப்படம் முதலிய கருவிகளாற் பிரத்தியக்ஷத்தில் விளக்குகின்றார்கள். இதனாலும் புழுக்களால் நோயுண்டாகுமென்ப தநுபவசித்தம்.

உடலினின்று நுகரும் விடயசுகங்கள் இன்பம்போலத் தோன்றி யழிதலால் அவை நிலையற்றனவென்று வெறுத்து நீக்கி, நித்தியவின்ப நுகருதற்கேற்ற சூழ்ச்சிகளை யாராய்ந்து தெளிந்தொழுகவல்ல சாதுரியமுடையரென்பார் நல்லார் என்றார். இதில் காமியத்தவங்களும் நன்மை பயத்தலின் அவற்றைச்செய்து விடயசுகங்களைக் குறைவற நுகர்வாரும் நல்லாரெனப்படுகின்றனர். நிஷ்காமியத்தவம் நன்மை எனப்படுதலின் அதனைச் செய்வாரும் நல்லாரெனப்படுகின்றனர். இவ்விருதிறத்தினருள் எத்திறத்தினரை ஈண்டு நல்லார் என்றாரென்று விசாரிக்கவேண்டிற்று. ஈண்டு உடம்பினருவருப்பையும் துன்பத்தையு முணர்த்தி அதனிற் பற்றின்றி வாழவேண்டுமென்று விளக்குதலால் இங்கே நல்லார் என்றது உடம்பை விரும்பி விடயசுகங்களைக் குறைவற நுகர முயலுகின்ற காமியத்தவத்தினரைக் குறியாது ஆன்மசுக நுகர விரும்பிய நிஷ்காமியத் தவத்தினரையே குறித்து நின்றது.

இத்தகைய நல்லார், தமது நிஷ்காமியத் தவத்தால் அறிவு தலைப்பட்டு வளருதலான் அவ்வறிவுகொண்டு தருக்க வுறுப்புக்களாகிய கருவிகளால் நன்கு ஆராயுங்கால் உண்மைநிலை உறுதியாகச் சித்திக்குமென்பார் அறிந்திருப்பார் என்றார்.

இதில், தருக்கத்தி னங்கங்களான அளவைகளெட்டானும் நல்லார்க்கு உண்மை புலப்படுதல்போல, காமியத்தவஞ் செய்வார்க்கும் தீயார்க்கும் புலப்படல் வேண்டுமன்றோ? அங்ஙனம் புலப்படின் அவரும் இவ்வுண்மையை நன்குணர்ந்திருத்தல் வேண்டும். ஆகவும், ஈண்டு நிஷ்காமியத் தவஞ்செய்யும் நல்லார்மாத்திரம் அறிந்திருப்பாரெனக் கூறுதலின் இவ்விடத்துக் காமியத்தவத்தினரும் தீயாரும் மேலோதிய அளவைகளால் நன்காராயின் அவருக்கு இவ்வுண்மை புலப்படுமோ? புலப்படாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

காமியத்தவம்புரிவோர் அத்தவத்தினால் தாம் விடயசுகங்களை நுகர வேண்டுமென்றவாவிச் செய்பவராகலின் அத்தவம் பயன்றருங்கால் விடயசுகங்களைப் பயக்குமேயன்றி அவ்விடயங்களையடக்கி அப்பாற்படுகின்ற நல்லுணர்வைப் பயவாதாம். அதனால் இவர் உண்மையை உணருமாற்றலில்லாராகின்றனர். ஆகவே இவர்க்கு இவ்வுண்மை புலப்படாதாயிற்று. தீயார் இன்னது செய்யின் இன்னது பயக்குமென்னும் பகுத்துணர்வு சிறிதுமின்றி மனம் போனவாறு தீச்செயல்களைச்செய் துழல்பவராகலின் அவர்க்கு



விடயசுகங்கடாமும் கிடையாமற்போதலோடு துன்பம் பயத்தலின் அவர் எவ்வாற்றானும் இவ்வுண்மையை யுணரமாட்டாராயினர். ஆகவே அவர்க்கு இவ்வுண்மை ஒருசிறிதும் புலப்படாதென்பது சித்தித்தது.

மனம் வாக்கு காயம் என்னும் கரணங்கள் மூன்றுமொப்ப உறுதியற்றதென நன்குணர்ந்தொன்றில் மேலோங்குமாற்றலுடையார் பற்றுக்கோடு செய்யாராகலின் ஆங்கினு லாங்கமல நீர்போற் பிரிந்து என்றார். தாமரையிலையினீர் அதனை ஆதாரமாகக்கொண்டு நிற்பினும் இடையிட்டு அவ்விலையிற் கலப்பின்றி நிற்கும் தன்மைபோல, நல்லாரும் உடம்பினிழிவை நன்குணர்ந்தவராகலின் தமது ஊழின் பயன் போங்காறும் அதனினின்று வாழவேண்டுதல் கடப்பாடாகலின் அவ்வுடம்பாலாஞ் சுகதுக்கங்களிற் பற்றின்றி அவ்வுடம்பிலே உயிரை நிறுத்தி வாழுவரென்பார் ஆங்கமல நீர்போற் பிரிந்து இருப்பார் என்றார்.

இதில் உடம்பை யாதாரமாகக்கொண்டு வாழுகின்ற வுயிர் அதிற் பற்றுக்கோடின்றி யிருத்தல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது.

தமது உடல் வாடல், நோய்கொள்ளல், அழிதல் என்பவற்றிற் கஞ்சாது தாம் குறித்த இன்பநிலையின் மாத்திரம் பரவசப்பட்டு நிற்பவரறிஞராதலின் அவர் உடம்பிற் பற்றுக்கோடின்றி நிற்றல் கூடுமென்று விளங்குகின்றது. இங்ஙனம் பற்றுக்கோடின்றி நிற்கு மறிஞர் உடம்பை யூறுபடுத்தினும் அதற்கஞ்சாதும் வருந்தாதும் வாழுத லனுபவசித்தம். ஆதலின் உடம்பிற் பற்றின்றி வாழுதல் கூடுமென்பது சித்திக்கிறது.

நல்லார் உடம்பினிழிவை நன்கு தெளிந்தபின் அதினின்று பிரிந்து கொள்ளவேண்டுதல் மரபாகவும், அங்ஙனம் பிரிந்துகொள்ளாது பின்னும் பின்னும் அவ்வுடம்பை யாதாரமாகக்கொண்டு வாழுகின்றனர். ஆதலின் உடம்பினிழிவை யறிந்தவுடன் அதினின்றும் பிரிய முடியாமையால் அவ்வுடம்பில் வாழுகின்றார்களா? அன்றி பிரிய முடிந்தும் அதில் வாழுகின்றமையின் அதிற் றாமிருத்தல் வேண்டுமென்று விரும்பி வாழுகின்றார்களா? என்று விசாரிக்கவேண்டிற்று.

உடம்பினிழிவை யறியாதாரும், கோபம் அச்சம் துக்கம் நல்குரவு நோய் என்பவற்றால் இலகுவில் தற்கொலைசெய்து உடம்பினின்றும் பிரிந்துகொள்ளுகின்றமை அனுபவசித்தமாகலின், பிரியமுடியாது அவ்வுடம்பில் வாழுகின்றாரென்ற லமையாதென்பது விளங்கிற்று. விளங்கவே உடம்பினிழிவை யறிந்தபின்னும் அதிலிருக்கவேண்டுமென்றே யிருக்கின்றார்களென்பது பெறப்படுகின்றது. படவே இவர் பற்றின்றி வாழுகின்றாரென்பது சித்தியாது பற்றோடு வாழுகின்றாரென்பது புலப்படுகின்றது. படின் பற்றின்றி வாழ்வாரென்றதனோடு பெரிதும் மாறுபடுகின்றது. ஆகலின் இந்நல்லார் உடம்பினின்று தாம் அதுவாயிலான சுகத்தை நுகரு

தற்கு அவ்வுடம்பில் வாழுகின்றார்களா? அன்றி வேறு காரணத்திற்காக அவ்வுடம்பில் வாழுகின்றார்களா? என்று விசாரிக்கவேண்டிற்று.

பிறவியெடுக்கும்போது முன் செய்த வினைக்கீடாக ஆயுள் சாதி போகம் என்பன தவிர்க்கமுடியாது அனுபவித்துத்தீருமாறு கட்டுப்பட்டுள்ளன அவ்வாயுளும் போகமும் முடியுங்காறும் உடம்பிலிருக்கவேண்டியது நியதி. அந்நியதிக்கு மாறாகத் தற்கொலைசெய்து இவ்வாயுளையும் போகத்தையும் குன்றச்செய்யின் மிஞ்சிய ஆயுளும் போகமும் நுகருதற்குப் பின்னும் பிறப்பெடுக்க நேரிடும். அன்றியும் இருந்த பிறப்பை வெறுத்துத் தற்கொலை செய்த குற்றத்தினால் எந்த யாக்கையுங் கிடையாமற் பசாசவடிவமா யுழல நேரிடும். ஆகவே அங்ஙனம் பசாசவடிவமாகப் பலகால முழன்று வருந்தி அக்குற்றம் தீர்ந்தபின் பின்னும் பிறவியெடுத்தே யுழல நேரிடும். இங்ஙனம் துன்பத்தி லுழலுதலும் பிறவியெடுத் தலைதலும் ஆகிய குற்றங்களின் வாய்ப்படாது உடம்பினிழிவை யுணர்ந்த பிறப்பிற்றானே முன்னூழாற் கட்டப்பட்ட ஆயுளையும் போகத்தையும் நுகர்ந்து முடிக்கின் பின் துன்பமும் அலைவுமில்லாது மேலோகஞ் சேரிடும் நல்லார் மேலோங்குதலையே விரும்பியவராதலின் இவ்வுறுதியை நன்குணர்ந்து உடம்பானுகரப்படும் சுகதுக்கங்களின் மொத்துண்டலையாது பற்றின்றி அமைதியாக இருந்தனுபவிப்பர் என்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

ஆயுளும் போகமும் தப்பாம லனுபவித்துத் தீரவேண்டுமென்பது நியதியாயின் எவராயினும் தற்கொலை செய்யா திருத்தல்வேண்டும். உலகிற் சிலர் தற்கொலை செய்திறந்த லனுபவசித்தமாகலின், ஆயுளும் போகமும் அவ்வப் பிறப்பிற்கு அளவாகக் கட்டப்பட்டிருக்கின்றனவென்பது மறுக்கப்படுகின்றது. இதனால் தற்கொலைசெய்யு மாகாமிய முடையவர்கள் ஊழிற் கட்டப்பட்ட ஆயுளைத் தடுத்தவராகின்றனர். ஆகவே இதில் ஊழிற் கட்டப்பட்ட வாயுள் இடையில் குறைவுபடுமோ? படாதா? என்று விசாரிக்கப்படுகிறது.

ஆயுள் காலவரையறையை யுள்ளிட்டு அனுபவங்களைப் பயப்பது. தற்கொலை காலத்தினுள் ளடங்காது அனுபவங்களை முற்றுவிழப்பது. அனுபவங்களை முற்றுவிழக்கத் தகுந்த ஒரு பெருந் தீமையினுள் காலவரையறையா லனுபவிக்கப்படுகின்ற ஆயுள் அமிழ்த்தப்படுதலினாலும், பிறவியினின்று செய்யவேண்டிய நன்மைகளை யொருங்கே யிழந்தும் பிறவியெடுத்துக் கடைத்தேறுமாற்றலை யிழந்தும் உழலுதற் கேற்ற தீச்செயலைச் செய்யின் அஃது உடனே பயன்தந்து முன்னைய ஊழைத் தன்னுளடக்கித் தான் மேற்பட்டுகின்ற பயன்செய்தலாலும், தற்கொலை என்னும் தீச்செயல் உடன் பயன்தந்து முன்னைய ஊழைத் தன் அனுபவ முடிவில் புலப்படவிடுமென்பது வெளிப்படை. ஆதலின், ஆயுள் பின்னு



வர்ச்சியாய்ச் சித்திக்குமென்பதும், தற்கொலைசெய்யும் அப்போதே அத்தீமையு ளடங்கி அனுபவம் வெளிப்படாது நிற்குமென்பதும் துணிபாம். இத்துணிபால் ஊழிற் கட்டப்பட்ட ஆயுள் தற்கொலை என்னும் பெருந்தீச்செயலால் அமிழ்த்தப்படு மென்பது பெற்றாம்.

உண்மையுணருதற்கேற்ற தகுதியில்லாத தீயார்க்கு இவ்வுண்மையை யுணர்த்தின் நன்குணர மாட்டாராதலானும், ஒருவாறு உணரினும் இவ்வுடம்பினிழிவை யறிந்து இதனை வெறுத்து, தற்கொலை செய்தல், ஊறுபாடு கேடு முதலியவற்றிற் கஞ்சாது தீச்செயல் செய்தல் என்பவற்றைத் துணிந்து செய்து பெருங்கேடு அடைவாராதலானும், நல்லாராகிய தாம் உடம்பினின்று பிரிந்திருத்தலைத் தீயார்க்கு வெளிப்படுத்தின் அவர் (நல்லாராகிய) தம் முடலுக்கு ஊறுபாடு செய்து பழிபாவங்களைச் சுமந்து கெடுவாராதலானும் தீயார்க்கு இவ்வுண்மையை ஒருசிறிதும் புலப்படுத்தா ரென்பார் பேசார் பிறந்த என்றார்.

இதில், தீநெறிச்செல்வார்க்கு இவ்வுடம்பி னிழிவான வுண்மைநிலையை யுணர்த்துங்கால் அவரவ் வுணர்வை ஐயந்திரிபின்றி யுணர்வாரா? அன்றி யுணரமாட்டாரா? என்று விசாரிக்கப்படுகிறது.

தீயார் தேகத்தையே தாமென்றும் விடயசுகங்களையே இன்பமென்றும் மயங்கி அவ்விடயசுகங்களுக் கேற்ப ஆராய்வின்றி எத்தீச்செயலையும் செய்பவராம். இத்தீச்செயல் பகுத்துணர்விற்கு மாறுபட்டதாய் அதனைக் காலந்தோறுங் குன்றச்செய்து வருதலினாலே நன்மை தீமைகளைப் பகுத்துணரு மறிவாற்றல் தேய்ந்து அற்றுப்போம். நன்மை தீமைகளைப் பகுத்துணரு மறிவாற்ற லில்லாதார் தாமென்று போற்றிவைத்திருக்கின்ற உடலினிலையை யொருசிறிது முணரமாட்டா ரென்பது வெளிப்படை. ஆதலின், தீநெறிச்செல்வார் இவ்வுண்மை நிலையை எவ்வாறு தெருட்டினு மொருசிறிது முணரமாட்டா ரென்பது வெளியாகிறது.

காமியத்தவத்தினர், மலங்களிலும் புண் முதலிய ஊறுபாடுகளிலும் புழுக்களும் உடம்பில் பலவித நோய்களும் அனுபவத்திற் காணப்படுதலால் அவை காரணமாக உடம்பு புழுவும் நோயு முடையதென்று சிறிதோப்பினும், அஃது ஐயந்திரிபற்ற தெளிவல்லாமையின் அவரும் உண்மையையுணர்ந் தொழுகமாட்டாரென்பது சித்தம்.

இனி, மேலோதிப்போந்த அளவைகள் ஒவ்வொன்றாலும் உடம்பு புழுவும் நோயும் உடைய இழிவரவான கூடென்பதை விளக்கிக்காட்டுவாம்:—

(1). பிரத்தியக்ஷம். உடம்பிலே புழுக்கள், நோய்களுண்டாதலும், உடம்பினின்றும் பிரிந்த வுயிர் மீண்டுவரப்பெறாமையும், உயிர் இருந்த

விடத்தினின்று புடைபெயராமையும், உடல் அழிந்துபோதலும் வெளிப் படையாகக் காணப்படுதல் பிரத்தியக்ஷமாம்.

(2). **அனுமானம்.** ஊறுபாட்டினும் உயிர்நீத்தபின் சில காலத்தினும் சில நோய்களினும் புழுக்கள் வெளிப்படத் தோன்றுதலால் இதன் காரணம் முன் உடம்பிலிருந்ததே யென்பதும், முன் இல்லாதிருந்து தோற்ற மடைதலிற் பின் இல்லாமற் போகுமென்பதும், சுகத்தை யென்றும் விரும்புதலால் நோயுண் டென்பதும் அனுமானமாம்.

(3) **ஆகமம்.** யாக்கை நிலையாமை, நோயார்ந்தவுடல், கிருமியார் சடலம், பிரிவுறுகூடு என்பன போல்வன ஆகமமாம்.

(4). **உவமானம்.** நீர்ப்பாய்ச்சி வளர்க்கப்பட்ட மரம் காலகதியில் உலர்ந்து தேய்ந்து இடத்தா லிரிப்புண்டு பட்டொழிதல் போல, உடலும் புழுக்களாலும் நோயாலும் வருந்தி இறந்தொழியு மென்பது உவமானம்.

(5). **அருத்தாபத்தி.** இவ்வுடல் இப்போது தோன்றிற்று, பூரித்தது, புடைபெயர்ந்தது, வலியடைந்தது, நிலைத்திருக்கின்றது என்றால், பிற்போது மறைந்தது, வாடிற்று, இயக்கமொழிந்தது, மெலிந்தது, நிலையாமற்போயிற்று என்பன விளக்கப்படல் அருத்தாபத்தி.

(6). **சம்பவம்.** தானிருந்து தோன்றிய பெற்றோர் பிணி, மூப்பு, நோய், அழிவு முதலியவற்றைப் பெறுதலால் அவரினின்று தோன்றிய தான் அவற்றைத் தப்பாமலடைதல் சித்தமென் றறிவது சம்பவம்.

(7). **அபாவம்.** பழுதற்ற நிலைபேறான யாக்கையுடையார் முன்னிருந்தால் இப்போது மிருத்தல்வேண்டும்; அங்ஙன மின்மையானும், இப்போதிருந்தால் காணப்படுதல்வேண்டும்; அங்ஙனம் காணப்படாமையானும், இவ்விருகாலத்து மின்மைபால் பின்னின்மை பெறப்படுதலானும், ஆகவே எக்காலத்து மின்மையும் தெளியப்படுதல் அபாவம்.

(8). **ஐதிகம்.** தனக்கு முன் பிறந்து தன்னாலறியப்பட்டவரும், தனக்குப் பின் பிறந்து தன்னாலறியப்பட்டவரும் நோய், மூப்பு, அழிவு முதலியவற்றை அடையக் காண்டலின் இந்நிலை தொன்றுதொட்டு நிகழ்ந்துவருகின்றதென வறிதல் ஐதிகம்.

தேகவாதனையின் மொத்தண்டு அதை நிலைபெறுத்துதற்கேற்ப அலைந்து வாணாளை வீணாக்காது, ஊழிற்கேற்ப வருபவற்றை நுகர்ந்தும், வினையவற்றின் விலகியும் கடைத்தேறலை நிலைபெறச்செய்யுமாறு வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.



## 8-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் தேகவாதனையை விடல்வேண்டுமென்று விளக்கினார். அதனால் அவ்வாதனை சகிக்கப்படினும், உயிர்வாழ்க்கைக் கேற்பப் பலவித பொருட்களையுந் தேடவேண்டு மென்னு மவாவுண்டாம். உயிர்வாழ்வின் காலம் வரையறைப்படாமையின் அவ்வாழ்வுக் கேற்பத் தேட்டமும் வரையறைப்படாதாம். ஆகவே, தேட்டத்தின் மனஞ் சென்று பலகருமங்களினும் அலையுங்கால் ஆன்ம ஈடேற்றங் கெடும். ஆகலின், அப் பொருட்டேட்டத்தின் அவாவினால் விழுங்கப்படாது நிலையுதலான ஈடேற்றத்திற் கியைந்த நிலையிற் பிறழா தொழுகவேண்டும் என்று இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### தேட்டவாதனை.

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்—தேட்ட
மரியாதை காணு மகிதலத்திர் கேண்மின்
றரியாது காணுந் தனம்.

இ - ள்: மகிதலத்திர் கேண்மின் - பூமியிலுள்ள மனிதர்களே கேளுங்கள்,—ஈட்டும் பொருள் - தேடுதற்குரிய பொருள்,—முயற்சி எண் இறந்த ஆயினும் - தொழிலின்திறம் அளவில்லாதன வாயினும்,—ஊழ் கூட்டும் படி அன்றி கூடாவாம் - விதி சேர்க்குமளவன்றி (எண்ணியவாறு) சேராவாம்,—தேட்டம் - நிலையுதலுடைய தேட்டம்,—மரியாதை - ஆன்ம ஈடேற்றத்திற் கியைந்த நன்னெறிக்கட் செல்லுதலேயாம்,—தனம் தரியாது - செல்வம் நிலையுதலுடையதன்றாம், எ - று.

ஈட்டப்படும் பொருள் என்பது படுவிகுதி தொக்கு ஈட்டும் பொருள் என நின்றது. இஃது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; ஈட்டாப் பொருளு முண்மையின். ஈட்டாப் பொருள் - நித்திய சுகம். முயற்சி ஆகுபெயர். அது முயற்சியின் பாகுபாடுகளை யுணர்த்திற்று. எண் என்பது அளவை யுணர்த்திற்று. ஆயினும் என் பதிலும்மை உயர்வுசிறப்பு. படி - அளவு. ஊழினை வென்றதனால் எண்ணியவாறு என்பது வருவிக்கப்பட்டது. தனம் தரியாது என்றதனால் ஆன்ம ஈடேற்றத்திற் கியைந்த தேட்டம் நிலைக்குமென்பது பெற்றாம். காணுமிரண்டும் முன்னிலையசை.

சுவர்க்கத்திற் சென்றினோர் விடய இன்பத்தையே நுகர்தலான் அஃதென்றும் நிலையுதலுடைய தென்று துணிந்து நிலையுதலுடைய

ஆன்ம ஈடேற்றத்தின் முயலாது ஈற்றில் அலமருவர். நரகத்திற் றோன்றினோர் இடையறாது துன்பநுகர்தலின் அஃதென்றும் நிலையுதலுடையதென்று துணிந்து நிலையுதலுடைய ஆன்ம ஈடேற்றத்தின் முயலாது அலமருவர். பூமியில் மானுடராகப் பிறந்தோர் ஒருகாற் றுன்பமும் மற்றொருகா லின்பமும் மாறிமாறி நுகர்தலின் இவ் விடய இன்பதுன்பங்கள் இரண்டும் நிலையுதலுடையனவல்லவென்று துணிந்து நிலையான பேரின்பத்தை அடைதற்கு முயல்வர். இவ் வேற்றத்திற்குரிய முயற்சியைக் கொடுப்பது இவ்வுலகமும் மானிடயாக்கையு மாகலின் தேவர்காள்! நரகர்காள்! மேவர்காள்! என்றற் றொடக்கத்தனவற்றால் விளியாதும்,

உலகவாழ்விற்குச் செல்வ மின்றியமையாத தொன்று. ஆதலின், உலகவாழ்வு பூண்பார் அச் செல்வத்தையே தம் முயிரினுஞ் சிறந்ததாகக் கடைப்பிடித் தோம்புகின்றனர். இதனை உலகத்திற் கண்கூடாகக் காணலாம். அங்ஙன மோம்பித் தேடுங்கால் நன்னெறியாற் றேடல்வேண்டும், தீநெறியாற் றேடலாகாது என்னும் பாகுபாடின்றித் தேட முயல்வர். முயன்றுழி நன்னெறியாற் றேட லரிதும் தீநெறியாற் றேட லெளிது மாகலின் தீநெறியே செல்வர் தேடுதற்கு நல்வழி யென்று பெரும்பாலும் கடைப்பிடிப்பர். பிடித்துச் செய்யுங்கால் அச்சமும் பாவமும், பின்னர் நல்குரவும் துன்பமும் உண்டாமன்றிச் செல்வ முண்டாகாது. ஆகாதேல் உலகவாழ்வு பூண லமையாது. என்பதை யாவருக்கும் ஒருங்கே வற்புறுத்துவார் மாந்தர்காள் என்றற் றொடக்கத்தனவால் விளியாதும் மகிதலத்தீர் என்றார்.

யாங்கூறு முறுதிமொழி சுருதியுத்தியனுபவ மென்னும் மூன்றற்கு மியைந்த தாகலின் அம் மொழியை நீவி ரெல்லீரும் சிரமேற் கொண்டொழுகவேண்டுமென்பார் கேண்மின் என்றார்.

உலகில் வாழுங்கால் விடய வுபாதிகளைத் தடுப்பது பொருளாகலின், அப்பொருள் விடயவுறுபாடுகளை நீக்கற் பொருட்டுத் தேடப்படல்வேண்டுமென்பார் ஈட்டும் பொருள் என்றார்.

பொருள் தேடுந்தோறும் தேடுந்தோறும் அப்பொருளில் அவா மிகுந்து பின்னும் பின்னும் தேடுதற்குரிய விருப்பத்தையே பெருகச்செய்தலால் இப்பொருள் விடய வுபாதிகளை மென்மேலும் பெருக்குதலேயன்றிச் சுருக்குத லமையாது. ஆகவும், இப்பொருள் விடய வுபாதியை நீக்குமென்றல் பொருந்துமா? பொருந்தாதா? என்பது விசாரிக்கப்படுகிறது.

பசித்தவன் போசனத்துக்குரிய பொருளையும், வெயில் மழை முதலியவற்றால் வருந்துபவன் வீட்டையும், நிருவாணி ஆடையையும் தேடின்,



முறையே பசி, சூடு, குளிர், நிருவாணம் என்னும் விடயக் குறைவுபாடுகள் நிறைவாகின்றன. அங்ஙனம் நிறைந்த பின்னும் அறுசுவை யுண்டி வேண்டும், மச்சவீட்டில் வசிக்கவேண்டும், பீதாம்பர முடுத்தல்வேண்டுமென்னும் இச்சைகொண்டுழன்றதேயன்றி மேற்கூறிய வுபாதிகள் நீங்காதிருக்கவில்லை. இன்றியமையாதவற்றைத் தேடுதலே யன்றி அநாவசியமானவற்றை விரும்புதல் அப்பொருட்களின் குற்றமன்று; விரும்புவாரின் குற்றமேயாம். ஆகலின், விடய வுபாதி நீங்குதற்குரிய விருப்பங் கொள்ளலாமேயன்றி மேற்பட்ட விருப்பம் கொள்ளலாகாது. அது பற்றிப் பொருட்கள் விடய வுபாதியைப் பெருக்கிவிடுகின்றன வென்னும் பொருள்படாமை கண்டுகொள்க.

முன் செய்து பயனுக்கப்பட்ட நல்வினையளவு பயன் வரன்முறையே வருமேயன்றி அவ்வப்போது செய்யும் முயற்சி உடனே பயன்றராதென்பார் முயற்சி எண்ணிறந்த வாயினு மூழ் கூட்டும்படி யன்றிக் கூடாவாம் என்றார்.

இதில், அவ்வப்போது செய்த வினையின் பயன் உடனுடனே பலியாது முன் செய்த வினைப்பயன் வரன்முறையே பலிக்கு மென்பதை "வருந்தியழைத்தாலும்" என்னும் 5-ம் செய்யுளின் அகலவுரையிற் கண்டுகொள்க,

தம்மாட்டு இடையறாது நிலையுதலையுடைய நித்தியசுக மிருப்பவும், அதனை மறந்து விடயசுகங்களை நிலையுதலுடையன வென்று மயங்கி யுழலுதல் அநித்திய சுகத்தை யனுபவ மாக்காதென்றும், பாவ சம்பந்தமின்றி நிஷ்காமியத் தவம் புரிந்து சித்தசுத்தம் பெற்று ஆன்மவிசாரஞ் செய்தல் அநித்திய சுகத்தைப் பயக்குமென்றும் வற்புறுத்துவார் தேட்டம் மரியாதை என்றார்.

மரியாதையாவது, நித்திய சுக மடைதற் கேற்ப வொழுகுதல். அஃதாவது: பாவ சம்பந்தம் நீங்குமாறு நல்வினை செய்தல்வேண்டும். அந்நல்வினையும் காமியமாகச் செய்தலாகாது; நிஷ்காமியமாகச் செய்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்யுங்கால் சித்தம் உறுதியான சுத்தமடையும். இச்சுத்தம் நிலையுதலுடைய ஆன்மாவை விசாரிக்கும். இவ்விசாரம் ஞானந் தந்து வீடு பயக்கும் என்றுணர்க.

என்று மிடையறாது இன்ப நுகரவேண்டுமென்று அவாவுகின்ற உயிர்கள் அநித்திய வின்பத்தை நுகருதற்கு ஏற்ப வொழுகவேண்டிய வொழுக்கம் மேற்கூறிய வொழுக்க மென்பார் மரியாதை என்றார்.

இந்நித்தியசுக மடைதற்கு, இடையில் அநுபவித்து அழிகின்ற பொருட்டேட்டம் அமையாதென்பார் தனம் தரியாது என்றார்.

நிலையுதலில்லாத பொருட்டேட்டத்தில் முயன்றுழலாது நிலையான வின்பத்திற் கேற்ப வொழுகவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 9-ம் செய்யுள்.

### அவதாரிகை.

ஊழாலமைந்த பொருட்கள் தம்மாட்டுத் தரித்திருக்குங் காலத்திற் றப்பாது நிஷ்காமியத் தவஞ் செய்து உயிருக் குறுதியாக்கிக்கோடல்வேண்டுமென்றும், அப்பொருளின்றி நல்குரவுறினும் தத்தந் தருமநெறியிற் பிறழாதுநிற்றல் வேண்டுமென்றும் இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமக் காலுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலு
மில்லையென மாட்டா ரிசைந்து.

இ-ள்: ஆற்றுப் பெருக்கு அற்று - ஆற்றின்கண் வெள்ளநீர் வற்றிப்போய்,—அடிசுடும் அந்நாளும் - நிலத்தின் மேற்புறஞ் சுடுகின்ற காலத்திலும்,—அ ஆறு - அந்த ஆறானது,—ஊற்றுப் பெருக்கால் - கீழ் ஊறுகின்ற நீர்ப்பெருக்கால்,—உலகு ஊட்டும்(போல) - உலகத்தாருக்கு நீரையருத்துமாறுபோல,—நல்ல குடிப்பிறந்தார் - ஆன்ம ஈடேற்றத்தின் முயலுகின்ற குடியிற் பிறந்தவர்கள்,—நல்கூர்ந்தார் ஆனாலும் - வறுமையுடையவரானாலும்,—ஏற்றவர்க்கு - தகுதியாலிரந்தார்க்கு,—இசைந்து இல்லையென மாட்டார் - மனமொருப்பட்டு இல்லையென்று சொல்லமாட்டார்கள். எ-று.

ஆற்றுப்பெருக்கு என இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின் மேனின்றது. அது ஆற்றின்கண் நீர்ப்பெருக்கென விரியும். அடி சுடுதல் - நீர்நிலைக்கு ஆதாரமாய் அதன்கீழுள்ள நிலஞ் சுடுதல். தான் ஆகுபெயர். ஊற்றுப்பெருக்கு - ஊறுதலையுடைய நீர்ப்பெருக்கு. இது இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. உலகு ஆகுபெயர். இது உலகிலுள்ள சீவரை விளக்கிற்று. ஊட்டுதல் - நீரை யுண்ணக் கொடுத்தல். உலகூட்டுமென்பதன் பின் நிற்றற்குரிய போலவென்னும் உவமவுருபு தொக்கு நின்றது. அது உலகூட்டுமாறுபோல என விரியும். குடிப்பிறந்தார் ஏழாம் வேற்றுமைத்தொகை. குடியின்கட் பிறந்தாரென விரியும். நாளும், ஆனாலும் என்பவற்றிலுள்ள உம்மைகள் உயர்வுசிறப்பு.

### இதிலுள்ள உவமான உவமேயங்கள்.

| உவமானம். | உவமேயம். |
|---|---|
| ஆறு | நல்குடிப்பிறந்தார் |
| நீர்வற்றல் | நல்கூர்தல் |
| ஊற்றுநீர் | தற்காப்புப்பொருள் |

ஆறானது தன்னிலத்தின் கீழுள்ள தற்காப்புநீரினாலே உலகூட்டுமாறு போல என உவமித்தலால், உவமேயத்திலும் தற்காப்புப்பொருள் அவாய் நிலையான் வருவித்துரைக்கவேண்டிற்று.



தெய்வசங்கற்பத்தால் மழையில்லாமையானும், மலைகளில் முகில்படிந்து நீருறாமையானும் ஆற்றின்கண் நீர்ப்பெருக்குஞ் சிறிதுமின்றி யென்பார் ஆற்றுப்பெருக்கற்று என்றார். இதில் மழைநீரும் மலையினின்றூறும் நீரும் பாயும் வாய்க்காலை ஆறென்னல் மாத்திரையேயன்றி, நிலத்தினின்று மூறிப்பாயும் நீரையுடைய வாய்க்காலையும் ஆறென்னல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. நிலத்தின் மேற்பரப்பினின்று நீரூறிப்பாய்தல் கூடாமையானும், சிறிது கீழ்ப்பரப்பின் ஊறிநிற்கும் நீர் வாவி, குளம், ஏரி, கிணறு என்றழைக்கப்படுவதல்லது ஆறென்றழைக்கப்படாமையானும், நிலத்தின் கீழ்ப்புறத்தினூறும் நீர் ஆறெனப்படாதென்பதூஉம், மழைநீர் மலையினூறிப்பாயுநீர் என்பவை பாய்தற்கு இடமாகவுள்ள பரப்பே ஆறெனப்படுமென்பதூஉம் தெளிவாகின்றன.

நிலத்தின் மேற்புறஞ் சுடுதற்கேற்பக் காய்ந்த காலத்து மென்பார் அடிசுடுமந்நாளும் என்றார். எனவே, அடிசுடாதிருக்குங் காலத்தில் உலகிற்கு நீரை நிறைவாகக் கொடுக்கும் என்பதும், நீர் பாயுங் காலத்தில் அளவின்மேற்படக் கொடுக்கும் என்பதும் சொல்லாமலே விளங்கக் கிடக்கின்றன.

பிறவுயிருக் கருத்துதற்குரிய வெளிநீர் சிறிதுமின்றி நல்குரவடைந்த தென்பதை விளக்குவார் சேய்மைச் சுட்டுக் கொடுத்து அவ்வாறு என்றார்.

ஆற்றின் நிலப்பரப்பை இடமிடங்கடோறு மகழ்ந்துழி முன் கீழே விழுக்கப்பட்டிருந்த நீர் அக்கிடங்குகளி னூறிவர அதனை யள்ளி உலகினரருந்துவரென்பார் ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும் என்றார். எனவே, ஆறு தான் இடையூறடைந்தும் தற்காப்புக்குரிய நீரைக் கொடுக்கின்றது என்பது விளங்கிற்று.

வறியர், நோயர், அங்கவீனர், துறவிகள் முதலிய சற்பாத்திரமுடையரா யிரந்தார்க் கென்பார் "இரந்தவர்க்கு" எனப் பொதுமையிற் கூறாது, தகுதியுடையாரையும் இரந்தாரையும் ஒருங்கே விளக்குதற்குரிய சொற்பெய்து ஏற்றவர்க்கு என்றார். இதில் இரக்குந் தரமுடையார் மாத்திரம் இரந்தா லவர்க்கீதல் கடப்பாடாகுமா? அன்றி அத்தர மில்லாரு மிரந்தால் அவர்க்குமீதல் கடப்பாடாகுமா? என்று விசாரிக்கவேண்டிற்று. இரக்குந் தரமில்லார் இரந்தால் அவர் இரவாதிருத்தலாலுண்டாமுயர்வைத் தாமே யிழந்து இரத்தலாகிய இழிவைப் பெறுகின்றனர். இவ்விழிவைப் பெறாதிருத்தல் கூடுமாகவும், விரும்பிப் பெறுதலின், தரமின்றி யிரந்தோர் தவறுடையவராகின்றனர். ஈவோர் இவர்க் கீயா தொழியின் இரத்தலாலுண்டாகு மிழிவரவு அவர்க்கு உடனே நீங்குமாகவும், ஈந்து, அவ்வீதல் காரணமாகப் பின்னும் பின்னும் இடையறாதிரந்து கழிபேரிழிவை அடைவிப்பர். ஆகலின், ஈந்தார் தவறுடையவராகின்றனர். ஆகவே, இருதிறத்தாரையும் தவறுட்படுத்துகின்றமையின் இரக்குந் தரமில்லாதவர்க் கீதல் கடப்பாடன்றென்பது விளங்கிற்று.

இரக்குந் தரமில்லார் இரந்து தாமிழிவரவடைதன் மாத்திரையே யன்றி யத்தகை யுள்ளார் யாவரையும் இரப்பவராக மதிக்கச்செய்த லின் அங்ஙன மிரப்போர் தவறுடையராகின்றனர். அவர்க் கீந்து அவ ரையும் அவர்போல்வாரையும் அவமதிக்கச் செய்தலின் ஈவோருந் தவ றுடையராகின்றனர். ஆதலின், இதனாலும் இரக்குந் தரமில்லார்க் கீதல் கடப்பாடன்றென்பது விளங்கிற்று.

அநித்தியமான விடயசுகங்களின் மொத்துண்டலைந்து கெடாது நித்தியமான ஆன்மசுகம் பெற விரும்பி யறநெறியைக் கடைப்பிடித்துத் தம்மையும் பிறவுயிரையு முய்யச்செய்யு முயர்குடியென்பார் நல்ல குடி என்றார். இதில் உலகத்திற்கேற்ற வளங்களை மாத்திர முடையாரை உயர்குடியினர் என்னலாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகிறது. உலகவாழ்விற்குரிய வளங்களை யொருங்கே யடையினும் அவை யனு பவிக்கப்பட்டு உடலோடழிந்துபோவனவன்றி மேலு முயிரோடு சென்று உயர்வைக் கொடுப்பனவல்லவாகலின் அறமின்றி யுலகசுகவளங்கண் மாத்திர முடையாரை உயர்குடியினரென்ன லாகாதென்று துணிபாகிறது.

பிறவி யறக்கவேண்டுமென்னும் வேணவாவின் வயத்தராய்ப் பிற விகடோறும் நிஷ்காமியத்தவம் புரிந்துவந்து, தமது நிலையை மேலோங் கச்செய்தற்குத் தகுந்த விடத்துப் பிறவியெடுத்தவரென்பார் "நல்ல குடி மாந்தர்" என்றாவது "நல்ல குடியினர்கள்"என்றாவது பாடமோதாது வேண்டாச்சொற் பெய்து நல்லகுடிப் பிறந்தார் என்றார்.

தமதுயிர்வாழ்வு நிறைவெய்துதற்கேற்ற பொருளின்றிக் குறைவுபட வாழுங் காலத்துமென்பார் உயர்வு சிறப்புப் பொருட்கு மும்மை புணர்த்தி நல்கூர்ந்தாராலும் என்றார். இதில் நல்கூர்தல் என்பது தமதுயிர்வாழ்வை நிறைவியாத அற்ப பொருள் வருவாயைக் குறிக்குமா? அன்றி வருவாய் சிறிதுமில்லாத இரப்புநிலையைக் குறிக்குமா? என்று விசா ரிக்கப்படுகிறது. ஆறு பெருக்கற்று அடிசுடுங் காலத்து மூற்றுப்பெருக்கா லுலகூட்டும் என்னு முவமானமுகத்தால், ஆற்றினூற்றுநீர்போலத் தற்காப் புக்குரிய அற்ப வருவா யுடையராதலைக் குறிக்கின்றது. ஆதலின், வருவாய் சிறிதுமில்லாத இரப்புநிலையைக் குறியாதென்பது விளக்குகின்றது.

இரந்தார்க்கு முகமலர்ச்சிதோன்ற வீதலே கொடுப்பாரின் மரபாம். அம்மரபாகக் கொடுக்கமாட்டா நல்குரவுடைமையின் தம்மாட்டுள்ள தற் காப்புப்பொருளைப் பகுத்துக்கொடுத்தற்குத் தப்பாது மனமொருப்படுவ ரென்பார் இசைந்து என்றார்.

கொடுப்பேமென்னுங் கிளர்ச்சி சிறிதுமின்றித் தம்பாலிரந்தார் நிறை யினும் ஒழியினும் இனியவை கூறியும் இன்முகங் காட்டியும் தமது நிலையை அவர்க்குக் குறிப்பாலுணர்த்தி இயன்றது கொடுத்து அவரின் முகத்தை மலரச்செய்வரென்பதும், தற்காப்புக்குரிய பொருள் சிறிதாயினுமில்லாத கழிநல்குரவுடையினும் தம்பாலிரந்தாருக்குத் தமது நிலையை இனிய



சொற்களாற் குறிப்பாக வுணர்த்தி இன்முகங்கொண்டு இரந்தார் வேண் டிய பெற்றதினும் இவர்பாலிரந்தமையாற் பொருள் சிறிதும் பெறாதொழியுங் கழிபேருவகை யடைந்தேம் என்று களிகூருமாறு செய்வரென்பதும் போதர "ஈவார்" "கொடுப்பார்" என்றற் றொடக்கத்தனவாகிய பாடமோதாது இல்லையெனமாட்டார் என்றார். இதில் இல்லையெனமாட்டாரென்பதற்குக் கொடுப்பார் என்பது தாற்பரியப்பொருளாகுமா? ஆகாதா? என்று விசாரிக்க வேண்டிற்று. இல்லையெனமாட்டார் என்பதற்கு இல்லையென்று சொல்லமாட் டார் என்பது பொருளாகலின் கொடுப்பேமென்று சொல்வார்கள் என்றாவது கொடுத்ததுபோன்று இரந்தார் இரம்மியமடையுமாறு சொல்வார்கள் என்றாவது தாற்பரியப்பொருள் பெறப்படுமேயன்றிக் கொடுப்பாரென்பது ஒருவாற்றானுந் தாற்பரியப்பொருளாகப் பெறப்படாதென்பது விளங்கு கின்றது. அன்றியும், கொடுத்தற்குரிய பொருளில்லாதவழியும் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பமேலீட்டால் இல்லையெனமாட்டாதிருத்தலுங் கூடுமாகலின் கொடுப்பாரென்பது தாற்பரியமாகாமை துணிபாயிற்று. தருக்கநூலுணர்வில்லாதார் இல்லையெனமாட்டாரென்பதற்குக் கொடுப் பாரென்று வாளா பொருள்கூறி, மேலையவலங்களையும் அவற்றின் றத்துவங் களையு முணராதிடர்ப்பட்டுழலுவர்.

கடைத்தேறவேண்டுமென்னு மவாவுடையார் எந்நிலையினராயினும் தமது நிலைபிறழா துறுதிபெற நின்று இயன்ற அறஞ் செய்து மேலோ ங்கவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 10-ம் செய்யுள்.

### அவதாரிகை.

அறஞ்செய்துவருங்காலத்து, தமக்குப் பற்றுக்கோடாக வுள்ளார் இறந்தால் அவர்பாற் கொண்ட பற்றுக் காரணமாகக் கவன்று அவரை யிடையறாது நினைந்து புலம்பிக் காலத்தை அவத்திற் போக்காது, அவர் போன்று நாமும் காலவரையறை தெரியாது இறக்க நேரிடுமென்று துணிந்து, சுற்றத்தவரிலும் நட்புடையாரிலும் கொண்டிருக்கும் பற்றுக் கோடை அறவே களைந்து, தருமஞ்செய்து கடைத்தேறுதற்குரிய முயற் சியிற் பெரிதூக்கமாயிருத்தல்வேண்டுமென்று இச்செய்யுளில் வற்புறு த்துகின்றார்.

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவு
மெமக்கென்னென் றிட்டுண் டிரும்.

இ - ள்: மாநிலத்தீர் - பெரிய பூமியிலுள்ள மனிதர்காள்,—மாண்டார் - இறந்தவர்கள்,—ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் வருவரோ - வருடந்தோறும் வருடந்தோறும் அழுது புரண்டாலும் வருவார்களோ? (வரமாட்டார். ஆதலின்),—வேண்டாம் - அழுது புரள வேண்டாம்,—நமக்கும் அது வழியே - நமக்கும் அவ்விறப்பே செல்லுமிடமாகும்,—நாம் போம் அளவும் - (அங்ஙனம்) நாம் இறந்துபோதற்கு முன்னுள்ள காலமளவும்,—எமக்கு என் என்று (மற்றையார் இறந்ததற்காக) யாம் கவன்று அடையும் பயன் யாது? (ஒன்றுமில்லை) என்று தெளிந்து,—இட்டு உண்டு இரும் - இரப்பார்க்கீந்து உணவுண்டு உயிர்வாழுங்கள். எ - று.

ஆண்டு ஆண்டு என்னுமடுக்குப் பன்மைபற்றி வந்தது. இவற்றோடு தோறுமென்பதைத் தனித்தனி இயைத்து ஆண்டுதோறும் ஆண்டுதோறும் எனப் பொருள்கொள்க. தோறுமென்பது காலப்பன்மை குறித்து நின்றது. புரளுதல் - தேகம் கோவுறுமாறு மண்ணிலுருளுதல். புரண்டாலும் என்பதிலும்மை அளவின் மிகுதி குறித்து நின்றது. தோறும் என்பதிலும்மை எண்ணும்மை. ஓகாரம் எதிர்மறைப்பொருளில் வந்தது. அது என்பது இறப்பைச் சுட்டி நின்றது. ஏகாரந் தேற்றம். போமளவு - இறத்தற்கு முன்னுள்ள கால அளவு. அளவும் என்பதிலும்மை முற்று. எவன் என்னும் வினைப்பெயர் ஈண்டு இன்மைப்பொருள் குறித்து என் என்றாயிற்று. தெளிந்து என்பது சொல்லெச்சம். உண்ணல் - ஆயுள்விருத்திக்கேற்றவாறு புசித்தல்.

சுவர்க்க நரகங்கள் முறையே இன்பதுன்பங்களை நிலையற்றதென்று உணர்த்தாதன வாதலானும், பூமியிலுள்ள மானிடப் பிறவியிலேயே விடய வின்பதுன்பங்கள் நிலையற்றன வென்று விளங்கக்கிடத்தலானும், பூமியில் மானுடராகப் பிறத்தல் கடைத்தேறுதலுக் கின்றியமையாத பிறப்பென்பார் மா நிலத்தீர் என்றார். இதன் விரிவைப் "புண்ணியமாம் பாவம்போம்" என்ற செய்யுளில் "மண்ணிற் பிறந்தார்க்கு" என்பதற் குரைத்த விளக்கத்திற் கண்டு தெளிக.

இடையறாத கவலையைக் காலவரையறையற்ற துன்பத்தோடு கொள்ளினு மென்பார் ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலும் என்றார். இதில் ஆண்டுதோறு மென்பது வருடந்தோறு முன்ன இறந்த தினத்தை மாத்திரங் குறிக்குமா? அன்றி, வருடமுழுவதையுங் குறிக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. வருடத்திலொருமுறையைக் குறிக்குமாயின் அது அவரவர் செய்யவேண்டிய அறவொழுக்கங்களுக்குத் தடையாயிருக்கமாட்டாதென்பது வெளிப்படையாகலின் வருட முழுவது மென்பதே பொருளா மென்பது துணியாகிறது.



மாண்டாரின் பற்றுக்கோடு மிகுதியால் மெய்ம்மறந்து அழுது துன்புறுத லென்பார் அழுதாலு மென்னுது அழுது புரண்டாலும் என்றார். இதில் அழுவார் மெய்ம்மறந்து கவலைகொள்ளுதல் கூடுமோ? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. கவலை மிகுதியால் அதன்வயப்பட்டுச் செய்வதின்னதென்று அறியாதிருத்தலும், அது காரணமாக மூர்ச்சையடைதலு மனுபவசித்தமாகலின் மெய்ம்மறந்து அழுதுவருந்துதல் கூடுமென்பது சித்தம்

இறந்தவரின் தேகம் அழிந்துபோதலானும், அத்தேகத்தை இறந்தவர் தாம் நினைந்து எடுக்க முடியாமையானும், அழுவாரின் வேண்டுகோளுக்காக அங்ஙனம் வருதல் கூடுமாயின் இறவாதிருத்தலுங் கூடுமாதலானும், எவ்வாறு துன்புறினும் இறந்தவர் வருதல் கூடாதென்பார் எதிர்மறைப் பொருட்டருமோகாரம் புணர்த்தி மாண்டார் வருவரோ என்றார். அட்டமாசித்தி முதலியவை பெற்ற மெய்ஞ்ஞானிகள் இறந்தாரைப் பல காலத்தின் பின் எழுப்பினரென்று நூல்களிற் கூறப்பட்டிருத்தலால், அங்ஙனம் ஞானிகளா லெழுப்பப்படுதலை யொழித்துத் தாமாக வரமாட்டாரென்பது போதர மாண்டாரின் றொழின்மேலேற்றி வருவரோ என்றார். நூல்களில் இறந்தாரை யெழுப்பினரென்று சொல்லப்பட்ட காலம் பல்லாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாக நூல்கள் கூறுதலானும், இக்காலத்து அங்ஙனம் செய்வார் ஒருவரு மின்மையானும், அத்தகைய சித்தர்கள் யாராயினும் வந்து எழுப்பித்தருவாரென்று துணிந்தாவது அழ வேண்டாமென்றாரென்க.

இதில், மாண்டார் வரவேண்டுமென்பது இறந்தார் முன்னிருந்தவுடலோடு வரவேண்டுமென்பதைக் குறிக்குமா? அன்றி வேறுவடிவங்களோடு தம்மினத்தில் வந்துசேரவேண்டுமென்பதைக் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. இறந்துபோனது தேகமேயன்றி உயிரன்று. உயிருக்கு இனமில்லை. தேகத்திற்கே இனமாம். ஆதலின், முன்னிருந்த தேகத்தோடு வரவேண்டுமென்று அழலாமேயன்றி வேறெவ்வித வடிவத்தோடும் வந்து சேரவேண்டுமென்றழுதல் கூடாதாம். ஆதலின் முன்னைய வடிவத்தோடு வரவேண்டுமென்றே அழுகின்றார்களென்பது வெளியாகிறது.

இங்ஙனம் இறந்தவர் ஒருவாற்றானும் எழும்பிவாரென்று துணியப்படுதலின் அவரைக் குறித்துச் சிறிதாயினும் கவலைகொள்ளுதலிற் பயனில்லை யென்பார் வேண்டாம் என்றார்.

உலகிற் றோற்றமெடுத்தார் யாவரும் அழிந்துபோக லனுபவமாகலின் தோற்றிய நாமும் இறந்துபோத லுறுதியாகுமென்பார் தேற்றேகாரம் புணர்த்தி நமக்குமதுவழியே என்றார்.

வினைவயத்திற் கேற்பப் பிறவியெடுத்தோர் தம் வினைக்கேற்ப வனுபவித்து அவ்வனுபவம் முடிந்தழி யிறக்கின்றார்கள். நாமும் அங்ஙனமே யாவமாகலின், ஒருவருடைய வினைப்போகம் மற்றொருவருக்குச் சிறிதும் வாராதென்பர் எமக்கேன் என்றார்.

இதில் அவரவர் செய்த வினைக்கேற்ற பயன் மாத்திர மவர்களனுபவிப்பார்களா? அன்றிச் செய்யாத வினையின் போகமும் மற்றொருவரால் பெறக்கூடுமோ? என்று விசாரிக்கப்படுகின்றது.

ஒருவருடைய வினைப்போகம் மற்றொருவருக்கு வருமாயின், ஒருவர் ஆயுளோடிருந்து மற்றொருவரையு மிறவாதிருக்கச்செய்து அவரால் சகாயம் பெறுதல்கூடும். அங்ஙனமாயின் ஒவ்வொருவரும் தமது ஆயுளைப் பெலப்பித்தற்கு ஏற்ற வினை தாம் செய்யாது மற்றொருவரால் பெறக்கூடுமென் றேற்படும். படவே தாம் செய்யாத வினைப்பயனும் தம்மைவந்தடையு மென்றாகும். ஆயின் அவரவருக்கு உரிய பயன் அவரவர் வினையிலுண்டானதென்றும், வரம்பின்றி வினைசெய்தோர் பயனடையாமையும் செய்யாதோர் பயனடைதலும் முடியுமென்றும் பொருள்பட்டு, தருக்கதத்துவவுண்மையின் வரம்பிகந்து மாறுபடுதலின், ஒருவர்செய்த வினைப்போகத்துக்காக மற்றொருவ ராயுளோடிருத்தல் கூடாதென்பது சித்தம்.

தாமுயிரோடிருக்குங் காலத்திலே பிறகவலைகளை யொழித்து அறஞ்செய்து மேலோங்கவேண்டுமென்பார் இட்டு என்றார்.

உயிர்வாழுதற்கேற்ப உணவுண்ணின் அஃது அறத்தின் நீட்சிக்குப் போதாமையானும், ஆயுள்நீடித்தற்கேற்ப உணவுண்டுவாழுதல் அறத்தை விருத்திசெய்தற்கு ஏதுவாகலானும், உடம்பினுயிர் பிரியாதிருக்குமாறு போசனஞ்செய்தலைக் கடைப்பிடியாது ஆயுள் விருத்தியையே கடைப்பிடித்து உண்ணுதல் வேண்டுமென்பார் உண்ணாது வாழுதல் கூடாதிருப்பவும் வேண்டாச்சொற்பெய்து உண்டு என்றார்.

தம்மாலன்புசெய்யப்பட்டார் இறந்ததுபோலத் தாமும் இறந்துபடுதல் நிச்சயமென்று செய்யுளில் வற்புறுத்தியிருத்தலின், அக்கருத்தை உட்கொண்டு உணவுமுதலியவற்றை யொறுத்து இறக்கவேண்டுமென்னும் வைராக்கியத்தால் ஆயுள்குன்றச்செய்யாதும் தற்கொலைசெய்யாதும் ஆயுள் விருத்தியைக் குறித்து நீடித்துவாழவேண்டு மென்பார் இரும் என்றார்.

சுற்றமித்திர பற்றுக்கோட்டினாலே தம் பிறப்பிற்கேற்ற அறஞ்செய்து மேலோங்காது கவலைகொண்டுழலவேண்டாமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.



## 11-ம் செய்யுள்.

அவதாரிகை.

நித்தியவின்பத்திற்கேற்ப முயலுவோர் உடலினின்று முயலவேண்டுதலின் அவ்வுடலைப் பாதுகாத்தற்கேற்ற வுணவை யுறுதிசெய்யாக்கால் தாம் எடுத்துக்கொண்ட காரியத்திற் கிடையூறாய் முடிந்து உடற்றுன்பத்தை நீக்குதலிலேயே காலங்கழிக்க நேரிடும். ஆகலின் ஆன்மஈடேற்றத்தின் முயல்வோர் யாவருந் தமது உடற்பாதுகாப்புக்குரிய உணவை உறுதிசெய்துகொள்ளல் இன்றியமையாததொன்றென்று இச்செய்யுளில் வலியுறுத்துகின்றார்.

ஒருநா ளுணவையொழி யென்றா லொழியா
யிருநாளுக் கேலென்றா லேலா—யொருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
யுன்னோடு வாழ்த லரிது.

இ - ள்: என் - எனது,—இடும்பை கூர் வயிறே - துன்பத்தை மிகுவிக்கின்ற வயிறே,—ஒருநாள் உணவை - ஒருநாளுக்குரிய உண்டியை,—ஒழி என்றால் ஒழியாய் - விட்டுவிடுவாய் என்று இரந்து கேட்டினும் விடுகின்றிலை,—இருநாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - இரண்டு நாளுக்குரிய உண்டியை ஒரே வேளையிற் பெற்றுக்கொள்ளுதி என்றிரந்து தரினும் பெற்றுக்கொள்ளுகின்றிலை,—ஒருநாளும் என் நோ அறியாய் - ஒருநாளாயினும் யான் படுந் துன்பத்தை அறிகின்றிலை,—உன்னோடு வாழ்தல் அரிது - (ஆதலினால்) உன்னுடன் கூடியிருந்து வாழுதல் அருமையாயிருக்கின்றது. எ - று.

என்வயிறே இடும்பைகூர்வயிறே எனத் தனித்தனி சென்றியையும். என்வயிறு என்பது ஆறம்வேற்றுமைத் தொகை. அது எனது வயிறு என விரியும். கூர்வயிறு என்பது பிறவினைப் பொருளுணர்த்தும் விவ்விகுதி தொக்குநின்ற வினைத்தொகை அது கூர்விக்கின்ற வயிறு என விரியும். கூர் என்பது மிகுதிப்பொருளில் வந்தது. வயிறே என்பது விளி. நாளுணவு நான்கனுருபும்பயனு முடன்றொக்க தொகை. அது நாளுக்குரிய உணவு என விரியும். இதனால் இருநாளுக்கு என்பதன் பின்னும் உணவு என்னுஞ் சொற் றொக்குநின்றமை வெளியாகிறது. அது இருநாளுக்குரிய உணவை என விரியும். ஒழி, ஏல் என்பன முன்னிலை யேவல் வினைமுற்றுக்கள். ஒழியாய், ஏலாய் அறியாய் என்பன முன்னிலை யெதிர்மறை வினைமுற்றுக்கள். நாளும் என்பதிலுள்ள உம்மை முற்று. என்னோ என்பது ஆறம்வேற்றுமைத் தொகை. அது எனது நோ என விரியும். கூடியிருந்து என்பது செய்தெனெச்சம். அரிது என்பது அருமை என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

உயிர் பொருந்திநின் றனுபவிக்கின்ற சகல உறுப்புக்களும் சோர்வடையா தியங்குதற்கு வயிற்றின்கண் உணவிடப்படுவதும் அதுவாயிலாக எல்லா உறுப்புக்களுக்கும் பலமுண்டாவதும் அனுபவசித்தம். ஆகலின், வயிறு ஏனைய உறுப்புக்களிற் சிறந்ததாய் அவ்வுறுப்புக்களை யியக்குதற்குக் காரணமாயுள்ளதென்பது வெளியாகிறது. ஆகவே வயிற்றிலுண்டான குறைவுபாடு அதற்குமாத்திரந் துன்பம் பயவாது மற்றெல்லா வுறுப்புக்களையுங் குறைவுபடுத்திப் பெருந்துன்பத்தைத் தருதலின் வாளா "வயிறே" என்னாது இடும்பைகூர் வயிறே என்றார்.

இதில், வயிற்றுக்குணவிடாக் காலத்து உயிர் ஏனைய உறுப்புக்களிற் சலியாது நின்று வாழுமா? அன்றிச் சலித்துநின்று வாழுமா? என்று விசாரிக்கப்படுகிறது. தத்துவ ஆராய்ச்சியின்படி உண்ணப்படும் உணவு மூன்று பாகமாகப் பிரியும். அவை சத்துவகுணத்தின் தன்மையாகிய சார்த்தபாகம், இராசதகுணத்தின் தன்மையாகிய கோரபாகம், தாமதகுணத்தின் தன்மையாகிய மூடபாகம் என்பனவாம். இவற்றுள் முதலாவதான சார்த்தபாகம் உண்ணப்பட்டவுடனே சூக்குமமாகப் பிரிந்து மனதிற் சேர்ந்து அதனை விருத்திசெய்கின்றது. இதனை, உண்டவுடன் அவ்வுணவு சீரணித்து ஏனைய உறுப்புக்களிற் சேராதிருப்பவும் மனச்சோர்வு நீங்குதலாற் கண்டுகொள்ளலாம். இரண்டாவதான கோரபாகம் சீரணித்து இரத்தமாகப் பிரிந்து சத்த தாதுக்களையும் விருத்திசெய்கின்றது. இதனை, உணவுண்பாருடைய தேகேந்திரியங்கள் நாளடைவில் வளர்ந்து பலமடைதலாற் காணலாம். மூன்றாவதான மூடபாகம் உடம்பிற் சிறிதுஞ் சேராது மலம் சலம் வெயர்வை என்பனவாகக் கழிகின்றது. இதனை, உணவுண்போர் மலசலங் கழித்தலாலும் வெயர்வைகொள்ளுதலாலும் கண்டுகொள்ளலாம். இவ்வாற்றால் வயிற்றின்கண் ஏற்றவாறு உணவிடப்படாதவிடத்து உயிர் ஏனைய உறுப்புக்களிற் சலியாமல் நின்று வாழமாட்டாதென்பது விளங்கிற்று.

இந்நூலாசிரியர் தாம் நித்தியவின்பநுகர்ச்சிக் கேற்றவாறு முயல்பவராதலின் அம் முயற்சி யினிது முடிதற்குத் தேக வுறுப்புக்கள் கிளர்ச்சியாயிருத்த லின்றியமையாததென்று கருதி அவ்வுறுப்புக்களைக் கிளர்ச்சிசெய்தற்குரிய முக்கிய உறுப்பாகிய வயிறு தன்மாட்டு நிகழும் பசிப்பிணியைத் தடுத்துப் பேருதவி செய்யுமென்றிருப்பவும், அவ்வயிறு நாடோறும் தனக்குரிய உணவின் பொருட்டாகவே காலங் கழிப்பிக்கின்றதன்றி ஆன்ம ஈடேற்றத்தின் முயலுதற்குரிய வுதவி சிறிதுஞ் செய்யாதிருக்கின்றமையை யனுபவமாகக் கண்டமையின் "வயிறே" என்னாது என் வயிறே என்று விளித்தார்.

இதில், உணவை யொறுத்தும் வெயில், மழை, பனி முதலியவற்றாலுண்டாம் துன்பங்களைச் சகித்தும் தேகத்தை என்புருவாக்கி வருத்தி ஆன்மஈடேற்றத்தின் முயல்கின்றார் சிலர். உணவை யொறுத்தும் வெயில், மழை, பனி முதலியவற்றாற் றுன்பம் வராமற் காத்தும்



தேகத்தை நன்னிலைப்படுத்தி ஆன்மஈடேற்றத்தின் முயல்கின்றார் சிலர். ஆதலின், இவ்விருதிறத்தினருள் எவரது முயற்சி நித்திய வின்பத்தை யடைதற்குச் சிறந்ததாகும் என்று விசாரிக்கப்படுகிறது.

முன்னைய வினைப்பயன்களை யனுபவித்துத் தீர்த்தற்கும் நிஷ்காமியத் தவஞ்செய்து கடைத்தேறுதற்குரிய அறிவை வளர்த்தற்கும் தேகம் இன்றியமையாதது. இத் தேகவளர்ச்சியால் உணர்வு உறுதியடைவதும் தளர்ச்சியால் உணர்வு தேய்வதும் அனுபவசித்தம். இவ்வுணர்வின் வலியா லுண்மையுணர்ந்து கடைத்தேறலாமேயன்றி உணர்வு குன்றியக்கால் அங்ஙனஞ் செய்தல் கூடாது. உணர்வினுயர்வுக் கேற்பவே அறிவு வளரும். இவ்வறிவே நிலையான இன்பத்தை நுகருதற்குச் சாதனமாயுள்ளது. இவ்வாற்றால் பிறவியாகிய தேகத்திலிருந்து ஆன்ம ஈடேற்றத்தின் முயல்வோர் தேகத்தை நன்னிலையில் வைத்து, அதினின்று உணர்வை வளர்த்து, அதனா லறிவுபெற்று நித்தியசுகத்தை யடைதல் வேண்டுமென்பது வெளியாகிறது. ஆகவே, உடம்பை யொறுத்து அதனை மெலிவிப்பாரின் முயற்சி ஆன்ம ஈடேற்றத்திற்குப் பெரிதும் இடையூறு விளைவிக்குமென்பதும், உடம்பை நன்னிலையில் வைப்பாரின் முயற்சி ஆன்ம ஈடேற்றத்தைத் தப்பாது தருமென்பதுந் தெளிவாகின்றன.

தேகம், மனம் என்பவை தத்தம் புடைபெயர்ச்சியால் கணந்தொறுந் தேய்ந்து இளைப்படைகின்றன. இவ்விளைப்பை நீக்குதற்கு நாடோறும் ஏற்ற அளவான உணவு வேண்டப்படும். ஆதலின் உடலுக்கு உணவு நாடோறும் வேண்டியதாம். அங்ஙனமில்லையேல், தேகம் இந்திரியம் மனம் என்பவை சலித்துப் புடைபெயர முடியாது அயர்வடையும். ஆகலின், ஒருநாளுக் குணவில்லையாயினும் குறித்த சலிப்பை நீக்க முடியாதென்பார் ஒருநாளுணவை யொழியென்றா லொழியாய் என்றார்.

இருநாளுக்குரிய வுணவை யொருசேர ஊட்டின் வயிற்றிலிடமின்மையின் அவ்வுணவைக் கொள்ள முடியாது; குறித்த காலஞ் சென்று சீரணித்துப் பசியுண்டான பின்பே கொள்ளப்படும். ஏற்ற அளவின் மேற் புசிப்பின் முற்சொல்லிய மூன்று பாகங்களையும் பிரிக்கின்ற கருவிகள் இயங்காவாய்ச் சீரணியாதும் அம் மூன்றுபாகங்கள் முறைப்படி பிரியாது மாறுபட்டுக் கலந்தும் நோய்கள் உண்டாகும். ஆகலின், வயிறு அங்ஙனம் ஏற்றுக்கொள்ளுஞ் சத்தியற்றதென்பார் இருநாளுக் கேலென்றா லேலாய் என்றார்.

இதனால் ஒருநாளேனும் உணவுக்கேற்ற முயற்சி சிறிதுஞ் செய்யாது ஆன்மலாபத்தின் முயலலாமெனின் வயிறாகிய நீ அம்முயற்சிக் கிடங்கொடுக்கின்றிலை என்னும் பொருள் போதருதல் காண்க.

இதில் உபவாசம், தவம் என்பவற்றின் முயல்வோர் ஒருநாண் மாத்திரையேயன்றிப் பலநாளும் உணவை யொழித்திருத்த லனுபவசித்தம்.

அங்ஙனமாகவும், ஒருநாளுணவை யொழித்திருத்தல் அரிதென்றால் அது அனுபவத்திற்குப் பொருந்துமா? பொருந்தாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. முற்கூறிய உபவாசம், தவம் என்பவற்றின் முயல்வோர் தமக்கு நாடோறும் பசியுண்டாகவும் அதனை மனதிற் சேர்த்துன்ன சத்துவபாகத்தாற் சகித்து அவற்றின் முயல்கின்றாரேயன்றி அவருக்குப் பசியாலுண்டாகுந் துன்பம் இல்லாமற்போகவில்லை. ஆகலின், அவற்றில் அரிதாய் முயல்கின்றாரேயன்றி யெளிதின் முயலவில்லையென்பது துணிபு. ஆகலின் ஒருநாளுணவை யொழித்திருத்தல் அரிதென்பது அனுபவத்திற் பொருந்துதல் துணிபாகிறது.

அன்றியும் எல்லா உணவுப்பொருட்களிலும் முன்சொல்லிய மூன்று பாகங்களும் விரவியிருக்கின்றனவாயினும், சிலவற்றில் அம்மூன்றும் ஏற்றபெற்றியாகவும் சிலவற்றில் ஒன்று மிகுந்தும் மற்றவை குறைந்துமிருக்கின்றன. இவ்வுணவுப்பொருட்களுட் சார்த்தபாக மிகுந்திருக்கும் பொருட்களை யுட்கொள்வோர் சத்துவகுணம் பெறுவர். இக்குணம் மற்றைய குணங்களைத் தன்னுளடக்கி, மனம் இந்திரியங்களின் வசமாகச் சென்று தீநெறியிற் செல்லவிடாது நன்னெறியிற் செலுத்திவிடும். ஆகலின் சார்த்தபாக மிகுந்த உணவை உண்போர் அவ்வுணவை நாடோறும் உண்பினும் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய உணர்வின் வளர்ச்சிக்குத் தடையுண்டாகாது. கோரபாக மிகுந்த உணவை உட்கொள்வோர் இராசதகுணம் பெறுவர். இக்குணம் இந்திரியங்களைப் பலப்படுத்த, அவை மனத்திற்குக் கட்டுப்படாது அதனைத் தம்முடனாக்கி விடயங்களின் தொத்தண்டலைச் செய்யும். மூடபாக மிகுந்த உணவை யுட்கொள்வோர் தாமதகுணம் பெறுவர். இக்குணம் உள்ள உணர்வையும் மயக்கிச் சோம்பல் நித்திரைகளையும் நோயையும் வருவிக்கும். ஆகலின் இவ்விருபாக உணவும் கடைத்தேறு முணர்வின் வளர்ச்சியைக் கெடுக்கும். ஆகவே, இவற்றை உண்போர் இந்திரியம் சோம்பல் தூக்கம் என்பவற்றின் வயத்தினின்று நீங்கித் தெளிவடையும்பொருட்டு முன்னுண்ட உணவின் பாகங்கள் தேயுங்காறும் உபவாசமிருந்து அவற்றைக் கெடுத்தல்வேண்டும். இதன்பொருட்டே இத்திறத்தினர் உபவாசமிருக்கல்வேண்டுமென்பது சித்தம்.

உணவுப்பொருட்களில் சார்த்தபாகம், கோரபாகம், மூடபாகம் என்பவை தனித்தனி மிகுந்திருப்பவற்றை ஆயுர்வேத தத்துவநூல்களிற் பரக்கக்காணலாம். உதாரணமாக ஈண்டுச் சிலவற்றை யெடுத்துக்காட்டுவோம்:—

| சார்த்தபாகம் மிகுந்த உணவு. | கோரபாகம் மிகுந்த உணவு. | மூடபாகம் மிகுந்த உணவு. |
|---|---|---|
| பழம் | மாமிசம் | பதனழித்தவை |
| பால் | வெறிப்பதார்த்தம் | பிண்ணாக்கு |
| அன்னம் | எண்ணெய் | புகையிலை |
| தித்திப்பு | கார்ப்பு | புளிப்பு |



நாடோறும் இருமுறை மும்முறை நான்முறை உண்ணாது ஒருமுறையுண்ணல் ஆன்மசுகவுணர்வு வளர்ச்சிக் கின்றியமையாததென்பார் "ஒருநாளுணவை" என்றாவது "ஒருபோதுணவை" என்றாவது பாடமோதாது ஒருநாளுணவை என்றார்.

இதில் நாடோறும் ஒருமுறையுண்ணல் ஆன்மசுகத்திற்கு முக்கியமா? அன்றி இருமுறை முதலிய பன்முறையுண்ணல் முக்கியமா? என்று விசாரிக்கவேண்டிற்று. நாடோறும் ஒருமுறையுண்ணின் அவ்வுணவு உதராக்கினியாற் சத்திகரிக்கப்படுதலினாற் கோர மூட பாகங்கள் கெடுக்கப்பட்டுச் சார்த்தபாகம் மேலோங்கும். இருமுறை உண்ணின் உதராக்கினி சமத்துவமாதலினால் தேசானுபவங்களுக்கேற்பச் சார்த்த மூட பாகங்கள் கெடுக்கப்பட்டுக் கோரபாகம் மேலோங்கும். மும்முறை முதலிய பன்முறை யுண்ணின் உதராக்கினி தணிதலினால் சார்த்த கோர பாகங்கள் கெடுக்கப்பட்டு நோய் சோம்பல் நித்திரை மயக்கம் என்பவற்றிற்கேற்ப மூடபாகம் மேலோங்கும். இவ்வாற்றால் ஆன்மசுகத்தின் முயல்வோர் நாடோறும் ஒருமுறையும், தேசசுகத்தின் முயல்வோர் இருமுறையும், இவ்விரு சுகங்களையு மொருங்கே யிழக்க முயல்வோர் மூன்று முதலிய பன்முறையும் உண்ணலாமென் றேற்படுகிறது. படவே ஆன்மசுகத்தின் முயல்வோர் நாடோறும் ஒருமுறை மாத்திரமே உண்ணலாமென்பது சித்திக்கிறது.

உணவு காரணமாக நாடோறு முயலுதலால் ஆன்மசுகத்துக்குரிய மற்றையவற்றின் முயலுதற்குத் தடையுண்டாகிறது. அதனால் நித்திய வின்பத்தை யடையவேண்டுமென்னும் விருப்பமுடைய எனக்கு இடையறாது துன்பமுண்டாகிறது. இத்துன்பத்தை மதித்து ஒருநாளாயினும் எனக்காக இரங்கி உன்னியற்கையை மாற்றுகின்றிலையென்பார் ஒருநாளும் என் நோ அறியாய் என்றார். இதில், இங்ஙனம் வருந்துபவர் ஆன்மசுகத்தின் முயல்பவரா? அன்றி உணவிற்காக முயல்பவரா? என்று விசாரிக்கப்படுகிறது. உணவிற்காக முயல்பவராயின் பலநாளுக்குரிய உணவை ஒருநாளிற் றேடுதலுங் கூடும். அங்ஙனந் தேடிய பொருளினால் உண்டுகொண்டு நாடோறும் வருத்தமின்றி வாழலாம். ஆதலின் இவர் வயிற்றை நோகவேண்டியதில்லை. ஆனால் உணவின்பொருட்டுமாத்திரம் வருந்தியுழலாது ஆன்மசுகத்தின் முயல்வோர் உணவின்பொருட்டுச் செய்யுங் கருமங்களாற் றமது முயற்சி கெடுமென்று வருந்துதல் கூடும். ஆதலின் ஈண்டு வயிற்றினியற்கையைக் குறித்து வருந்துவோர் ஆன்மசுகத்தின் முயல்பவரே என்பது சித்தம்.

உணவைத் தேடுதற்கு முயன்றும் அதனைப் பெற்றுக்கொள்ளு மாற்றலில்லாதார் இங்ஙனம் வருந்தலாமே யெனின்? முன்னர் "இருநாளுக்கேலென் றாலேலாய்" என்றதனால் அவரை யீண்டுக் கூறவில்லையென்பது வெளியாகிறது.

இங்ஙனம் நாடோறும் உணவுப் பராக்கிலேயே காலங்கழிக்கச்செய்து ஆன்மசுகத்தைத் தடுக்கின்ற வயிறாகிய நீ யான் விரும்பிய நித்திய இன்பத்திற்கேற்ற உதவியை ஒருநாளுஞ் செய்யமாட்டாயாதலின், உன்னோடு கவலையின்றி வாழ்ந்து யான் குறித்த பயனை யடைதலரிதென்பார் உன்னோடு வாழ்தல் அரிது என்றார்.

இதில், ஆன்மசுக முயற்சி செய்தற்கு உடல் இன்றியமையாதது. உடல் நிலைத்தற்கு உணவு இன்றியமையாதது. உணவூட்டப்படுதற்கு வயிறு இன்றியமையாதது. ஆகவும், வயிற்றோடுகூடி வாழுதல் ஆன்மசுகத்திற்குத் தடையெனின், அவ்வயிற்றோடு கூடாது பிரிந்தகன்று உயிர்வாழ்ந்து ஆன்மசுகம் பெறுதல் கூடுமென்பது சித்திக்கிறது. சித்திக்கவே அங்ஙனமாகிய வாழ்வு உண்மையில் உண்டா? அன்றி வயிற்றைத் தன்வயமாக்குதற்கு இங்ஙனங் கூறப்பட்டதா? என்று விசாரிக்கவேண்டிற்று. உடலினில்லாது வாழ்ந்து ஆன்மசுகம் பெறலாமெனின் உடலினின்று இங்ஙனங் கூறவேண்டா. கூறுதலின் உடலும் அதற்குரிய உணவும் அஃதூட்டப்படும் வயிறும் இன்றியமையாதன வென்பது சித்திக்கிறது. இதனால் உடலினின்று வேறாய் வாழ்ந்து ஆன்மசுகம் பெறுதற்கு வேறு நிலையில்லை என்பது வெளியாகிறது. இந்திரியங்களின் வளர்ச்சிக் காதாரம் வயிறாதலின், இந்திரியங்களை யடக்குதற்கு வயிற்றினிலைமையை யடக்குதல் முக்கியமென்று துணிதற்கே இங்ஙனங் கூறப்பட்டதென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

ஆன்மசுகத்தின் முயல்வோர் இந்திரியங்களைத் தத்தம் நெறியிற் செல்லவிடாது தடுத்தல்வேண்டும். அதற்கு வயிற்றிலுண்டாகும் பசியைத் தன்வயமாக்கி வயிற்றின்பொருட்டுமாத்திரம் உழலாது ஆன்மசுகத்தில் இடையறாது முயலவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 12-ம் செய்யுள்.

அவதாரிகை.

ஆன்மசுகத்தின் முயல்வோர் பசிப்பிணி தவிர்த்தற் கேற்ற உணவு தேடுதற்குச் செய்யும் முயற்சி உறுதியற்றதாயும் தம்வயமற்றதாயும் இருப்பின் அதனால் ஆன்மசுகமடைய முடியாது. ஆதலின், உறுதியும் தம்வயமுமுடைய முயற்சியினாலேயே உணவுதேடி யுண்டு வாழ்ந்து கடைத்தேறலின் முயலவேண்டுமென்று இச்செய்யுளில் வற்புறுத்துகின்றார்.

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—யேற்ற
முழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.



இ-ள்: ஆறு அம் கரையின் மரமும் விழும் - ஆற்றங் கரையில் வாழுகின்ற மரமும் (அவ்வாற்று நீர்ப்பெருக்கால்) விழும்,—அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் - அரசன் குறிக்கத்தக்கதாகக் களித்து வாழுகின்ற (அதிகார) வாழ்க்கையும் (அவ்வரசனது சீற்றத்தால்) அழிந்துபோம்,—அன்றே - அல்லவா?— உழுது உண்டு வாழ்வு ஏற்றம் - (ஆதலினால்) வேளாண்மை செய்து அதனால் உணவுண்டு வாழ்வதே உயர்வு,—அதற்கு ஒப்பு இல்லை - அதனையொத்த வாழ்வு பிறிதொன்றில்லை,—வேறு ஓர் பணிக்கு பழுது உண்டு - மற்றைய எத் தொழிலுக்கும் அழிவுண்டாகும். எ-று.

ஆறு + அம்=ஆற்றம் என்றியைந்தது. இதில் அம் என்பது சாரியை. மரமும் வாழ்வும் என்பனவற்றிலுள்ள உம்மைகள் எண்ணோடு உயர்வு சிறப்பு. அரசு என்பது ஆகுபெயர். அது அத்தொழில் செய்வாரை யுணர்த்துகின்றது. வீற்றிருத்தல் - யாதங் குறை வாராதென்று இறுமாந்திருத்தல். விழுதல் - முன்னறியப்படாது திடீரென்று அழிவு நேரிடுதல். உழுது என்பது ஆகுபெயர். அது அதனைமுன்னிட்ட பயிர்த்தொழிலை யுணர்த்திற்று. கண்டீர் என்பது முன்னிலையசை. பழுது - கேடு. ஓர் என்பது ஆகுபெயர். அது எல்லாத் தொழில்களினதும் பொதுமையை விளக்குகின்றது. மரமும் விழும், வாழ்வும் விழும் எனத் தனித்தனி சென்றியையும்.

ஆற்றங் கரையினிற்கு மரம் அவ்வாற்றிலுள்ள நீரையுண்டு செழித்தோங்கினும் அவ்வாறு பெருகிக் கரைகளை யரித்துப் பாயுங்கால் அம்மரத்திற்குப் பற்றுக்கோடாயுள்ள மண் முழுவதும் வாரப்படுதலின் அம்மரமானது நிலையழிந்து விழுமென்பதும், முன்னீராற் செழித்த மரம் ஆற்றில் நீர் சிறிதுமின்றி வற்றிப்போங்கால் உலர்ந்து படும் என்பதும் போதர ஆற்றங் கரையின் மரமும் விழும் என்றார்.

நாடு, காடு, வாவிக்கரை முதலிய இடங்களினிற்கும் மரம் அவ்வவற்றிலுள்ள இயற்கை நீருக் கேற்ப நிலைத்துநின்று வாழும். ஆதலின், இது சுதந்தரமான வாழ்வுக்கு உவமையாமென்றும், ஆற்றங் கரையின் மரம் இயற்கை நீரால் வாழாது (வரத்து நீராகிய) செயற்கை நீரால் வாழுதலால் அந்நீரின் மிகுதி குறைவு பற்றி நிலைகுலைந் தழியும். ஆதலின், இது சுதந்தரமில்லாத வாழ்விற்கு உவமானமாம் என்றும் வற்புறுத்துவார் மரமென வாளா கூறாதும், ஏரி முதலியவற்றின் கரையிலுள்ள மரம் என்னாதும் ஆற்றங் கரையின் மரம் என்று தெரித்தோதினர்.

அரசர் மதிக்குமாறு சேவைபுரிபவராய்ச் சேர்ந்து அவராற் பெற்ற பெரும்பொருளாற் குறைவற்ற வாழ்வு பூண்டோர் அவ்வரசன் சீற்றங் கொண்டு வெறுத்துச் சேவையினின்று நீக்குழி யாதொரு தொழிலு

மின்றிச் சுழிபெருநல்குரவுடையராய் வருந்துவார் என்பதும், அவ் வரசன் மாற்றரசரா லலைப்புண்டு அரசிழக்க நேருங்கால் தாமோர் தஞ்சமொன்று மின்றி வருந்துவார் என்பதும் போதர அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் என்றார்.

அரசன்மாட்டுப் பெருநட்புக்கொண்டு அரசாங்க நிகழ்ச்சிக்கு இன்றியமையாத மந்திரி, சேனாபதி முதலிய பெரும் பதவிகளை யடைந்தோமென்று இறுமாந்திருக்கும் வாழ்வும் என்பார் வீற்றிருந்த வாழ்வும் என்றார்.

ஆற்றங் கரையின் மரம் வீழ்தலும், அரசசேவை வாழ்வு கெடுதலும் எவர்க்குங் கண்கூடாகக் காணப்படு மனுபவமென்பதை விளக்குவார் கேட்பாரை யுளப்படுத்துஞ் சொற்செய்து அன்றே என்றார்.

பயிரிடுந் தொழிலே உயிர்வாழ்வதற்குரிய ஜீவனப் பொருட்களைக் கொடுப்பது. மற்றைய தொழிலெல்லாம் இத்தொழிலின் பயனைப் பெறுமாறே செய்யப்படுவனவாம். ஆதலின், சுதந்தரமாக உயிர்வாழுதற்குரிய மேம்பட்ட தொழில் இஃதொன்றேயாம் என்பார் ஏற்றம் உழுதுண்டு வாழ்வு என்றார்.

வர்த்தகம், கைத்தொழில், அரசசேவை முதலிய எவ்வகைப்பட்ட தொழில்செய்வோரும் பயிரிடுந் தொழிலா லுண்டாகும் பொருட்களையே ஜீவனப்பொருட்களாகக் கொண்டு வாழ்வாரன்றித் தந் தொழிலால் விளையும் பொருட்களாற் ஜீவனஞ் செய்யாமையின் மற்றைய தொழிலெல்லாம் பயிரிடுந் தொழிலுக்குக் கீழ்ப்பட்டவையாம் என்று விளக்குவார் அதற்கு ஒப்பு இல்லை என்றார்.

சுயாதீனமுடைமையானும் ஜீவனஞ்செய்துயிர்வாழ்தற்கு இன்றியமையாததாகலானும் மேலோதிப்போந்த உறுதிமொழிகளை யாவருந் தடையின்றி யேற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவார் கண்டீர் என்றார்.

பயிரிடுந்தொழிலல்லாத மற்றைய தொழில்கள் எவையும் நேரே ஜீவனத்துக்குரிய பொருட்களைத் தாராமையானும், அத்தொழில்கள் யாவும் பயிரிடுந்தொழிலின் பயனைப் பெறக்கருதியே செய்யப்படுவன ஆகலானும், பயிரிடுவோர் மற்றையதொழில் செய்வோருக்குத் தந் தொழிலின் பயனைக் கொடுப்பதில்லையென்று வரையறைப்படுத்தின் மற்றையதொழிலினர் யாதுஞ் செய்ய வகையின்றிப் பசிப்பிணியால் வருந்தி மாளவேண்டியவராவர். ஆதலின், இவர் செய்யுந் தொழில் என்றும் இடையூறுதரும் என்பதை விளக்குவார் பழுதுண்டு வேறோர் பணிக்கு என்றார்.



இவற்றிலுள்ள விசாரங்கள் வருமாறு:—

ஆற்றங்கரையினிற்கு மரம் அவ்வாற்றுநீர்ப் பெருக்காற் றிடீரென் றள்ளுண்டு விழுதல் மாத்திரையே யன்றி, வேறிடத்து நிற்கு மரங்களும் இடி புயல் முதலியவற்றாற் றிடீரென வழிதலுங் கூடும். ஆகவும், ஈண்டு ஆற்றங்கரையினிற்கு மரத்தை மாத்திரம் எடுத்துக்கூறுதல் பொருந்துமா? பொருந்தாதா? என்று விசாரிக்கப்படுகிறது. அரசர்பாற் சேவைசெய்வோர் அவ் வரசரால் அழிவுபடுதற்கு உவமானமாக ஆற்றுநீராற் செழித்த மரம் அந்நீரால் விழுதலைக் கூறுதலானும், இடியாலும் புயலாலும் அழியு மரங்கள் அவற்றாற் செழித்தோங்காமையானும் ஆற்றங்கரையின் மரத்தையே உவமானமாகக் கூறுதல் பொருந்துதலும், மற்றையவை பொருந்தாமையுங் கண்டுகொள்க.

கைத்தொழில், வர்த்தகம், கூலி முதலியனவும் அழிந்துபோதல் அனுபவமாகவும், அரசறிய வீற்றிருந்த வாழ்வு மாத்திரம் விழுமெனக் கூறியது யாதுபற்றியெனின், அரசரே உலக முழுவதையும் ஒருகுடைக்கீழோம்புபவர். அவருக் கங்கமாயிருந்து தொழில்புரிவோர் எவ்வாற்றானுங் காக்கப்பட்டுவருவார். ஆதலின், அதுவே சிறந்த தொழிலென் றிறுமாந்திருப்பாருக்குள்ள மனச்செருக்கைத் தெளிவித்தற்பொருட்டு "அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்" என்று விதந்தோதியதென்க.

இதில், அரசறிய வீற்றிருந்த வாழ்வென்பது ஈண்டு அரசருக்கு அங்கமாயிருந்து சேவைசெய்வதை மாத்திரங் குறிக்குமா? அன்றி அரசரால் நன்குமதிக்கப்பட்டு நட்புக்கொள்ளுதற் கேற்ற அதிகாரம், செல்வம், தொழிற்றிறமை என்பவற்றை யுடைமையையுங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. அரசர் நன்குமதிக்கத்தக்க அதிகாரம் செல்வம் முதலியவற்றை யுடையவர் தாம் அரசாங்கத்திற் பொருந்தி அழியற்றிருக்கின்றேமென்னுஞ் செருக்கடைதற்கு இடமின்மையானும், செல்வம் அதிகாரமென்பவை எவர்க்கும் நிலையாமையானும், அரசுக்குரிய அங்கத்தவரையே அரசன் கடப்பாடாகக் காத்துக்கொள்ளவேண்டுமேயன்றி மற்றையாரை அத்தொழிலுக் கின்றியமையாதவர்களாய்க் கருதவேண்டாமையானும், அரசறிய வீற்றிருந்த வாழ்வென்பது அரசசேவையையே விளக்கிநின்றதென்பது துணிபாயிற்று.

உயிர்க் குறுதிபயத்தலை யுன்னி யதற்கேற்ப முயல்வார் அவ்வுயிர் பற்றுக்கோடாக நிற்கு முடலிற் கேற்ற வுறுதியை முன்றெரிந்து கோட லின்றியமையாததொன்றாகலின், ஒரோவிடத்துக் கெடுகின்ற அரசசேவையையும் உறுதியென்று கடைப்பிடித்தலாகாதென்று விளக்கு

தற்கு "அன்றே" எனப்பட்டது. இதனால் ஆன்ம ஈடேற்றத்தின் முயல்வோர் என்றும் சுயாதீனமும் உறுதியுமுடைய வாழ்க்கையே கடைப்பிடித்தொழுகவேண்டுமென்பது சித்திக்கின்றது.

உழுதுண்டு வாழ்வதை எல்லாத் தொழிலினுஞ் சிறந்ததென்றால் அதனையே எவரும் செய்யவேண்டியது மரபாகவும், அத்தொழில் செய்யாத அந்தணர் அரசர்களை உயர்ந்தவராகவும், உழுதுண்டு வாழ்கின்ற வைசியரை அவரிலிழிந்தவராகவும் கொண்டது யாதுபற்றியெனின், கூறுதும்:—

தொடக்கத்தில் எல்லாவுயிர்களும் தேவசங்கற்பமாகவுள்ள காய் கனி கிழங்கு இலை முதலியவற்றையே யுண்டு வாழ்ந்துவந்தார்கள். மேல், குடிகள் பெருகிவந்தமையாலும், புதிய வாழ்வுகள் தலைப்பட்டமையாலும் யாவரும் போதிய வுணவுக்கேற்ற பயிரிடுந் தொழிலைச் செய்து வாழ்ந்துவந்தார்கள். அங்ஙனம் வாழுங்கால் ஆன்மஈடேற்ற முயற்சிகள் தலையெடுத்துவந்தன. இவ்வாழ்விலே அமையாது படிற்றொழுக்கம் பூண்டாரை நற்புத்தி புகட்டி ஆன்ம ஈடேற்றத்தின் முயல்விக்கும் பொருட்டுச் சிவகாருண்ணியம், பொறுமை, அறநெறியொழுக்கம், ஆசிரியத்துவம் முதலியவற்றை யொருங்கேயுடையாரை அந்தணரென்று பகுத்து, அவருக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழிலையும் கொடுத்துவிட்டார்கள்.

ஆன்ம ஈடேற்றத்திற் கேற்ற புத்தி புகட்டுகையில் அதனைக் கேளாது படிற்றொழுக்கம் பூண்பாரை அடர்த்தி நன்னிலைப்படுத்துமாறு வலிமை, அடக்கியாளுந்திறன், தண்டஞ்செய்தல், நீதிசெலுத்துதல் என்பவற்றில் வல்லமையுடையாரைத் தெரிந்து அரசரென்று பகுத்து, அவர்க்குப் படைக்கலம் பயிலல், பல்லுயிரோம்பல், பகைத்திறந் தெறுதல், ஓதல், ஈதல், வேட்டல் என்னும் அறுதொழிலையும் கொடுத்துவிட்டார்கள்.

மற்றையார் பயிரிடுந் தொழிலில் முயன்றுவந்தார்கள். அங்ஙனம் முயன்றுவருங்கால் வேளாண்மை பெருகியமையின் அவரை முத்திறத்தினராகப் பகுத்து, பூவைசியர், கோவைசியர், தனவைசியர் என்றாக்கி, பூவைசியருக்குப் பயிரிடுந் தொழிலையும், கோவைசியருக்குப் பசுக்காத்தலையும், தனவைசியருக்குப் பண்டமாற்றலையும் நியதிசெய்தனர்.

தாமாக முயன்று தொழில்செய்து வாழும் ஆற்றலில்லாதாரையும், ஆன்ம ஈடேற்றத்திற்குரிய புத்தியை விளங்க முடியாத தமோகுணவாரையும் சூத்திரரென்று பகுத்து, அவரை முற்கூறிய அந்தணர், அரசர், வைசியர் என்னும் முத்திறத்தினருக்கும் ஏவல்பூண்டொழுகுமாறு வைத்தார்கள்.



இவ்வாற்றால் யாவரும் முதற்கண் செய்யவேண்டிய தொழில் பயிரிடுந் தொழிலாகவும், ஆன்ம ஈடேற்றத்தின் முயற்சித்திறத்தால் அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் என்று பகுக்கப்பட்டமை வெளியாகின்றது. உடலை மாத்திரம் போற்றிவாழுதல் உயிர்க்குறுதி பயவாமையின் உறுதிபயக்கின்ற ஆன்ம ஈடேற்றங் காரணமாக இங்ஙனம் பகுத்தல் அத்தியாவசியமாயிற்று. ஆகவே, எல்லாரும் பயிரிடுந் தொழில் செய்திருந்தவரால் ஒத்த திறத்தினரென்று கொள்ளாது, ஆன்ம ஈடேற்ற முயற்சி காரணமாக அந்தணர் அரசர் உயர்வுடையவரென்று வரையறுக்கப்பட்டமை தெள்ளிதிற் புலப்படுதல் காண்க. இதனால் உடலுக்குரிய வாழ்வினுள் உயர்வுதாழ்வு கருதப்படவில்லையென்பதூஉம், ஆன்ம ஈடேற்ற முயற்சி காரணமாகவே உயர்வுதாழ்வு கருதப்படுகின்றதென்பதூஉம், அவ்வாழ்வை நிலைபெறுத்துதற் கேற்ற அறிவொழுக்கம், அதிகாரம் என்பவற்றையுடைய அந்தணரும் அரசரும் பயிரிடுந் தொழிலுக்குரியவராகிய வைசியரினும் உயர்ந்தவராகவும், இவர்க்கு ஏவல்செய்தொழுகுகின்ற சூத்திரர் இம்மூவரினுந் தாழ்ந்தவராகவும் அனுசரிக்கப்படுதல் மரபாயிற்று. ஆதலின், பயிரிடுந் தொழிலினர் அந்தணர் அரசரினும் உயர்ந்தவராக மதிக்கப்படாமை துணிபாயிற்று.

இதில், அந்தணர், அரசர் ஆகிய இருபாலார்க்கும் பயிரிடுந் தொழிலை விதியாதது யாதுபற்றியெனின், உடலுக்குரிய வாழ்வாகிய பயிரிடுந்தொழிலளவினின்றால் அது ஆன்ம ஈடேற்றத்தைத் தாராததும் உடலழிய அழிந்துபோவதுமாய் உயிருக் குறுதிபயவாததாகின்றது. ஆன்ம ஈடேற்ற முயற்சியினின்றால் அஃது காலந்தோறும் அறத்தை மிகுவித்து, அது காரணமாகச் சித்தசுத்தமுண்டாய், ஞானம் பிறந்து வீடுபேறெய்துவிக்கும். இவ்வீடுபேற்றிற்குரிய முயற்சியைச் செய்யவேண்டியது மானுடயாக்கை யெடுத்தாருக்குக் கடப்பாடன்றி உடல்வாழ்வுக்கு மாத்திரமுரிய பயிரிடுந்தொழிலை மாத்திரஞ் செய்தல் கடப்பாடன்று. உடல்வாழ்வு, உயிர்வாழ்வு என்னும் இரண்டிற்குமுரிய தொழிலை ஒருதிறத்தினர் ஒருங்கே செய்ய முடியாமையால் இருவகை முயற்சியையும் ஒருவர்க்குறுத்துதல் அடாதென்றும், உடல்வாழ்விற்குரிய முயற்சியை யுறுத்தின் ஆன்ம ஈடேற்ற முயற்சி குன்றுமென்றுங் கருதியே ஆன்ம ஈடேற்ற முயற்சிக் குரியராகிய அந்தணர் அரசருக்குப் பயிரிடுந் தொழில் கடப்பாடாகச் செய்யவேண்டுமென்று கூறுதொழிந்ததேயன்றி, அப் பயிரிடுந் தொழிலையும் ஆன்ம ஈடேற்ற முயற்சியையும் ஒருங்கே செய்ய வல்லபமுடையராயின் அந்தணரசருக்கும் பயிரிடுந் தொழில் விலக்கானதல்லவென்க. இதனால் வைசியரும் வல்லபமுண்டேல் ஆன்ம ஈடேற்ற முயற்சி செய்விப்பதில் பெரிதும் முயலலாமென்பதும் சித்திக்கின்றது. அங்ஙனம் சித்திப்பினும், தமது பயிரிடுந் தொழிலை அறவே யொழித்துவிடலாகாதென்பது சித்தமாயிற்று.

சூத்திரரென்றால் ஏவல் செய்பவர்கள். இவர் தமது உடல்வாழ்வுக்குரிய தொழிலைத் தம் புத்தியாற் செய்ய வல்லமை யின்றியும், ஆன்ம ஈடேற்றத்திற்குரிய அறிவொழுக்கங்களை உணர்ந்தொழுகு மாற்ற லின்றியும் தொழிலின்மை, படிற்றொழுக்கம் முதலியவற்றைக் கடைப்பிடித்து வருந்தி யுழன்று கெடாவண்ணம் அந்தணர், அரசர், வைசியர் என்னும் முத்திறத்தினரும் தங்களுக்குக் கீழ்ப்படுத்திவைத்துத் தொழில் புரிவித்துச் சீவனங் கொடுத்தும், நல்லொழுக்கங்களைப் பயிற்றியும் உயரச் செய்துவருகின்றார்கள். இவ்வாற்றால், சூத்திரர் தம்முணர்வாற் செய்யாவிடினும் தம்மினுயர்ந்தாரினுதவியால் அவருக்குக் கீழ்ப்படிந்து வேண்டிய வொழுக்கங்களைப் பயின்று நன்னிலையடைந்துவரவேண்டியது அத்தியாவசியமாயிற்று. இவ்வாறன்றி, சுயாதீனமாகத் தொழில்புரிந்து சீவிக்கவும், ஆன்ம ஈடேற்றத்திற்குரிய அறிவொழுக்கங்களை யுணர்ந்தொழுகவும் இவர்க் காற்றலுண்டாயின், தமக்கு மேலுள்ள அந்தணர், அரசர், வைசியர் என்பார்க்கு அடிமைபூண்டொழுகவேண்டிய நியதியில்லை. ஆன்ம ஈடேற்ற முயற்சி செய்விக்குந் தகுதியுண்டாயின் அதுவுஞ் செய்விக்கத் தடையின்றென்பது துணிபு.

இதுகாறுங் கூறிப்போந்தவாற்றால் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுச் சாதி பிரிக்கப்பட்டதேயன்றி, உடலுக்குரிய வாழ்வு முயற்சியின் ஏற்றத்தாழ்ச்சியால் சாதி பிரிக்கப்படவில்லையென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது. உடல்வாழ்வுக்குரியவற்றாற் சாதி பிரிக்கப்பட்டதெனின், மிருகம், பறவை முதலியனவும் உடல்வாழ்வுக்குரிய முயற்சி செய்தலின் அவைகளுக்கும் மானுடயாக்கை யுடையாருக்கும் யாதும் பேதமில்லை. எனவே எல்லாவுயிர்களும் ஒத்த சாதியினரேயன்றி உயர்வு தாழ்வில்லையென் றேற்படும். ஆகலின், உடல்வாழ்விற்குரிய முயற்சியாற் சாதி பிரிக்கப்படவில்லையென்பது சித்தம்.

இவ்வுண்மையை யுணராது தற்காலத்துச் சிலர் தம் முன்னோர் உயர்ந்த வொழுக்கம் முதலியவற்றால் மேம்பட்டிருந்தமையால் அம் மரபிற் பிறந்த தாம் எவ்வகைப் படிற்றொழுக்கம் பூண்பினும் உயர்ந்த சாதியென்றும், முன்னோர் முயற்சியொழுக்கங்களாற் றாழ்வடைந்தமை பற்றி அம் மரபிற் பிறந்தார் எத்துணை உயர்வுடைய அறிவொழுக்கம் முயற்சி யென்பவற்றைப் பெற்றிருப்பினும் அவரின் முன்னோர் காரணமாக அவர் தாழ்ந்தவரென்றுந் தலைதடுமாறி, உயர்ந்தோரை யிழித்தும், தாழ்ந்தோரை யுயர்த்தியு மிடர்ப்பட்டுழலுகின்றார்கள்.

உழுதுண்டுவாழ்வதற் கொப்பில்லையென்றால், அங்ஙனம் வாழ்பவர் செல்வத்தாற் றாழ்வடைந்தும், ஏனைய அரசசேவை, வர்த்தகம், கைத்தொழில் செய்வோர் செல்வத்தாலுயர்வடைந்தும் காணப்படுதல் கூடாது. அங்ஙனமாகவும், உழுதுண்பார் செல்வத்தாற் றாழ்வடைந்து நல்கூர்ந்தும், மற்றைய தொழில்செய்வார் செல்வத்தாலோங்கியும் வருதல் அநு



பவசித்தமாகலின் இவ் வுழுதுண்டு வாழ்தல் ஏற்றமென்பது அநுபவத்திற் பொருந்துமா? பொருந்தாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

செல்வமென்பது நாணயமாகிய பணத்தைப் பொறுத்ததன்று. ஆனால் பணத்தை வாங்கிக்கொண்டு சகல பொருட்களையும் விற்றுவிடுகின்ற ஆட்சி யிருப்பதனால் அதனைச் செல்வமென்று வழங்குகின்றார்கள். அஃது உண்மைச் செல்வமாய் உலகினருக் குறுதிபயக்கத் தகாததென்பதை விளக்குகின்றாம். பணம் அல்லது நாணயம் என்பது பொருட்களைப் பெறுதற்காக ஏற்பட்டதேயன்றிப் பொருட்களை விளைவித்தற்காக ஏற்பட்டதன்று. உணவுக்குரிய பொருட்கள் விளையாக்கால் பணம் யாதொரு வுதவியும் உயிர்களுக்குச் செய்யமாட்டாது. உதாரணமாக, உணவுப் பொருட்களை யுண்டாக்குவதை அறவே யொழித்து எல்லாரும் பணத்தை வைத்திருப்போமாயின் அப்பணத்தைக் கொண்டு உணவுக்குரிய பொருளொன்றும் வாங்க முடியாமற்போம். ஆனால், எல்லாரும் பயிரிடுந்தொழிலை மாத்திரம் வைத்திருந்தால் எவரும் முட்டின்றி உணவுண்டு சீவித்து வாழலாம். பணம் நேரே உணவாவதில்லை. பயிரிடுந் தொழிலினர் விற்க அல்லது கொடுக்கச் சம்மதித்தாலன்றிப் பணமாத்திரம் வைத்திருப்போர் சீவனஞ் செய்யமாட்டார். அன்றியும், உடம்பில் உயிரை நிறுத்துதற்கேற்ற உணவே வாழ்வுசெய்தற்கு முக்கியமானது. அஃதில்லையேல் உயிர்வாழ்வே யில்லாமற்போம். பணம் எப்போதும் இருந்தபடியிருக்கின்றதன்றி உணவாகவாவது மற்றொரு பொருளாகவாவது காரியப்படுத்தப்படவில்லை. அஃது எவ்வகை வாழ்விற்கும் நேரே பயன்படுவதில்லை. ஆதலின், அதனை வைத்திருப்போர் செல்வத்தாலுயர்ந்தவரென்றும், அஃதின்றிப் பயிரிடுவோர் செல்வத்தாற் றாழ்ந்தவரென்றும் கூறுதல் ஒருவாற்றானும் பொருந்தாது. அன்றியும், பயிரிடுவோர் அதனாலேயே நேரே சீவனஞ்செய்து வாழ்கின்றார்கள். பணம் வைத்திருப்போர் அதனை யுண்டு வாழாது பயிரிடுந் தொழிலினரை யெதிர்பார்த்திருத்தலால் பராதீன வாழ்வுடையவராகின்றார்கள். ஆதலால் சுயாதீனமான வாழ்வு செல்வ வாழ்வென்றும், பராதீனமான வாழ்வு செல்வவாழ் வல்லவென்றும் மதிக்கப்படுமேயன்றி மாறுபாடாக மதிக்கப்படமாட்டாது.

இவ்வாற்றால் பசிப்பிணி நீங்கி உயிர்வாழ்வதற் கேற்ற பயிரிடுந் தொழிலே இன்றியமையாததென்றும், அதனைச் செய்யு மாற்றலில்லாதார் அப் பயிரிடுந் தொழிலால் வரும் பயனாகிய உணவுப் பொருளைப் பெறுதற்கு அரசசேவை, வர்த்தகம், கைத்தொழில், கூலி முதலிய தொழில்களைச் செய்கின்றார்களென்றும், உற்றுணருங்கால் இதுவே யாவர்க்கும் இன்றியமையாத தொழிலென்றும் தெளிவாகின்றமையால் பயிரிடுந் தொழிலாகிய ஒன்றே தொழிலென்பதும், அதினுயர்ந்ததும் அதையொத்ததுமான தொழில் பிறிதொன்றுமில்லையென்பதும் அநுபவ

மாக வெளிப்படுதல் கண்டுகொள்க. இதனால் இப் பயிரிடுந் தொழில் இல்லாக்கால் ஏனைய தொழிலாற் பயனில்லையென்பது சித்தித்தது.

இங்ஙனமாகவும், இதனுண்மையை யுள்ளவாறுணராது தற்காலத்திலனேகர் பயிர்த் தொழிலை மிக விழிந்த தொழிலென்றும், அரசசேவையை மிக வுயர்ந்ததென்றும் மாறுபாடாக வுணர்ந்து, தாம் முன் செய்து பயிரிடுந் தொழிலை யறவே யொழித்து, அரசசேவைக்குரிய பிரயத்தனங்களில் உழன்று, ஈற்றில் தொழில் யாதொன்றுமின்றிச் சீவனஞ் செய்யமாட்டாது தேம்பித்திரிகின்றார்கள். இவ்வரசசேவையை விரும்பியதனால் இவர்கள் பெற்ற பேறு தமது உறுதியான பயிரிடுந் தொழிலை யிழந்ததும், வேறு தொழிலொன்றும் பயிலாது சோம்பேறிகளாய் வந்ததுமேயன்றி வேறு யாதுமில்லை யென்பதைத் தற்காலத்தில் அநுபவமாகக் கண்டுகொள்ளலாம்.

### இதிலுள்ள உவமான உவமேயங்கள்.

| உவமானம். | உவமேயம். |
|---|---|
| ஆறு | அரசு |
| ஆற்றங்கரை | அரசசேவை |
| மரம் | அரசசேவைபுரிவோர் |
| அடிமறிந்துவிழுதல் | சேவையால் நீக்கப்படுதல். |

அரசறிய வீற்றிருந்த வாழ்வும் என உயர்வுசிறப்பும்மைபுணர்த்திக் கூறியதனால் அதிற் குறைந்த வர்த்தகம், கைத்தொழில், கூலி முதலியவை விழுதல் சொல்லாமலே விளங்கும். அன்றே என்னும் வினா உளப்பாட்டுவிடையை புணர்த்திற்று. அதற்கு என்பதிலுள்ள அது உழுதுண்டு வாழ்தலை புணர்த்தலாற் பண்டறிசுட்டு. ஒப்பில்லை எனவே மிக்கதுமில்லையென்பது சொல்லாமலே விளங்கிற்று. விளங்கவே உயர்வுசிறப்போ டிறந்ததழீஇய வெச்சவும்மை தொக்குநின்றமை வெளியாயிற்று. அது ஒப்புமில்லை என விரியும். மரம் சாதியொருமை.

அரசசேவை முதலான உறுதியற்ற தொழில்களில் ஏமாந்து உழன்று சலியாது, உறுதியான பயிரிடுந் தொழிலையே கடைப்பிடித்து நிற்றல் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாததென்று வற்புறுத்துதலால் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 13-ம் செய்யுள்.

#### அவதாரிகை.

பெற்றார் சுற்றம் நட்பினர் என்பவரால் உலகவாழ்வுக்குரிய உதவிகளை யடையலாமேயன்றி ஆன்ம ஈடேற்றத்திற் கேற்றவற்றைப் பெற முடியாதென்றும், அவ்வான்ம ஈடேற்றத்துக்குரிய முயற்சிகள் முழுவதையும் மற்றையாரைக்கொண்டு பெறலாமென்று நம்பியிராது தானே செய்து ஈடேறல்வேண்டுமென்றும் இச்செய்யுளில் வற்புறுத்துகின்றார்



**ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவ—ரோவாம**
**லையம் புகுவாரை யாரே விலக்குவார்**
**மெய்யம் புவியதன் மேல்.**

இ - ள்: ஆவாரை அழிப்பார் யார் - (அறிவு ஒழுக்கம் தொழில் என்பவற்றால்) உயர்ந்து வருவாரைக் கெடுப்பவர் ஒருவருமில்லை,—அதுஅன்றி - அதுவல்லாமல்,—சாவாரை தவிர்ப்பவர் யார் - (சுகம், ஆயுள், வாழ்வு என்பவற்றைக் கெடுத்து) அழிவாரை விலக்குபவரும் ஒருவருமில்லை,—ஓவாமல் - ஒழியாமல்,—ஐயம் புகுவாரை விலக்குவார் யார் - பிச்சையெடுப்பாரைத் தவிர்ப்பவரும் ஒருவருமில்லை,—அம் புவியதன்மேல் மெய் - அழகிய பூமியின்கண் இவை உறுதிகளாம்.

ஏகாரமூன்றும் வினாவிற்கிறைபயப்பதாய தேற்றப்பொருளில் வந்தன.

முற்றொடர்பான கன்மானுகுணத்தால் ஆன்மஈடேற்றத்திற்கியைந்த அறநெறியொழுகல், பத்திசெய்தல், மெய்யறிவுணர்தல் என்பவற்றின் முயன்றுயர்வாரை அவற்றினின்றுந் தடைசெய்து கெடுத்துவிடுதல் தன்னாலன்றிப் பிறரெவராலும் முடியாதென்பார் **ஆவாரை யாரே அழிப்பார்** என்றார்.

இதில், தனது கன்மானுகுணத்தால் உண்டான ஆகாமிய முயற்சியால் ஆன்மஈடேற்றத்தின் முயலலாமா? அன்றி ஊழினாலும், மற்றையாருடைய உதவியாலும் ஆன்மஈடேற்றத்தின் முயலலாமா? அன்றி இருவகையாலும் முயலலாமா? என்று விசாரிக்கப்படுகிறது.

தனது குணமே தன் முயற்சி யொழுக்கங்களுக் கேதுவாவதன்றிப் பிறிதொன்றன்று. ஊழின்பயன் அநுபவமாதலேயன்றி முயற்சிக்கேற்ற குணமாகிறதில்லை. பிறருடையசெயல் தனது குணத்தைத் தடுக்கமாட்டாது. ஆதலால், ஊழின்பயனாலும் தன்முயற்சியின்றிப் பிறர்செய்யும் உதவியாலும் ஆன்ம ஈடேற்றம் சித்தியாதென்பதும், தனது முயற்சியினாலே சித்திக்குமென்பதும் தெளிவாயின.

தனது கன்மானுகுணவயமாய் நின்று தீநெறியொழுகி, சுகம், ஆயுள், வாழ்வு என்பவற்றை யொருங்கே கெடுப்பாரையும் பிறருதவியாற் றடுக்க முடியாதென்பார் **சாவாரை யாரே தவிர்ப்பவர்** என்றார்.

இதில், சாவாரையும் துன்பந்தரத்தக்க செயலினரையும் மருந்தானும் நற்புத்தியாலுந் தண்டத்தாலும் தடுக்கலாமா? தடுக்கலாகாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

எவரும் தம் மனதிற்படிந்துள்ள செயலையே பிறர்காணாது செய்தும் ஒழுகியும் அவற்றின் தீப்பயன்களை யடைவாரன்றி, அறிவுடையாரும் மருத்துவரும் செய்யு முபகாரங்களினால் அவரது தீச்செயல் நீங்கி நற்ப

யன் பயவாதாகலின், அங்ஙனம் கெடுவாரை புத்திபுகட்டு மாசிரியரும், மருத்துவரும், தண்டஞ்செய்யு மதிகாரிகளும் எவ்வாற்றானுந் தடுக்கமாட்டார்களென்பது சித்தித்தது.

தம் வாழ்விற்கேற்ற பொருடேடல், காத்தல், ஏற்றவாறு செலவு செய்தல், அப்பொருளால் வேண்டிய வாழ்வெய்துதல் என்பவற்றிற்குரிய நன்மாணுகுணமில்லாதார் எத்துணைச் செல்வங்களை யொருங்கே யுபகரிப்பினும் அவற்றை யுடனே யிழப்பாரென்றும், அத்தகைய இழப்பு சேருதற்கேற்ற நன்மாணுகுணங்களைப் பொருள்கொடுத்துதவுதல் மாற்றமாட்டாதென்றும் விளக்குவார் வானா "ஐயம்புகுவாரை" என்னுது, **ஏவாமல் ஐயம்புகுவாரை யாரே விலக்குவார்** என்றார்.

இதில், பிச்சையிரந்துண்பாருக்கு வேண்டிய செல்வங்களைக் கொடுத்தால் அவரவ் விரத்தற்றொழிலினீங்கி நல்வாழ்வடைவாரா? அடையமாட்டாரா? என்று விசாரிக்கப்படுகின்றது.

செய்யவேண்டிய செலவு, பாதுகாப்பு, அனுபவம் என்பவற்றை நன்குணருதற்கேற்ற நன்மாணுகுணம் உடையவரே தமது வாழ்வுக்கேற்ற செல்வங்களைக் காப்பாற்றுங் குணமுடையாராவர். அவ்வாறு வாழ்விற்கேற்ற பொருளைக் காக்குமாற்றலில்லாத நன்மாணுகுணமுடையார் எத்துணைச் செல்வங்களைப் பிறருதவினும் அவற்றைத் தம் வாழ்விற்கேற்றவாறு பாதுகாத்து வாழமாட்டார். ஆதலின், பிச்சையிரப்பாருக்கு எத்துணைச் செல்வங்களை யுதவினும் அவர் அவற்றை யோம்பித் தம் மிரப்பை நீக்கமாட்டாரென்பது விளங்கிற்று.

துர்க்குணங்களினின்று நீங்கி அறநெறியொழுகல், பத்திசெய்தல், மெய்யுணர்தல் என்பவற்றிற் றம்மை யடிப்படுத்தி யொழுகுவாரையும், துர்க்குணத்தையே கடைப்பிடித்துக் கொலை, தெய்வநிந்தை, விபரீதவுணர்வு என்பவற்றிற் றம்மை வயப்படுத்தி யொழுகுவாரையும், பொருளைப் பாதுகாவாமை, ஏமாற்றம், சோம்பல் என்பவற்றிற் றம்மை வயப்படுத்தி யொழுகுவாரையும் எவரும் மாற்றி வேறுநிலைப்படுத்த முடியாமை இப்பூவுலகி லனுபவசித்தமென்பதை விளக்குவார் **மெய் அம்புவியதன் மேல்** என்றார்.

இதுகாறுங் கூறிப்போந்தவற்றால் ஒவ்வொருவரும் தமக்குண்டான குணங்கள் தமது மதியினால் முற்சென்மங்கடோறு மடிப்பட்டுவந்தனவென்று தெளிந்து, தம்மதியாலுண்டான தீக்குணங்களைத் தம்மதியாலே மாற்றலாமென்று துணிந்து, ஆன்ம ஈடேற்ற முயற்சிக்குரிய நற்குணமுடையார் அதனை மென்மேலும் பெருகச்செய்தும், அதற்கு மறுதலையான துர்க்குணமுடையார் அக்குணத்தைத் தம்மதியாற் றடுத்து நன்னெறியிற் றம்மைச் செலுத்தியும், இவையெல்லாம் ஊழால் வந்தனவென்னு மடைமையை யொழித்தும், உயிருக்கின்றியமையாத ஆன்ம ஈடேற்றத்திற் றப்பாமல் முயலவேண்டுமென்பது சித்திக்கிறது.



நன்மாணுபவத்தின் விளக்கம் பின்வரும் "சிவாயநம" என்னும் 15-ம் செய்யுளுரையில் விளக்கப்படும். ஆண்டுக் கண்டு தெளிக.

தத்தந் தீக்குணங்கள் ஊழால் வந்தனவென்று மயங்கி அதனோடு மொத்தொண்டுழல்வாரை மறுத்து, தம்மதியாற் றடித்துவந்த தீக்குணங்களைத் தம் மதியாற் றடுத்து, நற்குணங்களைக் கடைப்பிடிக்கலாமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 14-ஞ் செய்யுள்.

### அவதாரிகை.

தனது ஆகாமியத்தினாலே ஆக்கக்கேடுகள் விளைகின்றன. இக்காரணத்தால் தானே ஆக்கத்திற்குரிய ஆகாமியங்களில் முயன்று கடைத்தேறுதல் மரபாம். இம்மரபை யொழித்து, மற்றையாருடைய முயற்சியைக்கொண்டு தான் வாழ விரும்புதல் தன்வயமாக வுயிர்வாழாமையை யொக்குமாதலின் அவ்வாழ்வினும் வாழாமை யுயர்ந்ததென்றும், வாழின் தன்வயமாகவே முயன்று வாழவேண்டுமென்றும், அங்ஙனம் வாழாக்கால் ஆன்ம ஈடேற்ற முயற்சி சிறிதும் சித்தியாதென்றும் இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

### சுயாதீனவாழ்வு.

**பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா**
**லிச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சி**
**வயிறு வளர்க்கைக்கு மான மழியா**
**துயிர்விடுகை சால வுறும்.**

இ - ள் பேசுங்கால் - (ஆராய்ந்து) சொல்லுமிடத்து,—பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை - பிச்சையிரந்துண்பதினும் (தாழ்வில்) உயர்ந்த சீவன வாழ்க்கையாவது,—பல இச்சை சொல்லி இடித்து உண்கை - (தனக்குள்ள) பலவிதமான பேரவாக்களைச் சொல்லி (இரக்கப்படுவார்பால்) வலிந்துவாங்கி யுண்ணுதலாம்,—சிச்சி - இது எவ்வளவு அருவருப்பு,—வயிறு வளர்க்கைக்கு - பசிதீர்த்து உயிர்வாழ்தற்கு,—மானம் அழியாது - மானத்தைக் கெடாது,—உயிர் விடுகை சால உறும் - (அப்பசியால்) இறந்துபடுதல் பெரு நன்மையைத் தரும். எ - று.

பிச்சைக்கு என்பதிலுள்ள குவ்வுருபு நீக்கப்பொருடரும் இன்னுருபாகத் திரிக்கப்பட்டது. மூத்த என்பது முதன்மை யென்னும் பண்படியாகப் பிறந்த பெயரெச்சம்.

தன்வயமற்ற வுயிர்வாழ்வு பிச்சையொன்றேயாம். இவ்வாழ்வினும் தாழ்வான வாழ்வு உண்டா? இல்லையா? என்று ஆராயுங்கால் என்பார் **பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்** என்றார்.

இதில் ஆன்ம ஈடேற்றத்தின் முயல்வோர்க்கு நல்குரவுண்டாங்கால் அவரிரந்துண்டு ஆன்ம ஈடேற்றத்தின் முயலுதல் வேண்டுமோ? அன்று? என்று விசாரிக்கப்படுகிறது.

எவரும் ஆன்ம ஈடேற்றத்தின் முயலாது உயிர்வாழ்தலிற் பயனில்லை. உயிர்வாழ விரும்புவோர் எந்நிலையில் வாழினும் ஆன்ம ஈடேற்றத்தின் முயலாராயின் அவ்வாழ்வு வேண்டப்படாததாகும். ஆகவே, பிச்சையெடுத் துண்பார் உயிர்வாழுதலின் அவர் ஆன்ம ஈடேற்றத்திற் றப்பாது முயல வேண்டுமென்பது சித்திக்கிறது.

இதில், இரந்தார் இரக்கப்படுவாரால் உயிர்வாழுதலின், அங்ஙனம் வாழ்ந்து செய்யும் ஆன்ம ஈடேற்ற முயற்சியின் பயன் இரந்தாரை யடையுமா? அன்றி இரக்கப்படுவாரை அடையுமா? அன்றி இவ்விருதிறத்தாரையு மடையுமா? என்று விசாரிக்கவேண்டிற்று.

இரக்கப்படுவாரா லுயிர்வாழினும், அங்ஙனம் வாழுங்கால் இரப்பார் யாதுஞ் செய்யாது வாளாவிருந்து இறப்பரேல் அவ்வுயிர்வாழ்வுக் கேற்பக் கொடுத்த அறமேயன்றி இரந்தாரின் செயலால் யாதொரு பயனையு மிரக்கப்படுவா ரடையமாட்டார் ஆதலானும், இரக்கப்படுவோர் இரந்தாரை யுயிர்வாழச் செய்யாராயின் அவ்விரப்பார் யாதுஞ்செய்யா திறந்துபடுவார் ஆதலானும், இரப்பாரை உயிர்வாழச் செய்தமையாலேயே ஆன்ம ஈடேற்ற முயற்சி யுண்டானதாதலானும், இவ் விரந்தார் செய்த ஆன்ம ஈடேற்ற முயற்சியின் பயன் இருபாலாரையு மடையுமென்பது எளிதின் விளங்குகின்றது.

தான் மற்றையாரோடு தொடர்பின்றிக் காடு மலை முதலியவற்றிற் றனித்து வாழாது, குடிகளோடு தொடர்ந்து வாழும் வாழ்வென்பார் "வாழ்க்கை" என வாளா கூறாது **குடி வாழ்க்கை** என்றார்.

தன்வயமாகத் தொழில்செய்து சீவித்தற்குரிய தகுதி வாய்த்திருப்பவும் அதனை யொழித்து, பேராசையயத்தினாலாயினும் சோம்பற்றனத்தினாலாயினும் தனக்குண்டான அவாக்களை நிறைவேற்றுதற்குப் பிறர்பாற் குறையிரந்து அவர் மறுத்தவிடத்தும் வலிந்துவாங்கி யனுபவித்தலென்பார் **இச்சை பல சொல்லி இடித்துண்கை** என்றார்.

அங்கவீனம், நோய், இளமை, முதுமை என்பவற்றை யுடையார் தமக்குக் கடமையாக வுதவுவா ரெவருமின்றியக்காலை யிரக்கவேண்டியது மரபு. அங்ஙனமாகவும், மேற்கூறிய குறைவுபாடொன்றுமின்றி இரத்தலும், இரக்குங்கால் இரக்கப்படுவாரைக் கடிந்தும் இகழ்ந்தும் இடித்து வாங்குதலும் மானந்தீர்ந்த பேரிழிவாவாமென்பார் **சீச்சீ** என்றார்.

இதில், இரக்கப்படுவாரின் மனவொருப்பாடின்றித் தன்னயங் கருதிக் கடிந்து வாங்குதல் இரத்தலாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகிறது.

இரத்தலாவது இரக்கப்படுவாரின் முகமலர்ச்சியோடு தகுதியுடையார் வேண்டியவற்றை யேற்றல். இச்சைபல சொல்லி யிடித்துண்கையாவது இரக்கப்படுவாரின் வெறுப்போடு தகுதியற்றார் நெருக்கி வாங்குவது. ஆத



லின், இஃது எவ்வாற்றானும் இரத்தற்றொழிலோ டமையாதென்பது தெளிவாகிறது. அன்றியும், இரப்பார் உயிர்வாழ்ந்து கடைத்தேறவேண்டுமென்னும் உவப்போடு ஈதலால் இரக்கப்படுவார்க்கு நற்பயனுண்டாகிறது. இச்சைபல சொல்லி யிடித்துண்ணலில் இரக்கப்படுவார் வெறுப்போடு தம் பொருளை யிழத்தலால் அப் பொருட்பயன் தீப்பயனாகின்றது. இவ்வாற்றால் இச்சைபல சொல்லி யிடித்துண்கை இரத்தலுக்கு மாறுபாடான செயலென்பது விளங்குகின்றது. விளங்கவே, இரத்தற்றொழில் இரந்தார் இரக்கப்படுவார் ஆகிய இருபாலார்க்கும் பயன் தருவதென்பதும், இச்சைபல சொல்லி யிடித்துண்கை இரக்கப்படுவார்க்குத் துன்பத்தையும் இச்சைபல சொல்லி யிடித்துண்பார்க்கு மாத்திரம் அப்போது அற்ப மகிழ்ச்சியையும் பின் துன்பத்தையும் பயத்தலால் இச்சைபல சொல்லி யிடித்துண்கையும் இரத்தலும் எவ்வாற்றானும் ஒப்புமையுடையனவல்லவென்பதும் துணிபாகின்றன.

இங்ஙனம் இச்சைபல சொல்லி யிடித்துண்பார் ஆன்ம ஈடேற்றத்தின் முயல்பவராயின் அவ்விரந்துண்ணு முயற்சியால் வருந் தீமையை யறிந் தொழிப்பர். அங்ஙன மொழியாது இச்சைபல சொல்லி யிடித்துண்ணலால் இவர் ஆன்ம ஈடேற்ற முயற்சியிற் சிறிதுஞ் சிந்தனையில்லாதவர் என்பதை விளக்குவார் "வாழ்க்கைக்கு" என வாளா கூறாது, **வயிறு வளர்க்கைக்கு** என்று அடைபுணர்த்திக் கூறினார்.

ஆன்மஈடேற்ற முயற்சியிற் சித்திபெறுதற்கு உயிரிழக்க நேரிடினும் அதனைத் தப்பாது கடைப்பிடித்தலே மானமுடைய வாழ்வாம். அவ்வாறின்றி ஆன்ம ஈடேற்றத்தின் முயலாதும், உயிர்வாழ்க்கைக்கு இடையூறுண்டாங் காலத்து மானத்தை நிறுத்தி யிறவாதும் வாழ்தலினும் வாழாதிறத்தல் நன்மை பயக்குமென்பார் **மானமழியாது உயிர்விடுகை சாலவுறும்** என்றார்.

இதில், உயிர்வாழ்தற் பொருட்டு இச்சைபல சொல்லி இடித்துண்கை மானமாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகிறது.

இச்சைபல சொல்லி யிடித்துண்ணலாற் றன்பா லுள்ள தரும முழுவதும் தான் பொருள்பெற்றாரை வலிந்துசென் றடைந்துவிடத் தான் தருமமற்ற நிலையை யடைய நேரிடும். தருமமில்லையாகவே ஆயுள், வாழ்வு, அறிவு என்பவற்றை யொருங்கே யிழந்து மிகத் தாழ்ந்தநிலை சித்திக்கும். ஆகவே, தாழ்ந்தநிலை சித்தித்தற்கு ஏதுவான செயல் மானமாகாமை நன்கு புலப்படுகின்றது.

தன்பாலுள்ள தருமத்தை யிழந்து, தாழ்ந்த பிறவியி லுழன்று கெடுதலினும் தன் புத்தி நிலைப்படுமாறு பிறவியை யிழத்தால் அப்புத்தி மறுமையினுமியினுஞ் சித்திக்குமென்பார் **வயிறு வளர்க்கைக்கு மானமழியாது உயிர்விடுகை சாலவுறும்** என்றார்.

இதில், உயிர்விடுதலென்பது மானங்கெடத்தக்கதாக வயிறுவளர்க்க நேர்ந்தவிடத்துப் பசிப்பிணியால் வருந்தி யிறத்தலைக் குறிக்குமா? அன்றி, ஆறு குளம் கிணறு நெருப்பு மலை முதலியவைகளின் வீழ்ந்திறத்தலைக் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது.

மானத்திற் றீராதுநின்று இறப்பின், அந்தொடர்புபற்றிப் பின்னும் மானமுடையராகவே பிறப்பெடுத்துக் கடைத்தேறுந் தகுதி பெறலாம். தற்கொலை செய்யின் உடம்பு பெறுதற்கே முடியாது பசாசவடிவங் கொண் டுழலவேண்டுதலின் அஃது என்றுஞ் செய்யத்தகாததாம். ஆதலின், ஈடேற்றங்கருதி வலியுறுத்துபவர் அதற்கேற்பக் கூறுவாரேயன்றி, மாறுபாடாகக் கேடுபயக்குமாறு கூறமாட்டாராதலின், ஈண்டு உயிர்விடுதல் மானத்தை நிறுத்திக்கொண் டுயிர்விடுதல் என்னும் பொருளையே குறிக்குமென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

இதில், பசிப்பிணியால் வருந்தியிறத்தல் தற்கொலை ஆகுமா? ஆகாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

பசிப்பிணியை மானத்தாற் றீர்க்கவேண்டுமென்று உண்ணாதிருப்பவர் அம்மானத்தாற் பசிப்பிணி தீருமாறு சம்பவிப்பின் உயிர்துறக்க மாட்டார். ஆதலின், தாம் இறக்கவேண்டுமென்னும் நியதிகொண்டு உண்ணாதிருக்கவில்லை. தற்கொலை இறக்கவேண்டுமென்னும் நியதிகொண்டு துணியப்படுவது. இவ்வாற்றால் மானங்காத்தற்காகப் பசியிருந் திறத்தல் தற்கொலையாகாதென்பது சித்தம்.

முன் செல்வராயிருந்து பின் நல்கூர்ந்து இரக்கவேண்டி நேரிட்டவர்கள் உணவையொறுத் துயிர்நீத்தல் மானமாகுமா? ஆகாதா? என்று விசாரிக்கப்படுகிறது.

செல்வம் வறுமை என்னு மிரண்டும் முன் செய்த வினையின் பயனாக அநுபவத்துக்கு வருவன. இவ்வூழின் பயன் எவ்வாறாயினும் அவற்றைப் பொறுமையுடனுகர்ந்து ஆன்ம ஈடேற்றத்தின் முயலவேண்டியது கடமை ஆதலானும், செல்வத்தை ஒவ்வொருவரும் தாம் சுயாதீனமாகக் கொண்டு பிறவாமையானும், எப்பொருட்களும் ஈசுரசங்கற்பமாக மாறப்படுத லநுபவசித்தமாகலானும், பிச்சையெடுக்கும் நிலையினும் ஆன்மசுக முயற்சிக்கேற்ப முயன்றுயிர்வாழவேண்டுமேயன்றி இங்ஙனம் பிச்சையிரத்தல் மானமற்ற செயலென்று கருதல் அமையாதென்க.

சோம்பலின்வயப்பட்டு முயற்சியின்றியிருந்து பிறருதவியால் நிறைந்த சீவனஞ் செய்யவேண்டுமென்னும் வேணவா மானத்திற் கிழுக்காதலின், அம் மானம் நீங்காது காத்து உயிர்வாழ்ந்து ஆன்மசுகத்தின் முயலவேண்டுமென்று வலியுறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.



## 15-ம் செய்யுள்.

### அவதாரிகை.

கன்மமாவது ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூன்றாகப் பிரிந்து உயிர்களைத் தொடர்ந்து பிறவியைக் கொடுத்து, நிலையற்ற இன்பதுன்பங்களைப் பயத்தலின், நித்தியஇன்ப மடைதலாகிய ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடை நேரிடுகின்றது. இத்தொடர்பைக் கெடுத்து, ஞானமுணர்ந்து வீடுபெற வேண்டுதலின், அதற்கேற்ற தந்திரத்தை இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

### கன்மநீக்கம்.

**சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்**
**கபாய மொருநாளு மில்லை—யுபாய**
**மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்**
**விதியே மதியாய் விடும்.**

இ - ள்: சிவாய நம என்று - சிவத்துக்கு வணக்கம் என்று,—சிந்தித்து இருப்போர்க்கு - (விசாரித்துத் தெளிந்து திடசித்தங்கொண்டு) தியானஞ்செய்திருப்பவருக்கு,—அபாயம் ஒரு நாளும் இல்லை - கேடு ஒரு காலத்தும் இல்லையாம்,—உபாயம் இதுவே மதியாகும் - இந்த உபாயமொன்றே கடைத்தேறுதற்குரிய புத்தியாம்,—அல்லாத எல்லாம் - இதுவல்லாத மற்றைய உபாயங்களெல்லாம்,—விதியே மதியாய் விடும் - பிராரத்துவ அநுபவத்தையே பயக்கத்தக்க புத்தியாகும். எ - று.

தெளிந்து என்பது சொல்லெச்சம். நாள் ஆகுபெயர். இது காலத்தை யுணர்த்திற்று. உம்மை முற்று. ஏகாரங்கள் தேற்றம்.

தேகம் உலகம் என்பவற்றைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை பிறவியெடுத்தோர் எவராலுஞ் செய்யப்படாமையானும், இவை யநுபவப்படுதலின், அநுபவமற்ற மற்றொருவராற் செய்யப்படுகின்றன வென்றுந் துணியப்படுகிறது. படவே, இச்செயல்களுக்கெல்லாங் கருத்தா ஒருவனுண்டென்பது சித்திக்கிறது. அவனே கடவுள் அல்லது சிவம். நாம் பெற்ற தேக முதலிய சகல உபகாரங்களும் இக்கடவுளுடைய கிருபையினாற் கிடைத்தமையின், நாம் விரும்பிய நித்திய இன்பத்தையும் அவருடைய கிருபையாற் பெறும் பொருட்டு அவரையே இடையறாது சிந்தித்து வணங்கவேண்டுமென்பார் **சிவாய நம என்று சிந்தித்து** என்றார்.

இதில், கடவுள் ஒருவர் உளர் என்று வற்புறுத்தாது, அவரை வணங்கவேண்டுமென்று கூறுதலின், அவரொருவர் உளரோ? இலரோ? என்று விசாரித்துத் தெளியவேண்டியதாயிற்று. கடவுள் உளர் என்பதைப் பின்வரும் நான்கு காரணங்களாற் சாதிக்கின்றாம்.

1. *மூன்றவத்தைகளினும் தன்வயமின்றி மாற்றப்படுதல்:* அவத்தைகள் மூன்று. அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்பனவாம். இவற்றுள் சாக்கிரம் என்பது விழித்திருக்கும் நிலைமை. சொப்பனம் என்பது கனாக்காணும் நிலைமை. சுழுத்தி என்பது கனவு, விழிப்பு என்னும் இரண்டுமின்றி நித்திரையாயிருக்கும் நிலைமை. சாக்கிரத்திலிருக்கு மொருவன் தான் கனவுகாணவேண்டுமென்றாவது நித்திரையடையவேண்டுமென்றாவது தன்வயமாக நினையாது, கனவிலும் நித்திரையிலும் மாற்றப்படுகின்றான். அஃதாவது: நான் இதுகாறும் விழித்திருந்தேன். இனி இதினின்று நீங்கிக் கனவுகாண்டல்வேண்டும் அல்லது நித்திரை செய்தல்வேண்டும் என்று தன்வயமாக நினைத்துக் கனவுகாண்பதுமில்லை; நித்திரைசெய்வதுமில்லை. அன்றியும், தன்வயமாகக் கனவுகாணவும் நித்திரைசெய்யவுங் கூடுமெனின், அங்ஙனங் கனவுகாணும்போதும் நித்திரைசெய்யும்போதும் கனவுகாண்கின்றேனென்றும் நித்திரைசெய்கின்றேனென்றும் தனக்குத் தெரிந்திருத்தல்வேண்டும். அங்ஙன மனுபவமின்மையின், தன்வயமாக இவை செய்யப்படவில்லை யென்பது சித்தம். இவ்வாறே கனவுகண்டுகொண்டிருப்பானொருவன் நான் இதுகாறுங் கனவுகண்டுகொண்டிருந்தேன். இனி, இதினின்று நீங்கி நித்திரைசெய்வேனென்றாவது விழிப்பேனென்றாவது நினையாமலே நித்திரைசெய்தாயினும் விழித்தாயினும் விடுகின்றான். இவ்வாறே நித்திரையாயிருப்பானொருவன் நான் இதுகாறும் நித்திரைசெய்தேன் இனி விழித்திருப்பேனென்றாவது கனவுகாண்பேனென்றாவது நினையாமலே விழித்தாயினும் கனவுகண்டாயினும் விடுகின்றான். இங்ஙனம் மூன்றவத்தைகளிலும் தன்வயமின்றி மாற்றப்படுதல் அனுபவசித்தம். ஆகலின், இம்மாற்றங்களை மற்றொருவன் செய்தானென்பது துணிபாகிறது.

இனி, இங்ஙனம் மாற்றிவிடுபவன் தன்னை யொத்தவனோ? தன்னின் மிக்கவனோ? தன்னிற் குறைந்தவனோ? என்று விசாரிக்கப்படுகிறது. தன்னிற் குறைந்தவன் செய்வதையும் தன்னை யொத்தவன் செய்வதையும் தானுஞ் செய்யலாமென்பது சொல்லாமலே விளங்குதலின், தன்னினுயர்ந்தவனே செய்தானென்பது சித்தித்தது. இவ்வுயர்ந்தவன் உலக முழுவதையும் ஒரு வெண்கொற்றக்குடையின்கீழாளுகின்ற அரசனாகலாமோ வெனின்? அவனும் மற்றையோரைப் போல இம்மூன்றவத்தைகளினும் மாற்றப்படுதலால் அவ்வரசனும் இம்மாற்றங்களைச் செய்யவில்லை என்பது சித்தம். ஆகவே, யாவரினும் இறப்பவுயர்ந்தவனொருவனாலேயே இம்மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்பது துணிபு.

ஆயின், இம்மாற்றங்களைச் செய்பவன் தோற்றப்படாமையின், அவன் பிறவியுடையவனோ? அல்லனோ? என்று விசாரிக்கவேண்டிற்று. பிறவியெடுத்தார் யாவரும் அவத்தைகளின் மாற்றப்படுதலின், பிறவியெடாதிருப்பவனே மாற்றுகின்றவனாதல்வேண்டுமென்பது விளங்கிற்று. பிறவி



யெடுத்தானெனின், அவனும் அவத்தைகடோறும் மாற்றப்படுவானன்றி, மாற்றிவிடுபவனாகான். ஆகவே, மாற்றிவிடுபவன் பிறவியற்றவனென்பது சித்திக்கிறது. சித்திக்கவே, அவன் தோற்றப்படானென்பது முடிந்தது.

அன்றியும், தோற்றமுடையானொருவன் தானெடுத்த தேகமளவிற் கண்டித்துநிற்றலேயன்றி, யாண்டும் நின்று பற்பல செயல்களை ஒரேகணத்தில் அனைத்துயிர்க்குஞ் செய்தலமையாது. ஆகவே, அங்ஙனஞ் செய்பவன் அகண்டமாய்த் தேகத்தோற்றமின்றியிருக்கவேண்டுமென்பது துணிபாயிற்று.

2. *படைத்தல்:* எவராயினும் தமதுடலையேனும் தாமிருக்குமிடமாகிய நிலத்தையேனும் தமது சீவனத்துக்குரிய நீர், ஆகாயம், வாயு, அக்கினி என்பவற்றையேனும் தாமே உண்டாக்கிக்கொள்ளவில்லை. உண்டாக்கினரெனின், குருடு, செவிடு, மூடம் முதலிய அங்கவீனர்களாயிருப்பவர்கள் குறைவுபாடுடைய தம்முடலைத் தள்ளிவிட்டு மற்றொரு புதிய உடலைப் படைத்துக்கொள்வார்கள். வாலிபத்தை விரும்பிய வயோதிகர்களும் தமது விருப்பத்தின்படி ஏற்ற உடலை எடுத்துக்கொள்வார்கள். அவ்வாறின்றி, அவரவரெடுத்த உடலோடு வாழ்ந்திருத்தல் அனுபவசித்தமாகலின், எவராயினும் தம்முடலைப் படைக்கவில்லை என்பது சித்தம். அன்றியும், பூமியில்லாதவர்கள் வேண்டிய பூமியைப் படைத்துக்கொள்ளாதும், பொன்னில்லாதவர்கள் வேண்டிய பொன்னைப் படைத்துக்கொள்ளாதும் வறியவாறிருத்தலின், உடலெடுத்தார் எவராயினும் ஒரு பொருளையும் படைக்கவில்லை யென்பது துணிபாகிறது.

3. *காத்தல்:* சாக்கிரத்தில் தம்மைக் காக்கவேண்டுமென்று விரும்பிய உயிர்களெல்லாம் சொப்பனத்திலும் சுழுத்தியிலும் காவாமலேயிருக்கின்றன. சாக்கிரத்தில் வேறு பிரயத்தனங்களி லிருக்கும்போதும் தம்மைக் காக்கவேண்டுமென்னும் பிரயத்தனத்தை மறந்திருக்கின்றன. இவ்வாறிருக்கவும் இவருடைய பிரயத்தனமின்றி உடல் காக்கப்படுதலின், தம்மையல்லாத மற்றொருவன் காத்தானென்பது சித்தம்.

4. *அழித்தல்:* எவரும் இறக்க விருப்பமில்லாதிருந்தும் இறந்தேவிடுகின்றனர். ஆதலின், தாம் தம்மை அழிக்கவில்லையென்பதும் தம்மையல்லாத மற்றொருவன் அழித்தானென்பதும் வெளியாகின்றன. இதில் தற்கொலை செய்பவரும் பிறராற் கொல்லப்படுபவரும் கடவுளா லழிக்கப்படாது உயிர்களா லழிக்கப்படுகின்றாரெனின், அதிக நன்மையும் அதிக தீமையும் உடனே பயன்றருவதாகலின், கொலையடையவேண்டுமென்ற ஆகாமியத்திற்கு உடனே பயனுண்டாயிற்று. அப்பயன் இவர் செயலுக்கேற்பக் கடவுளா லளிக்கப்படுதலின் அவரே கர்த்தாவானாரென்பது சித்தம். பிறராற் கொல்லப்படவேண்டிய பிராரத்துவ மடைந்தவிடத்துப் பிற

ருடைய பெருந்தன்மையாலுண்டான பயன் கொலையாகலின், அப்பயனும் கடவுளா லளிக்கப்பட்டதென்பது சித்தம்.

இதுகாறுங் கூறிப்போந்த நான்கு நியாயங்களினாலும் கடவுள் உண்டு என்பது சாதிக்கப்பட்டது. இனிக் கடவுளை வணங்கவேண்டுமா? வேண்டாமா? என்று விசாரிக்கப்படுகிறது.

தமதுடலையும் தாமனுபவிக்கும் பொருட்களையும் கடவுளிடத்திற் பெற்றுக்கொண்டு அவைக்கேற்ற கைம்மாறொன்றையுஞ் செய்ய முடியாமையின், செய்ந்நன்றிக் கறிகுறியாக அவரை வணங்கவேண்டியது அத்தியாவசியம் என்பது துணிபாயிற்று.

இவ்வணக்கத்தினால் நான் அதிகாரி என்னும் அகங்காரமும் என்னுடைய பொருட்கள் என்னும் மமகாரமும் ஒருங்கே நீங்கிவிடும். நீங்கவே, கன்மவிடுதலைக்கு இது ஏதுவாயிற்று.

கடவுள் உயிர்களுக்கு உடல், பொருள் முதலியவற்றைக் கொடுத்துபகரித்தது அவை இப்பொருட்களோடு கலந்துநின்று பிறந்திறந்துழல்வதற்கா? அன்றி, இவற்றினுதவியால் அநித்தியங்களை யுணர்ந்து அவற்றிற் பற்றற்று, நித்தியமாய்த் தாம் விரும்பிய பேரின்பமுத்தியை யடைவித்தற்கா? என்று விசாரிக்கப்படுகிறது. பிறவிகளில் உயிர்கள் நிலைத்திருப்பது கடவுளுடைய கருத்தாயின், பிறவிகளை மாறிமாறிக் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை. கொடுத்தலின், அப்பிறவியின் அநித்தியத்தை யுணர்ந்து அதினின்று நீங்கி நித்தியசுகத்தை யடைதற்கே இவற்றை உபகரித்தாரென்பது பெறப்பட்டது.

கடவுள் கடைத்தேறும்பொருட்டுப் பேருபகாரஞ்செய்ய, அவற்றைப் பெற்ற உயிர்கள் கடைத்தேற முயற்சியிலேயே யிருத்தல்வேண்டும். அவர் உதவிய உடல், பொருள் முதலியவற்றைப் பெற்றனுபவித்துக்கொண்டு கடைத்தேறுதலின் முயலாதிருப்பரேல், அவ்வுயிர்கள் தெய்வத்துரோகிகள் ஆவார்கள். பிரதியுபகாரஞ்செய்ய முடியாமையின், அக்கடவுளை வணங்குதல் இத்துரோகத்தை நீக்கமாட்டாது.

கடவுளுடைய கருத்தின்படி கடைத்தேற முயற்சியிலாது, தம்மெண்ணப்படி யுழலுவோர் அவருதவிய உடல், பொருள் முதலியவற்றையும் கையறவிட்டு, வல்லமையுண்டேல் தமதுலயமா யிருத்தல் வேண்டும். அஃதாவது உடலிலிருக்கவுங் கூடாது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலியவற்றிலும் இருக்கக்கூடாது. கடவுளாற் படைக்கப்படாது தமக்கென ஓரிடமின்மையின், ஓரிடத்து யிருக்கக் கூடாது. கடவுளாற் படைக்கப்படாத ஓரிடத்தாவது தமது வல்லமையுடனிருக்க முடியாது. ஆகவே, அவருடைய உபகாரத்தைப் பெற்றிருக்க வேண்டுமேல், அவருடைய கருத்தின்படி கடைத்தேறலின் முயன்றே நிற்றல்வேண்டும்.



மேலோதியவாறு கடவுளை வணங்கிச் சிந்தித்திருப்பினும், தெளியாதிருக்கின் அச்சிந்தனை காலாந்தரங்களில் மாறவுங் கூடும். அம் மாறுபாடுகள் கன்மத்தை விளைவித்துப் பிறவியி லழுத்துமாகலின், "திடசித்தங்கொண்டு தெளிந்து" என்னுஞ் சொல்லெச்சம் அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது.

இங்ஙனம் கடவுளை வணங்கிச் சிந்தித்து இருக்கவே மனம் விடயங்களிற் சலனமற்றுச் சுத்தமடையும். இச் சுத்தத்தினால் என்று மிடையறாது கடவுளை உபாசனைசெய்ய நேரிடும். இதுவே பத்தியாகும். இங்ஙன மிடையறாது கடவுளுபாசனையி லிருத்தலால் மனத்தின் பாற்பட்டு அனுபவிக்கவேண்டிய பிராரத்தமும் சஞ்சிதமும் ஆகாமியமும் உறைக்கமாட்டா வென்பார் **இருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை** என்றார்.

இதில் கடவுளை வணங்குதல் பத்தியா? அன்றி அவரை இடையறாது சிந்தித்தல் பத்தியா? என்று விசாரிக்கவேண்டிற்று.

உயிர்களுய்யுமாறு உடல், பொருள் முதலியவற்றை உதவிய நன்றிக்குக் கைம்மாறு செய்ய வன்மையின்மையின் செய்யப்படுவது வணக்கம். ஆதலின் இது பத்தியன்றாம். மனஞ் சலனமற்று அவரை இடையறாது சிந்திப்பதுவே பத்தி. ஆகவே இவையிரண்டும் வேறென்பது சித்திக்கிறது.

இதில், கடவுளைப் பத்திசெய்வதனால் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு முதலிய அபாயங்கள் நீங்குமா? நீங்காதா? என்று விசாரிக்கவேண்டிற்று. கடவுட்பத்தியால் அகங்கார மமகாரங்கள் ஒழியும். அவை ஒழியவே, நான் செய்கின்றேன், எனது பயனுக்காகச் செய்கின்றேன் என்பவை நீங்குதலின், ஆகாமிய எழுச்சி ஒழிகின்றது. அவ்வொழிவினால் அறிவுண்டாய் சித்தஞ் சலனமற்றிருத்தலின் விடயவிச்சை கெடும். கெடவே, அனுபவத்திற்கு வாவிருந்த சஞ்சிதவினை பிராரத்தமாகா தொழிந்துபோகும். எவ்வாறெனில், பிறவி ஒருடலிற் கண்டித்துநிற்பது. நான், என்னுடையது என்னுங் கண்டிதங்கள் இக்கடவுளுபாசனையா லற்றுப்போதலின், கண்டிதமான பிறவியை முன்முடிந்த சஞ்சிதம் தரமாட்டாதென்பது சித்தம். ஆகவே அச்சஞ்சிதம் இப்பத்தியினா லொழிகின்றது. பிராரத்தத்தையும் அனுபவித்துத் தீர்த்து சுத்தமடையவேண்டுமென்னு முறுதியோடு துகருதலின் துக்கத்திற் கேதுவில்லாமற்போதலானும், உடலோடு அப்பிராரத்த மொழிதலானும் பிராரத்தமும் நசிக்கப்படுகின்றது. ஆகவே, இப்பத்தியினால் ஆகாமிய சஞ்சித பிராரத்தங்கள் நசிக்கப்படுகின்றனவென்பது துணிபாயிற்று. இவ்வாற்றால், ஆகாமிய சஞ்சித பிராரத்தமென்னுங் கன்மத்

களினாலுண்டாகின்ற பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் அபாயங்கள் பத்திசெய்வார்க்கு உண்டாகாவென்பது சித்தித்தது.

இனி, இப்பத்தி அபாயத்தை நீக்குதலேயன்றி, வேறியாதானும் நன்மை பயக்குமா? பயவாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. பத்தியினால் தான் என்னும் அகங்காரம் அற்றுப்போதலின், பந்தத்தை விளைவிக்கின்ற சீவகுணங்களாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறும் நசிக்கப்பட்டு, முத்தியை விளைவிக்கின்ற சத்தியம், அறிவு, தருமம், கருணை, சாந்தம், பொறை என்னும் ஆறு குணங்களும் நிலைப்பட்டு, இஷ்டசித்தி, விசாரத் தொடர்ச்சி, கன்மானுபவநீக்கம் என்பவற்றைப் பயக்கும். இவற்றால் ஞானவெழுச்சிக் கேதுவுண்டாகின்றதென்பது சித்தம்.

கடவுளுபாசனை என்பது பத்திகாண்டம். இதில் கடவுளுந் தானுமன்றி வேறில்லை என்றாவது, தான் கடவுளுடைய அம்சம் என்றாவது சிந்தனையுண்டாகும். இதனால், கடவுளையன்றித் தான் வேறிருப்பின் கடவுளுக்குந் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்றும், இல்லையேல், தன்வயமிழந்த நிலையாகிய சுழுத்தி, பிரளயம் என்பவற்றில் கடவுளிலேயே தான் ஒடுங்குதலின் கடவுளுக்குந் தனக்கும் பெரிதுஞ் சம்பந்தமுண்டென்றும் விசாரித்துத் தெளிந்து, இத்தெளிவால் சிலகாற் றோன்றியும் சிலகால் மறைந்தும் இயங்குகின்ற சீவவுணர்வு நித்தியமானதன்றென்றும், இச் சீவவுணர்வு அடங்குதற்கும் எழுதற்கும் நிலைக்களமாயுள்ள பேருணர்வு நித்தியமானதென்றும், அதுவே கடவுள் என்றும் தெளிந்து, இத்தெளிவினால் கடவுளையன்றி வேறான பொருள் ஒன்றுமில்லையென்னும் ஞானமுண்டாம். இஞ்ஞானத்தினால் எவ்வகைக் கன்ம விவகாரங்களு மெழாதடங்கும். அடங்கவே, உண்மையாயுள்ள நித்தியானந்த மொன்றுமாத்திரம் வெளிப்படும். இதுவே முத்திநிலையாம். இதனை யடைதற்கு இப்பத்தியை யன்றி வேறு சூழ்ச்சியொன்றுமில்லையென்பார் தேற்றேகாரம் புணர்த்தி, **உபாயம் இதுவே மதியாகும்** என்றார்.

இதில், ஒவ்வொருயிரும் தான் விரும்பிய இன்பத்தை இடையறாது நுகருதற்கும் துன்பத்தைத் துடைத்தற்கும் இப்பத்தியையன்றி வேறு புத்தி உண்டா? இல்லையா? என்று விசாரிக்கப்படுகிறது. சீவர்கள் தமது விடயானுபவங்களின் பொருட்டுத் தம்மினுந் தாழ்ந்த காட்சிப் பொருட்களைத் தம்மினு முயர்ந்தனவென்று அபிமானித்து, அவற்றிலாசைகொண்டுழன்று அனுபவிக்கின்றார்கள். இதனால் தம்மைக் காலந்தோறும் உள்ள நிலையினும் தாழ்த்திவருகின்றார்களென்பது எளிதில் விளங்குகின்றது. எவ்வாறெனின், நுகர்வோனாகிய தான் கர்த்தா. நுகரப்படுகின்ற விடயப்பொருட்கள் அகர்த்தா. இங்ஙனமாகவும், நுகர்ச்சியின்



பொருட்டுக் கர்த்தாவாகிய தான் இழிமையுடையேனென்றும், அகர்த்தாவாகிய பொருள் மேலானதென்றும் ஆளப்பட்டுவருதலின், தாழ்வடைந்தே வருகின்றதென்பது சித்தம். பத்தியோவெனில், தம்மினும் இறப்ப உயர்ந்த பொருளின் குணத்தைப் பாவித்து, உறுதிபெற்றுநிற்பது. இதில் சிந்திக்க தான் தன்னினும் மேலான பொருளையே சிந்தனை செய்தலால் இச்சிந்தனை யாதானுமோர் வேலை, தாழ்ச்சி என்பவற்றைக் கொடாது, உயர்ந்த நிலைமையையே கொடுக்குமென்பது எளிதில் விளங்கக்கிடக்கின்றது. இவ்வாறின்றித் தன்னையல்லாத உலகப்பொருட்களைத் தன்னனுபவத்திற்காக எக்காலம் வரையுஞ் சிந்திப்பினும் இப்பொருட்கள் என்றும் குறைவைத் தந்து அபாயத்தையே விளைவிப்பனவாம். ஆதலால் அவற்றாலுண்டான அபாயத்தை நீக்குதற்கு இப்பத்தியே இன்றியமையாததென்பது எளிதில் விளங்குகின்றது. விளங்கவே, அபாய நீக்குதற்குப் பத்தியேயன்றி வேறு புத்தியில்லையென்பது சித்தித்தது.

இங்ஙனமாயின், ஞானமொன்றே அபாயத்தை நீக்குதற்கேற்ற உபாயமென்று தத்துவஞானிகள் வற்புறுத்துதலின், அபாயத்தினின்று நீங்குதற்கு இன்றியமையாதது பத்தியா? அன்றி ஞானமா? என்று விசாரிக்கவேண்டிற்று. பத்தியின் முடிவு விசாரத்தொடர்ச்சிக் கேதுவேயன்றி நேரே ஞானமாகாது. ஞானம் விசாரத்தாலுண்டாவது. பத்தியின் முடிவு விசாரத்தொடர்ச்சியைக் கொடுக்கவே, மேல் விசாரம் பெருகிச் சகல தத்துவங்களையும் நியதிகளைந்து, ஞானம் பிறந்து, வீடுண்டாமாகலானும், கன்மகாண்டத்து நிற்போர் பத்திகாண்டத்திற்கு வாராது ஞானகாண்டிகளாதல் கூடாமையாலும், கன்மகாண்டிகள் அக்கன்மத்தால் வந்த அபாயத்தை நீக்குதற்குப் பத்தி இன்றியமையாதது என்று கூறப்பட்டது. படவே, அப்பத்தியின் முதிர்ச்சியால் விளையும் ஞானம் அபாயத்தை நீக்குமென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

கன்மானுசாரிகள் அக்கன்மங்களின் பயன்களையே தமக்குறுதியென்று கொண்டவராதலின், அவை அவருக்கு நிலையற்ற இன்ப துன்பத் தொடர்ச்சிகளைத் தந்து அபாயங்களை விளைவிக்கும். ஆதலின், கன்மங்களாலுண்டாகும் அபாயங்களை நீக்குதற்குப் பத்தி இன்றியமையாததென்றும், இஃதொன்றல்லாத மற்றைய கன்மங்களெல்லாம் அபாயமான அனுபவங்களையே தருதற்கேதுவான உபாயமாய்விடுமென்றும் விளக்குவார் **அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்** என்றார்.

நல்வினைகள் உயிருக்கு உறுதிபயப்பனவும் தீவினைகள் அறுதிபயப்பனவுமாமென்று உண்மைநூல்களில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. அங்ஙனமாகவும், கன்மங்களெல்லாம் இடையீடுபட்டு அபாயகாரத்திற் கேதுவாமென்றும், பத்தியே அவ்வபாயத்தை நீக்கு முபாயமென்றும்

இச்செய்யுளில் விளக்குதலினாலே, நல்வினை செய்யினும் அபாயமுண்டாமென்று ஏற்படுகிறது. படவே, தீவினையை நீக்கவேண்டுமென்றும் நல்வினையைச் செய்யவேண்டுமென்றும் சுருதிகள் வற்புறுத்துமாறொழுக வேண்டியதில்லையென்று சித்திக்கிறது. இவ்வாற்றால், இதில், நல்வினையும் அபாயத்திற்கேதுவானதா? அன்றா? என்று விசாரிக்கப்படுகிறது. தீவினை இட்டத்தவறையும் நல்வினை இட்டப்பேற்றையுந் தருதலால் மனம் உறுதிபெறுதற்கு இட்டப்பேறு தருகின்ற நல்வினையே இன்றியமையாதது. மனம் உறுதிபெறுமாயின் பத்தியும் உறுதிபெறும். அன்றேற் பெறாது. ஆகலின், கன்மகாண்டிகளுக்குப் பத்தியை வருவித்தற்காக நல்வினை செய்யவேண்டுமென்று சுருதிகளில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. அந்நல்வினை அபாயத்தைத் தரமாட்டாது. ஆகவும், ஈண்டு அதனையும் அபாயந் தருமென்றது யாதுபற்றியெனின், பிறவியிலுழன்றுவருதலை நீக்கவேண்டியதே உயிருக்குறுதி. ஆகவும், இந்நல்வினைப்பயனும் பிறவியைத் தருதலின் அதனையும் அபாயமென்று கூறியதேயன்றி வேறன்று.

நல்வினை செய்து இட்டப்பேற்றை யனுபவித்தொழியுங்கால் அந்நல்வினை பத்தித் தொடர்ச்சியைத் தராதென் றேற்படுகிறது. ஆகலின், பத்தித் தொடர்ச்சியை நல்வினை தருமா? தராதா? என்று விசாரிக்கவேண்டிற்று. தவம் காமியத்தவம், நிஷ்காமியத்தவம் என்று இருவகைப்படும். இவற்றுள் காமியத்தவமாவது அநுபவத்தை விரும்பிச் செய்யுந் தவமாம். நிஷ்காமியத்தவமாவது அநுபவத்தை விரும்பாது உயிர்கண்மேலிரக்கமுடைமையாற் செய்யுந் தவமாம். ஆகவே, காமியத்தவம் அநுபவித்துத் தீர்தலால் அழியுந் தன்மையையும், நிஷ்காமியத்தவம் உயிர்களில் இரக்கமிகுதியைக் கொடுத்து அழியாது சித்தசுத்தி தந்து அதுகாரணமாகப் பத்தியைத் தருந் தன்மையையும் உடையனவாம். இவ்வாற்றால் நிஷ்காமியத்தவம் இட்டப்பேறுதந்தொழியாது இரக்கமுடைமை தந்து, அதன் முதிர்ச்சியிற் சித்தசுத்தியாய், அதன்வாயிலாகப் பத்தித் தொடர்ச்சியைத் தருமென்பது தெளிவாகிறது.

நல்வினையை நிஷ்காமியமாகச் செய்யின், இரக்கம், அன்பு என்பவை யுண்டாய்ப் பத்திக்கேதுவாமென்றால் அந்நல்வினையினால் வேறியாதானும் அநுபவமுண்டா? இல்லையா? என்று விசாரிக்கப்படுகிறது. பயன் கருதிச் செய்பவை அப்பயனுகர்ச்சியைத் தரும். பயன் கருதாமற் செய்பவை பயனுகர்ச்சிக்குரிய தேகத்திற் சம்பந்தப்படாது, உணர்வாகிய குணத்திற் சம்பந்தப்படுதலின் தேகானுபவங்களைப் பயவாவென்பது சித்தம்.

இங்ஙனமாயின், தீவினைசெய்பவ ரெவராயினும் தாம் அத்தீவினையைச் செய்து அதற்குரிய துன்பப்பயனை யடையவேண்டுமென்று விரும்



பிச் செய்வதில்லை. ஆகலின், விரும்பாத பயன்கள் அவரை யடைய மாட்டாவென் றேற்படுகிறது. படவே, தீவினை செய்வார்க்குத் துன்பப்பய னுண்டாகாதென்று முடிபாகிறது. ஆகவும், தீவினை செய்வார்க்குத் துன்பப்பயன் வருமென்று சுருதிகள் சொல்வது மாறுபடுகின்றதேயெனின், தீவினை செய்பவர் அவ்வினையால் தாம் இன்பப்பயனை யடையவேண்டுமென்று கருதிச் செய்வதேயன்றிப் பயனைக் கருதாமற் செய்வதில்லை. ஆகலின், தீவினை செய்வாரெவரும் பயன் கருதியே செய்கின்றாரென்பது துணிபாகிறது. ஆனால், வினைக்கேற்ற பயனுண்டாகுமேயன்றி, எண்ணத்திற்கேற்ற பயனுண்டாவதில்லை. ஆகவே, தீவினை செய்யின் துன்பப்பயனுண்டாமென்று சுருதிகள் சொல்லியது மாறுபடாமை கண்டுகொள்க.

மதியாவது: தான் விரும்பிய இன்பத்தை யடைதற்கேற்பச் செயற்பாலனவற்றை வரையறைப்படுத்துகின்ற உணர்வாம். விதியாவது: அம்மதியாற் செய்துமுடித்த வினையின் பயனாம். மதி, அறிவுமதி அறியாமைமதி என இருதிறப்படும். இவற்றுள் அறியாமைமதியாவது: நித்தியஇன்ப மடையவேண்டுமென்னு மபிப்பிராயம் உணர்வாயிருப்பவும் அவ்வுணர்வினாலே நித்தியஇன்ப மடையலாமென்று கருதாது செயலால் அடையலாமென்று கருதுதலாம். அறிவுமதியாவது நித்தியஇன்ப மடையவேண்டுமென்னு முணர்வு உணர்விலுள்ளதாகலின், செயலால் அவ்வின்பத்தை யடையலாகாதென்றும் உணர்வினாலே யடைதல்வேண்டுமென்று துணிதலாம். தான் விரும்பிய நித்தியஇன்பத்தைச் செயலா லடையலாமென்னும் அறியாமைமதியாற் செய்த வினைப்பயன்கள் அநுபவத்திற்கு வந்தன்றித் தீரா. ஆகலின், அம்மதி விதியை யுண்டாக்குதற் கேதுவானதேயன்றி, அதனை யழித்தற் கேதுவாகாது. நித்திய இன்பத்தை உணர்வாலேயே யடையலாமென்று துணிகின்ற அறிவுமதி உணர்வை மேவிடச்செய்து, உணருந் தன்னை நன்குணர்த்து, செயல்களை யொழித்துவிடுமாதலால் அது விதியை வாராமற் றடுத்தற் கேதுவாயிற்று. ஆகவே, அறியாமைமதி விதியை யழியாதென்பதும், அறிவுமதி அழிக்குமென்பதும் வெளியாகின்றன. இக்கருத்துப்பற்றியே இச்செய்யுளில் அபாயம் நீக்குதற்கு அறிவுமதிஇன்றியமையாததென்றும், அபாயமாகிய பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் விதியுண்டாதற்கு அறியாமைமதியே காரணமென்றும் விளக்கும்பொருட்டு **இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்** என்று கூறப்பட்டிருக்கின்றது.

கன்மகாண்டத்து நெடிதுழன்று பிறவியெடுத்து அபாயங்களால் வருந்தாது, பத்திசெய்து கடைத்தேறவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 16-ம் செய்யுள்.

### அவதாரிகை.

தான் அழுந்திநிற்கின்றவற்றிற்கேற்ற குணம், செயல், பயன் என்பவையுண்டாதலியல்பாதலின், நித்தியவின்பத்திற்கேற்ற நிலைகளைக் கடைப்பிடித்தும் வினைபயற்றை யொழித்தும் உய்திபெறவேண்டுமென்பதை இச்செய்யுளில் வற்புறுத்துகின்றார்.

### உயர்ச்சியின் காரணம்.

**தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்**
**கண்ணீர்மை மாறாக் கருணையாற்—பெண்ணீர்மை**
**கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்து**
**ளற்புதமா மென்றே யறி.**

இ - ள்: கடல் சூழ்ந்த வையகத்துள் - கடலாற் சூழப்பட்ட வுலகில்,—தண்ணீர் நீர்மை நில நலத்தால் - குளிர்ச்சியையுடைய நீரின் குணம் தான் சேர்ந்த நிலத்தின் தன்மையினாலும்,—தக்கோர் குணம் கொடையால் - உயர்ந்தோருடைய குணமானது அவர் செய்யுங் கொடையினாலும்,—கண் நீர்மை மாறா கருணையால் - மக்களுடைய கண்ணின் தன்மையானது அவர்கள் நீங்காது பிறர்பாற் கொள்ளு மிரக்கத்தினாலும்,—பெண் நீர்மை - மகளிரது குணமானது,—கற்பு அழியா ஆற்றால் - நெறியிற் றவறாது அவரொழுகுதலாலும்,—அற்புதம் ஆம் என்று அறி - சிறப்புடையனவாகும் என்று நீ அறிவாயாக. எ - று.

தக்கோர்குணம், கண்ணீர்மை, பெண்ணீர்மை என்று கூறுதலின் தண்ணீருக்கும் நீர்மை வருவிக்கப்பட்டது. தண்ணீர் இரண்டனுருபும் பயனு முடன்றொக்கதொகை. அது குளிர்ச்சியையுடைய நீர் என விரியும். தண்ணீர்நீர்மை, நிலநலம், தக்கோர்குணம், கண்ணீர்மை, பெண்ணீர்மை என்பவை ஆறும்வேற்றுமைத்தொகை. அவை முறையே தண்ணீரது நீர்மை, நிலத்தது நலம், தக்கோரது குணம், கண்ணது நீர்மை, பெண்ணது நீர்மை என விரியும். மாறாத, அழியாத என்னும் பெயரெச்சங்கள் ஈறுதொக்கு, மாறா, அழியா என நின்று, முறையே கருணை, ஆறு என்னும் பெயர்களைக் கொண்டன. மாறாக்கருணை என்பது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; கருணையற்ற மாந்தர்பால் முதற் றலைப்படுவது மாறாக் கருணையாதலின். நலத்தால், கொடையால், கருணையால், அழியாவாற்றால் என்பவற்றினீற்றிலுள்ள ஆலுருபுகள் ஏதுப் பொருட்கண் வந்தன. கடல்சூழ்ந்த என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகை. சூழ்ந்த என்பதிற் பிறவினைப் பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்குநின்றது. ஆகவே, கடல்சூழ்ந்த என்பது கடலாற் சூழப்பட்ட



என விரியும். வையகத்துள் என்பதிலுள்ள உள் இடப்பொருளுணர்த்தி நின்றது. அது வையகத்திடத்தில் என விரியும். ஆகும் என்பதில் நடுநின்ற குகரவுயிர்மெய் கெட்டு ஆம் என நின்றது. ஏகாரம் தேற்றப் பொருட்கண் வந்தது. அறி என்பது முன்னிலை யேவலொருமை. அற்புதம்=சிறப்பு.

நீரானது தன் நன்மையைக் கெடுத்தற்கேதுவான உவர்ப்பு, புளிப்பு, கைப்பு முதலிய துர்ச்சுவைபொருந்திய நிலத்தைச் சேராது, தன் றன்மையைக் கெடுக்காத நன்னிலத்தைச் சேர்ந்தால் சிறப்புறுமென்பார் **தண்ணீர் நீர்மை நிலநலத்தால் அற்புதமாம்** என்றார்.

இதில், நீருக்கு என்றுமொரேபெற்றித்தான குணம் அந்நீரிருத்தற்கிடமாயுள்ள நிலத்தின் றன்மைக்கேற்றவாறு மாறுதலடையுமா? அடையாதா? என்று விசாரிக்கப்படுகிறது. மழையாகப் பொழியும் நீர் நிலத்தில் விழாதவாறு பாத்திரங்களின் மொண்டால் எல்லாவிடத்து மொண்ட நீரும் ஒரேபெற்றித்தாயிருந்தலும், அங்ஙனம் மொள்ளப்படாது உவர் நிலத்தில் விழுந்த நீர் உவராகவும், அழுந்து நிலத்தில் விழுந்த நீர் கலக்கலாகவும், கற்பாறைகளிலும் சுத்தமான மணலிலும் விழுந்த நீர் தெளிவும் நற்சுவையுமுடையதாகவும் மேலும் இவ்வாறே சேர்ந்ததின்வண்ணமாக நீர் மாறுபடுத லனுபவசித்தமாதலின், நீர் தான் சேருமிடத்திற் கேற்றவாறு மாறுதலடையுமென்பது தெளிவாகிறது.

மக்கள் யாவரும் தோற்றத்தாற் பொதுமையில் ஒரே தன்மையுடையாராயினும் தக்கோரென்றும் தகாதோரென்றும் பிரித்தறியப்படுவது குணத்தினாலென்பார் **தக்கோர் குணம்** என்றார்.

தக்கோருக்குரிய நற்குணங்கள் யாவு மொருங்கமைந்திருப்பினும், பிறருக்குபகாரஞ் செய்தலாகிய கொடையினாலன்றி மற்றொன்றினாலுஞ் சிறப்படையாவென்பார் **தக்கோர் குணம் கொடையால் அற்புதமாம்** என்றார்.

இதில், தக்கோர்க்குரிய நுண்ணறிவுடைமை, சத்தியம், பொறுமை, நடுவுநிலைமை முதலிய நற்குணங்கள் தாமாகவே அவர்க்குச் சிறப்பைக் கொடுக்குமா? அன்றி அவை கொடையுடன் கூடியவழிச் சிறப்பைக் கொடுக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. பிறவுயிர்கண்மே லிரக்கமுடைமையாற் செய்யப்படுங் கொடையில்லாவழி ஏனைய நற்குணங்கடாமும் பிறராற் போற்றப்படாமையின், கொடையே மற்றெல்லா நற்குணங்களையுஞ் சிறப்பிக்கின்றதென்பது சித்தம்.

கொடையின்றிறம் இரண்டாஞ் செய்யுளுரையில் 17-ம் பக்கத்தில் விளக்கப்பட்டது. ஆண்டுக் காண்க. பொருள்கொடுத்துதவுதல், நல்வழி நடத்தல், அறிவுறுத்துதல் என்னும் மூன்றும் கொடுத்தலையே குறிக்கும். இம்மூன்றானுந் தக்கோரது குணஞ் சிறந்து விளங்கும்.

கண்ணனது தனக்கியல்பாயுள்ள காணுந் தொழிலாற் பிறவுயிர் படுந் துன்பங்களைக் காணினும், அவ்வுயிர்கண்மே லிரக்குதலாகிய கருணையோடு கூடியவழியல்லது அவர்படுந் துன்பத்தை மாற்றி மேலோக்கலமையாதென்பார் **கண்ணீர்மை மாறக் கருணையால் அப்புதமாம்** என்றார். கணந்தோறுங் கணந்தோறுந் தோன்றி மறைந்து இடையிடுபடாது மனத்தில் நிலைபெற்றிருக்குங் கருணையே கண்ணின் குணத்தை நன்கு சிறப்பிக்குமென்பார் கருணையென வாளா கூறாது, **மாறக் கருணை** என்றார்.

இதில், கண்ணுக்குரிய வசியம், கூர்மை, அழகு, ஓட்டம், அகலம், நீளம் என்பவற்றைக் குறித்து மான்விழி, வேல்விழி, சேல்விழி, மாவடு விழி, வாள்விழி என்றற் றொடக்கத்தனவாக விதந்தோதுதல் அக்கண்ணுக்குச் சிறப்பைக் கொடுக்குமா? அன்றி, பிறவுயிர்களின் றுன்பத்தைக் கண்டிரங்கி அத்துன்பத்தை நீக்க முயலுங் கருணை சிறப்பைக் கொடுக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. மான்விழி முதலியவை அவ்விழியின்மேன் மயக்கமுடையாராற் கூறப்பட்டனவாகலின், அம்மயக்கங் காரணமாகக் கேடு விளையுமேயன்றி, நன்மை பயவாமையின் அது கண்ணுக்குச் சிறப்பைக் கொடாதென்பதூஉம், கருணையே பிறர்க்கிதஞ்செய்து அவரை யீடேற்றலாற் சிறப்பைக் கொடுப்பதென்பதூஉம் துணிபாகின்றன. அன்றியும், தெய்வம், ஞானிகள், பெரியோர் இவர்களின் விழிகளை அறிஞர் கூறுமிடத்து, அருள்விழி, கருணைவிழி என்றற் றொடக்கத்தனவாக விதந்தோதுதலாலும், மேலோதிய மான்விழி முதலியவை மகளிர்மாட்டு மயக்கமுடைய ஆடவரால் விதந்தோதப்படுதலாலும் கருணைவிழி சிறப்புடைத்தென்பதூஉம், மான்விழி முதலியன சிறப்பற்றனவென்பதூஉம் வெளியாகின்றன.

இளமை, அழகு, கல்வி, செல்வம், அதிகாரம் என்பனவும், ஆடவர் மகளிர் ஆகிய எல்லார்க்கும் பொதுவாக விதிக்கப்பட்ட நல்லொழுக்கங்களும் ஒருங்கே யமையினும், மகளிர்க்கு மாத்திரம் விதந்தோதப்பட்ட கற்பொழுக்கமில்லாக்கால் அம்மகளிர் ஒருவாற்றானுஞ் சிறப்புறமாட்டாரென்பார் **பெண்ணீர்மை கற்பு அழியாவாற்றல அற்புதமாம்** என்றார்.

கற்பாவது: மகளிர் ஆடவரோடு உலகத்தில் வாழுங்கால், தாஞ் சிறப்பாகக் கைக்கொண்டொழுகவேண்டிய மரபாம். அஃதாவது: தாம் மேலோங்கு நெறிக்கு ஆடவரா லிடையூறு நேரிடாதும் அவ்வாடவர் மேலோங்கு நெறிக்குந் தம்மா லிடையூறு நேரிடாதும் தற்காத்து வாழுதலாம். இஃது கன்னிகாவிரதம், பதிவிரதம், விதவாவிரதம் என மூன்று வகைப்படும். இவற்றுள் கன்னிகாவிரதமாவது மணஞ்செய்யாதிருக்குங் காலத்து ஒழுகவேண்டிய மரபாம். பதிவிரதமாவது மணஞ்செய்து நாயகனோடு வாழுங்காலத்து ஒழுகவேண்டிய மரபாம். விதவாவிரதமாவது நாயகனை இழந்தகாலத்து ஒழுகவேண்டிய மரபாம். இம்



மரபுகளிற் றவறாது சலிப்பின்றிக் கற்போல உறுதிபெற நிற்றலின் இம்மரபிற்குக் கற்பு என்னுங் காரணப்பெயருண்டாயிற்று. கல் + பு=கற்பு. கல் - கற்போல, பு - குணமாக நிற்றல். எனவே, கல்லின் குணம்போல நிற்றல் என்றாயிற்று. ஆகவே, கற்பாவது பிதா, குரு, ஆசிரியர், தமையன், தம்பி, பிதாவின் சகோதரர், மாமன், மைத்துனர், கணவன், கணவன் பிதா, கணவனுடன் பிறந்தார், புத்திரர், சுற்றத்தார், அயலார், அன்னியர் ஆகிய ஆடவர்களோடு ஆன்ம ஈடேற்றத்திற் கிடையூறு நேராது உறுதிபெற ஒழுகும் மரபு என்பது கருத்து.

மேலோதிய திறத்தவருடன் மகளிர் ஒழுகும் முறையாவது:—கன்னிகாவிரதநிலையில்: பிதா, குரு, ஆசிரியர், தமையன், மாமன் என்பவரைத் தெய்வமாக வணங்கியும், தன்னின் மூத்த மற்றைய உறவினரைப் பெரியாராகப் பாவித்து வேண்டிய உபசரணை செய்தும் ஒழுகல் வேண்டும். உறவினருள் தன்னையொத்தாரையும் இளையாரையும் தம்பிமாரைப்போலப் பாவித்து அன்புசெய்தல்வேண்டும். அயலவர்களை நண்பினர்போலப் பாவித்தல்வேண்டும். அன்னியருடன் எவ்வித தொடர்புமின்றி இருத்தல்வேண்டும்.

பதிவிரதநிலையில்: நாயகன், குரு இவர்களைத் தெய்வமாகவும், பிதா, ஆசிரியர், தமையன், மாமன் என்பவரைப் பெரியாராகவும் பாவித்து வணங்கவேண்டும். மற்றையாரைக் கன்னிகாவிரதத்திற்போலப் பாவிக்க. கணவன் சொற்களிற் கணவனையும் தன்னையும் பேணத்தக்கவைகளைச் சிரமேற்கொண்டொழுகல்வேண்டும். அவனது தகாத சொற்களை அவமதியாது, அவன் உளப்படுமாறு வேண்டிய புத்திபுகட்டி, மந்திரிபோல நின்று நடத்தல்வேண்டும்.

விதவாவிரதநிலையில்: கன்னிகாவிரதம் போல ஒழுகல்வேண்டும். தன்னை யலங்கரித்தலை யொழித்தல்வேண்டும். விடயசுகங்களில் இச்சை வைத்தலாகாது.

பிதா, குரு, நாயகன், புத்திரர், சகோதரர் ஆகிய இவர்கள் தீண்டி வார்த்தையாடத்தக்கவர். ஆசிரியர், மாமன், ஞாதியர், அயலவர் ஆகிய இவர்கள் தீண்டாது சமீபத்தில்நின்று வார்த்தையாடத்தக்கவர். மற்றையார் தூரத்தில்நின்று வார்த்தையாடத்தக்கவர். காமுகர், துட்டர், தூர்த்தர் ஆகிய இவர்கள் தூரத்தில்நின்றுநானும் காணவும் பேசவும் தகாதவர்கள். சமீபத்தில்நின்று வார்த்தையாடத்தக்கவருடனும் தனித்து நின்று நெடும்போது வார்த்தையாடலாகாது.

தம்மைத் தாம் காத்தொழுகுந் திறனில்லாத மகளிர் விவாகத்துக்கு முன் பெற்றோர், சகோதரர் சுற்றத்தவராலும், விவாகஞ்செய்த பின்

நாயகனாலும், கணவனை யிழந்தகாலத்து, புத்திரர், பெற்றோர், ஞாதியர்களாலும் காப்பாற்றப்பட்டு வாழுதல்வேண்டும்.

கன்னிகாவிரதநிலையிலும் விதவாவிரதநிலையிலும் ஆடவர் எவருடனாயினும் மகளிர் புணரலாகாது. பதிவிரதாநிலையில் நாயகனையன்றி மற்றைய ஆடவருடன் புணரலாகாது. புணரின் கற்பழிந்துபோம்.

சுருதிமுகத்தான் மாத்திரம் இவ்வாறு கூறியதை ஏற்று வாளாவிராது, யுத்தி அனுபவங்களாலும் ஆராய்ந்து நன்கு தெளிந்து, அவ்வாறு கடைப்பிடித்தொழுகவேண்டுமென்பார் அறி என்றார்.

தீயவற்றைச் சார்ந்து அவற்றின் வயப்பட்டுக் கெடாது, சிறப்புடைதற்கேற்ற நல்லவற்றைச் சேர்ந்து, நற்குண நற்செய்கைகளின் மேம்பட்டுக் கடைத்தேறல்வேண்டுமென்று விளக்குதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 17-ம் செய்யுள்.

### அவதாரிகை.

உயிர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப முறையே இன்ப துன்பங்களை நுகர்விப்பது தெய்வம். இவ்வாறன்றி, மாறுபாடாக நுகர்விப்பதில்லை. ஆகவும், வறுமையுற்று வருந்துவோர் அது தாஞ் செய்த தீவினையால் வந்ததென் றுணராது, தெய்வத்தை நொந்தால் அக்குற்றத்தாலும் பின்னும் வறுமை எய்த நேரிடும்; தீவினையை விட நேரிடாது. ஆகலின், தெய்வம் நல்குரவைச் செய்யவில்லையென்றும், அது தாஞ் செய்த தீவினைக்கேற்பவே தெய்வத்தாலூட்டப்பட்டதென்றும் தெளிந்து, தீவினையை யொழித்து, நல்வினையைச் செய்யவேண்டுமென்பதை இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

### தெய்வத்தை நோவாமை.

**செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா**
**லெய்த வருமோ விருநிதியம்—வையத்**
**தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்.**

இ - ள்: செய் தீவினை இருக்க - (முந்திய பிறவிகளில்) தாஞ்செய்த தீவினைப்பயனாகிய வறுமைத்துன்பம் அனுபவமாக வருதற்கிருக்க,—பாவம் அறம் என்ன அன்று அறிந்து - பாவம் நீங்குமென்று முற்பிறப்பிற்றானே யுணர்ந்து,—இடார்க்கு - (பிராயச்சித்தமாகத்) தானஞ் செய்யாதவர்க்கு,—வையத்து இன்று தெய்வத்தை நொந்தக்கால் - பூமியில் இப்பிறப்பில் (வறுமைகாரணமாகக்) கடவுளைப் பழிகூறினால்,—இரு நிதியம் எய்த வருமோ - பெரிய செல்வத்தை யடைய முடியுமோ? (முடி



யாது),—(எவ்வாறெனில்) வெறும் பானை மேல் பொங்குமோ - வெறும் பானை (அடுப்பேற்றி யெரித்தால்) மேலே பொங்குமோ? (பொங்காது.) (அவ்வாறு போல.) எ - று.

செய்தீவினை என்பது இறந்தகால வினைத்தொகை. அது செய்த தீவினை என விரியும். தீவினை ஆகுபெயர். அது தீவினைப்பயனாகிய வறுமைத்துன்பத்தை யுணர்த்திற்று. மேல் இருநிதியம் எய்த வருமோ என்றதனால் அதற் கெதிர்மறையான வறுமைத்துன்பம் வருவிக்கப்பட்டது. தெய்வம் சாதியொருமை. வருமோ பொங்குமோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன. அவை வாராது, பொங்காது என்னும் பொருளை விளக்கும். பாவம் ஆகுபெயர். அது பாவப்பயனாகிய துன்பத்தை யுணர்த்திற்று. அன்று - முற்பிறப்பு. இடார் - வினையாலணையும் பெயர். இன்று - இப்பிறப்பு. வெறும் பானை - இரண்டனுருபும் பயனு முடன்றொக்கதொகை. அது வெறுமையை யுடைய பானை என விரியும். பானை பொங்குமோ என இடத்து நிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேனின்றது.

முற்பிறப்புகடோறுஞ் செய்த தீவினைப்பயன் அப்பிறவிகளி லனுபவமானவை யொழிய எஞ்சி யிருப்பவையெல்லாம் அடுத்த பிறவிகடோறுந் தப்பாம லனுபவிக்கவேண்டுமென்பார் **செய் தீவினை யிருக்க** என்றார்.

இதில், செய்தீவினை என்பது முற்பிறவிகளிற் செய்த தீவினைகளைக் குறிக்குமா? அன்றி இப்பிறப்பிற் செய்த தீவினையை மாத்திரங் குறிக்குமா? அன்றி இருமையினுஞ் செய்த தீவினையைக் குறிக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. இப்பிறப்பிற் செய்யப்பட்ட இறப்ப வுயர்ந்த தீவினைகள் மாத்திரம் இப்பிறப்பிலேயே பயன்றரும். ஏனையவை முற்பிறப்பிற் செய்தவைகளே இப்பிறப்பிற் பயனுதம். எங்ஙனமெனின், எவருந் தாம் பிறவியெடுக்கவேண்டுமென்று நினைத்து, வினை செய்யாதிருக்கவும் பிறவியிலே செலுத்தப்படுகின்றார். அங்ஙனஞ் செலுத்தப்படுதல் அப்பிறவிக்கு முன் செய்த வினைப்பயனென்பது அனுபவசித்தம். அன்றியும், வறியவரிடத்துப் பிறந்த பிள்ளைகள் அவ்வறுமையை யனுபவித்தற்கு இப்பிறப்பிற் செய்ததொன்றில்லையாகவும், பெற்றோருடன் வறுமைத்துயரி லுழலுதலாலும் வறுமைக்கேதுவான இத்தீவினை முற்பிறப்பிற் செய்ததென்பது துணிபாகிறது.

இங்ஙனமாயின், இவ்வுயிர் இப்பிறப்பின் மாத்திரமன்றி முன்னுமிருந்ததென்பது சித்திக்கிறது. இதனால் இவ்வுயிர் இப்பிறவியின் மாத்திர மிருக்கின்றதா? அன்றி முன்னு மிருந்ததா? அன்றி இன்னும் பிறவியெடுக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. வினையின்றித் தேகம், அனுபவம் என்பவை யில்லை. தேகமெடுத்தற்கு அஃதெடுக்குமுன் வினை

செய்யவேண்டுதலின், முன் வினை செய்தே இப்பிறவி யெடுக்கவேண்டும். ஆகலின், இப்பிறவியெடுக்குமுன்னு முயிரிருந்ததென்பது வெளியாகிறது. ஆகவே, தேகமெடுத்தற்கு வினை வேண்டுமென்றதனால் முதன்முதற் றேகமெடுத்தற்குத் தேகமில்லாமலே யிருந்து வினை செய்யவேண்டுமென் றேற்படுகிறது. படவே, இதில், தேகமின்றி வினை செய்யலாமா? செய்யலாகாதா? என்று விசாரிக்கப்படுகிறது. தேகம் மூன்றுவகைப்படும். அவை காரணம், சூக்குமம், தூலம் என்பனவாம். காரணதேகமாவது: அஞ்ஞானத்தினால் மூடப்பட்டுத் தான் அனுபவத்தோ டிருந்தும், அவ்வனுபவந் தனக்குத் தோன்றாதிருப்பது. சூக்குமதேகமாவது: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் வெளிப்பட்டு, இந்திரிய சம்பந்தமாகக் கண்டிதத் தோற்றமின்றி நின்று, வினையை நிகழ்த்துவது. தூலதேகமாவது: தூலபஞ்சபூத சம்பந்தமாய்க் கண்டிதத் தோற்றமாக நின்றியங்குவது. பிறவியிலே தூலதேகமே யனுபவமாதலின், இத்தூலதேகமின்றித் தூலதேகமெடுத்தற் கேற்ற வினை செய்யலாமா? செய்யலாகாதா? என்பதே வினாவாயிற்று. மனம் முதலிய கரணங்கள் ஞானேந்திரியங்களோடு சம்பந்தமாய்ச் சூக்குமத்தில் வினை செய்யலாமாகலானும், அவ்வினை தூலத்தைப் பயனாகத் தருமாகலானும், தூலதேகந் தோன்றுதற்கு அஃதின்றி, வினை செய்யலாமென்பது விளங்குகிறது. இங்ஙனமாயின், சூக்கும காரண தேகங்கள் உண்டாதற்கும் வினை வேண்டுமோ? வேண்டாமோ? என்று விசாரிக்கவேண்டிற்று. சூக்கும காரண தேகங்கள் உணர்வளவினவாய் நின்று கண்டியாது இயங்குதலின், அவை தோன்றுதற்கு உணர்வின் பேதம் வேண்டுமேயன்றிக் கண்டிதமான தூலதேகத்தினின்று செய்யும் வினை வேண்டாமென்பது சித்திக்கிறது.

உயிர் முற்பிறப்பிற் செய்த வினைக்கீடாக இப்பிறவி யெடுத்ததென்றதனால், இப்பிறப்பிற் செய்த வினைக்கீடாக இன்னும் பிறவியெடுக்குமென்பது சித்திக்கிறது. ஆகவே, இவ்வுயிர் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்கின்ற மூன்று பிறவிகளிலுந் தொடர்ந்திருந்தே தீரவேண்டுமென்பது முடிபாயிற்று. ஆகவே, இவ்வுயிர் முக்காலத்து மழியாதிருக்கின்ற சத்துப்பொருளென்பது துணிபாம்.

தாந் தாஞ் செய்த வினையின் பயன் தாமே யனுபவிக்கவேண்டுவது மரபு. ஆகலின், தாமீட்டிய தீவினைப்பயன் றேயப் பிராயச்சித்தஞ் செய்யாதிருந்தோர் அப்பாவத்திற் கேற்ற துன்பம், நல்குரவு என்பவற்றை மாத்திரம் அடையலாமேயன்றி, சுகம், செல்வம் என்பவற்றை யடைய முடியாதென்பார் **பாவம் அறுமென்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று இருநிதியம் எய்த வருமோ** என்றார்.

இதில், முன் செய்த பாவம் பிராயச்சித்த கன்மத்தினால் நீங்குமா? நீங்காதா? என்று விசாரிக்கப்படுகிறது. எவ்வினையினும் புண்ணிய பாவங்



கள் இரண்டுங் கலந்திருக்கின்றன. அவற்றுட் சிலவற்றில் புண்ணிய மிகுந்து பாவங் குறைந்தும், சிலவற்றில் பாவ மிகுந்து புண்ணியங் குறைந்து மிருக்கும். இவ்விரண்டனுள், புண்ணிய மிகுந்து பாவங் குறைந்திருக்குஞ் செயலைப் புண்ணியச்செயலென்றும், பாவம் மிகுந்து புண்ணியங் குறைந்திருக்குஞ் செயலைப் பாவச்செயலென்றும் பகுக்கப்படும். பாவங் குறைந்த செயல் புண்ணியமாதல் போலவே புண்ணிய மிகுமாறு செய்யப் பாவங் குன்றுமென்பது தத்துவம். ஆகவே, பிராயச்சித்தமாகிய புண்ணிய கருமத்தினாற் பாவ கன்மங்கள் தேய்ந்தழியுமென்பது எளிதில் விளங்குகின்றது.

பாவ மொழிந்து, புண்ணிய மேற்படுமாறு பிராயச்சித்த கன்மஞ் செய்யவேண்டுவது மரபு. அங்ஙனஞ் செய்யாது, பாவ மொழிதற்கு மாத்திரம் பிராயச்சித்த கன்மஞ் செய்தாலும் அதுகாரணமாக வறுமை நீங்குமேயன்றிச் செல்வம் வரமாட்டாதென்பார் "நிதியம் எய்த வருமோ" என்னாது, "இரு" என்னும் அடைபுணர்த்தி, **இருநிதியம் எய்த வருமோ** என்றார்.

இதில், செல்வம் வருதற்குப் பாவத்தை நீக்குதற் கேற்ற பிராயச்சித்த கன்மஞ் செய்தான் மாத்திரம் போதுமா? மேலு மதிகமான புண்ணியஞ் செய்யவேண்டுமோ? என்று விசாரிக்கப்படுகிறது. செய்த பாவம் நீங்குதற் கேற்ற அளவு பிராயச்சித்த கன்மஞ் செய்யின், அஃது பாவத்தால் வருகிற துன்பம், வறுமை என்பவற்றை நீக்குமேயன்றிச் செல்வம், சுகம் என்பவற்றைத் தரமாட்டாது. ஆகலின், இருநிதியஞ் சேருதற்கு மேலதிகமான புண்ணியஞ் செய்யவேண்டுமென்பது துணிபாகிறது.

இப்பிறப்பிற் றீவினை செய்யாதோர் நல்குரவுந் துன்பமுந் தம்மை வந்தடைந்தக்கால் அவை தாம் முன் செய்த தீவினைப் பயனாலேயே வந்தனவென் றுணர்ந்து, அவற்றைப் பொறுமையோ டனுபவித்துத் தீராது, தேகம், அனுபவப் பொருள் என்பவற்றைத் தந்த தெய்வமே காரணமின்றி இவற்றையுந் தந்ததென்று அத்தெய்வத்தை நொந்து வருந்துதல் போதியாமையென்பார் **தெய்வத்தை நொந்தக்கால் இருநிதியம் எய்த வருமோ** என்றார்.

இதில், தெய்வம் அவரவர் செய்த வினைப்பயனை மாத்திரம் அவரவருக்கு ஊட்டிவிடுமோ? அன்றி மேலும் அதிகமாகவோ குறைவாகவோ இன்ப துன்பங்களை வாளா ஊட்டிவிடுமோ? என்று விசாரிக்கப்படுகிறது. கைம்மாறு கருதாது, உயிர்களுய்யும்பொருட்டு அவைகளுக்குத் தேகம், அனுபவப் பொருட்கள் என்பவற்றை யுதவிய தெய்வம் பாரபட்சமுடையதன்று. இத்தகைய தெய்வம் அவரவர் செய்த வினைக் கேற்ற பயனையே அவரவருக்குக்கு ஊட்டுவிக்குமன்றி, மேலதிகமான துன்பத்தையாயினும் குறைவான இன்பத்தையாயினும் ஊட்

டாது. ஊட்டுமேல், பாரபட்சமுடையதாகும். ஆயின் தெய்வமாகாது. ஆதலின், தெய்வம் அவரவர் செய்த வினைக்கேற்ற பயனையே யூட்டுமென்பது சித்தம்.

சிறிய பாவம் பெரிய புண்ணியத்தா லழிந்துபோமென்பதைத் தத்துவ ஆராய்ச்சியால் நன்குணர்ந்துகொள்ளவேண்டுமென்பார் **அறிந்து** என்றார்.

அனுபவ காலத்தின் முற்பட்ட இப்பிறப்பு, முற்பிறப்பு என்பவற்றில் தமது தீவினை தேய்தற்கேற்ற பிராயச்சித்த கன்மமும் மேலதிகமான புண்ணியமும் ஒருங்கே செய்யாதவர்க்கு என்பார் **அன்று இடார்க்கு** என்றார்.

இதில், அன்று என்பது முற்பிறப்பை மாத்திரங் குறிக்குமா? அன்றி இப்பிறப்பில் நல்குரவுத் துன்பானுபவ காலத்துக்கு முற்பட்ட காலத்தையுங் குறிக்குமா? என்று விசாரிக்கவேண்டிற்று. முற்பிறப்பிற் செய்த பாவத்தால் வந்த நோய்கள் தீர இப்பிறப்பிற் கன்மவிபாகம் முதலிய சாந்திநூல்களில் விதிக்கப்பட்ட முறைப்படி பிராயச்சித்தஞ் செய்து தீர்த்த லனுபவசித்தமாகலின், அன்று என்பது நல்குரவை யனுபவிக்குங் காலத்துக்கு முற்பட்ட இப்பிறப்பினையும் முற்பிறப்பையு முணர்த்திற்றென்பது சித்தம்.

உடம்பிலே உயிரை நிலைபெறுத்துதற் கேற்ற அன்னஞ் சமைத்தற்குப் பானையினுள்ளே நீர் வார்த்து, எரித்து, அந்நீரினுள்ளே அரிசியைப் பெய்து, பொங்கச்செய்து அன்னமாக்கலாமேயன்றி, வெறும் பானையை யடுப்பிலேற்றி யெரித்தாற் பானையுங் கருகிப் புகைமண்டித் துன்புறுத்தி, விறகையும் காலத்தையும் வீணே அழிக்க நேரிடும் என்பார் **வெறும்பானை** மேல் **பொங்குமோ** என்றார்.

### இதிலுள்ள உவமான உவமேயங்கள்.

| உவமானம். | உவமேயம். |
|---|---|
| வெறும்பானை | உடம்பு |
| நீர் அரிசி இடுதல் | புண்ணியஞ்செய்தல் |
| பொங்குதல் | செல்வமுண்டாதல் |
| புகைமண்டல் | வறுமையுண்டாதல் |
| வெறும்பானைக்கு எரித்தல் | தெய்வத்தை நோதல் |

வெறும்பானையினுள்ளே நீர், அரிசி என்பவற்றை இடாது வாளா எரித்தால் பானையுங் கருகிப் புகைமண்டிக் காலமும் விறகும் வீணே அழிதல்போல, மானுடயாக்கை யெடுத்தபோதே முற்பிறப்புக்களிற் புண்ணியத்தை யீட்டிவையாது இப்பிறப்பிற் செல்வம் வரவேண்டுமென்று நொந்து வருந்தினால் செல்வமும் பெறாது, துன்பமும் பழிபாவங்களுமெய்தி, ஆயுளையும் யாக்கையையும் வீணே கழித்ததாகும் என்பது இவ்வுதாரணத்தால் விளங்குகின்றது.



முற்பிறப்பில் புண்ணியஞ் செய்தல் குறைந்தமையால் இப்பிறப்பிற் செல்வம் பெறாது வறுமையிலுழல நேரிட்டதென்று தெளிந்து, மேலுந் தொடர்ந்துவரும் பிறவிகளிலும் வறுமைத்துன்ப மெய்தாதிருக்குமாறு இப்பிறப்பிற்றானே அரிதாய் முயன்று தருமஞ்செய்து மேலோங்குதல் வேண்டுமேயன்றி, தம்மால் வந்த வினைப்பயனைத் தாமே யனுபவிக்க வேண்டுமென் றுணராது அப்பயன் தெய்வத்தால் வந்ததென்று மாறுபடவுணர்ந்து, அதனை நோதல் கூடாதென்று வலியுறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 18-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளிற் செல்வமெய்துதற்குப் புண்ணியஞ் செய்தல்வேண்டுமென்று வற்புறுத்தினார். இதில், நிறுத்தமுறையானே புண்ணியத்தாற் செல்வம் பெற்றோர் அச்செல்வம் தாம் முன் செய்த தருமத்தால் வந்ததென்றுணர்ந்து, இட்டுண்டு வாழாது, சுற்றம், அயல், நண்பு என்பவருக்கு முதவாது, அதனை வாளா வைத்திருப்பின், அது திருடர், பகைவர் என்பவரால் வலிந்து கவரப்படுமென்றும், ஆதலின், பொருளுண்டாம்போதே தப்பாது தருமஞ் செய்து வாழவேண்டுமென்றும் இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

### உலோபத்தின் இழிவு.

**பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகி**
**லுற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோ**
**ரிரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே**
**சரணங் கொடுத்தாலுந் தாம்.**

**இ - ள்:** பேர் உலகில் - பெரிய பூமியில்,—பெற்றார் - பிதாமாதாக்கள்,—பிறந்தார் - பிள்ளைகள்,—பெரு நாட்டார் - பெரிய நாட்டிலுள்ளவர்கள்,—உற்றார் - சுற்றத்தவர்,—உகந்தார் - நண்பர்,—என வேண்டார் - என்று (அவரவருக் கேற்ற தொடர்பை) விரும்பாதவராகிய உலோபிகள்,—சரணம் கொடுத்தாலும் தாம் இடார் - (முன் சொன்ன தொடர்புடையார்) அடைக்கலமென்று புகுந்தாராயினும் தாம் (அவர்க்கு யாதொன்றுங்) கொடார்,—மற்றோர் - இவரல்லாத திருடர், பகைவர் முதலாயினோர்,—இரணம் கொடுத்தால் இடுவர் - (உடம்பில்) ஊறுபாடுண்டாகும்படி அடர்த்தித் தண்டித்தால் (அவர்களுக்கு வேண்டுவன) கொடுப்பார். எ - று.

என என்னுஞ் செயவெனெச்சத்தைப் பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், உற்றார், உகந்தார் என்பவற்றோடுந் தனித்தனி கூட்டி, வேண்டார் என்னும் வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிக்க. மற்று

என்னும் இடைச்சொல் பிறிது என்னும் பொருளில் வந்தது. இரணம் - ஊறுபாடு. கொடுத்தாலும் என்பதிலுள்ள உம்மை இழிவுசிறப்பு. ஏகாரம் - தேற்றம்.

அரிய தவஞ்செய்து பெற்று வளர்த்துப் பொருளீட்டிக்கொள்ளுதற் கேற்ற கல்வி, தொழில் என்பவற்றைப் பயிற்றியவர்களாகிய பெற்றாருக்கு எத்தகைய கைம்மாறு செய்யினும் அவர் கடன் தீராதிருப்பவும், அவர் குறையிரந்து வேண்டுங்காலும் உலோபியர் பொருண்மேற்கொண்ட வேணவாவினாலே அவர் செய்த நன்றியை யொருங்கே மறந்து, அவருக்கு யாதுங் கொடாது வெறுத்திருப்பரென்பார் **பெற்றார் என வேண்டார்** என்றார்.

யாக்கையெடுத்த உயிர்களுக்கெல்லாம் மற்றெல்லாரினும் இன்றியமையாது வேண்டப்படுபவர் பெற்றாராகலின், அவரையே விதந்து முதற்கட் கூறினார்.

இதில், பெற்றார் செய்த நன்றிக் கேற்ற கைம்மாற்றைப் பிள்ளைகள் செய்து முடிக்கலாமா? முடிக்கக் கூடாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. பிள்ளைகள் தம்மிடத்துற்பத்தியாதற்குச் செய்த தவத்திற்கும் அவரை வயிற்றிற் சுமந்து வளர்த்துப் பிரசவித்த வேதனைக்கும், அதன் பின் பாலூட்டல், நோய்நீக்கல், உணவூட்டல், காத்தல், கல்விகற்பித்தல், அறிவுறுத்துதல், நன்னெறிக்கட் செலுத்துதல், பொருள்கொடுத்துதவுதல், தமக்குப் பின் தம் பொருள் முழுவதும் அவர்க்காக்குதல் என்பவற்றிற்கும் கைம்மாறாகப் பிள்ளைகள் தம்மைப் பெற்றாரைத் தமக்குப் பிள்ளைகளாகப் பெறுதலும், அவரை வளர்த்தல் முதலிய செய்தலும் கூடாமையின், பெற்றார் செய்த நன்றிக்குப் பிள்ளைகள் கைம்மாறு செய்து முடித்தல் கூடாதென்பது எளிதில் விளங்குகின்றது. இதுபற்றியே பெற்றார் உயிரோடிருக்குங் கால முழுவதும் பிள்ளைகள் அவரை வணங்கியும், அவரிறந்த பின்னும் அவரைக் குறித்துத் தீக்கடன், நீர்க்கடன், சிராத்தம் முதலியவைகளைத் தவறாது செய்தும் ஒழுகவேண்டுமென்று சுருதிகளில் வற்புறுத்தப்பட்டது. இவ்வாறு பெற்றார் பிள்ளைகளுக்குச் செய்த நன்றிகளே அப்பிள்ளைகள் உலகவாழ்வின் மேலோங்குதற்கும் கடைத்தேறுதற்கும் முக்கிய சாதனங்களாம். இச்சாதனங்களைத் தம் பயன் கருதாது, பிள்ளைகளின் பயன் கருதிச் செய்தலின், இவை கருணையின்பொருட்டுச் செய்த பெருநன்றிகளாயின.

பிதாமாதாக்களிருவரையும் பெற்றாரெனப் பொதுப்படக் கூறுதலின், இவ்விருவரில் யாவர் பிள்ளைகளுக்குச் சிறந்தாரென்று ஏற்படவில்லை. ஆகலின், தாயா? தந்தையா? பிள்ளைகளுக்குச் சிறந்தாரென்று விசாரிக்கப்படுகிறது. சாமசாகையிற் சொல்லிய பஞ்சாக்கினிவித்தையில், தேகத்தினின்றும் பிரிந்த சீவன் தனது புண்ணிய மிகுதியைச் சுவர்க்கத்திலும்,



பாவ மிகுதியை நரகத்திலும் அடைந்து, அனுபவித்தபின் அவ்விடங்களினின்று நழுவி, ஆகாயத்திற் காற்றுடன் அல்லாடிச் சஞ்சரிக்கின்றது. அதன்பின்னர் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற மேகங்களோடு கலந்து, அம்மேகங்கள் பொழியும் நீர்த்தாரைவழியாகப் பூமியில் வந்திறங்குகின்றது. பின் நீருடன் பயிரிற் சேர்ந்து அவை தருந் தானியங்களிற் சேருகின்றது. பின் அத்தானியத்தை உண்ணுகின்ற புருடனுடைய தேகத்திற் போய்ச் சேர்ந்து வீரியத்திற் கலக்கின்றது. பின் அவ்வீரியம் பெண்ணின் கருப்பையிற் பெய்யப்பட்டு, யாக்கைக்குரிய உறுப்புகள் வளர்ந்து நிரம்பிப் பிறக்கின்றது என்று விளக்கிக் கூறப்பட்டது. ஆகவே, ஆகாயம், சலம், தானியம், புருடன், பெண் என்னும் ஐந்திடமும் பிறவிக் காதாரமாயினும் பின்னுள்ள பெண்ணின் கருப்பையே தலைவுறுப்புக்கணிறைந்து யாக்கை யெடுத்தற்கு மற்றைய நான்கிடங்களினுஞ் சிறந்தது. ஆதலின், பெற்றாரில் புருடனாகிய தந்தையினும் பெண்ணாகிய தாயே பிறவி யெடுத்த பிள்ளைக்குச் சிறந்தாளென்பது தெளிவாகிறது.

பிள்ளைகள் தங்கள் ஆயுள்மட்டும் இடையறாது முயலினும், பெற்றார் செய்த நன்றிக்குக் கைம்மாறு செய்து தீர்க்க முடியாதவர்களாயிருத்தலின், அப் பெற்றார் இப் பிள்ளைகளை யாதுங் கேளாதிருப்பவே, அவர் குறிப்பறிந்து வேண்டுவன செய்வது பிள்ளைகள் கடனாம். ஆகவும், அப் பிள்ளைகளிடம் பெற்றார் சரணடைந்து குறையிரந்துழியும் அவர்க்குச் சிறிதும் உபகரியாதிருத்தல் பெருங் கொடும் பாவம் என்றும், அது லோபத்தாலுண்டானதென்றும் விளக்குவார் **பெற்றார் சரணங் கொடுத்தாலும் தாம் இடார்** என்றார்.

இதில், பெற்றார் தாமீட்டிய பொருள்களைத் தீநெறிக்கட் செலவு செய்து நல்கூர்ந்து அந் நல்குரவை நீக்கும்பொருட்டுப் பிள்ளைகளைச் சரணடையின், அப் பெற்றார் மீட்டுந் தீநெறிக்கட் செல்லுதற்கேற்ப அவருவக்குமாறு பிள்ளைகள் உபகரிக்கவேண்டுமா? வேண்டாமா? என்று விசாரிக்கவேண்டிற்று. தீநெறிக்கட் சென்று தம்மையும் பிறரையுந் தாழ்த்துவோருக் குபகரிப்பின், உபகரித்தாரும் அத்தீச்செயலின் பயனில் ஓர் பாகத்தைப் பெற்றுத் தாமுந் தாழ்ச்சியடைவர். இங்ஙனம் உபகரித்தாரும் உபகரிப்பைப் பெற்றாருமாகிய இருபாலாரும் தாழ்வடைதற் கேதுவாகிய செயலுக்குச் சிறிதும் உபகரித்தலாகாதென்பது வெளியாகிறது. ஆயின், அப் பெற்றார் தீநெறிக்கட் செல்லுதற்கேற்ப உபகாரஞ் செய்யாது அவரை நன்னெறிக்கட் செலுத்த முயலுதல்வேண்டும். அங்ஙனம் நன்னெறிக்கட் செலுத்த முடியாதாயினும் பெற்றாரது உயிர்வாழ்வுக்கு மாத்திரம் ஏற்ற உதவியைப் பிள்ளைகள் செய்யவேண்டியது கடப்பாடாம்.

நாம் பெற்ற பிள்ளைகளுக்குக் கல்வி, அறிவு, தொழில் என்பவை பெருகுமாறு அவர்க்கு வேண்டுவன உதவுதல் பெற்றார் கடனாகவும்,

தாம் அவரைத் தழீஇக்கொள்ளின் அவருக்கியாதேனும் பொருள் கொடுக்கவேண்டுமென் றஞ்சி அவரை விரும்பாது புறக்கணிப்பரென்பார் **பிறந்தார் என வேண்டார்** என்றார்.

எவருக்கும் பெற்றாருக்குப் பின் பிள்ளைகளே சிறந்தவராகலின், பெற்றாரின்பின் பிறந்தாரை வைத்தோதினார்.

இதில், ஒருவருக்குப் பெற்றார், பிள்ளைகள் என்னு மிருபாலாரில் எவர் சிறந்தவரென்று விசாரிக்கப்படுகிறது. தாம் மானுடயாக்கை யெடுத்தற்கு இன்றியமையாது வேண்டப்பட்டவர் பெற்றார். பிள்ளைகள் மானுடயாக்கை யெடுத்தற்கு இன்றியமையாதிருந்தவர் தாம். ஆகலின், நமது வாழ்க்கைக்குப் பிள்ளைகளினும் பெற்றாரே சிறந்தவரென்பது சித்திக்கிறது.

பிள்ளைகள் இளைஞராதலின், உலகானுபவங்களின் முதிர்ச்சியடையாதிருக்கவுங் கூடுமாகலானும், அவராற் நமக்கு இம்மை மறுமைகளிற் புகழும் நற்கதியும் ஒருங்கே யடைதலானும், அவர் கேளாதிருப்பவே, தாம் அவர்க்கு வேண்டுவன செய்தல் கடப்பாடாம். அங்ஙனமாகவும், அப்பிள்ளைகள் தளர்ந்து தம்மைத் தஞ்சமென்றடைந்துழியும், அவர்க்குத் தப்பாது செய்யுங் கடப்பாட்டை மறுத்தல் பெருங் கொடும் பாவமென்றும், அஃது லோபத்தால் வந்ததென்றும் விளக்குவார் **பிறந்தார் சரணங் கொடுத்தாலும் தாம் இடார்** என்றார்.

சுயநாட்டாரனைவரும் மேலோங்கவேண்டுமென்னும் பொதுநன்மை கருதி, அதற்கேற்ற செயல்களை நிலைநாட்டிவருபவரென்பார் நாட்டார் என வாளா கூறாது **பெருநாட்டார்** என விதந்தோதினார்.

இத்தகைய பெரியாரைத் தழீஇக்கொள்ளின் தாம் அவர் மூலமாகக் காலந்தோறும் பொருட்செலவு செய்ய நேரிடுமென்று பயந்து, அவரைப் புறக்கணித்திருப்பாரென்பார் **பெருநாட்டார் என வேண்டார்** என்றார்.

தமது நாட்டிலுற்ற பஞ்சம், நோய், பூகம்பம், புயல், வெள்ளம், சத்துரு என்பவற்றால் நேர்ந்த ஆபத்துக்களை நீக்குதற்குப் பெரிது முயலுஞ் சுதேசாபிமானிகளுக்கு அவர்க்கு வேண்டுவன உதவி நாட்டையும் தம்மையும் நன்னிலைப்படுத்தவேண்டியது எவர்க்கும் பெருங் கடனும். ஆதலின், அத்தகைய பெருநன்மை செய்வோர் யாதுங் கேளாதிருப்பினும் நாட்டின் நிறமுணர்ந்து வேண்டிய பொருளை அவரிடமொப்புவித்துப் பொதுநன்மையை வளர்க்கவேண்டியது மரபாகவும், அப்பெரியார் தேயத்துன்ப நீங்குதற்குத் தஞ்சங்கொடுத்து வேண்டுங்காலும் அவர்க் குதவாதிருத்தல், தேசத்துரோகமாகிய பெரும் பாவமென்றும், அஃது லோபத்தால் வந்ததென்றும் விளக்குவார் **பெருநாட்டார் சரணங் கொடுத்தாலும் தாம் இடார்** என்றார்.



சுற்றத்தார், நட்பினர் என்பவர் தந்தஞ் சுற்றத்தினரையும் நட்பினரையும் மாத்திரமே விரும்பிக் காப்பர். பெருநாட்டாரோவெனின், சுற்றம், நட்பு என்னும் பாகுபாடின்றி, எல்லோரையும் விரும்பிக் காப்பர். ஆதலின், சுற்றத்தார், நட்பினர் என்பவரினும் பெருநாட்டார் பேருபகாரிகளாதலின், அவரை இவ்விரு திறத்தினரின் முன் வைத்தோதினார்.

சுற்றத்தினருள் ஒருவர் தளர்ந்துழி மற்றவர் அவரைக் காத்தல் கடன். ஆதலின், இத்தகைய சுற்றத்தாரைத் தழீஇக்கொள்ளின் அவர் தளர்ந்த காலத்துப் பொருள்கொடுத் துதவவேண்டுமென் றஞ்சி அவரை விரும்பாதிருப்பாரென்பார் **உற்றார் என வேண்டார்** என்றார்.

தஞ்சுற்றத்தாரொருவர் தளர்ந்தது கேள்வியுற்றுழி, உடனே அவரையடைந்து, குறிப்பறிந்து அவர்க்கு வேண்டுவன உதவிக் காத்தல் சுற்றத்தார்க் கின்றியமையாத கடப்பாடாகவும், அவர் மிகத் தளர்ந்து துன்புற்று வேறு புகலிடமின்றித் தம்மையே தஞ்சமென்று வந்துற்ற காலத்தும் அவர்க்கு யாதுங் கொடாதிருத்தல் பெரும் பாவமென்றும், அஃது லோபத்தினால் வந்ததென்றும் விளக்குவார் **உற்றார் சரணங் கொடுத்தாலும் தாம் இடார்** என்றார்.

சுற்றத்தார், நட்பினர் என்னும் இருபாலாருள், நட்பினர் நட்புக்கொண்ட கால முதலாகத் தழீஇ ஒருவர்க்கொருவர் உபகரித்தலே யன்றிச் சுற்றத்தவர் போலப் பிறந்தது முதற்றொட்டு உபகரியாமையின், அச்சுற்றத்தாரை நட்பினரின் முன் வைத்தோதினார்.

தாம் நட்பின்கிழமை பூணாதிருப்பத் தம்மாட்டு நட்பின்கிழமை பூண்டவராகிய ஒருதலைநட்பினர் என்பார் நட்டார், நண்பர், சிநேகர் என்றற் றொடக்கத்தனவாகிய சொற்களிலொன்றைப் பெய்து பாடமோதாது **உகந்தார்** என்றார்.

தம்மாட்டு நட்பின்கிழமை பூண்டார் தம்மை விரும்பி வேண்டுவன உதவி யொழுகினும் அவரைத் தாந் தழீஇக்கொள்ளின் அவர் தளருங்கால் தாமுதவவேண்டுமென் றஞ்சி அவரை விரும்பாதிருப்பரென்பார் **உகந்தார் என வேண்டார்** என்றார்.

தம்மை விரும்பினோர் தாந் தளர்ந்த காலத்துத் தமக்குச் செய்த நன்றிகளை யேற்றுக்கொண்டு, அவர் தளர்ந்துழித் தாம் அவருக்கு உதவ வேண்டுவது மரபு ஆகவும், அவர் தளர்ந்து யாதொரு பற்றுக்கோடுமின்றித் தம்மைத் தஞ்சமென்றடைந்த காலத்தும் யாதானு முதவிக் காவாதிருத்தல் பாவமென்றும், அஃது லோபத்தால் வந்ததென்றும் விளக்குவார் **உகந்தார் சரணங் கொடுத்தாலும் தாம் இடார்** என்றார்.

பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், உற்றார், உகந்தார் சரணங் கொடுத்தாலுந் தாமிடார் என்றதனால் இரப்பவர், அதிதிகள், அடியார், துறவிகள் என்பவர் தமக்கு யாதொரு தொடர்புமில்லாதவராகலின், அவர் சரணங்கொடுத்தாலும் லோபிகள் யாது மிடாரென்பது சொல்லாமலே **விளங்கிற்று.**

தம்மாட்டுச் சிறிது மிரங்காதவரும் தம்மால் இரக்கப்படாதவருமாகிய தொடர்பு சிறிதுமற்ற பகைவர், கள்வர், கொள்ளையிடுவோர் என்பவர் என்பார் **மற்றோர்** என்றார்.

இத்தகையார் தம்மைக் குறைவிரந்து கேளாமை மாத்திரையேயன்றிக் கடிந்துகூறி வைதுகேட்டுழியுங் கொடாது தம்மிடத்துப் பொருளில்லையென்று பொய்ச்சத்தியஞ் செய்பவரென்றும், தாமரிதிற் சேமித்து வைத்த பொருளைச் சிறிதாயினுங் கண்டெடுக்க முடியாது தம்மைப் பெரிதும் அச்சுறுத்தியும், அதற்குங் கொடாக்கால், ஆயுதம் அக்கினி என்பவற்றால் உடம்பி லூறுபாடுண்டாகுமாறு தண்டிக்குங்கால் தம் உயிரைத் தப்பித்துக்கொள்ளுமாறு சிறிது பொருள் மாத்திரந் தம்மிடத்துள்ளதாகக் காட்டி, அதனை அவர்க்குக் கொடுப்பரென்றும் விளக்குவார் இழப்பர் என்னாது **இடுவர்** என்னுஞ் சொற்பெய்து **மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர்** என்றார்.

இவ்வாற்றால் உலோபியர் தம் பொருளை எவரும் எளிதிற் காணக்கூடாவண்ணம் ஆங்காங்கே மறைத்துப் பாதுகாத்துவைப்பர் என்பதும், அங்ஙனம் வைத்தலால் தமது அந்தியகாலத்தின்பின் அப் பொருள் உரிமையுடையா ரெவர்க்குங் கிடைத்த லரிதென்பதும், தாம் இன்பமடைதற்கென் றீட்டிவைத்த பொருள் அவர்க்குத் துன்பத்தையே பயக்குமென்பதும் பெறப்படுகின்றன.

பொருள் கிடைத்தால் அதனை லோபித்து வைத்து வீணிலிழவாது, தம்மைச் சேர்ந்தாருக்குதவியும் தருமஞ்செய்தும் வாழ்ந்து கடைத்தேறல் வேண்டுமென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 19-ம் செய்யுள்.

### அவதாரிகை.

பகுத்தறிவு வெளிப்பட்டுக் கடைத்தேறுதற்கேற்ற மெய்யுணர்வு பயத்தற்கேதுவாகிய மானுடயாக்கையைப் பெற்றிருந்தும், அந்த யாக்கையினின்றும் நித்தியஇன்ப நுகர்ச்சிக்கேற்பச் செயற்பாலனவற்றின் முயலாது, அந்த யாக்கையைக் காத்தற்கேற்றனவைகளின் மாத்திரம் முயன்று அநித்தியஇன்ப நுகர்ந்துழலுதல் தவறென்று இக்கவியில் வற்புறுத்துகின்றார்.



### சீவனமுயற்சியின் சிறுமை.

**சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்**
**பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையா**
**னாழி யரிசிக்கே நாம்.**

**இ - ள்:** நாம் - நாங்கள், — வயிற்றின் கொடுமையால் - உதராக்கினியாலுண்டாகும் பசித்துன்பக் கொடுமையினால் (அதனை நீக்குதற்கேற்ற பொருள் தேடவேண்டி), — சேவித்தும் - அதிகாரமுடையாருக்குக் குற்றேவல் செய்தும், — சென்று இரந்தும் - (ஊர்கடோறும்) போய்ச் செல்வரிடம் யாசித்தும், — தெள் நீர் கடல் கடந்தும் - தெளிந்த நீரையுடைய சமுத்திரத்தைக் (கப்பலேறிக்) கடந்து (அந்நியதேசஞ்) சென்றும், — பாவித்தும் - தம்மை வேடங்களாற் (பிறர் நன்குமதிக்குமாறு) பாவனைசெய்தும், — பார் ஆண்டும் - பூமியை அரசபுரிந்தும், — பாட்டு இசைத்தும் - பிறரைப் புகழ்ந்து பாட்டுக்களைப் பாடியும், — உடம்பை நாழி அரிசிக்கே பாழின் போவிப்பம் - அரிய மானுடயாக்கையை நாழியரிசியைத் தேடு முயற்சியிலேயே வீணிற் செலுத்துகின்றோம். எ - று.

சென்று என்றதனால் ஊர்கடோறும் என்பதும், கடல் கடந்து என்பதனால் கப்பலேறி என்பதும், கடலுக்கப்பாலுள்ள அந்நியதேசஞ் சென்று என்பதும் வருவிக்கப்பட்டன. தெண்ணீர்க் கடல் என்பது இரண்டனுருபும்பயனு முடன்றொக்கதொகை. அது தெளிந்த நீரையுடைய கடல் என விரியும். பாவித்தல் - பிறர்க்கு நன்மை செய்வதுபோன்று நடித்தல். பாழ் - வெறுமை. அஃது பயனின்மையை யுணர்த்திற்று. பார் ஆகுபெயர். அது பாரிலுள்ள உயிர்களை யுணர்த்திற்று. வயிற்றின் இடத்து நிகழ்கின்ற பசிப்பிணியின் கொடுமையை வயிற்றின்மேலேற்றி வயிற்றின் கொடுமை என்றார். கொடுமை - உடம்பினின்றும் உயிர் பிரிதற்கேற்ற பெருந்துன்பம். நாழி - படி. அரிசி என்பது ஆகுபெயர். அது அரிசியின் பாகமாகிய அன்னத்தை யுணர்த்திற்று. ஏகாரம் தேற்றம். உம்மைகள் எண்ணுப்பொருளில் வந்தன.

சீவனத்திற் கேற்ற வருவாயைச் சுயாதீனமான தொழில்களாற் பெற்றுக்கொள்ளாது, தம்வயமிழந்து பிறர்வயத்தராய் அவர் ஏவுங் குற்றேவல்களைச் செய்து என்பார் **சேவித்து** என்றார்.

தம்வயமாகச் சீவிக்கவும், பிறருக்குக் குற்றேவல் செய்து சீவிக்கவும் ஆற்றலின்றி இடமிடங்கடோறுந் திரிந்து யாசித்து என்பார் **சென்று இரந்து** என்றார்.

தந்தேயத்துத் தொழில் கிடையாது, தூரத்துள்ள அந்நியதேயத்தில் அரிதாய் முயன்று சென்று அவ்வந்நியர்பாற் கலந்து தொழில் செய்து என்பதை விளக்குவார் **தெண்ணீர்க் கடல் கடந்து** என்றார்.

தஞ்சுயகுண வடிவங்களோடு பொருள் கேட்பின், கொடுப்பார் அவமதிப்பரென்றுன்னி அவரை யுளப்படுத்துமாறு பெருமைதங்கிய வடிவுங் குணமுமுடையராய் நடித்து என்பார் **பாவித்து** என்றார்.

பிறருக் கடிமைப்பட்டும் பிறரோடு ஒத்தவராக நின்றுஞ் செய்யுந் தொழில்கள் போலாகாது யாவரையு மடக்கியாளுஞ் சுயாதீனமான பெருந் தொழிலைச் செய்து என்பார் **பார் ஆண்டு** என்றார்.

தம்மாட்டுப் புகழுக்கேற்ற குணஞ் செயல்கள் இல்லாதிருப்பவும், புகழ்பெறவேண்டுமென்று விரும்புவோரை யுளப்படுத்துமாறு அவர்க் கியையாத பெருமைகளை யமைத்துப் பாடி என்பார் பாட்டுரைத்து அல்லது பாட்டியற்றி என்னாது **பாட்டிசைத்து** என்றார்.

உணவுண்டு உயிர்வாழுதல் பசிப்பிணி நீக்கி, உடம்பில் உயிரை நிலைபெறச்செய்தற்காம். இங்ஙனம் உணவுண்டு வாழுதல் நாம் விரும்பிய இடையறாவின்பம் நுகருதற்கேற்ப முயலுதற்காக இருப்பவும், அதனை மறந்து, என்றும் பசிப்பிணி தீர்க்குமாறு மாத்திரம் முயன்று கடைத்தேறுதலின் முயலாதிருத்தல் தகாதென்பார் **வயிற்றின் கொடுமையால் பாழில் போவிப்பம்** என்றார்.

அளவிறந்த புண்ணியப்பேறு காரணமாக எடுத்த மானுடயாக்கையிருக்கும்போதே நிலைபேறான இன்பத்தை நுகருதற்கேற்ப முயலுதல் கடனாம். ஆகவும், அவ்வுடம்பை அநித்திய வின்பங்களுக்கேற்றவற்றிற் செலுத்தி வாளா கழித்துவிடுதல் தகுதியன்றென்பார் காலத்தைப் போவிப்பம் என்னாது **உடம்பைப் போவிப்பம்** என்றார்.

மானுடயாக்கை அரிதாயினும் அஃது என்றும் ஒரேபெற்றித்தாக நிலைத்திராது பிணி, மூப்பு, சாக்காடு என்பவற்றை யேற்றலின், அஃதிருக்கும்போதே கடைத்தேறுதலின் முயலவேண்டுமேயன்றி அதற்கமையாத பிறவற்றின் முயன்று செலுத்துதல் தகுதியன்றென்பார் **பாழில் போவிப்பம்** என்றார்.

இவ்வரிய மானுடயாக்கையினாலே எத்தகைய தொழில்களைச் செய்து பொருளீட்டினும் அப் பொருண் முழுவதும் அனுபவித்துத் தீரப்படாது, உடம்பில் உயிர் நிலைபெறுதற்குரிய உணவுண்ணுதலாகிய ஒன்றே அனுபவித்துத் தீரப்படுகின்றதென்பார் இழிவுசிறப்புப் பொருடருந் தேற்றேகாரம் புணர்த்தி **நாழி அரிசிக்கே போவிப்பம்** என்றார்.

மானுடயாக்கையின் அருமை 3-ம் செய்யுளுரையில் 19-ம் பக்கத்திற் கூறப்பட்டது. ஆண்டுக் காண்க.

புண்ணியப் பயனால் அரிதாகப் பெற்ற மானுடயாக்கையை அநித்திய இன்பங்களாகிய உண்ணல், உறங்கல் முதலியவற்றின் மாத்திரம்



வாளா செலுத்தி நுகராது, ஆன்ம ஈடேற்றத்திற்குரியவற்றிலேயே செலுத்தி வாழவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 20-ம் செய்யுள்.

### அவதாரிகை.

சிறந்த முறையானே முற்கூறிய பசிப்பிணியை நீக்கிய பின் மகளிர்கூட்டம் இன்பம் பயக்குமென்று துணிந்து, கணிகையர்பாற் கழி பெருங் காதல்பூண்டு கலந்து வாழுதல், இருமையினும் கேடு பயத்தலேயன்றி ஆன்ம சுகத்தையும் முற்று மிழப்பிக்குமாதலின், அக்கணிகையரைக் கூடற்க என்று இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

### கணிகையர்கூட்டக் கேடு.

**அம்பி துணையாக வாறிழிந்த வாறொக்குங்**
**கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்ட—மிம்மை**
**மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி**
**வெறுமைக்கு வித்தாய் விடும்.**

**இ-ள்:** கொம்மை முலை பகர்வார்க் கொண்டாட்டம் - திரண்ட தனங்களை(த் தழுவக் கொடுத்தற்கு) விலைகூறுகின்ற பரத்தையரைக் கூடி வாழுதல்,—அம்பி துணையாக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் - அம்பிக் கல்லைத் (தெப்பத்) துணையாக நம்பி ஆற்றைக் கடத்தற்கு அதனுளிறங்கிய செயலை ஒக்கும்,—இம்மை மறுமைக்கு நன்று அன்று - அது இப்பிறப்பில் அடைதற்பாலனவாகிய சுகங்களுக்கும் மறுமையில் அடைதற்பாலனவாகிய சுகங்களுக்கும் ஏதுவாகிய நன்மைகளைப் பயப்பதன்று,—மா நிதியம் போக்கி - பெரிய செல்வங்களை யழித்து,—வெறுமைக்கு வித்து ஆய் விடும் - இருமையினும் மேலோங்குதற்கேற்ற பொருள் தருமம் என்பவை யற்றுப்போதற்குக் காரணமாக முடியும். எ-று.

துணையாக என்றதனால் கடத்தற்கு என்னுங் குறிப்பெச்சம் வருவிக்கப்பட்டது. கொம்மைமுலை என்பது பண்புத்தொகை. அது கொம்மையாகிய முலை என விரியும். முலை என்பது இருமுலைகளையு முணர்த்துதலின் சாதியொருமை. பகர்வார் கொண்டாட்டம் என்பது செயப்படுபொருள்பற்றிப் பகர்வார்க்கொண்டாட்டம் என்றாயிற்று. இம்மை மறுமை என்பன ஆகுபெயர்கள். அவை முறையே இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் உள்ள அனுபவங்களை யுணர்த்திநின்றன. வித்து - காரணம்.

மகளிரது பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் பருவங்களுக் கேற்ப அவரது தனங்கள் வளர்தல், தளர்தல் ஆகிய இயல்பிருப்பவும், விலைமாதர் எப் பருவங்களினும்

சிறந்த மங்கைப்பருவம் போலவே தமது தனங்களைப் பாவித்துக் காட்டுவரென்பார் முலை என வாளா கூறாது **கொம்மைமுலை** என்றார்.

விலைமாதர் ஆடவரை மயக்குதல் முலையின்திறத்தினாலேயாம். ஆதலின், என்றும் மங்கைப்பருவமுடையார்போன்று தங்கள் தனங்களைக் காட்டி கடிந்துக் காணு மாடவரைத் தம்வயப்படுத்தி, அன்னார் அத்துணைப் பொருளும், இன்னார் இத்துணைப் பொருளுந் தருவேமென்றார். யாமுடன்பட்டிலம்; நீர் எத்துணைப் பொருள் தருவீர்? என்றும், இத்துணைப் பொருள் தருவீராயின், உமக்கே புரியாவேமென்றுங் கூறி, அவ்வாடவரிடத்துள்ள பொருட்களை இயன்றமட்டும் வாங்கிக் கொள்பவர் என்பார் **கொம்மை முலை பகர்வார்** என்றார்.

விலைமாதர் தாம் இன்பநுகரினும் நுகராதொழியினும் ஆடவர்க்கேற்ற இதஞ் செய்தலின், அவ்வாடவர் ஒருகாற் கூடிப் பொருளிழந்ததை யுணர்ந்து தெளிந்து கொள்ளாது, அவர் செய்யு மிதத்திலமிழ்ந்தி, தாம் அவர்பாலநுகர்ந்த இன்பத்தை மீட்டும் மீட்டும் புகழ்ந்து மயங்கி, அவர்வயத்தராய் அவரைப் பிரியாது வாழ்தல் என்பார் கொம்மை முலை பகர்வார் கூட்டம் அல்லது சேர்க்கை என்னாது **கொண்டாட்டம்** என்றார்.

ஆழ்ந்த நீரையுடைய ஆற்றைக் கடந்து கரையேற முயல்வார் தெப்பத்திலேறி, அதனைத் தாமிறங்கவேண்டிய துறையிற் செலுத்திச் சுகத்துடனிறங்கிச் செல்வர். அதுபோலக் காமநோய் தீர்த்து கடைத்தேற முயலுவார், நற்குண நற்செய்கைகளை யொருங்கேயுடைய இல்லாளைக் கூடிவாழ்ந்து கடைத்தேறுதற் கேற்ற அறங்களைச் செய்தும், சற்புத்திரப்பேறு பெற்றும், அவளுடன் தாமும் இன்புற்றுக் கடைத்தேறுதலாகிய கரையை யடைவர். அங்ஙனமின்றி, அம்மியைத் தெப்பத் துணையாகக் கொண்டு ஆற்றைக் கடக்க முயலுவோர், அதனைத் தாம் நினைத்த விடத்திற் செலுத்த முடியாதும், இருந்த விடத்திற்றானும் மிதந்து கொள்ள முடியாதும் அக் கல்லுடன் அமிழ்ந்தி இறத்தல்போல, விலைமாதர்பாற் காமவின்பநுகர்ந்து கடைத்தேற முயல்வோர் அவரைத் தம் வயமாக நடத்தமுடியாது தாம் அவர்வயமாக மயங்கி அவர் சொற்படி தம் பொருளையும் அவர்க்குக் கொடுத்திழந்து, தம்வயமாகச் செய்யு மறங்கள் யாதுஞ் செய்ய வகையின்றி நல்கூர்ந்து அவருடன் தாமு மழிவரென்பார் **கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் அம்மிதுணையாக ஆறு இழிந்த ஆறு ஒக்கும்** என்றார்.

இதிலுள்ள உவமான உவமேயங்கள்.

| உவமானம். | உவமேயம். |
|---|---|
| அம்மி | விலைமகளிர் |
| ஆறு | காமநோய் |
| இழிதல் | கொண்டாட்டம் |
| அமிழ்ந்தல் | கெட்டழிதல் |



இம்மையிற் செயற்பாலனவாகிய அறங்களையும், அநுபவிக்கற்பாலனவாகிய சுகங்களையும், புத்திரப்பேறு, தேகாரோக்கியம், நல்லுணர்வு முதலிய பேறுகளையும் ஒருங்கே யிழப்பித்து, வறுமை, நோய், அவமானம், தீயொழுக்கம், சுயாதீனமின்மை, மயக்கம் என்பவற்றை யொருங்கே தந்து கெடுத்தலின் விலைமாதர்கொண்டாட்டத்தை **இம்மைக்கு நன்றன்று** என்றார்.

இம்மையில் மேலுரைத்த பெரும்பேறுகள் யாவற்றையு மொருங்கே யிழத்தற்கேற்ப ஒழுகலாலும், நன்மை பயத்தற்கேற்ற அறஞ் செய்யாமையாலும், மறுமையினும் வறுமை, நோய் என்பவை பயக்குமேயன்றி யாதானும் நன்மை பயவாதென்பார் விலைமாதர்கொண்டாட்டத்தை **மறுமைக்கு நன்றன்று** என்றார்.

விலைமாதரைக் கூடினோர் தாம் முயன்று தேடிய வளங்கண் மாத்திரமேயன்றித் தம் முன்னோராற் றமக்கும் தமக்குப் பிற்சந்ததியாருக்கும் உறுதியுண்டாமாறு வைக்கப்பட்ட பெரும் பொருட்களையும் ஒருசேர இழப்பர் என்பார் நிதியம் என வாளா கூறாது **மா நிதியம் போக்கி** என்றார்.

இம்மையில் அறஞ் செய்யாமையாலும், நற்குண நற்செய்கை நல்லுணர்வு என்பவை சிறிதுமமையாமையாலும் இம்மையிலும், இத்தொடர்பு பற்றி மறுமையிலும் கல்வி, செல்வம், அறிவு என்னும் இன்றியமையாதவை ஒன்றையேனும் ஒருசிறிதும் பெறமுடியாதென்பார் **வறுமைக்கு வித்தாய் விடும்** என்றார்.

கடைத்தேறுதற்குப் பெருந் தடையாய்க் கல்வி, செல்வம், அறிவு, சுகம் என்பவற்றை ஒருங்கே யிழப்பிக்கின்ற விலைமாதர்கூட்டத்தை விட்டு, காமவிருப்ப முண்டாயினால், நல்லாளாகிய இல்லாளைக் கூடி இன்பநுகர்ந்து கடைத்தேறல் வேண்டுமென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 21-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் சுப இல்லாளோடு உறுதிபெற நின்று ஆன்மலாபத்தைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்று குறிப்பாலுணர்த்தினார். அத்தகைய நன்னிலை எவ்வாறொழுகின் சித்திக்குமென்பதை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### வஞ்சமிலார்க் கெய்தும் வளம்.

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—மூரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான்.

இ - ள்: சிவந்த தாமரையாள் - செந்தாமரைமலரி லிருக்கின்ற திருமகள்,—வஞ்சம் இலார்க்கு - வஞ்சகமில்லாதவர்களுக்கு,—என்றும் - எப்போதும்,—நீரும் - நீர்வளத்தையும்,—நிழலும் - நிழல்வளத்தையும்,—நிலம் பொதியும் - நிலத்தின்கீழமைகின்ற வளங்களையும்,—நெல் கட்டும் - நெற்போரையும்,—பேரும் - பெருமையையும்,—புகழும் - கீர்த்தியையும்,—பெருவாழ்வும் - ஆன்மலாபத்திற்குரிய சிறந்த வாழ்வையும்,—ஊரும் - ஊரதிகாரத்தையும்,—வரும் திருவும் - மேலோங்குகின்ற செல்வத்தையும்,—வாழ்நாளும் - ஆயுளையும்,—தரும் - கொடுப்பாள். எ - று.

நீர், நிழல், பொதி, தாமரை என்பன ஆகுபெயர்கள். அவை நீர்வளம், நிலவளம், பொதியப்படும் பொருள், தாமரைப்பூ என்பவற்றை முறையே விளக்கிநின்றன. ஊர் என்னும் இடப்பெயர் அவ்விடத்து மக்களை யுணர்த்தி, அம் மக்களின் பெயர் அவரை ஆளுந் தலைமையை யுணர்த்தலால் இஃது இருமடியாகுபெயராயிற்று. பேர் - பெருமை. வஞ்சம் - வஞ்சகம். அஃதாவது: சுயநலங் கருதிச் சாட்சிக்கு மாறுபட நின்று அக்கிரியையைச் சுயநலங் கருதாத நிலையென்று பிறர் நினைக்குமாறு நடித்தல். என்றும் என்பதிலுள்ள உம்மை முற்று. மற்றைய உம்மைகள் எண்ணுப்பொருள. தான் என்பது அசைச்சொல். வஞ்சகமின்மையினால் அவ்வஞ்சகத்தாலாந் தீப்பயன்க ளில்லாமற்போகலாமேயன்றி, ஆயுள், வாழ்வு, வளம் என்னும் நற்பயன்கள் ஒருங்கே யமைதற் கேலாமையின் வஞ்சமிலார் என்றது ஈண்டு வஞ்சகமின்றிநின்று ஆன்மசுகத்திற் கேற்ப ஒழுகுபவர் என்னுங் குறிப்பெச்சத்தை அவாவிநின்றது. செந்தாமரை யென்பது பிறிதினியைபுநீக்கிய விசேடணம்.

உடலினுயிரை நிறுவி ஆன்மலாபத்தின் முயலுதற்கு இன்றியமையாதது நீர்வள மென்பார் முதற்கண் **நீர்** என்றார்.

நிழல் கொடுக்குஞ் சோலை, காய், கனி, மலர், இதழ், தளிர் என்பவற்றாலுண்டாகுஞ் சுகானுபவங்கள் அந்நீர் காரணமாக எளிதிற் பெற்றுக்கொள்ளத்தக்கன என்பார் அந்நீரின் பின் **நிழல்** என்றார்.

இவ்விரண்டாலும் பெறற்பாலனவாகிய சுகங்களோடு கிழங்குவகை, மாணிக்கம் முதலிய இரத்தினங்கள், பொன் முதலிய உலோகங்கள், நிலக்கரி, மண்ணெண்ணெய், கெந்தகம் முதலிய தாதுப் பொருட்கள் என்னும் நிலத்துளடங்கிய வளங்களை விளைவியாது பெற்றுக்கொள்ளலா மென்பார் நிழலின் பின் **நிலம்பொதி** என்றார்.

இம் மூன்று வளங்களின் பின், நிலத்தில் விளைவிக்கப்படும் நெல் முதலிய தானியவகைகளைப் பெற்றுக்கொள்ளலா மென்பார் நிலம் பொதியின் பின் **நெற்கட்டு** என்றார்.



இந்நான்கு வளங்களாலும் உணவு முதலியவற்றில் உறுதிபெறுங்கால் இவ்வளங்களை நுகரு முடல் அநித்தியமாதல் கண்டு, தனது ஒழுக்கம், முயற்சி, விசாரணை என்பவற்றால் ஆன்மலாபத்திற்குரிய நல்வழியிற் பிறழுதலி சிறிதுமின்றி யொழுகும் பெருமையுண்டா மென்பார் நெற்கட்டின் பின் **பேர்** என்றார்.

இப் பெருமையால் காருண்ணியமுண்டாய்த் தான் மாத்திரமேயன்றி ஏனையருங் கடைத்தேறுமாறு அவருக்கு வேண்டியவற்றைக் காமியமாகவும் நிஷ்காமியமாகவுஞ் செய்து, பிறரால் போற்றப்படுதலுண்டா மென்பார் பேரின் பின் **புகழ்** என்றார்.

பேர், புகழ் என்னும் இரண்டாலும் இம்மைக்கண் உடலோடு கூடி வாழுங்கால் வேண்டுவனவற்றை நிறைவுறத் துய்த்தல் மாத்திரையேயன்றிக் கடைத்தேறுங்காறும் எத்துணைப் பிறவி யெடுக்கினும் அவற்றினும் வேண்டியவற்றை நிறைவுபெறத் துய்த்தல் கூடுமென்பார் புகழின் பின் **பெருவாழ்வு** என்றார்.

பேர், புகழ், பெருவாழ்வு என்னும் மூன்றனும் எவரும் வசீகரப்பட்டமைதலின், தான் மற்றையாரை வலிந்து கீழ்ப்படுத்தாது அவர் தாமாகவே கீழ்ப்பட்டொழுகுவர் என்பார் இம் மூன்றன் பின் **ஊர்** என்றார்.

இத்தகைய மேன்மைகளமையவே குடும்பம், சுற்றம், அயல், நட்பு, ஊர், தேசம், உலகம் என்பவற்றையும், நோய், மிடி, இரவு என்பவற்றைப் பெற்றாரையும், எக்காலமும் குறைவின்றி யோம்பத்தக்கதாக மேலோங்கி வளருஞ் செல்வமுண்டா மென்பார் திருவென வாளா கூறாது **வரும் திரு** என்றார்.

பேர், புகழ், பெருவாழ்வு என்பவற்றால் தரும மிகுந்து ஆயுள் பெருகுமென்பதும், இதன்முன் கூறப்பட்ட வளங்கள் யாவற்றையும் குறைவற நுகருதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதென்பதும் போதர ஈற்றில் **வாழ்நாள்** என்றார்.

மேலோதிப்போந்த வளங்கள் யாவற்றையும் இடையீடின்றி எக்காலமுங் கொடுப்பள் என்பார் **என்றும் தரும்** என்றார்.

பொய்யுரையாதான் என்னுஞ் சொல் மெய்யுரைப்பவன் என்பதை விளக்கினாற்போல, வஞ்சமிலார் என்பது வஞ்சகமின்றி நற்செய்கை செய்வாரைக் குறிப்பாலுணர்த்து மென்பது போதர **வஞ்சமிலார்** என்றார்.

இவ்வஞ்சகமின்றி நற்செயல் புரிவார் தமக்கு வேண்டிய வளங்களைக் குறையிரந்து கேளாதுழியும் திருமகள் தானாகவே அவர்க்குத் தப்பாமல் உதவுவளென்பார் தாமரையாள் என வாளா கூறாது **தாமரையாள் தான்** என்றார்.

தாமரையாள் எனப் பொதுப்படக் கூறினால், தாமரைமலரிலிருக்கின்ற கலைமகளோ? திருமகளோ? என்னும் ஐயமுண்டாம். ஆதலின், அவ்வைய நீக்கித் திருமகளை வெளிப்படுத்துவார் சிவந்த தாமரையாள் என்றார்.

கடைத்தேறுதற்கேற்ற ஆயுளையும் அவ்வாயுளினின்று நுகரவேண்டிய அனுபவங்களுக்குரிய சகல வளங்களையும் பயக்கின்ற சித்தசுத்தத்தை விட்டு, வஞ்சனையைக் கைக்கொண்டொழுகி இக்கல முழுவதையுமிழத்தல் தவறென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 22-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் வஞ்சமிலார் செய்யும் நற்செயலின் பெறுபேற்றைக் கூறினார். அவருக்கு எதிர்மறையான வஞ்சகரின் தீச்செயல் தமக்கும் பிறர்க்கும் பயன்படாது வீணே யழியு மென்பதை இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### வஞ்சகரின் பேறிழப்பு.

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்**
**காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்**
**பாவிகா ளந்தப் பணம்.**

இ-ள்: பணத்தை பாடுபட்டு தேடி புதைத்து வைத்து - பணத்தை வருத்தப்பட்டுச் சம்பாதித்து (பிறரறியாவண்ணம்) மறைத்து வைத்து,—கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - (அப் பணத்தால் யாதொரு பேற்றையு மடையாது) மிகுந்த கேட்டை யடைந்த மக்களே கேட்பீராக,—அந்தப் பணம் - அவ்வாறு நீங்கள் மறைத்துவைத்த பணத்தை,—கூடு விட்டு ஆவி போய பின்பு - (உங்கள்) உடலை விட்டு உயிர் நீங்கிய பின்பு,—பாவிகாள் - பாவிகளே,—இங்கு அனுபவிப்பார் ஆர் - இவ்வுலகில் நுகருபவர் யாவர்? (ஒருவருமில்லை.) எ-று.

கெட்ட கெட்ட என்னும் அடுக்கு கேடுகெட்ட என நின்று கேட்டின் மிகுதியை புணர்த்திற்று. மானிடரே என்பதிலுள்ள ஏகாரம் விளி. ஆரே என்பதிலுள்ள ஏகாரம் வினாப்பொருளில் நின்று அதற்கிறைபயப்பதாகிய இன்மைப்பொருளை உணர்த்திற்று. அந்த என்னுஞ் சுட்டு எவர்க்கு மனுபவமாகாது மறைத்துவைத்த என்பதை புணர்த்திற்று. போய என்பது இன்சாரியை பெற்றுப் போயின என நின்றது.

இன்ப நுகரவேண்டுமென்று துணிந்த மனவருத்தம், உடல்வருத்தம் என்பவற்றைப் பொருட்படுத்தாது அரிதாய் முயன்று என்பார் பாடுபட்டுத் தேடி என்றார்.



அங்ஙனந் தேடிய தேட்டத்தினால் இம்மையில் விடயசுகங்களையும் இருமையினும் ஆன்மலாபத்திற்குரிய சுகங்களையுஞ் சிறிதும் அனுபவியாது மூர்ந்திய நிலையினின்றும் இறப்பத்தாழ்ந்த மக்களென்பார் பணத்தைப் புதைத்து வைத்துங் கேடுகெட்ட மானிடரே என்றார்.

பாடுபட்டு வருந்திப் பொருள் தேடியும் அதைத் தாமனுபவிக்க முடியாமை மாத்திரையே யன்றித் தாமிறந்த பின்னாவது மறைத்து வைத்த பொருளைப் பிறர் அனுபவித்தாயினும் தருமம் விளைதற்கேற்ற தகுதி சிறிதுமில்லாத பெருவஞ்சக ரென்பார் கேடுகெட்ட என்றொழியாது பாவிகாள் என்று மீட்டும் விளித்தார்.

பணந் தேடுதற்கேற்ற தகுதி புண்டாம்பொழுதே உயிருக் குறுதி பயக்கத்தக்க கருமத்தை உடனே செய்யவேண்டுமென்றும், அங்ஙனஞ் செய்யாது பணத்தைத் தேடி மறைத்துவைத்தால் அஃதெவர்க்கும் பயன்படாது வீணாபோமென்றும் வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 23-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் தொழிலிற் பாடுபட்டுப் பணந் தேடி மறைத்து வைத்தலாலாங் கேட்டை விளக்கினார். இச்செய்யுளில் நடுவுநிலை தவறிப் பட்சபாதஞ் சொல்லிச் சுயாலம் பெற விரும்புவாரின் கேடுகளை விளக்குகின்றார்.

### ஓரஞ் சேல்வதன் கேடு.

**வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே—மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்றோரஞ் சொன்னார் மனை.**

இ-ள்: மன்று ஓரம் சொன்னார் மனை - நீதித்தலத்தில் பட்சபாதஞ் சொன்னவர்களுடைய வீட்டில்,—வேதாளம் சேரும் - பேய்கள் வந்துசேரும்,—வெள் எருக்கு பூக்கும் - வெள்ளெருக்கு மரங்கள் முளைத்துச் செழித்து மலரும்,—பாதாள மூலி படரும் - பாதாள மூலி என்னுங் கொடிகள் படரும்,—மூதேவி சென்று இருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வாள்,—சேடன் குடிபுகும் - பாம்புகள் குடியிருக்கும். எ-று.

ஏகாரங்கள் ஐந்தும் அசை. வேதாளம், வெள்ளெருக்கு, பாதாள மூலி, சேடன் என்பன சாதியொருமைகள். மன்றோரம் ஏழாம் வேற்றுமைத் தொகை. அது மன்றின்கண்ணோரம் என விரியும். சொன்னார்

மனை ஆறும் வேற்றுமைத் தொகை. அது சொன்னாரது மனை என விரியும். மனை என்பதனிற்றில் ஏழனுருபு தொக்குநின்றது. அது மனையின்கண் என விரியும்.

உண்மை நிகழ்ச்சியை நன்கறிந்தும் தமது சுயலாபங் கருதி அவ்வுண்மைக்கு மாறுதலையானவற்றை நீதிஸ்தலத்தில் வற்புறுத்திய அஃது இறப்ப உயர்ந்த தீமையாகலின் உடனே பயன்றந்து, அச்செயல் செய்தார்க்குத் தொழில், செல்வம், அதிகாரம், கீர்த்தி, நிலைபேறு, சுகம் என்பவற்றை யொருங்கே யிழப்பித்து, நல்குரவு, இழிவரவு, அலைவு, நோய், வாழ்நாட்குறைவு என்பவற்றைப் பயத்தல் மாத்திரையேயன்றித் தாம் யாண்டு வசிப்பினும் ஆண்டு மிருக்கமுடியா தலையுமாறு கழிபேரிடரை யுண்டாக்குமென்பதும், அவர்க்குரிய செல்வ முழுவதும் அவருக்குப் பின் உரிமையுடையோராலும் அனுபவிக்கப்படா தழியுமென்பதும் போதர மன்றோ சொன்னார் மனை வேதாளஞ் சேருமே............ சேடன் குடிபுகுமே என்றார்.

நடுவுநிலையிற் பிறழா தொழுகல்வேண்டுமென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 24-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முற்செய்யுளில் நான்சொன்னார் மனை பாழாகுந் தன்மையை யுணர்த்தினார். இச்செய்யுளில் ஒன்றினமுடித்தல் என்னுமுத்தியால் மற்றுஞ் சில பாழாகுங் காரணங்களை யுணர்த்துகின்றார்.

### சிறப்பு நீங்கும் காரணம்.

**நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்**
**ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறி**
**லுடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே**
**மடக்கொடி யில்லா மனை.**

இ - ள்: நீறு இல்லா நெற்றி பாழ் - விபூதி விளங்காத நெற்றி சிறப்பற்றது,—நெய் இல்லா உண்டி பாழ் - நெய் சேர்க்காத உணவு சிறப்பற்றது,—ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - ஆறு இல்லாத ஊரினது வளம் சிறப்பற்றது,—மாறு இல் உடற்பிறப்பு இல்லா உடம்பு பாழ் - தம்முட் பகையற்ற சகோதரரில்லாத தேகம் சிறப்பற்றது,—மடக்கொடி இல்லா மனை பாழ் - இல்லாள் இல்லாத மனையறம் சிறப்பற்றது. எ - று.

நீறு, மனை என்பன ஆகுபெயர்கள். இவை முறையே விபூதி, மனையறம் என்பவற்றை யுணர்த்திநின்றன. விபூதி தரித்தற்கு ஏனைய உறுப்புக்களினும் நெற்றி சிறந்ததாகலின் அதனை விதந்தோதினார்.



ஆயினும், மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியா ததனையு முட்டின்று முடித்தலென்னு முத்தியால் விபூதி தரித்தற்குரிய ஏனைய உறுப்புக்களையு மொட்டிக்கொள்க. நெய் எனப் பொதுப்படக் கூறினாரேனும் முதன்மைபற்றிப் பசுநெய்யே யீண்டு வேண்டப்பட்டது. ஊருக்கு என்பது உருபுமயக்கம். இதிலுள்ள கு என்னும் நான்காம் வேற்றுமை யுருபு அது என்னும் ஆறாம் வேற்றுமை யுருபாகத் திரித்துப் பொருளுரைக்கப்பட்டது. உடற்பிறப்பு என்பது நீக்கப்பொருட்கண் ஐந்தாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அது தாயுடலினின்று தனக்கு முன்னாயினும் பின்னாயினும் பிறந்து வருதலையுடைய ஆண்பெண் என்னு மிருபாலினருமன்ன சகோதரம் என விரியும். ஏகாரம் அசை. மடக்கொடி பன்மொழித்தொடரின் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அது மடமுதலிய குணங்களமைந்தவளும் கொடிபோன்ற சாயலுடையவளுமாகிய பெண் என விரியும். மடம் என்றாரேனும், ஒன்றினமுடித்த றன்னினமுடித்தலென்னு முத்தியால் ஏனைய நாணம், அச்சம், பயிர்ப்பு என்னுங் குணங்களையுங் கொள்க. இல்லாத என்னும் பெயரெச்சத்தீறு தொக்கு இல்லா என ஐந்திடத்தும் நின்றது.

மானுடயாக்கை யெடுத்தோர் ஆன்மலாபமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது சமயநெறியா மென்று விளக்குவார் முதற்கண் நீறில்லா நெற்றி பாழ் என்றார்.

இதில், நெற்றியில் நீற்றை யணிதல் சைவசமயநெறியைக் குறிக்குமா? குறியாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. கடைத்தேறுந் தகுதி வாய்ந்த சைவசமயத்தில் பாசம் அல்லது மல நீக்கத்தை யடைதற்குரிய சங்கற்ப சாதனம் விபூதியாக அனுபவத்தி லாளப்படுதலின் அதனை நெற்றியி லணிதல் சைவசமய நெறியைக் குறிக்குமென்பது எளிதில் விளங்கிற்று.

அன்றியும், இக் குறியின் சாதனம் மலத்தை நீக்குதற்கேற்ற திடசித்தத்தைத் தருமா? தாராதா? என்று விசாரிக்கப்படுகிறது. உற்பத்தி முதலியவை சங்கற்பத்தால் நிலைபெறுவன என்பது விசாரணையிற் காணப்படுதலானும், அச் சங்கற்ப வல்லமையின்றி எவையும் நிலைபெறாமையானும் மலத்தை நீக்குமென உறுதியாகக் கொண்ட சங்கற்பம் திடசித்தத்தைத் தப்பாது கொடுக்குமென்பது சித்தம்.

ஆயின், மனத்திலிருக்கின்ற அசுத்தம் அல்லது பந்தத்தை உணர்ச்சியினால் நீக்கலாமேயன்றிச் சடத்துவமான விபூதிப் பூச்சினால் நீக்க முடியாதாகவும், நீக்கலா மென்றமையின் இதனால் பந்தம் நீக்கப்படுமா? படாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. உறுதிபெறாத மனம் திடமடையுமாறு தான் பற்றுகின்ற சடத்துவத்தையே ஆதாரமாகக் கொண்டு சித்துவத்தைப் பெறுதல் மரபாகலின், சடத்துவமான விபூ

திப் பூச்சின் துணையால் சித்துவமான மனதிலிருக்கின்ற அசுத்தம் நீங்குமென்பது தெளிவாகிறது.

மலநீக்குதற்கு ஆதாரமான சமயநெறியின் குறியாகிய **விபூதிப் பூச்சை முதற்கட்** கூறியதனால் மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததையு முட்டின்றுமுடித்த லென்னு **முத்தியால் ஆசாரம்**, நன்னெறியொழுகல், தவஞ்செய்தல், தத்துவ விசாரணை, மெய்யுணர்தல் என்பவற்றை முறையே கடைப்பிடித் தொழுகி ஆன்மலாப மடைதல்வேண்டுமென்பது விளக்கக்கிடக்கின்றது.

உண்மையை யுணருதற்கு உயிர் தேகத்தில் நிலைபெறுதல் வேண்டும். அந்நிலைபெறுதற்கு உண்டி இன்றியமையாததாகலானும், அவ்வுண்டியின் அமிர்தபாகத்தால் சத்துவகுண மிகுந்து தீநெறியினின்று விலகி நன்னெறியொழுகி விசாரணை செய்யவேண்டுதலானும், சத்துவகுணத்தை மிகுவிக்கின்ற நெய் உணவிலே சேர்க்கப்படல்வேண்டும். சேராக்கால், உணவின் விஷபாக மிகுந்து, ஆன்மலாபத்துக்கு மறுதலையான தீக்குணங்களை விளையு மென்பார் **நெய் இல்லா உண்டி பாழ்** என்றார்.

நன்னீர் இடையறா தொழுகும் ஆறில்லாக்கால், பயிர்ச்செழிப்பு, குளிர், சோலை, சுகம் முதலிய சகல அழகுங் கெட்டு, அவ்வூரில் வாழ்வோர் நல்கூர்ந்துந் துன்புற்றும் நிறைவின்றிக் கவலையடைவ ரென்பார் **ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்** என்றார்.

உடலெடுத்தார் யாவர்க்கு மிடையூறுண்டாத லியல்பு. இவ்விடையூற்றை நீக்குந் தன்மையுடையார் பெற்றோருக்குப் பின் உடன்பிறந்தாராதலின், அங்ஙன முடன்பிறந்தா ரில்லையாயின் இடையூறுகளாற் பெரிதும் வருந்த நேரிடு மென்பார் **உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்** என்றார்.

இத்தகுதியுடைய உடன்பிறந்தார் மாறுடையாராயின், அவரால் யாதொரு நற்பயனையு மடைய முடியாமற்போதன் மாத்திரையேயன்றி, தீப்பயனையு மடைய நேரிடுமென்பதை விளக்குவார் உடற்பிறப்பில்லா உடம்பு என்றொழியாது, மாறில் என அடைபுணர்த்திக் கூறினார்.

மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு, கற்பு என்னும் பெண்மைக் குணங்க ளொருங்கமைந்தாளாலே இல்லறம் இனிது கடைபோதன் மரபு. அத்தகைய நற்குண நற்செய்கையுடைய மனைவி யில்லாக்கால், எத்துணைச் செல்வம் மலிந்திருப்பினும் அதனால் இல்லறத்தை நிலைபெறச்செய்து கடைத்தேற முடியா தென்பதும், கணவர் வாழ்க்கைக்குரிய பொருளைத் தேடுதலிலே தங் காலத்தைக் கழிக்குங் கடப்பாடுடையராயிருத்தலின், வீடு அலகிடுதல், சுத்தஞ்செய்தல், விளக்கேற்றல், தூபமிடல், அலங்கரித்தல் என்றற் றொடக்கத்தனவாகிய மங்கலங்க ளமையுமாறு செய்தற்குரிய மடவா ரில்லாக்கால் அம்மனை சிறப்புநீங்கு மென்பதும் போதர, இரட்டுற மொழிதலென்னு முத்தியால் **மடக்கோடி இல்லா மனை பாழ்** என்றார்.



கொடி தனக்குப் பற்றுக்கோடான கொழுகொம்பிற் படர்ந்தேறுமாறுபோல மகளிருந் தமக்குப் பற்றுக்கோடான நாயகரைத் துணைக்கொண்டு அறஞ்செய்து, மேலோங்கு மியல்பினரென்னுங் கருப்பொருள் போதர மடவாள் என்னாது மடக்கோடி என்றார்.

மடக்கொடி இல்லா மனை பாழ் என்றதனால் இல்லாளோடு அறஞ்செய்து வாழ்ந்தோர் வினைவயத்தால் அவளை இழக்க நேரிடின், மீட்டும் ஓர் இல்லாளை மணந்து இல்லறத்தை நடத்தவேண்டுமா? அன்றி, தபுதார நிலையின் மாத்திர மிருந்து இல்லறம் நடத்தவேண்டுமா? அன்றி, இல்லறத்தை நீக்கி, வானப்பிரத்த நிலையை யடையவேண்டுமா? என்று விசாரிக்கவேண்டிற்று. பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரம நெறிகள் நான்கனுள் தத்தந் தகுதிக் கேற்றவாறு யாதானு மொன்றி லுறுதிபெற நிற்றன் மரபு. ஆகலின், கிருகத்தத்திலிருந்து வானப்பிரத்த நெறிக்குப் போகுந் தகுதியில்லாதார் இல்லாளை யிழந்த காலத்துப் பின்னும் ஓர் இல்லாளை மணந்து, இல்லறத்தை யினிது நடாத்தல்வேண்டுமென்பது வெளியாகிறது. இதனால் மனையாளோடு கூடிவாழுந் தகுதியில்லாதோரும் விருத்தரும் மறுமணம் புரியாது, தபுதார நிலையிலிருந்தே புதல்வர்ப் பேணல், மனையறம் வளர்த்தல் என்பவற்றைச் செய்து, தகுதி உண்டாகும்போது வானப்பிரத்தத்தை மேற்கொள்ளல் வேண்டுமென்பது சித்திக்கிறது.

இவ்வாற்றால், இல்லறம் நடாத்துங்கால் கணவனை யிழந்த மகளிரும் அவ்வறத்தை யினிது நடாத்திக் கடைத்தேறும் பொருட்டு மற்றும் ஓர் கணவனை மணந்து, இல்லறத் தொழுகல் வேண்டுமா? அன்றி, தாபதநிலையிற்றானே யிருந்து அதனை நடாத்தவேண்டுமா? என்று விசாரிக்கவேண்டிற்று.

மகளிர் நாயகனை யிழந்தக்கால், தாபத நிலையினின்று தவஞ் செய்தலே மரபு. அந்நிலையி லுறுதிபெறு மாற்றலில்லாதார் அறஞ் செய்தற்கும், மக்கட்பேணல் சீவனவுறுதி என்பவற்றை நிலைபெறுத்துதற்கும் தமக் கியைந்த நாயக னொருவனை மணஞ்செய்து வாழவேண்டு மென்பது விளங்கிற்று. இதனால் இளமைப் பருவத்தில் நாயகனை யிழந்த மகளிர் மறுமணஞ் செய்யலாகாதென்னும் மடமை மறுக்கப்பட்டது.

ஆன்மசுக மடைதற்கேற்ற சமயநெறியொழுகல், அவ்வொழுக்கம் நிரம்புதற் கேற்ற உணவுண்டு வாழுதல், அவ்வாழ்க்கைக் கேற்ற கருவித்துணை, உடற்றுணை, வாழ்க்கைத்துணை என்பவற்றை **இனிது** விளக்குதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 25-ம் செய்யுள்.

### அவதாரிகை.

மேலோதிப்போந்தவாறு சமயநெறிக்கண் ஒழுகுங்கால், தத்தம் வருவாய்க்கேற்ற செலவுசெய்து வாழலாமேயன்றி, வரையறையற்ற செலவுசெய்து, கடன்பட்டு வாழுதல் குறித்த ஆன்மலாபத்தைக் கெடுத்துக் கீழ்நிலையில் உய்க்குமென்பதை இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### கடன்படுதலின் கேடு.

**ஆன முதலி லதிகஞ் செலவானான்**
**மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை**
**யெல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனா நாடு.**

இ - ள்: ஆன முதலில் அதிகம் செலவு ஆனான் - தன்னிடத்துப் பொருந்திய வருவாயிலும் பார்க்க அதிக செலவையுடையவன்,—மானம் அழிந்து - நிறை கெட்டு,—மதி கெட்டு - பகுத்தறிவு குன்றி,—போன திசை - (தான்) போன இடங்களிலும்,—எல்லார்க்கும் கள்ளன் ஆய் - யாவர்க்குங் கள்வனாகி,—ஏழ் பிறப்பும் தீயன் ஆய் - எழுவகைப் பிறப்புக்களிலும் அசுபவாசனை யுடையவனாய்,—நல்லார்க்கும் பொல்லன் ஆம் - நற்குண நற்செய்கையுடைய அறிஞருக்கும் தீயவனாவன்,—நாடு - இதனை நீ ஆராய்ந்தறியக்கடவை. எ - று.

முதலில் என்பதன் இல்லுருபு எல்லைப் பொருட்கண் வந்தது. அது முதலளவைக் காட்டிலும் என விரியும். செலவானான் என்னும் வினையாலணையும் பெயர் செலவையுடையவனாயினான் என்னும் பொருடருதலின் இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. திசை என்பது இடப்பொருட்கண் வந்தது. எல்லார்க்கும் என்பதிலும் ஏழ்பிறப்பும் என்பதிலும் உள்ள உம்மைகள் முற்றுப் பொருள. நல்லார்க்கும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சத்தோ டுயர்வுசிறப்பு. அது சாமானிய நிலையை யுடையார்க்கே யன்றி என முன்னுள்ளதைத் தழுவுதலால் இறந்தது தழீஇய எச்சமும், குற்றங்கண்டொழியு மொருத உயர்வுடையார் என்னுஞ் சிறப்பைத் தருதலின் உயர்வுசிறப்புமாம். மதி - பகுத்தறிவு. நாடு என்பது முன்னிலையொருமை யேவல் வினைமுற்று. இதனால் நீ என்னுந் தோன்றாஎழுவாய் வருவிக்க வேண்டிற்று.

தன்மாட்டடைகின்ற வருவாயளவு செலவு செய்து வாழாது, வேணவாவினாற் கடன்பட்டு, அதிக செலவுசெய்து வாழுபவனென்பார் **ஆன முதலில் அதிகம் செலவானான்** என்றார்.



மானம் என்பது கடைத்தேறுதற் கேற்ற நன்னெறிக்கண் உறுதி பெற நிற்றல். எனவே, மான மழிதல் என்பது கடைத்தேறுதற் கேற்ற உறுதிநிலையை யிழத்தல். கடன்பட்டோன் அதனைத் தீர்க்குமாறு எவரையுங் குறையிரந்து பொருள் கேட்டுத் தனது உறுதிநிலையை யிழத்த லொருதலையாகலின் **மானம் அழிந்து** என்றார்.

வருவாயிற் குறைந்த செலவு செய்து சிறிதாயினுஞ் சேமித்து வைத்திருந்து, வருவாய் குறைந்த காலத்துத் தற்காப்புச் செய்யவேண்டுமென்றுணருதல் பகுத்தறிவு. கடன்பட்டோனுக்கு அவ்வுணர்ச்சி சிறிதுயின்றி வருவாயனவாயினுஞ் செலவுசெய்யவேண்டுமென்னுஞ் சிற்றறிவு தானு மற்றுப்போமென்பார் **மதி கெட்டு** என்றார்.

கடன்பட்டதனால் தானிருந்த விடத்திற் கள்வனாதன் மாத்திரையேயன்றிக் கடன்கொடுத்தார்க் கஞ்சி வேற்றிடஞ் செல்லினும் ஆண்டும் தான் வரவின் மிஞ்சிய செலவு செய்வது காணப்படுதலின், கள்வன் என்று யாவராலு மிகழப்படுவானென்பார் **போன திசை எல்லார்க்கும் கள்வனாய்** என்றார்.

வரவின் மிஞ்சிய செலவு செய்பவன் வாங்கிய கடனை எக்காலத்து மிறுக்க மாட்டாமையின் எவ்வகைப் பிறவி எடுப்பினும் அப்பிறவிகடோறும் கடனிறாக் குற்றம் தப்பாது தொடர்ந்து வருத்துமென்பார் **ஏழ் பிறப்பும் தீயனாய்** என்றார். இதனால் கடனுக் கஞ்சித் தற்கொலை செய்து அக்கடன் றுன்பத்தினின்று நீங்கலாமென்பாரது மடமை மறுக்கப்பட்டது.

ஊழாலனுபவிக்கவேண்டியவற்றையும் ஆகாமியத்தால் அவ்வப்போது அனுபவிக்கவேண்டியவற்றையும் பாகுபடுத்தி நன்குணர்ந்த நல்லார், கடன்பட்டோனைக் காணில், வரவுக் கேற்ற செலவு செய்யவேண்டியது கடப்பாடாகவும் அதனை மறந்து வேணவாக்கொண்டு தீய ஆகாமியத்தினால் இங்ஙனங் கடன்பட்டு வருந்துகின்றான்; இவன் எப்பிறவியினும் ஈடேறமாட்டானென்று தம்முள்ளே நொந்து, இவனை வெறுப்பாரென்பார் உயர்வுசிறப்புப் பொருடரும் உம்மைபுணர்த்தி **நல்லார்க்கும் பொல்லனாம்** என்றார்.

ஊழால் வருங் கடன், நோய் வறுமை சோரர் சத்துரு என்பவற்றால் நேரிடும். இது இடம்பவாழ்வு காரணமாய் நேர்தலின் ஆகாமியத்தால் வந்த கடனாயிற்று.

கடைத்தேறுமாறு மானுடயாக்கை யெடுத்தோரனைவரும் வரவின் மிஞ்சிய செலவு செய்து கடன்படுதலாகிய இத்தீச்செயலால் வருங் கேடுகளை நன்காராய்ந்து, இதினின்றும் விலகவேண்டுமென வற்புறுத்துவார் **நாடு** என்றார்.

கடைத்தேறுதற் கேற்ப வாழுங்கால், வரவின் மிஞ்சிய செலவு செய்து கடன்பட்டு, அக்கட னிறாமையாற் பிறவிகடோறுந் துன்புறுதல் பெருங் குற்றமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 26-ம் செய்யுள்.

#### அவதாரிகை.

சிறந்த முறையானே வாழ்க்கையின் வரையறை கூறி, கடைத்தேறுதற்குரிய அறிவு பெறுதற் பொருட்டுத் தேகத்தை வருந்தாவண்ணங் காத்தொழுகல் வேண்டுமென்பதை இக்கவியில் வற்புறுத்துகின்றார்.

#### பசியின் கொடுமை.

**மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை**
**தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம்.**

இ - ள்: பசி வந்திட - பசிநோயுண்டாக (அதனால்),—மானம் - மானமும்,—குலம் - குலாசாரமும்,—கல்வி - வித்தைத் திறமையும்,—வண்மை - மெய் பேசுதலும்,—அறிவுடைமை - தான் மேற்கொண்ட அறிவும்,—தானம் - ஈகையும்,—தவம் - உயர்ந்த நெறியும்,—உயர்ச்சி - பெருமையும்,—தாளாண்மை - தொழிலூக்கமும்,—தேன் இன் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - தேன் போன்ற இனிமையும் கவாச்செய்கின்ற அன்புமுடைய சொற்களைப் பேசுகின்ற பெண்களை விரும்புதலும் (ஆகிய),—பத்தும் பறந்து போம் - பத்து நிலைகளும் அழிந்துபோகும். எ - று.

குலம் - ஆகுபெயர். அது குலாசாரத்தைக்குறித்து நின்றது. கல்வி - ஆகுபெயர். அது கல்வித்திறமையை யுணர்த்திற்று. வண்மை - மெய்ம்மை. தேனின் என்பதன் இன்னுருபு உவமைப் பொருட்கண் வந்தது. தேனின் சொல்லியர், கசிவந்த சொல்லியர் எனத் தனித்தனி சென்றியையும். கசிவரல் - அன்பு. பறத்தல் - விரைவிற் போதல். பத்தும் என்பதிலுள்ள உம்மை முற்று. போகும் என்பதன் நடுநின்ற குகர உயிர்மெய் கெட்டு போம் என நின்றது.

பசிநோயுறின் இந்திரிய வல்லமை தேய்ந்து பிராணவத்தை யுண்டாதலின், அதனை நீக்குதற் பொருட்டுப் பிறரைக் குறையிரக்க நேரிடும். இதனால் உயிர்க்குறுதி பயவாத இழிவுண்டா மென்பார் பசி வந்திட மானம் பறந்துபோம் என்றார்.

இம்மானத்திற் நீர்தலினாற் குலாசாரங்கெடுதலொருதலையா மென்பார் பசி வந்திடக் குலம் பறந்துபோம் என்றார்.



பசிநோயினால் இந்திரியங்கள் இயங்காமையின் அவைவாயிலாக வெளியாகவேண்டிய கல்வித்திறமை கெடுமென்பார் பசி வந்திடக் கல்வி பறந்துபோம் என்றார்.

இப் பசிப்பிணியை நீக்குதற்பொருட்டு உண்மைக்கு மாறுபடவொழுகுதல் நேரிடும் என்பார் பசி வந்திட வண்மை பறந்துபோம் என்றார்.

பசிப்பிணி யுண்டாங்கால் அதனை நீக்குதற் கேற்ற உபாயஞ் சூழுதலே யன்றி, முன்னின்ற அறிவின் நிலையை உறுதிபெறச் செய்தல் அரிதென்பார் பசி வந்திட அறிவுடைமை பறந்துபோம் என்றார்.

தன் பசி நீங்காக்கால், தானஞ்செய்த லமையாதென்பார் பசி வந்திடத் தானம் பறந்துபோம் என்றார்.

பசிப்பிணி, மனத்தை யடக்கி யொருவழிப்படுத்தித் தவஞ்செய்தலைத் தடுக்குமென்பார் பசி வந்திடத் தவம் பறந்துபோம் என்றார்.

இப் பசிப்பிணியை நீக்குதற்பொருட்டுத் தகாதாரிடத்துங் குறையிரக்க நேரிடுதலின், பெருமை கெடுமென்பார் பசி வந்திட உயர்ச்சி பறந்துபோம் என்றார்.

ஊக்கத்துடன் றொழில்செய்தற்கு இந்திரியங்கள் வல்லமைபெற்றிருத்தல்வேண்டும். பசிப்பிணியால் அவ்விந்திரியங்கள் வலிகெட்டுச் சோருதலின், எத்தொழிலையாயினும் ஊக்கிச் செய்தலாகாதென்பார் பசி வந்திடத் தாளாண்மை பறந்துபோம் என்றார்.

மனம், இந்திரியம், தேகம் என்பவை பசிப்பிணியாற் றளர்வுற்றிருக்குங்கால், அவற்றின் வல்லமையா லுண்டாகின்ற காமவிச்சை நிகழாதென்பார் தேனின் கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பறந்துபோம் என்றார்.

“தேனின் கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல்” என உயர்திணை ஆண்பான்மேல் வைத்தோதினாரேனும், பசிப்பிணி இருபாலார்க்கு முண்மையின் பெண்பாற்குங் கொள்க.

தேகத்தினின்று கடைத்தேறுதற் கேற்றவற்றின் முயலவேண்டுதலின், அத்தேகத்தி னுயிர் நிலைபெறுமாறு பசிப்பிணியை நீக்கி வாழுதல் அவசியமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 27-ம் செய்யுள்.

#### அவதாரிகை.

மேலோதியவாறு அறநெறி நின்று, உடலை நிலைபெறச் செய்து, கடைத்தேறுதலின் முயலுங்கால், முதன்முதல் நான் என்னு மகங்காரத்தைக் களையவேண்டுமென விளக்குவான் றொடங்கி, அனுபவச் சூழ்ச்சியினால் சீவச்செயல் ஈசச்செயல் என்பவற்றை விளக்குகின்றார்.

### அகங்கார நீக்கம்.

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்.

இ - ள்: ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும் - யாதானுமோர் பேற்றைச் சிந்தித்தால் அப் பேறின்றி மற்றொரு பேறு வந்து சித்திக்கும்,—அன்றி அது வரினும் வந்து எய்தும் - அவ்வாறின்றி நினைத்த அப் பேறே வந்து சித்திக்கினுஞ் சித்திக்கும்,—ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் - ஒரு பேற்றைச் சிந்தியாதிருக்கவே அது வந்து சித்திக்கினும் சித்திக்கும் (ஆதலால்),—எனை ஆளும் ஈசன் செயல் - இப் பேறுகள் சித்தித்தல் என்னை ஆளுகின்ற ஈசனது செயலாகும். எ - று.

ஒன்று ஆகுபெயர். அது யாதானுமோர் அனுபவப் பேற்றைக் குறித்துநின்றது. இட்டு என்பது அசைச்சொல். வரினும் நிற்பினும் என்பவற்றிலுள்ள உம்மைகள் ஐயப்பொருள் குறித்துநின்றன. ஆகும் எய்தும் நிற்கும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருள் குறித்துநின்றன. என்னை என்பது எதுகை நோக்கி எனை எனக் குறைந்து நின்றது. ஈசன் செயல் என்பது ஆறும் வேற்றுமைத் தொகை. அது ஈசனது செயல் என விரியும். செயல் என்பதன் பின் ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது.

ஒன்றாகும், வந்தெய்தும், வந்து நிற்கும் என்பவற்றால் இவை அவ்வப்போது செய்யுஞ் செயலால் நேரே நிகழ்வனவல்ல என்பது குறிப்பெச்சம். இங்ஙனம் சிவச்செயலால் நிகழாக்கால், மற்றியாது செயலானுண்டாதல்வேண்டுமென்னும் வினா வெழுமன்றே. ஆதலின், அவ்வினாவுக்கு விடையாக ஈசன் செயல் எனப்பட்டது.

தாம் வினைக்கீடாக நுகரவேண்டிய பயனொன்றிருக்க, அப் பயன் யாதென் றுணரமாட்டாது அஞ்ஞானவயப்பட்டு மற்றொரு பேற்றைச் சிந்தித்தால் சிந்தித்த பேறு வாராது வினைக்கீடாகக் குறித்த பேறே வான்முறையாக வூட்டப்படுமென்பார் **ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்று ஆகும்** என்றார்.

தாம் முன் செய்த வினைக்கீடான பயனை இன்னதென்று தெளியாத நிலையில், அதனையே ஒரோவழிச் சிந்திக்கின்ற சிவச்செயலும், அப் பயனை யூட்டுகின்ற ஈசச்செயலும் ஒருங்கே வந்து பொருந்துதல் கூடுமென்பார் **ஒன்றை நினைக்கின் அது வரினும் வந்து எய்தும்** என்றார்.



தம் வினைக்கீடாக உண்டாகும் பயனை அஞ்ஞானவயத்தாலுணராதிருப்பினும், அப்பயன் ஏற்ற காலத்தில் ஈசனா லூட்டப்படுமென்பார் **ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்** என்றார்.

செய்த வினைக்கீடான பயன் தப்பாது வருதல் மரபாயின், ஒன்றை நினைத்து வினை செய்யின் அப்பேறு தப்பாமற் சித்திக்கவேண்டும். அவ்வாறின்றி ஒரு பேற்றை நினைத்து வினை செய்யுங்கால், மற்றொரு பேறு வருதலானும், யாதொரு பேற்றையும் நினையாதிருக்க ஒரு பேறு வருதலானும், செய்த வினைக்கீடான பயன் வாராதிருத்தலும், செய்யாத வினையின் பயன் வருதலும் உண்டாமென் றேற்படுகின்றன. ஆதலால், பேறுகள் வருதலுக்கும் வாராமைக்கும் காரணம் செய்த வினையா? அன்றி ஈசச்செயலா? அன்றி இரண்டுமா? என்று விசாரிக்கப்படுகிறது.

பிறவிகடோறுந் தொடர்ந்து வினை செய்யப்படுதலானும், அவற்றின் பயன்கள் யாவை யெனச் சீவர்களால் நன்குணரப்படாமையானும், அப் பயன்கள் வரன்முறையே ஈசனாற் றப்பாம லூட்டப்படுதலானும், சீவர்கள் நினைத்தவாறே பேறுபெறாமையால் முன்வினைக்கீடான பயனை யடையவில்லையென்றும், நினையாத பயன் வந்தடைதலால் வினை செய்யாக்காலும் பயனுண்டாமென்றும் ஏற்படாவாயின.

ஆகாமியத்தை வருவித்தற்கும் ஒழித்தற்கும் ஏற்ற செயல்கள் சிவச்செயல் எனப்படும். அவை முறையே விருப்பு வெறுப்பு முதலியனவும், சித்தசுத்தம் விசாரணை முதலியனவுமாம். சீவர்களை ஈடேற்றுங் கருணையினால் அவர் செய்த வினைப்பயனை ஏற்றபெற்றி புசிப்பித்துத் தொலைப்பித்தல் ஈசச்செயல் எனப்படும். இவை உலகசிருட்டி திதி சங்காரம் முதலியனவும், ஆயுள் போகம் என்பவற்றை வரையறை செய்து நுகர்வித்தல் முதலியனவுமாம்.

வினைகளைச் செய்த சீவர்கள் அவற்றின் பயன்களைத் தெரிந்து தாமாகவே நுகரு மாற்றலில்லாராய், வந்தெய்தும் பயன்களை யனுபவிப்பாரா யிருக்கின்றார்கள். ஆதலின், அச்சீவர்கள் தத்தம் வினையின் பயனைத் தாமே தத்தமக் கூட்டும் அதிகாரிகளல்லர் என்பது சித்தித்தது. வினைமுடிபு தானாக வந்து அனுபவங்களைக் கொடுக்குமெனின், அவை சடமாகலின் அங்ஙனங் கொடுத்தல் கூடாதாம். ஆகவும், பயனுக்குரிய அனுபவங்கள் நுகரப்படுதலின், இவற்றை மற்றொரு கர்த்தா நுகர்விக்கின்றானென்பது சித்திக்கிறது. அக் கர்த்தாவே ஈசன்.

இவ்வீசனது செயலினதும் சிவச்செயலினதும் பாகுபாடுகளை நன்குணராது, யாவுந் தன்செயலாகுமென்று நிணியு மகங்காரத்தை அறவேயொழித்துக் கடைத்தேறல்வேண்டுமென்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 28-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முன், அனுபவ நியாயத்தால் அகங்காரமுண்டென்றும், அதனை நீக்க வேண்டுமென்றுங் கூறியதை உணர்ந்தார் கடைத்தேறுந் தகுதியுடைய ராவரென்பதை விளக்கி, இச்செய்யுளில் அவ்வுணர்வில்லாதார் துன்புறு தன் மாத்திரையே யன்றிக் கடைத்தேறுந் தகுதி யடையாரென்பதையும் விளக்குகின்றார்.

### அவாவின் கேடு.

*உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ*
*மெண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த*
*மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்*
*சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.*

இ - ள்: கண் புதைந்த மாந்தர் - உண்மை யுணரும் அறிவுப் பார்வையில்லாத மனிதர்,—உண்பது நாழி - புசிப்பது ஒரு நாழியள வுள்ள அரிசியாலடப்பட்ட அன்னமாகும்,—உடுப்பது நான்கு முழம் - தரிப்பது நான்குமுழ நீளமுள்ள ஆடையாகும், (இச்சிறிய அனுபவத் தில் வாழ்ந்தும்),—நினைந்து எண்ணுவன எண்பது கோடி - அவர் அனுப விக்க நினைந்து அதற்காக எண்ணுகின்ற காரியங்களோ எண்ணிறந்தன வாகும், (ஆதலின்),—மண்ணின் கலம் போல - மட்பாண்டத்தை உப யோகிப்பவர் என்றும் பயங்கரத்தோடு அதனைப் பாவிப்பது போல,— குடிவாழ்க்கை சாம் துணையும் சஞ்சலமே - இவரது குடிவாழ்க்கையும் இறக்குங்காறும் (தான் நினைத்த பயன் வருமோ வாராதோ என்ற) துய ரத்தையுடையதேயாகும். எ - று.

உண்பது என்பது தொகையொருமை. நாழி என்னும் முகத்தல் அளவுக்கருவியின் பெயர் அதனால் அளக்கப்படும் அரிசிக்காய், அவ் வரிசியினாலாக்கப்படும் அன்னத்தை யுணர்த்திநிற்றலின் இருமடியாகு பெயர். முழம் என்னும் நீட்டலளவின் பெயர் அவ்வளவையுடைய கருவிக்காய், அக்கருவியாலளக்கப்படும் ஆடையை யுணர்த்திநிற்றலின் இருமடியாகுபெயர். உண்பது என்னும் வினையாற்றலால் அன்னமென் பதும், உடுப்பது என்னும் வினையாற்றலால் ஆடை என்பதும் வெளி யாயின. எண்பதுகோடி என்பது அவ்வெண்ணை யுணர்த்தாது, என் ணின்மிகுதியை யுணர்த்திநின்றது. ஏகாரம் தேற்றம். தான் அசை.

தான் அனுபவித்தற் கேற்றவற்றை மாத்திர மெண்ணித் துணிந்து அனுபவிக்க முயலாது, தனக்குரிய அனுபவத்தி லமையாது அளவிறந்த பொருட்களை யவாவி முயலுதல் அகங்காரத்தின்பாற்பட்ட அறியாமை யென்பதை விளக்குவார் கண்புதைந்த மாந்தர் உண்பது நாழி உடுப் பது நான்கு முழம் எண்பதுகோடி நினைந்து எண்ணுவன என்றார்.



மட்கலத்தை உபயோகிப்பவர் அவ்வுபயோகத்தாற் பயன் பெற்றும் அக்கலம் உடைந்துபோம் என்னும் அச்சமேலீட்டால் அப்பயனாகிய இன்பானுபவ நீங்கித் துன்பானுபவம் நுகர்தல்போல, இவரும் தனக்கு அனுபவமான நாழியுணவு நான்குமுழவுடை என்பவற்றாலுண்டாஞ் சுகத்தை நுகரினும், அவ்வனுபவத்தி லமையாது, ஆசைமேலீட்டினால் தமக்கமையாத அனுபவங்கள் எப்போது கிடைக்குமென்று துன்புறுத லின் அவ்வின்பமும் நீங்கி என்றும் துன்பமே நுகர்வரென்பார் மண் ணின் கலம் போலச் சாந்துணையுஞ் சஞ்சலமே என்றார்.

தாஞ் செய்த நல்வினைக்கிடான் இன்பானுபவம் உண்டாயவிடத் தும் அவ்வனுபவத்தை உள்ளவாறு நுகராது, மயக்கவயத்தினால் அதற்கு மறுதலையான துன்பநுகரு மறிவீனரென்பதை விளக்குவார் கண் புதைந்த மாந்தர் என்றார்.

நித்தியஇன்ப மடையவேண்டுமென்று சிந்தித்தும் அகங்காரவயத்த ராய் நிற்பின், தமக்கமைந்த இன்பானுபவத்தையு மிழந்து ஆயுள்பரியந் தந் துன்புறுதற் கேதுவாகலின், அவ்வகங்காரத்தை யொழித்தல்வேண்டு மென்று வற்புறுத்தும் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

## 29-ம் செய்யுள்.

### அவதாரிகை.

கடைத்தேறுந் தகுதியுடையார் தம்மாட்டுள்ள பொருளை நிஷ்காமிய மாக உதவின் அது சித்தசுத்தந் தந்து மேல் வீட்டுலகத்தைத் தப்பாது பயக்குமென்பதை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### நிஷ்காமியத் தவப்பேறு.

*மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி*
*யிரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்*
*கற்றா தரல்போற் கரவா தளிப்பரே*
*லுற்றா ருலகத் தவர்.*

இ - ள்: மரம் பழுத்தால் - மரத்தின்கண் பழம் பழுத்தால்,—வா என்று வௌவாலைக் கூவி இரந்து அழைப்பார் - (இப் பழங்களை யுண்ணு தற்கு) வருவாயாக என்று வௌவாலை ஓலமிட்டுக் குறையிரந்து அழைப்பவர் கள்,—அங்கு யாவரும் இல்லை - அம் மரத்தின்கண் எவருமில்லை,— கன்று ஆ அமுதம் சுரந்து தரல் போல் - கன்றை யீன்ற பசு பாலைச் சுரந்து (கன்றுக்கு) ஊட்டுமாறு போல,—கரவாது அளிப்பரேல் - மறைத்து

வையாது (நிஷ்காமியமாகக்) கொடுப்பாராயின்,—அவர் உலகத்து உற்றார் - அத்தகையார் வீட்டுலகத்தை யடைந்தவராவர். எ - று.

மரம் எனப் பொதுப்படக் கூறினாரேனும் எற்புழிக் கோடல் என்னும் உத்தியினால் வௌவால் முதலிய பறவைகளின் உணவுக்கிசைந்த பழங்களைத் தருகின்ற மரங்கள் எனக் கொள்க. மரம் என்பது தொகுதியொருமை. மரம்பழுத்தாலென இடத்துநிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது. பழந் தேடி யுண்ணும் பறவைகளில் வௌவால் சிறந்தமைபற்றி வௌவாலைக் கூறினாரேனும் இனம்பற்றி ஏனைய பழமுண்ணும் பறவைகளையுங் கொள்க. யாவரும் என்பதிலுள்ள உம்மை முற்று. இல்லையென்பதன் பின் உவமச்சொல்லும் அதன் உவமேயமுந் தொக்குநின்றன. ஆகலின், இதன்பின் "வௌவால் தானே தேடிவருதல் போல, கொடுத்தற்குரிய பொருளிருக்கு மிடத்தில் அப் பொருளை வாங்கி யனுபவிக்க விரும்பினோர் எவரும் வருந்தி யழையாதிருப்பத் தாமே வந்து சேருவர். அங்ஙனம் வந்து சேர்ந்தார்க்கு" என வருவித்திசைக்க. கன்று+ஆ=கற்றா என்றாயிற்று. அது இரண்டனுருபும் பயனு முடன்றொக்க தொகை. கன்றையீன்ற பசு என விரியும். உறுவார் எனற்பாலது தெளிவுபற்றி உற்றாரென இறந்தகாலமாயிற்று.

வௌவால் தன் உணவுக்குரிய பழங்களின் மணத்தை அப் பழத்திற் பரிசித்துவருங் காற்றின் சுவாசத்தா லறிந்து, அந்த மணத்தின் வழியே அப் பழமிருக்குமிடத்திற்கு விரைந்துசெல்லுத லியல்பென்பார் மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூவி இரந்து அழைப்பார் யாவரும் அங்கு இல்லை என்றார்.

இவ்வாறே, நல்கூர்ந்தார் தமக்கு வேண்டும் பொருட்களை வரைவின்றி யுதவுவாரைக் கேள்வியினா லறிந்து ஆண்டுச் செல்வார். ஆதலின், கொடுப்பதற்கு இரப்பாரை வலிந்தழைக்க வேண்டியதில்லை என்பதை விளக்குவார் மேற்கூறிய உவமானத்தைக் கூறி, உவமேயமாகிய இரப்பாரைக் கூறிற்றிலர். அது மேல் கரவாதளிப்பரேல் என்பதனால் எளிதில் விளங்குகின்றது.

கன்றையீன்ற பசு தன்னிடத்துள்ள பாலை மறைத்துவையாது தானீன்ற கன்றுக்கு முழுவதையுஞ் சுரந்து கொடுத்துதவுதல் கடப்பாடாதல்போல, ஆன்மசுடேற்றத்தை விரும்பிப் பொருட்களின் அநித்தியத்தையும் நிஷ்காமியத் தவத்தின் பேறாகிய அறிவின் நித்தியத்தையும் நன்குணர்ந்தோர் தம்பாலுள்ள பொருட்கள் முழுவதையுங் கரந்துவையாது தகுதிநோக்கி ஏற்றபெற்றி யிரப்பாருக்குதவி, அதனாற் சித்தசுத்தத்தையும், அதுவாயிலாக ஞானத்தையும் பெறுதல் இன்றியமையாத கடப்பாடென்பார் கற்று அமுதம் சுரந்து தால்போல் கரவாது அளிப்பரேல் என்றார்.



இந் நிஷ்காமியத் தவம் வீட்டுலகத்தை யுதவுதல் மாத்திரையே யன்றி, இம்மையிற் பூதவுடம்பழியினும் புகழுடம்பைத் தப்பாது நிறுத்திவிடுமென்பதும் போதர இரட்டுறமொழிதலென்னு முத்தியால் தெளிவுப்பொருடருமாறு உலகத்து உறுவார் என்னாது, உலகத்து உற்றார் என இறந்தகாலத்தாற் கூறினார். இந் நிஷ்காமியத் தவம் வீட்டுலகத்தைத் தப்பாது பயக்குமென்பதை முன் "இம்மைக் கிம்மை" என்னுஞ் செய்யுளகலத்திற் காண்க.

தம்மாட்டுள்ள பொருளைக் கடைத்தேறுதலிற் பயன்படுத்துமாறு வற்புறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 30-ம் செய்யுள்.

### அவதாரிகை.

நிஷ்காமியத் தவஞ் செய்யுங்கால், முன்வினைக்கிடான துன்பானுபவம் வரினும் தளராது அவ் வனுபவங்களைப் பொறுமையோ டனுபவித்துக்கொண்டு செயற்பாலவற்றில் உறுதிபெற நிற்றல்வேண்டுமென்பதை இச் செய்யுளில் வற்புறுத்துகின்றார்.

### துன்பத்திற் கஞ்சாமை.

*தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்*
*பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே*
*யொறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா*
*வெறுத்தாலும் போமோ விதி.*

இ - ள்: தாம் தாம் முன் செய்த வினை - அவரவர் முற்பிறப்பிற் செய்த வினைப்பயனை,—பூந் தாமரையோன் பொறிவழியே - அழகிய தாமரைமலரிலிருக்கின்ற பிரமன் விதித்த முறையாக,—தாமே அனுபவிப்பார் - அவரவரே அனுபவிப்பார்கள்,—வேந்தே ஒறுத்தாரை - அரசன் தானாகவே கடிந்தவர்களை,—ஊர் எல்லாம் ஒன்றா வெறுத்தாலும் என் செயலாம் - ஊரவர்களெல்லாரும் ஒருங்குசேர்ந்து (கடிந்த அரசனைக்) கோபித்தாலும் (அவ் வரசதண்டனையை நீக்குதற்கு) யாது செய்தல் கூடும்? (யாதுஞ் செய்ய முடியாது. அதுபோல),— விதி போமோ - ஊழ் (அனுபவிக்கப்பட்டாலன்றி) நீங்குமோ? (நீங்காது.) எ - று.

தாம் தாம் என்னும் அடுக்கு பன்மைபற்றி வந்தது. இவ் வடுக்குக் கிசையத் தாமே யென்பதற்கு அவரவரே என்று பொருள் கூறப்பட்டது. தாமும் என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. பொறிவழி என்பது இறந்தகால வினைத்தொகை. அது பொறித்த வழி என விரியும்

பொறி - நியதி. வழியே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. வினை-ஆகுபெயர். அது வினையின் பயனை உணர்த்திநின்றது. வேந்து-ஆகுபெயர். அது அரசனை உணர்த்திற்று. வேந்தே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. எவன் என்னும் வினாப்பெயர் என் என்றாய் இன்மைப் பொருள் குறித்துநின்றது. ஊர் - ஆகுபெயர். அது ஊரிலுள்ள மக்களை உணர்த்திற்று. ஒன்றாக என்பது ஈறுதொக்கு ஒன்றா என நின்றது. இதன் பின் சேர்ந்து என்னுஞ் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது. வெறுத்தாலும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய வெச்சம். அது குறையிரந்து கேட்டால் மாத்திரையன்றி என்னும் பொருளையுந் தழீஇநின்றது. போமோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறை. அது போகாது என்னும் பொருளைத் தந்துநின்றது. என்செயலாம் என்பதன் பின் அதுபோல என்பது தொக்குநின்றது.

அவரவர் செய்த நல்வினை தீவினைகளின் பயனை அவரவரே யனுபவித்தல் மரபென்பார் தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார் என்றார்.

அவ் வினை சடமாகலின், தானாக இயங்காது. அதனை ஏற்றபெற்றி படைத்தற்றொழிலின் கர்த்தாவாகிய பிரமன் நுகர்விப்பான் என்பார் பூந்தாமரையோன் பொறிவழியே யனுபவிப்பார் என்றார்.

குடியானவர்களு ளொருவரை மற்றொருவர் கடிந்தால் அங்ஙனங் கடிய முயன்றாரை அரசன் தடுத்தல் கூடும். அத்தகைய அரசன் தானாகவே குடியானவரை யொறுக்க முயன்றால் அதனைத் தடுக்குமாறு ஊரிலுள்ள மக்களனைவருங் குழுமி யெங்ஙன முயலினும் அதனை நீக்க முடியாதென்பார் வேந்தே ஒறுத்தானை ஊரெல்லாம் ஒன்றா வெறுத்தாலும் என் செயலாம் என்றார்.

அதுபோல, முன்செய்த வினைக்கீடாக அனுபவிக்கப்படுமாறு இம்மையில் ஈசனால் வரையறுக்கப்பட்ட துன்பானுபவங்கள் எங்ஙனமுயலினும் நீக்கப்படாது, தம்மால் மாத்திரம் அனுபவிக்கப்பட்டே தீரல்வேண்டும் என்பதை விளக்குவார் விதி போமோ என்றார்.

இதில், தாம் அனுபவிக்குந் துன்பானுபவமெல்லாம் முன்செய்த தீவினைப்பயனாயின், வலியானொருவன் மெலியானைக் காரணமின்றித் தண்டித்துச் செய்த துன்பமும் அம் மெலியான் முன்செய்த தீவினைப்பயனாக வேண்டுமென்றும், அவ்வலியானுக்கு அச்செய்கை இம்மையிற் செய்த ஆகாமியமாகாதென்றும் ஏற்படுகின்றன. ஆகவின், ஒருவன் இம்மையில் மற்றொருவனுக்குச் செய்த துன்பச்செயல் அதனை ஏற்றானது முன் தீவினைப்பயனாகுமா? ஆகாதா? என்று விசாரிக்க வேண்டிற்று.



முற்பிறப்பிற்செய்த தீவினைப்போகங்கள் மற்றொருவருடைய நினைவு காரணமின்றி இயல்பாகவே உண்டாகும். உதாரணமாக: நீர், நெருப்பு, இடி, பூகம்பம், நோய், வறுமை என்பவற்றால் வருவனவும், மற்றொருவர் நினையாப்பிரகாரஞ் செய்தனவுமாம். இவ்வாறன்றி, ஒருவனுக்கு மற்றொருவன் எண்ணிச்செய்யுந் துன்பமும் செய்யப்படுபவனது பிராரத்துவமாயின் இவன் அவனுக்குச் செய்யும் ஆகாமியமும் அவனது பிராரத்துவமாகலாம். இங்ஙனம் கூறப்புகின் முடிவின்றி அனவத்தாதோடமுண்டாகலின், ஒருவன் நினைத்துச் செய்யுந் தீவினைகள் அல்லது துன்பங்கள் மற்றொருவனுடைய வினைப்போகமென்பதும், செய்பவனுடைய ஆகாமியமன்றென்பதும் சுருதியுத்தியனுபவங்க ளொன்றற்கேனும் ஒருசிறிதும் பொருந்தாத வெற்றுரையாகுமென்பது துணிபாகிறது. ஆகவே, பிறர் தமக்குச் செய்யும் ஆகாமியங்களைத் தமது பிராரத்துவமென்று மயங்கி வாளாவிருத்தல் கூடாதென்பதும், அங்ஙனஞ் செய்தாரை ஏற்றவாறு அரசன் முதலிய அதிகாரிகளாலாயினும், தாம் பிறருதவிகொண்டாயினும் நீதியிற் பிறழாது நின்று அத் துன்பங்களைத் தடுக்கவும், அவற்றைச் செய்தாரை யொறுத்து நல்வழிப்படுத்தவும் துணியவேண்டுமென்பதும் சித்திக்கின்றன.

அன்றியும், தாந்தாமுன் செய்தவினை தாமேயனுபவிப்பார் என்றதனால் ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவரைத் தீண்டாதென்பது சித்தித்தது. ஆதலின், ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவரைத் தீண்டுமா? தீண்டாதா? என்று விசாரிக்கப்படுகிறது. ஒருவர் செய்த வினைப்போகம் மற்றொருவரைத் தீண்டுமாயின் ஒருவர் அனுபவிக்கின்ற அனுபவங்களுட் சிறிதுபாகத்தை மற்றையாரும் அவரிடத்துப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். அவ்வாறின்றி, ஒருவர் அனுபவிக்கின்றவற்றை மற்றொருவர் பெற்றுக்கொள்ள முடியாமை அனுபவசித்தமாகலின் அவரவர் செய்த வினைப்பயனையே அவரவர் அனுபவிக்கவேண்டுமென்பது துணிபாகிறது. உதாரணமாக: ஒருவன் நோயினால் வருந்தும்போது மற்றொருவன் அவனுக்கிரங்கி அவனுடைய துன்பத்திலொருபாகத்தையேனும் அவனிடம் பெற்றுத் தானனுபவிக்கவும், அதனால் அவனுடைய துன்பானுபவத்தைக் குறைக்கவும் முடியாது. அன்றியும், நூறு வயது வரை வாழவேண்டியவனொருவனிடத்து ஐம்பது வயது வரை வாழவேண்டிய மற்றொருவன் எவ்வாறான உதவிபெறினும் தனக்குரிய ஐம்பதுவயதேயன்றி ஒருகணமேனுங் கூடப்பெறுவதில்லை. இவ்வாற்றால் அவரவர் செய்த வினையின்பயன் அவரவர்க்கே அனுபவமாமன்றி மற்றொருவரை யடையாதென்பது சித்தம்.

வினைப்போகம் நுகருங்கால் இன்பத்தில் மகிழ்ந்தும், துன்பத்தில் வருந்தியும் அவற்றிலீடுபடாது, இவை ஊழால் விளைந்தனவென்று துணிந்து, தாமெடுத்துக்கொண்ட காரியமாகிய ஆன்மஈடேற்றத்தில் முயலுதல் வேண்டுமென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 31-ம் செய்யுள்.

அவதாரிகை.

ஆன்மஈடேற்றத்தில் முயலுங்கால் உலகஇன்பத்திற் கேற்றவற்றி லெல்லாம் ஈடுபடாது, அவ்வவற்றி னுண்மைகளை நன்குணர்ந்து, தாழ்வு தருபவற்றைத் தள்ளவும், உயர்ச்சி தருபவற்றைக் கொள்ளவும் வேண்டுமென்பதை இச்செய்யுளில் விளக்குகின்றார்.

தூயவை தேர்தல்.

**இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலு**
**மொழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய**
**வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்**
**தாரத்தி னன்று தனி.**

இ - ள்: இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று - குற்றமுடைய செய்யுளினும் அஃதில்லாத சொல் நல்லது,—இழுக்கு உடைய உயர்குலத்தில் - ஏற்ற நல்லொழுக்கமில்லாத உயர்குலத்திலும்,—சாலும் ஒழுக்கம் நன்று - நிறைந்த நல்லொழுக்கம் (இழிகுலத்திலிருப்பினும்) நல்லது,—வழுக்கு உடைய வீரத்தில் - தவறுடைய வீரத்திலும்,—விடா நோய் நன்று - தீராப் பிணி நல்லது,—பழிக்கு அஞ்சா தாரத்தில் - வசைக்குப் பயப்படாத மனைவியோடு வாழுதலினும்,—தனி நன்று - தனியே வாழுதல் நல்லது. எ - று.

இழுக்குடைய, வழுக்குடைய என்பவை முறையே இழுக்கையுடைய வழுக்கையுடைய எனவிரிதலால் இரண்டாம்வேற்றுமைத்தொகை. பாட்டில், உயர்குலத்தில், வீரத்தில், தாரத்தில் என்பவற்றிலுள்ள இல்லுருபுகள் அளவின் உயர்ச்சியை விளக்கிநின்றன. விடாத என்பதனீறு தொக்கு விடா என நின்றது. தாரம், தனி என்பன ஆகுபெயர்கள். அவை முறையே தாரத்துடன் கூடிவாழுதலையும் தனித்து வாழுதலையும் உணர்த்திநின்றன.

சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக்குற்றம் ஆகிய குற்றங்களமைந்த பாட்டென்பார் **இழுக்குடைய பாட்டு** என்றார். இழுக்குடைய பாட்டினால் குறித்த பொருளை ஐயந்திரிபறத் தெளிதல் கூடாமையானும், சொல்விளக்கத்தால் ஐயந்திரிபற விளக்குதல் கூடுமாகலானும் **இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று** என்றார்.

உயர்குலத்திற் கேற்ற ஒழுக்கமின்மையினால் இழிவடைதலானும், பொதுமையான ஒழுக்கங்களில் நிறைந்துவருதலால் எக்குலத்தினரும் உயர்வடைதலானும், ஒழுக்கம் இல்லாத உயர்குலத்தினும் பார்க்க ஒழுக்கம் நிறைந்த இழிகுலம் நன்மை பயக்குமென்பார் **இழுக்குடைய உயர்குலத்திற் சாலும் ஒழுக்கம் நன்று** என்றார்.



புறங்காட்டி ஓடுவாரையுந் தஞ்சம்புகுந்தாரையும் அடர்த்துதல், ஒத்த வல்லமையில்லாரை அடர்த்துதல் முதலியவை அமைந்த வீரத்தினால் என்றும் பழிபாவங்களை விளைவிக்க நேரிடும். ஆதலின், அவ்வீரமுடையார் அக்குற்றங்களைச் செய்து கெடுதலினும் பார்க்க, அவை செய்தற்குத் தடையாயுள்ள தீராநோயுடன் வாழின் அப்பழிபாவங்கள் வந்தடையாவென்பதை விளக்குவார் **வழுக்குடைய வீரத்தில் விடாநோய் நன்று** என்றார்.

பழிக்கஞ்சாத மனைவியோடு கூடிவாழ்ந்து புத்திரப்பேறு முதலியவற்றைச் செய்யினும், அப்பழிக் கிசைந்திருத்தலின் அறிவொழுக்கங்களையிழந்து மறங்களைச் செய்து கெடுதன்மாத்திரையேயன்றிக் குலங்களுக்குந் தீராவசையை யுண்டாக்குவரென்பதையும், சந்ததிவிருத்தியின்றித் தனியேயிருப்பினும் தன்னையோம்புதற்கேற்ற உறுதிநெறிகளிற் பயின்று கடைத்தேறலாமென்பதையும் விளக்குவார் **பழிக்கஞ்சாத் தாரத்தில் தனி நன்று** என்றார்.

செய்யுளும், உயர்குலமும், வீரமும், தாரமும் தத்தமக்கேற்ற இலக்கணங்களோடு அமைந்தால் மாத்திரங் கொள்ளவும், அமையாக்கால் தள்ளவும் வேண்டுமென்பதை வலியுறுத்தலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.

### 32-ம் செய்யுள்.

அவதாரிகை.

உலகவாழ்வின்பொருட்டு விளைகின்ற செல்வம் அநித்தியமாகலின் அதனை நிலைபேறுடையதென்று கடைப்பிடித்தொழுகாது, என்றும் நிலைபேறான நித்தியஇன்பமடைதற்குத் தருமத்தையே கடைப்பிடிக்கவேண்டுமென்று இச்செய்யுளில் விளக்குகின்றார்.

அறவுறுதி.

**ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ**
**மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்**
**தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக**
**வுண்ணீர்மை வீறு முயர்ந்து.**

இ - ள்: மா நிலத்தீர் - பெரிய பூமியிற் பிறந்தவர்களே,—செல்வம் - செல்வமானது,—ஏறிடும் - ஒருகால் வளரும்,—மாறிடும் - ஒருகால் அழியும், (ஆதலின்),—ஆறு இடு மேடும் மடுவும் போலாம் - ஆற்று வெள்ளத்தினால் உண்டாக்கப்படும் மேடும் பள்ளமும் போன்றதாம், (இதனால் இச்செல்வமிருக்குங் காலத்தில்),—சோறு இடும் - பசியுடையார்க்குப் போசனங் கொடுங்கள்,—தண்ணீரும் வாரும் - தாகமுடையார்க்குக் குளிர்ந்த சலத்தை

யும் வாருங்கள்,—தருமமே சார்பாக - இந்தத் தருமமே காரணமாக,—உள்நீர்மை உயர்ந்து வீறும் - என்றும் இடையறாதுள்ள மெய்யுணர்வு மிகுந்து உறுதிபெறும். எ - று.

சோறிடும் என்றதனால் பசியுடையார்க்கென்பதும், தண்ணீரும் வாரும் என்றதனால் தாகமுடையார்க்கு என்பதும் வருவிக்கப்பட்டன. ஆறு - ஆகுபெயர். அது ஆற்றின் பாய்ச்சலை யுணர்த்திநின்றது. சார்பு ஈண்டு காரணப்பொருட்கண் வந்தது. உள் நீர்மை - என்றும் நிலையுதலுடைய தன்மை. வீறல் - உறுதிபெறல்; அல்லது வலிபெறல். மேடும் மடுவும் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணுப்பொருட்கண் வந்தன. இடும், வாரும் என்பன வியங்கோள். அவை முறையே இடுவீராக, வார்ப்பீராக என விரியும். தண்ணீரும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சம். தருமமே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். ஆறிடுமேடும் மடுவும் போலச் செல்வம் மாறிடுமேறிடும் என்பது முரணிரனிறை. அது மாற்றிப் பொருள்கொள்ளப்பட்டது.

ஆற்றுப் பாய்ச்சலால் ஒரோவிடத்து மேடாக்கப்பட்ட இடம் பின் அதனாற் பள்ளமாக்கப்படுதல் போல, நல்வினைப் பயனாலுண்டான செல்வம் தீவினைப்பயனா லழிந்துவிடுமென்பார் **ஆறிடு மேடும் மடுவும் போல் செல்வம் ஏறிடும் மாறிடும்** என்றார்.

இவ்வாறு செல்வம் நிலையற்றதாகலின் நல்வினைப்பேற்றாலுண்டான செல்வவளர்ச்சிக் காலத்திற்றானே தகுதியறிந்து தருமத்தைச் செய்து நன்னிலையை யுறுத்தவேண்டுமென்பார் **சோறிடும் தண்ணீரும் வாரும்** என்றார்.

இவ்வாறு செய்யுந் தருமங் காரணமாக, அஞ்ஞானவயத்தாற் றோன்றி யழிகின்ற உலகானுபவ விருப்பம் நீங்கி, என்றும் நிலையுதலுடைய ஞான நிலை வெளிப்பட்டு உறுதிபெறுமென்பார் **தருமமே சார்பாக உண்ணீர்மை உயர்ந்து வீறும்** என்றார்.

மாநிலத்தீர் என்பதற்கு, புண்ணியமாம் பாவம்போம் என்னும் முதலாஞ் செய்யுளில் மண்ணிற் பிறந்தார்க்கு என்பதற் குரைத்த விரிவை யொட்டி யுரைத்துக்கொள்க.

சோறிடும், தண்ணீரும் வாரும் எனச் சிறந்த அறங்களைக் கூறினாரேனும், தருமமே சார்பாக எனப் பொதுப்படக் கூறுதலின் ஏனைய அறங்களையும் வருவித்துக்கொள்க.

ஆற்றிலுள்ள மேடு பள்ளமாகுங் காலம் இதுவெனத் தோன்றாதவாறு போலத் தம்மாட்டுள்ள செல்வம் நீங்குங்கால மிதுவென்று முன்றெரிதல் கூடாமையின் அச் செல்வ மிருக்குங் காலத்திற்றானே அறஞ் செய்து மேலோராகுக என்று வற்புறுத்தலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.



## 33-ம் செய்யுள்.

### அவதாரிகை.

முக்குணங்களுள் தாமதம் மூடவிருத்தியைக் கொடுத்தலின் அதனை நீக்கி, ஏனைய உணர்வுடைய இராசதம், சாத்விகம் என்னு மிரண்டில் ஆன்ம ஈடேற்றத்திற்குச் சாத்விகம் இன்றியமையாததென்பதை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### சாத்விககுண மேன்மை.

**வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்**
**பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்**
**பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்கு விடும்.**

இ - ள்: வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - யானையின்மேற் பட்டு ஊடுருவுகின்ற அம்பானது பஞ்சப் பொதியைத் துளைக்கமாட்டாது. (அதுபோல),—வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் - வன்மையானவை மென்மையானவற்றை வெல்லமாட்டாவாம்,—நெடு இரும்பு பாரைக்கு நெக்கு விடா பாறை - நெடிய இருப்புப் பாரையினாற் பிளவுபடாத கற்பாறையானது,—பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் - பசிய மரத்தினது வேரினாற் பிளவுபடும். (அது போல, மெத்தெனவை வெட்டெனவையை வெல்பவாம்.) எ - று.

வெட்டெனவு - வன்மை. அது இராசதகுணத்தை யுணர்த்திற்று. உருவுதல் - ஊடறுத்துச் செல்லுதல். பாரைக்கு வேருக்கு என்பவற்றிலுள்ள குவ்வுருபுகள் ஆலுருபுகளாகத் திரித்துப் பொருளுரைக்கப்பட்டன. மரத்தின்வேர் ஆறாம்வேற்றுமைத் தொகை. அது மரத்தினது வேர் என விரியும். இரும்புப்பாரை இருப்புப்பாரை என்றாயிற்று. இரும்பாற் செய்த பாரை என விரியும். ஆதலின், மூன்றனுருபும் பயனு முடன்றொக்க தொகை. இருப்புப் பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் என்றமையின், மென்மையானவை வன்மையானவற்றை வெல்லும் என்பது விளங்கிற்று. விளங்கவே, மெத்தெனவை வெட்டெனவையை வெல்பவாம் என்று வருவிக்கப்பட்டது.

யானையினது வலியதோலமைந்த உடலை ஊடுருவிச் செல்லுகின்ற வலிய அம்பானது மென்மையான பஞ்சப்பொதியிற் பாயாது தணிதல் போல காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைக் கோரங்களை யடக்கிய இராசதகுணமானது எவற்

றையும் பொறுக்கின்ற காருண்ணியமுடைய சாத்விககுணத்தை வெல்லாதென்பார் வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது என்றார்.

இருப்புப் பாரையினாற் சிறிதும் பிளவுபடாத கற்பாறையானது பசிய மரத்தினது நுண்ணிய வேரினாற் பிளவுபடுதல் போல, மேலோதிய அறுவகைக் கோரங்கள் அமைந்த இராசதகுணத்தால் வருங் குற்றங்களைச் சாத்விககுணம் மாற்றிவிடுமென்பார் நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் என்றார்.

உலகம் முதலிய தோற்றன்மாத்திரையாகக் காணப்படுகின்றவற்றை இன்பம் பயப்பனவென மயக்குகின்ற இராசதகுண வயப்பட்டொழுகின், அங்ஙனந் தோற்றப்பட்ட பொருட்களின் அழிவில் அவற்றாலாகிய அனுபவங்களு முடனழிந்து துன்பந் தருதலானும், அத் தோற்றமான பொருட்களா லுண்டாகும் அனுபவங்களெல்லாம் அழிதன்மாலையவெனத் துணிந்து, அவற்றிற் பற்றுக்கோடுசெய்யாது வருவனவற்றைப் பொறுமையோடனுபவிக்கின்ற சாத்விககுண வயப்பட்டொழுகின் துன்பத்தினின்று நீங்கி உயிர் உறுதிபெறுதலானும், அவ்விராசதகுண வயமாக நின்று கெடுநிலை நீக்கி, இச் சாத்விககுண வயமாக ஒழுகிக் கடைத்தேறவேண்டுமென வற்புறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 34-ம் செய்யுள்.

### அவதாரிகை.

கடைத்தேற விரும்பினோர் சகல பொருட்களிலும் பற்றற்று நிற்றல்வேண்டுமென்னும் உறுதிமொழியை உள்ளவாறுணராது, தமது சீவன நிறைவுக்கேற்ற பொருட்களெல்லாவற்றையும் வாளா இழந்து துன்புற்று, எடுத்துக்கொண்ட காரியமாகிய கடைத்தேறலுக்கு இடையூறு வருவித்தலின், அவ் விடையூறு நீக்குமாறு தனக்குண்டான சீவன உறுதியைக் கைவிடாது அதனை ஆதாரமாகக் கொண்டு தளர்வின்றி நின்று கடைத்தேறல் வேண்டுமென்பதை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### சுயாதீனசீவன மேன்மை.

**கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி**
**னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை**
**யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்**
**செல்லா தவன்வாயிற் சொல்.**

இ - ள்: கல்லானே ஆனாலும் - (ஒருவன்) வித்தை பயிலாதவனாயிருந்தாலும்,—கை பொருள் ஒன்று உண்டாயின் - அவனிடத்து



(சீவன உறுதிக்கேற்ற) பொருள் ஒன்று இருக்குமாயின் (அது காரணமாக),—எல்லாரும் அங்கு சென்று எதிர்கொள்வர் - யாவரும் அவனிருக்குமிடத்துச் சென்று (கொண்டாடி, அவனைத் தாமிருக்குமிடத்திற்கு வருமாறு குறையிரந்து அழைத்து, அவன் வரும்போது தாம் அவனை) எதிர்கொண்டு உபசரிப்பார்,—இல்லானை இல்லாளும் வேண்டாள் - (சீவன உறுதிக்கேற்ற பொருள்) இல்லாதவனை (அவன்) மனைவியும் விரும்பாள்,—ஈன்று எடுத்த தாய் வேண்டாள் - (அவனைப்) பெற்று வளர்த்த அன்னையும் விரும்பாள்,—அவன் வாயில் சொல் செல்லாது - அவ் வில்லாதவனது வாயிலிருந்து பிறக்குஞ் சொற்கள் (எவராலும்) நன்குமதிக்கப்படமாட்டா. எ - று.

கல்லானே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். ஆனாலும் என்பதிலுள்ள உம்மை இழிவுசிறப்பு. எல்லாரும் என்பதிலுள்ள உம்மை முற்று. இல்லாளும் என்பதிலுள்ள உம்மை உயர்வுசிறப்போடெச்சம். தாய் என்பதன் பின் உயர்வுசிறப்பும்மை தொக்குநின்றது. அது தாயும் என விரியும். மற்று என்பது வினைமாற்று. சொல் என்பது தொகையொருமை. அதற்கியையச் செல்லாது என்னும் ஒருமை வினை கொடுத்தார். அவன் என்பது ஈண்டு அண்மைச்சுட்டு. அது இல்லானை உணர்த்திநின்றது.

உயிர் உடம்பில் உறுதிபெற நின்று அதுகாரணமாக நல்லுணர்வு பெறுதல் இன்றியமையாமையின், அங்ஙனம் உடம்பில் உயிர் நிற்றற்கேற்ற சீவனஉறுதிப் பொருள் ஒப்பற்றதென்பதை விளக்குவார் ‘‘கைப்பொருள் உண்டாயின்’’ என்னாது, ‘‘ஒன்று’’ என்று அடைபுணர்த்திக் கூறினார்.

தொழிலானும் ஆதனம் முதலிய பிறவற்றாலும் வரும் பொருட்களும், கடன்கொடுத்துச் சேமித்த பொருட்களும் அவ்வவற்றின் காலஎல்லையில் வந்து உதவுகின்றன. இவற்றைப் பெறுமுன், தன் கைவசமாயிருந்து சீவனத்தைத் தளர்வின்றி உறுதிபெறச் செய்யும் பொருளென்பார் பொருளென வாளாகூறாது ‘‘கைப்பொருள்’’ என்றார்.

சீவனஉறுதி விரும்பாதார் எவருமிலர். ஆகலின், அத்தகையார் அச் சீவனஉறுதி பெற்றாரை நன்குமதித்தல் இயல்பென்றும், அவ்வியல்புபற்றி அவர் இருக்குமிடத்திற் சென்று கண்டும், தம்மோடு அளவளாவுதற்கேற்ப ஒழுகியும், அவர் தம்மாட்டு வருங்கால் எதிர்கொண்டு உபசரித்தும் வாழுவார் என்றும் விளக்குவார் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் என்றார்.

சீவனஉறுதிக்கேற்ற கைப்பொருளின்றிக் கல்விமாத்திர முடையாரை அறிவுபெற விரும்பினோர், அறிவுபெற்றோராகிய இருபாலாரும்

மாத்திரமே நன்குமதிப்பர்; ஏனையர் நன்கு மதியார். சீவன உறுதிக்கேற்ற கைப்பொருளுடையார் கல்லாதவராயினும் அவரைக் கல்வியறிவுடையார், இல்லார் ஆகிய எப்பாலாரும் ஒருங்கே நன்குமதிப்பர் என்பார் கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் என்றார்.

சீவனஉறுதிக்கேற்ற பொருள் இல்லாதானோடு கூடி இல்லறஞ் செய்வாள், அவ்வறத்துக்கேற்ற பொருளின்மையானும், தற்காப்புக்கேற்ற தகுதியின்மையானும் அவனுடன் ஏற்ற அன்புபூண்டு அளவளாவி வாழுதலை விரும்பாள் என்பார் இல்லானை இல்லாளும் வேண்டாள் என்றார்.

பலகாலந் தவஞ்செய்து, பத்துமாதமுஞ் சுமந்து, அரிதாய் ஈன்ற காலம் முதல் தனது தவப்பேறெனக் கருதிப் பேரன்பு பூண்டு, பாது காத்து வளர்த்த அன்னையும், புதல்வன் சீவனஉறுதிக்கேற்ற பொருளில்லானாயின் "எனது தவப்பேறிருந்தபடியென்னே" என்று கவன்று அவன்மீது அன்புபூண்டொழுகமாட்டாளென்பார் "தாய் வேண்டாள்" எனவாளாகூறாது ஈன்று எடுத்த தாய் வேண்டாள் என்றார்.

ஈன்ற காலம் முதல் தாயும், இல்வாழ்வு பூண்ட காலம் முதல் மனைவியும் அன்புபூண்டொழுகுதல் மரபு. அத்தகையாரே இத்தகையானை விரும்பார். எனவே, ஏனைய தந்தை, மைந்தர், துணைவர், சுற்றத்தார், நண்பர் முதலியோர் விரும்பமாட்டாரென்பது சொல்லாமலே விளங்கிற்று.

சீவனஉறுதியையே உயர்வாகக் கொண்டொழுகும் இயல்புடைய உலகினர் யாவரும் இவனது சீவனஉறுதியின்மையைக் கண்டு "இவன் தனது சீவனஉறுதியை நிலைபெறச்செய்யும் ஆற்றலில்லாதானாய் இருந்தவின் எமது சீவனஉறுதிக்கேற்ற புத்திபுகட்டும் ஆற்றலுடையவனல்லனே" என்று இவன் கூறுவனவற்றைச் சிறிதும் நன்குமதிக்கமாட்டார் என்பார் அவன் சொல் செல்லாது என்றார்.

அவன் சொல்லுஞ் சொற்கள் உயிர்க்குறுதிபயக்கத்தக்க அரிய மொழிகளாயினும் என்பது போதர "சொல்" என்றல் அமைவுடைத்தாகவும் "வாயிற்சொல்" என வேண்டாது கூறினர்.

மானுடவாழ்வினின்றும் சீவனஉறுதி இல்லையாயின் அஃது அவ்வொன்றனையுமே இன்றியமையாததாகக் கொண்டு அதற்கேற்ப முயலுமேயன்றி ஆன்மஈடேற்றத்திற் சிறிதும் முயல நேராது. ஆகவின், ஆன்மஈடேற்றத்தின் முயலுதற்குச் சீவனஉறுதியைச் சுயாதீனமாகப் பெறுதலே முக்கியம் என்று வற்புறுத்துதலின் இச்செய்யுள் நல்வழியாயிற்று.



35-ம் செய்யுள்.

அவதாரிகை.

மானுடயாக்கை எடுத்தோர் செயற்பாலனவற்றைத் தாமே நன்குணருங் கடப்பாடுடையர். அஃதிலரேல், அறிஞரால் உணர்த்தப்படுங்கால் தப்பாதுணருங் கடப்பாடுடையர். இவ் விருதிறத்தினருமே கடைத்தேறுந் தகுதியினரென்பதையும், பிறவிப்பயனை அறிஞர் உணர்த்தினும் அதனை உற்றுநோக்கி உணருமாற்றலில்லாதார் தம் பிறவிக்கேற்ற பயனை ஒருசிறிதும் அடையார் என்பதையும் இச் செய்யுளில் விளக்குகின்றார்.

கடைத்தேறுந் தகுதித்திறன்.

பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுநு
மேவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

இ - ள்: பூவாதே காய்க்கும் மரமும் உள - மலராமலே காய்ப் பயன் தருகின்ற மரங்களுஞ் சிலவுள (அதுபோல),—மக்களுளும் ஏவாதே நின்று தாம் உணர்வார் உளர் - மானுடருள்ளும் (பிறரால்) தூண்டப்படாமலே தாமாக (உண்மை நிலையை) உணர்ந்துகொள்ள வல்லவருமுளர்,—தூவா விரைத்தாலும் நன்று ஆகா வித்து என - தூவி விதைத்தாலும் முளைத்துப் பயன்கொடாத விதையைப் போல,—பேதைக்கு உரைத்தாலும் உணர்வு தோன்றாது - உணருந் தகுதியில்லாதானுக்கு (அறிவுண்டாதற் கேற்ற உறுதிமொழிகளை) விளக்கிக் கூறினாலும் மெய்யறிவு வெளிப்படாது. எ - று.

பூவாதே ஏவாதே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் சிறப்புப் பொருளில் வந்தன. மரமும் என்பதிலுள்ள உம்மை இறந்ததுதழீஇய எச்சம், அது பூத்துக்காய்க்கின்ற மரத்தையும் தழுவிநின்றது. இங்ஙனந் தழுவுதலாலும், தாமாக உணருவாரையும் உணர்த்தஉணராதாரையுங் கூறியதனாலும் உணர்த்தஉணருவாரும் உளர் என்பது குறிப்பெச்சமாயிற்று. மக்களுளும், விரைத்தாலும், உரைத்தாலும் என்பவற்றிலுள்ள உம்மைகள் உயர்வுசிறப்பு. உளரே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். வித்தெனவே என்பதிலுள்ள ஏகாரம் அசை.

பூவினாற் காய்க்குந்தகுதியைக் காட்டாது காய்க்கும் மரங்கள் போலத் தெளிவிப்பதினாற் றெளிதலின்றிப் பூருவவாசனை காரணமாகத் தாமே உணருமாற்றலுடையாருமுளர் என்பார் பூவாதே காய்க்கும் மரமும் உள மக்களுளும் ஏவாதே நின்று உணர்வார் தாமுளர் என்றார்.

முன்னுணர்ந்த உறுதிநிலையினின்று, அந் நிலையின் அனுபவ வல்லமையால் விசாரித்து, அதற்கு மேலான உறுதியை உணர்ந்து, மீட்டும்

அவ்வாறே உண்மை நிலைபெறுங்காறும் உணர்வர் என்பார் "எவாதே உணர்வார்" என்றொழியாது "நின்று உணர்வார்" என்று கூறினர்.

மக்கட்பிறவி பகுத்தறிவுடையதாயினும் அப் பகுத்தறிவால் நித்திய இன்பத்திற் குரியவற்றின் முயலாது, உலகஇன்பங்களுக் குரியவற்றின் முயலுதல் பெரும்பான்மையராம் என்பார் **மக்களும்** என்றார். எனவே, பூவாதே காய்க்கும் மரங்கள் அரிதாயிருத்தல் போல ஏவாது நின்றுணரும் மக்களும் அரியர் என்பது பெறப்பட்டது.

நிலத்தைப் பண்படுத்தி நீர்வளத்தோடு விதைத்தலைச் செய்யினும் முளைத்துப் பயன்றருஞ் சத்தியற்ற விதைகள் முளையாவாறு போல, எத்துணைப் பேரறிவை ஐயந்திரிபற விளக்கினும் அதனை நனித்தறியுஞ் சத்தியில்லாதார்க்கு அங்ஙனம் உணர்த்தப்பட்ட அறிவு சிறிதாயினும் உதியாதென்பார் தூவா விரைத்தாலும் **நன்று ஆகா வித்து எனவே பேதைக்கு உரைத்தாலும் தோன்றது உணர்வு** என்றார்.

மானுடயாக்கை எடுத்தாருட் சிலர் அறிஞரால் உண்மைநிலை உணர்த்தப்படாது தாமாகவே விளங்குதற்கும், வேறு சிலர் உணர்த்துங்கால் அறிதற்கும், ஏனையோர் எவ்வாறுணர்த்தினும் அறியாதிருத்தற்குங் காரணம் யாதென்று ஈண்டு விசாரிக்கவேண்டிற்று.

முற்பிறவிகளில் விடயவின்பங்களுக் கேற்றவற்றை மாத்திரங் கடைப்பிடித்தொழுகினோர் அப் பூருவ வாசனை காரணமாக இப் பிறப்பினும் அவ் விடயநுகர்ச்சிக் கேற்றவற்றையே விளங்குவார்களன்றி அவற்றிற்கு மறுதலையான உண்மைநிலையைச் சிறிதும் விளங்குமாற்றலிலராயினர். ஆதலின், அவர் அறிஞராலுணர்த்திய வழியுஞ் சிறிதுமுணராராயினர். விடயானுபவங்களினும் ஆன்மலாபத்திலுமாகக் கலந்து முயன்றோர் அப் பூருவ வாசனை காரணமாக விடயானுபவங்களிற் செல்லினும், அவற்றின் அநித்தியத்தை உணர்த்துங்கால் ஒருவாறு உணருமாற்றலுடையவராவர். ஆதலின், அவர் அறிஞருணர்த்த உணர்வாராயினர். விடயானுபவங்களின் அநித்தியத்தை உணர்ந்து ஆன்மலாபத்தைக் கடைப்பிடித்தோர் அப் பூருவ வாசனை காரணமாகப் பிறரால் உணர்த்தப்படாது தாமே உணருமாற்றலுடையவராவர். இங்ஙனமே தாம் தாம் முற்பிறப்பின் முயன்ற பூருவ வாசனைக் கேற்ப அவரவருக் கேற்ற தகுதி உண்டாயிற்றென்பது அனுபவமாக விளங்கிற்று.

இப் பிறவியிலே உணர்த்த உணருஞ் சத்தியில்லாதோர் இந் நிலையாற் கொண்ட பூருவ வாசனையால் மறுமையிலும் அங்ஙனமேயாவர். இங்ஙனம் பிறவிதோறும் பூருவ வாசனை தொடருமாயின் இவருக்கு எக்காலத்தும் ஆன்மலாபமுயற்சி யில்லையென்று சித்திக்கிறது. ஆதலின், இத்தகையார்க்கு எக்காலத்தாயினும் ஆன்மலாபத்திற்குரிய வாசனை உண்டா? இல்லையா? என்று விசாரிக்கவேண்டிற்று. இத்தகையார் இங்



ஙனம் விடயானுபவங்களின் மொத்துண்டலைந்து, தாங் கொண்ட நிலை தமக்கு உறுதிபயக்கவில்லையென்று சித்திக்குங்காறும் ஈடேற்றத்திற்குரிய அறிவு விளங்குமாற்றலுடையராகார். ஆயின், துன்பானுபவவுறைப்பினால் அவ் விடயானுபவங்களை இளைப்பினால் ஒருவாறு வெறுப்பர். அவ் வெறுப்புக் காரணமாக வாசனையுண்டாய், அது காரணமாகச் சிறிதுசிறிது விளங்குந் தகுதி பெறுவர். மேல் அறிஞர் உணர்த்தும் உறுதிகளை விளங்கி மேலோங்குந் தகுதியைக் காலாந்தரத்திற் பெறுதல் கூடும். ஆகவே, இத்தகையாருக்கும் ஆன்மஈடேற்றத்திற்குரிய வாசனை உண்டாமென்பது விளங்கிற்று.

இவ்வாற்றால், காருண்ணியவயத்தராய் மக்களை ஈடேற்றுங் கடமைபூண்ட அறிஞர் தாம் உணர்த்துங்கால் அவ்வுணர்வை உணருமாற்றலுடையார்க்கு மாத்திரம் உணர்த்தவேண்டுமென்பதும், அவற்றை உணருமாற்றலில்லாதார்க்கு உணர்த்தின் தம் முயற்சியை வாளா போக்குதன் மாத்திரையேயன்றி அவரால் அவமதிக்கப்படவுங் கூடுமென்றுணர்ந்து அங்ஙனஞ் செய்யற்க என்பதுஞ் சித்தித்தன.

மேன்மையான பகுத்தறிவமைந்த மக்கட்பிறவிலேயே விடயானுபவங்களால் உண்டாகுந் துன்பானுபவங்களை உற்றுநோக்கி, இன்பானுபவத்திற் கேற்ற நிலைகளில் உறுதிபெற நின்று, ஆன்மலாபத்திற்குரிய தகுதியை யடைந்துய்யவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 36-ம் செய்யுள்.

### அவதாரிகை.

இல்லறம் புரிந்து கடைத்தேற விரும்பினோர் புத்திரப்பேறு செய்தல், துறந்தார்ப்பேணல், இரந்தார்க்கீதல் முதலியவற்றை ஓம்பி, அவற்றின் பயன் காரணமாக ஏனைய உயர்ந்த ஆச்சிரமங்களை யடைந்து கடைத்தேறலாமேயன்றி, காமத்தின்வயத்தராய்த் தன்மனைவியல்லாத ஏனைய மாதரை விரும்பின் இல்லறவாழ்வையும், அறிவு, செல்வம், கல்வி என்பவற்றையும் ஒருங்கே இழந்து கெடுவர் என்பதை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### காமத்தின் கேடு.

**நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்**
**கொண்ட கருவளிக்குங் கொள்கைபோ—லொண்டொடீ**
**போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்**
**மாதர்மேல் வைப்பார் மனம்.**

இ - ள்: நண்டு சிப்பி வேய் கதலி - நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும்,—நாசம் உறும் காலத்தில் - (தாம்) அழியுங் காலத்தில்,—கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல் - தம்மாட்டு விளைந்த கருக்

களை ஈனுந் தன்மை போல, (மக்கள்),—ஒன் தொடி போதம் தனம் கல்வி பொன்ற வரும் காலம் - ஒளிபொருந்திய வளையலை அணிந்த மனையாளுடன் கூடிச் செய்யும் அறமும் ஞானமும் செல்வமும் வித்தையும் அழிவடையுங் காலத்திலே,—அயல் மாதர்மேல் மனம் வைப்பார் - (தன்மனைவியல்லாத) பிற பெண்களை விரும்புவார்கள். எ - று.

கருவளித்தல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அது கருவை அளித்தலென விரியும். ஒண்டொடி என்னும் அன்மொழித் தொகை மனையாளோடு கூடிச் செய்யும் இல்லறத்தை விளக்குதலின் ஆகுபெயர். அது செய்யுளோசை நிறைத்தற்பொருட்டு ஈறுநீண்டு ஒண்டொடீ என்றாயிற்று. மாதர்மேல் என்னும் ஏழாம் வேற்றுமை உருபு இரண்டாம் வேற்றுமை உருபாகத் திரிக்கப்பட்டது. மனம் வைத்தல் - காமுறுதல். அஃதாவது, அவருடன் கூடி இன்புறல்வேண்டுமென்று விரும்புதல்.

நண்டு குஞ்சை ஈனுதலானும், சிப்பி முத்தை ஈனுதலானும், மூங்கில் பூத்துக் காய்த்தலானும், வாழை காய்க்குலையை ஈனுதலானும் அவ்வவற்றின் அழிவுகாலஞ் சமீபித்திருக்கின்றதென்பதை அனுபவத்தில் உணருமாறு போல, காமத்தின் வயத்தராய் அயல்மாதர்மேல் மனம் வைத்தார் விரைவில் தமக்குரிய மனைவாழ்வு, ஞானம், செல்வம், வித்தை என்பவற்றையெல்லாம் இழந்து கேடடைவாரென்பதை எளிதில் விளக்கலாமென்பது கருத்து.

அயல்மாதர்மேல் இச்சைகொள்ளுங்கால் தன்மனையாள்மீதுள்ள அன்பு கெட்டு அவளோடு கூடிச் செய்யும் இல்லறங் கெடுதலானும், அம் மனைவி தான் கொண்ட அறநெறிக் கிழுக்குநேருதல் கண்டு வெறுப்படைதலானும், இல்லறங் கெடுதலும் மனைவி பிரிதலுந் தப்பாது நேருமென்பதை விளக்குவார் ஒண்டொடி போன்றவரும் காலம் அயல்மாதர்மேல் மனம்வைப்பார் என்றார்.

முற்பிறவிகடோறுஞ் செய்த நிஷ்காமியத் தவப்பேறே பூருவ வாசனையாகத் தோன்றிய அறிவு, காமம் முதலிய குற்றங்களைக் கெடுத்து நன்னெறியிற் செலுத்தமாட்டாது பிறமாதர்மேற் கொள்ளுங் காம மயக்கத்துள் அடங்கிநிற்றலின் அவ்வறிவு கெடுமென்பார் போதம் போன்றவரும் காலம் அயல்மாதர்மேல் மனம்வைப்பார் என்றார்.

தாம் விரும்பிய அயல்மாதரைத் தம்வயமாக்க முயன்று அவர்க்கிதஞ்செய்யுமாறும் அதற்கேற்ற சூழ்ச்சிகளை நிறைவேற்றுமாறும் தமது சீவன உறுதிக்கும் இல்லறத்திற்கும் அமைந்த கைப்பொருளைச் செலவு செய்தலானும், இம் மயக்கமீதூர்தலால் வலியிழந்து சீவன வருவாய்க்குரிய தொழிலை நிறைவேற்றாமையானும் செல்வம் முழுதும் அழியும் என்பார் தனம் போன்றவரும் காலம் அயல்மாதர்மேல் மனம்வைப்பார் என்றார்.



அயல்மாதர் மேலுள்ள காமமீதூர்தலினால் குருவும் நூலுங் கூறும் உறுதிமொழிகள் சிறிதாயினும் உணரப்படாமையானும், இம் மயக்க விசாரத்தினால் முன் கற்ற கல்வியின் தெளிவு மறக்கப்படுதலானும் வித்தை முழுதுங் கெடுமென்பார் கல்வி போன்ற வரும் காலம் அயல் மாதர்மேல் மனம் வைப்பார் என்றார்.

அயல் மாதர்மேல் மனம்வைத்தன் மாத்திரையானே இத்துணைக் கேடுகள் வருமாயின், அவரைக் கூடிக் காமவின்பம் அனுபவித்திருந்தக்கால் எத்துணைப் பெருங்கேடுகள் நேரும் என்பது சொல்லாமலே விளங்கிற்று.

மானுடயாக்கை எடுத்தோர் மணஞ்செய்வது யாதுபற்றியெனின், மானுடயாக்கை எடுத்துக் கடைத்தேறுந் தகுதிபூண்ட உயிர்கள் அவ்வியாக்கை எடுக்குமாறு புத்திரரைப் பெறுதற்கும், தம்மை மானுடயாக்கை எடுப்பித்த பெற்றோரைத் தாமும் புத்திரராகப் பெற்றுக் கைம்மாறு செய்தல் கூடாமையின், அக் கடமை நீர்தற்பொருட்டுத் தாமும் அவர் போலப் புத்திரப்பேறு செய்தற்கும், காமவேட்கை மீதூர்ந்தார், பல பெண்களிலும் இச்சைபூண்டு கெடாவண்ணம் அவரது வேட்கையைச் சுருக்கி ஒருவழிப்படுத்துதற்கும், நோய் மூப்பு வருங் காலத்தில் உதவிபெறுதற்குமாம். ஆதலின், இச் செயல் சிவகாருண்ணியம் பூண்டு கடைத்தேறத் தகுதியுடையார்க்கே உரியதென்பது விளங்கிற்று. இத்தகைய காருண்ணியமுடைய மக்கள் இல்லறம் பூண்டு புதல்வர்ப்பேறு செய்யாராயின் மக்கட்பிறவி எடுத்து உயிர்கள் கடைத்தேறுதல் கூடாதாம். ஆதலின், இது கடைத்தேறுதற்குரிய நான்காச்சிரமங்களுட் சிறந்ததாயிற்று. இப் பெருமைவாய்ந்த இல்லறம் பூணுதற்பொருட்டு மணஞ்செய்தல் கடமையாகவும், காமவயத்தராய் மணஞ்செய்தல் அறவிரோதமாகும். அன்றியும், தன்மாட்டுள்ள வீரியத்தினாற் புத்திரப்பேறு செய்தலும் தன் மனைவியிடத்துக் காமவின்பம் நுகருதலும் குலவிருத்தி, தளருங்காலத்துறுதி, நோயின்மை, தொழிலுக்கேற்ற வல்லமை, சீவன உறுதிக்குரிய செல்வம், வித்தை, சத்தி, அறிவு என்பவை வளர்ந்து உயர்நிலையடைதற்கேதுவாகும். அவ்வாறின்றி, அடங்காக் காமவயத்தராய் அயல்மாதரை விரும்புதல் வீரியக்கேடு, குலக்கேடு, தளருங் காலத்துறுதிபெறாமை, நோய், தொழிலுக்கேற்ற வல்லமையின்மை, கைப்பொருளிழத்தல் வித்தைச் சத்தி தேய்தல், அறிவு குன்றுதல், ஆயுள்குன்றுதல், அச்சம், பகை, பழி, பாவம், அரசதண்டனை முதலிய எண்ணிறந்த கேடுகள் விளைதற்கேதுவாகும். ஆதலின், இத் தீச்செயலை ஒழித்து, இல்லறத்தை நன்று செய்து கடைத்தேற முயலவேண்டுமென்று வலியுறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 37-ம் செய்யுள்.

### அவதாரிகை.

மேலோதிப்போந்த நன்னெறியொழுக்கப்பேற்றினாலும் நிஷ்காமியத் தவப்பேற்றினாலும் சுத்தவாசனையடைந்து, அதனாற் சாதன சதுட்டயங் கைவந்து, சித்தசுத்தம் பெற்று, அத்தகுதியினால் விசாரணை செய்து, ஆன்மஞானமுணர்ந்து, பிறவித்துன்பம் நீக்கி, நித்தியவின்பமடைதல்வேண்டுமென்பதை இச் செய்யுளில் வற்புறுத்துகின்றார்.

### விசாரணைப் பேறு.

*வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா*
*மனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்*
*கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்*
*விண்ணுறுவார்க் கில்லை விதி.*

இ - ள்: நெஞ்சே - மனமே,—வினைப்பயனை வெல்வதற்கு - வினையின் விளைவாகிய சஞ்சிதம், பிராரத்துவம் என்பவற்றைக் கீழ்ப்படுத்துதற்கு (ஏற்ற சூழ்ச்சி),—வேதம் முதல் ஆம் அனைத்து ஆய நூல் அகத்தும் - வேதம் என்னும் முதனூலும் அதனை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்களும் ஆகிய எல்லா நூல்களிடத்தும்,—நினைப்பது என் அ கண் உறுவது அல்லால் இல்லை - (பிறவி, வினை, பயன் என்பவை) நினைவினாலுண்டாகின்றன என்று தெளிகின்ற அந்த ஆன்மப் பிரகாசவயமாக நீயும் பொருந்துவதொன்றேயல்லாமல் வேறில்லை,—கவலை படேல் - துயரங்கொள்ளாதே,—மெய் விண் உறுவார்க்கு - நிலைபேறான ஞானாகாசமாக இருப்பவருக்கு,—விதி இல்லை - பிறவி யனுபவங்களில்லை. எ - று.

வினைப்பயன் என்பது மூன்றனுருபும் பயனுமுடன் றொக்க தொகை. அது வினையால்விளைந்தபயன் என விரியும். அப் பயன்கள் சஞ்சிதம், பிராரத்துவம் என்பனவாம். வெல்வதற்கு என்பதனீற்றில் ஏற்ற சூழ்ச்சி என்னுஞ்சொல் எஞ்சிநிற்றலின், ஏற்றசூழ்ச்சி என்பது சொல்லெச்சம். ஆதலின், அது வருவித்துரைக்கப்பட்டது. வேதம் என்பது தொகையொருமை. அது வேதங்கள் என விரியும். வேதம் நான்கு. அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாம். வேதமுதல் நூலகத்தும் என்றும், வேதமுதலாம் அனைத்தாய நூலகத்தும் என்றும் தனித்தனி சென்றியையும். வேதங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்கள் உபநிடதங்கள். அகத்தும் என்பதிலுள்ள உம்மை இறந்ததுதழீஇய எச்சம். அது யுத்தியனுபவங்களின் மாத்திரையேயன்றி என்பதையும் தழீஇ நின்றது. என் கண் என்றும், அக் கண் என்றும் தனித்தனி சென்றியையும். என்கண் என்பது நிகழ்கால வினைத்தொகை. அது என்கின்றகண் என விரியும். அ என்னுஞ் சுட்டு என்



றும் ஓரேபெற்றித்தான ஆனந்தமயமாயிருக்கின்றதென்பதை விளக்கிநின்றது. கண் என்பது ஆகுபெயர். அது ஆன்மப்பிரகாசத்தை உணர்த்திநின்றது. கண்ணுறுவது என்பது கண்ணின்வயமாகநிற்பது என விரியும். நெஞ்சே என்பதிலுள்ள ஏகாரம் விளி. மெய்விண் என்பது பண்புத்தொகை. அது மெய்யாகியவிண் என விரியும். இது பொய்விண்ணை நீக்குதலின் பிறிதினியைபுநீக்கிய விசேடணம். விண்ணுறுவார் விண்ணாக உறுவார் என விரியும். நெஞ்சே என்று விளித்து வினைப்பயனை வெல்வதற்கு உபாயங் கூறப்புகுந்தமையின் இந் நெஞ்சு வினைப்பயனை வெல்வதற்கு முன்னுள்ள தகுதிகளனைத்தையும் பெற்றுக்கொண்ட நெஞ்சென்பது சொல்லாமலே விளங்கிற்று. அவை சுத்தவாசனை, சாதன சதுட்டயம் என்பனவாம். இவை முறையே ஒன்றற்கொன்று ஏதுவாகும்.

நிட்காமியத்தவப்பேற்றாற் சுத்தவாசனையடைந்து அதனாற் சாதன சதுட்டயங் கைவந்த மனமென்பார் நெஞ்சே என்றார். சுத்தவாசனையாவது, மனம் ஆராய்வின்றி இன்பமடைய வேண்டுமென்று விடயங்களைப் பற்றுதலாற் றுன்பங்கள் விளைகின்றன வென்னுஞ் சூழ்ச்சியடிப்படுதலாம். இவ்வாற்றால், இன்பநுகரவேண்டுமென்று மனம்போனவாறெல்லாம் விடயங்களின் மொத்துண்டலைதலை யடிப்பாடாகவுடைமையே அசுத்த வாசனையாமென்பது விளங்கிற்று.

இதில், நிட்காமியத்தவத்தாற் சுத்தவாசனை உண்டாதல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. பயன்கருதாமற் செய்யுந் தவம் அனுபவத்தைக் கொடாது, அனுபவத்தை விரும்புதல் யாதுபற்றியென்றும், பிறிதொன்றைப் பற்றுமுன்பே அனுபவவிருப்பமுண்டாதலின் அவ்வனுபவம் தன்னிடத்திலுள்ளதென்றும், அயலிடத்தில்லையென்றும் பிரித்தறிகின்ற உணர்வையே பயனாகக் கொடுக்கும். இவ்விசாரணை யடிப்படுதலே சுத்தவாசனையாம். ஆதலின் நிட்காமியத்தவப்பேறு சுத்தவாசனையைத் தப்பாது தருமென்பது சித்தம்.

ஆனால், பயன்கருதிச் செய்யப்படும் வினைக்கு அப் பயனுண்டாவது நியதியாயின் பயன்கருதாமற் செய்யும் வினைக்குப் பயனில்லாமற் போவதே நியதியாக வேண்டும். ஆகவும், நிட்காமியத்தவப்பேறு விசாரணையைப் பயக்குமென்றால் அது பொருந்துமா? பொருந்தாதா? என்று விசாரிக்க வேண்டிற்று. வினைமுடிபுக்குப் பயனுண்டென்பது நியதி. அப்பயன் சங்கற்பமாகச் செய்யப்பட்டால் அவ்வாறான அனுபவமாம். சங்கற்பமின்றிச் செய்யப்பட்டால் சங்கற்பமல்லாத நிலையாகிய அறிவாற்றலைக் கொடுக்கும். அதுவே விசாரணையாம். ஆகலின், நிட்காமியத்தவப்பேறு பயனில்லாமையாகிய வெறுமையைப் பயவாது, விசாரணையைப் பயக்குமென்பது துணிபாகின்றது.

இச் சுத்தவாசனை, விடயங்களின் மொத்தண்ணுது உறுதியாகநிற்றல்வேண்டுமென்று துணிந்து, அவ்வுறுதிக்கும் விடயங்களின் மொத்தண்ணுமைக்கும் ஏற்ற நிலைகளை ஒன்றன்பின்னொன்றாக விசாரித்துத் தெளிந்து, அவ்வவற்றில் ஏற்றபெற்றி நின்றொழுகும். இந் நிலைகளே சாதனங்களாம். இவை நான்காகப் பகுக்கப்படுதலின் சாதனசதுட்டயம் என்னும் பெயரவாயின.

ஏற்ற சாதனங்களை விசாரித்துத் தெளிதலும், அவ்வாறு நிற்றலுமாகிய இரண்டையுமுடைமையின் சுத்தவாசனை சாதனங்களுக்கு உபாதான காரணமாகும். சுத்தவாசனையால் விவேகமுண்டாதலின், அது விவேகத்திற்கு நிமித்தகாரணமாம். மேல் வரும் சாதனங்களுக்கெல்லாம் விவேகம் நிமித்தகாரணமாகும். மற்றவை முன்முன் சாதனங்கள் பின்பின் சாதனங்களுக்கு நிமித்தகாரணமாகும். இவற்றை வரன்முறையே விளக்குவாம். ஆங்காங்குக் காண்க.

## சாதன சதுட்டயம்.

### 1. விவேகம்.

நித்தியஇன்ப நுகரவிரும்பிய நான் தேகத்திலிருந்து சகத்திற் பல கருமங்களைச் செய்தும் அவற்றின் பயனை நுகர்ந்தும் அவ்வனுபவங்களினின் நிறைவெய்தாது பின்னும் இன்பநுகரவேண்டுமென் றவாவுதலின், இச்சகத்திலுள்ள அனுபவங்களால் அநித்தியஇன்ப நுகரலாமேயன்றி நித்தியஇன்பமடைய முடியாதென்று துணிதலொன்றும்; இன்பமடைய வேண்டுமென்னும் பிரியம் இடையறாதிருத்தலின் இன்பப்பிரியமுள்ளவிடம் அழிவற்ற நித்தியமென்றும், இன்பமிருந்தவிடத்திலிருந்தே இன்பம் விரும்பப்படவேண்டுதலின் விரும்புகின்ற இன்பம் என்னிடத்திலுள்ளதே என்றும் துணிதலொன்றும் ஆக இரண்டுவகையாயுள்ளது விவேகமாம். இவற்றுள் முன்னையதை அநித்தியவஸ்து விவேகம் என்றும், பின்னையதை நித்தியவஸ்து விவேகமென்றும் தத்துவஞானிகள் கூறுவர்.

### 2. வைராக்கியம்.

இந்த விவேகம் அடிப்பட்டு வளருதலால் நித்தியஇன்ப நுகருதற்கு நித்தியமான பொருளைப் பற்றலாமேயன்றி அநித்திய அனுபவங்களைத் தருகின்ற சகத்திலுள்ள விடயப்பொருள்கள் எவற்றையேனும் பற்றலாகாதென்னுந் துணிபுண்டாம். இத்துணிபால் விடயானுபவங்களை விடுதலே வைராக்கியமாம். இதனை இகமுத்திரார்த்தபலபோகவிராகம் என்பர் தத்துவஞானிகள்.

ஆனால் நோயின்மை, பசிக்கம் என்பவையமைந்த தேகசுகமுண்டாயினன்றோ விவேகம் விடயசுக விடுதலையடையும். தேகசுக மில்லையேல் அத்தேகத்திற் றுன்பமின்றி வாழுதற்கேற்ற முயற்சியே உண்டாம். ஆதலின் நோயின்மை, பசிக்கம் என்பவற்றிற்குரியவற்றைப் பற்றுதல்விடுதலின்றி ஏற்றபெற்றி கொள்ளல்வேண்டும்.



### 3. சமாதியாறு கூட்டம்.

இங்ஙனம் விடயசுகானுபவமுயல்வை விட்டவரினும் முற்பயிற்சிவயத்தால் மீட்டும்மீட்டும் விடயசுகங்களின் மனஞ்செல்லும். அங்ஙனஞ் செல்லாமற்றடுத்தற்கு, ஒன்றற்கொன்று இன்றியமையாத ஆறு பிரிவுகளுண்டு. அவை, சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்பனவாம். இவற்றை யனுசரித்தால் முன்னுள்ள பயிற்சியடிப்பாடு நீங்குமென்று துணிந்து, வரன்முறையே இவ்வாறினும் பயிலுதலே சமாதியாறுகூட்டமாம். இவ்வாறனுள் விடலை உபராமமென்றும் உபரதியென்றும், சகித்தலைத் திதிக்ஷையென்றுங் கூறுவர் சத்துக்கள்.

இவ்வாறு கூட்டங்களையும் வரன்முறையே விளக்குவாம்:—

1. **சமம்:** சமமாவது மனம் விடயவிச்சையிற் செல்லாது தடுத்தலாம். மேலோதிய வைராக்கியத்தினால் விடயங்களாலுண்டாகும் அனுபவத்தை விடமுயலினும், முற்பழக்கவயத்தினாலும் அவ்விடயங்களை விட்டுநிற்றற்குரிய ஆன்மசுகக் கைவராமையானும் மீட்டும்மீட்டும் மனம் விடயங்களிற் சென்றுகொண்டிருக்கும். ஆதலின், அங்ஙனஞ் செல்லாது தடுக்கவேண்டிற்று. அதனால், வைராக்கியத்தின்பின் சமத்தை அனுசரிக்க நேரிடுகின்றது.

2. **தமம்:** தமமாவது முன்னனுபவித்த பழக்கவயத்தில் இந்திரியங்களைச் செலுத்தாது தடுத்தலாம். முற்பயிற்சியினிலே தடுக்கப்படாவிடின் மனமடங்காமையின் இத்தடை வேண்டப்படுகின்றது.

3. **விடல்:** விடலாவது குடும்ப விவகாரங்களைச் சுருக்குதலாம் அஃதாவது சேவைவிரிவு, மனைவிமக்களினாசை, கருமவிருத்தி என்பவற்றைச் சுருக்குதலாம். இவை சிறிதுஞ் சுருங்காவாயின் மனம் முன்னுள்ள நிலையினிற்குமேயன்றிச் சிறிதுமடங்காது. ஆதலின், இதுவேண்டப்படுகின்றது.

4. **சகித்தல்:** சகித்தலாவது சுகதுக்கங்களை அவ்வவற்றின் மொத்தண்ணுது நுகருதலாம். அஃதாவது: சுகம் வரின் அதன் வயமாக நின்று குதூகலித்தும், துக்கம்வரின் அதன்வயமாக நின்று அலமந்தும் உழலாது, பொறுமையாகநின்றனுபவித்தலாம். இங்ஙனம் பொறுமையோடனுபவியாது சலனப்படின் மனம் உறுதிபெறாது. ஆதலின், மனவுறுதியின்பொருட்டு இது வேண்டப்படுகின்றது.

5. **சமாதானம்:** சமாதானமாவது அறிவு வளருதற்குரிய நிலைகளை மனஞ் சிந்திக்குமாறு பயிற்றுதலாம். அஃதாவது: அறிவு வளருதற்கேற்ற நூற்றுணிபை மறவாது வளர்த்தற்கேற்பச் சிந்தித்து உறுதிபெறுதலாம். இங்ஙனஞ் செய்யாவிடின் மீட்டும்மீட்டும் மனம் விடயவிச்சை முதலியவற்றி லோடுமாதலின் அங்ஙனமோடாது தடுத்தற்கு இது வேண்டப்படுகின்றது.

6. சிரத்தை: சிரத்தையாவது உறுதிபயக்குநூல் தனக்கே விளங்குமாயின் அந்நூலிலும், விளங்காதாயின் விளக்குகின்ற குருவிலும் விளக்கப்பட்ட நூலிலும் பேரன்பு வைத்தலாம். அஃதாவது: முன்செய்த நிட்காமியத்தவப்பேற்றின் மிகுதியால் மெய்யுணர்வு பெறுதற்கேற்ற நூலின் பொருள் தனக்கு விளங்குமாயின் அவ்விளக்கங்கொடுத்த நூலிலும், விளங்காதாயின் விளக்குகின்ற குருவிலும் விளக்கப்பட்ட நூலிலும் இடையறாத அன்பு பூணுதலாம்.

இவ்வாறும் ஒவ்வொன்றும் மற்றைய ஐந்தையும் சகாயமாகப் பெறாவிடின் உறுதிபெறமாட்டா. ஆகலின் ஒரேசாதனமாக மதிக்கவேண்டிற்று. அங்ஙனம் சகாயமாதலை வரன்முறையே விளக்குவாம்.

## சமம் மற்றைய ஐந்தின் சகாயமுடைமை.

முற்பழக்க அநுபவத்திற் செல்லாது தடாவிடின் மனம் அடங்காது அவற்றிற் செல்லுமாகலின் தமம் சமத்திற்குச் சகாயமாயிற்று.

குடும்ப விவகாரம் சுருங்காதாயின் மனம் முன்போலவே விடயவிச்சையிற் செல்லுதலின் விடல் சமத்திற்குச் சகாயமாயிற்று.

சுகதுக்கங்களின் மொத்துண்ணின் மனம் அவற்றில் ஆழ்ந்து விடயவிச்சையிற் செல்லுமாதலின் சகித்தல் சமத்திற்குச் சகாயமாயிற்று.

அறிவு வளருதற்குரிய நூற்றுணிபைச் சிந்தியாவிடின் மனம் விடயவிச்சையிற் செல்லுதலின் சமாதானம் சமத்திற்குச் சகாயமாயிற்று.

உறுதி பயக்கும் நூலினும் குருவினும் பேரன்பு வையாக்கால் மனம் விடயவிச்சையிற் செல்லுமாகலின் சிரத்தை சமத்திற்குச் சகாயமாயிற்று.

ஆகவே, சமம் மற்றைய ஐந்தின் சகாயம் பெறாது உறுதியாகமாட்டாதென்பது தெளிவாகிறது.

தமம் மற்றைய ஐந்தின் சகாயமுடைமையையும், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்பவை தம்மையொழிந்த ஐந்தின் சகாயமுடைமையையும் ஏற்றபெற்றி தந்துரைத்துத் தெளிந்துகொள்க.

## 4. முத்திப்பிரியம்.

முத்திப்பிரியமாவது முன்னைய மூன்று சாதன அநுசரிப்பால் அழிகின்ற உலகசுகாநுபவவெறுப்புற்று, அழியாத ஆன்மசுகத்தை விரும்புதலாம். நித்தியஇன்பநுகர்தலே சீவர்களதபிப்பிராயமாதலின் இது வேண்டப்படுகின்றது. இதனை முமூக்ஷுத்துவமென்றுங் கூறுவர்.

இவ்வாற்றால் சித்துக்கும் சடத்துக்குமுள்ள காரணகாரியத்தன்மை, அதிட்டான ஆரோபத்தன்மை, காணுதல் காணப்படற்றன்மை, நிற்றல் நிற்கப்படற்றன்மை என்பவற்றை விசாரிக்கும் வல்லமை உண்டாம். இதனைப் பதார்த்தசோதனை என்பர் சத்துக்கள்.



முன்செய்த ஆகாமியவினைவாய் இப்பிறவியினுகரப்படுகின்ற பிராரத்துவத்தையும் இதன்மேற் பிறவியெடுத்தனுபவப்படுஞ் சஞ்சிதத்தையும் அனுபவித்தே தீரல்வேண்டும். இவ்வநுபவ வுறைப்பில் மீட்டும் ஆகாமியஞ் செய்ய நேரிடும். அது சஞ்சிதமாயும் பிராரத்துவமாயுந் தொடரும். இங்ஙனமாயின், வினையும் பிறவியும் முடிவுபெறா. ஆகலின், இப்பிறவியில் இவற்றைத் தணித்துறுதிபெறுதற்கு எவ்வாறு நிற்றல்வேண்டுமென்று சூழுகின்ற மனமே என்பார் நெஞ்சே வினைப்பயனை நீக்குதற்கு என்னாது வினைப்பயனை வெல்வதற்கு என்றார்.

இதில், இப்பிறவியிற் பிராரத்துவ அநுபவத்தைத் தணித்தலமையினும் மறுமையிலனுபவமாகின்ற சஞ்சிதம் இப்பிறவியிலனுபவமாகாதிருத்தலின் அச்சஞ்சிதானுபவவுறைப்பை இப்பிறவியிற் றணித்த லொருவாறுமமையாது. ஆதலின் பின்பிறவிக்குப் பிராரத்துவ அநுபவமாதற்குரிய சஞ்சிதம் பிறவியின்றி யனுபவமாகுமா? ஆகாதா? என்று விசாரிக்க வேண்டிற்று.

ஆகாயம் மூன்றுவகைப்படும். அவை ஞானகாயம், மனகாயம், பூதாகாயம் என்பனவாம். இவற்றுள் ஞானகாயம் என்றுமொரேபெற்றித்தான ஆனந்தமாயிருந்து மற்றைய மாறுபாடடைகின்ற மனகாயம், பூதாகாயம் என்னுமிரண்டும் இயங்குதற்கிடங்கொடுக்குந் தன்மைத்தாம். மனகாயம் ஞானகாயத்தை ஆதாரமாகக்கொண்டு உணர்வுடைத்தாய் மற்றைய இரண்டாகாயங்களுக்கும் நடுவினின்று, உண்முகமாக இயங்கினால் ஞானகாயத்திலடங்குதற்கும் வெளிமுகமாக இயங்கினாற் பூதாகாயத்தைப் பற்றுதற்கும் ஏற்ற தன்மைத்தாம். பூதாகாயம் ஞானகாயத்தை ஆதாரமாகக்கொண்டு நிற்பதும் தான் உணர்வற்றதும் மனகாயத்தாற் பற்றப்படுவதுமாயுள்ள தன்மைத்தாம்.

இத்தகைய மனகாயம் வெளிமுகமாகச் சங்கற்பித்துப் பூதாகாயத்தைப் பற்றிநின்று செய்கின்ற ஆகாமியத்தின் விளைவைச் சூக்குமமாகத் தன்பாற் கவர்ந்துகொள்ளும். அங்ஙனம் கவர்ந்துகொண்ட சஞ்சிதத்தில் எவ்வளவைத்தொடர்பாகக்கொண்டு சங்கற்பித்துப் பூதாகாயத்தைப் பற்றிப் பிறவியெடுக்கின்றதோ அப்பிறவியில் அவ்வளவு சஞ்சிதமுமே யனுபவமாகும். இங்ஙனமனுபவித்தலே பிராரத்துவம் என்று சொல்லப்படும். இதனை ஊழ் என்றும் வழங்குப. பிறவிச்சங்கற்பத்திற்றொடராது முன்கவர்ந்துகொண்ட சஞ்சிதமும் பின் இப்பிறவியிற் செய்த ஆகாமியவினையாகிய சஞ்சிதமும் மனகாயத்தி லடங்கியிருக்கும். இம்மனகாயம் விசாரணை செய்து தெளிந்து உண்முகமாய் ஞானகாயத்தைப் பற்றிநிற்குமாயின் அப்போது பிறப்புக்குரிய சங்கற்ப மெழாதடங்கும். அடங்கவே, பிறப்புண்டாகாது. ஆகவே, மிஞ்சிநின்ற சஞ்சிதம் வேறுபிறவி யெடாமலே மனகாயத்திற் சூக்குமமாயனுபவிக்க நேரிடும். நேரிடவே, மனகாயம் ஞான

காய நோக்கின் வலிமையால் தேகசம்பந்தமின்றித் தான் கவர்ந்த சஞ்சிதத்தை நுகர்ந்துமுடிக்கும். இவ்வாற்றால், தேகசம்பந்தமின்றிச் சஞ்சிதம் சூக்குமமாக அனுபவமாமென்பது சித்திக்கிறது. சித்திக்கவே, சஞ்சிதம் பிறவியிற் பிராரத்துவமாக நுகரப்படாது, சூக்குமமாய் மனாகாயத்தில் நுகரப்படுமென்பது துணிபாகிறது.

இதில், சங்கற்பத்தாற் பிறவியுண்டாகின்றதென்று சொல்லப்பட்டது. அங்ஙனமாயின், வேண்டியபோதெல்லாம் சங்கற்பித்து வேண்டிய பிறவியை யெடுக்கலாமென்று ஏற்படுகிறது. படவே, இப்பிறவியினின்று எப்பிறவியை யடையவேண்டுமென்று சங்கற்பிப்பினும் இப்பிறவியிலிருப்பதேயன்றிச் சங்கற்பித்த பிறவி வாராமையின் சங்கற்பத்தாற் பிறவியுண்டாகவில்லை என்றும் மற்றொன்றால் உண்டாகின்றதென்றும் ஏற்படுகின்றன. இவ்வாற்றால், பிறவி சங்கற்கற்பத்தாலுண்டாகின்றதா? மற்றொன்றா லுண்டாகின்றதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

தான் கிரகித்துக்கொண்டவற்றை நுகருமாறு சங்கற்பித்தெடுத்த பிறவி அவ்வனுபவமுடிந்தன்றி மாறாது. ஆதலின், அவ்வனுபவங்கள் முடியுமுன் வேறெத்தனை பிறவியைச் சங்கற்பிப்பினும் அவை வாரா. ஆகவே, பிறவியிலிருந்துகொண்டு மற்றொரு பிறவியைச் சங்கற்பிக்க அது வாராமையால் சங்கற்பத்தாற் பிறவி வாவில்லையென்ற லமையாது. அவரவர் செய்த ஆகாமிய விளைவே அவரவர் மனாகாயத்தி லடங்கியிருத்தலின் அவற்றை நுகருதற்கேற்ற சங்கற்பமே அவ்வனுபவங்களை நுகர்விக்கும் பிறவியாமென்பது தெளிவாகிறது. அன்றியும், சங்கற்பமின்றி யனுபவமின்மையானும், அனுபவத்தின் பொருட்டே சங்கற்பமெழுதலானும் சங்கற்பமே பிறவியைத் தருகின்றது என்பது வெளியாகிறது.

வினைப்பயன் என்பது பிராரத்துவத்தை மாத்திரங் குறிக்குமா? அன்றிச் சஞ்சிதத்தைக் குறிக்குமா? அன்றி இவ்விரண்டையுங் குறிக்குமா? என்று விசாரிக்கப்படுகிறது. வினைமுடிபு யாதானுமோர் பயனாக வேண்டியதே நியதி. இப்பயனே சஞ்சிதமாம். இச்சஞ்சிதமே பின் யாதானுமோர் பிறவிக்கு அனுபவமாக வரையறுக்கப்படும்போது, பிராரத்துவம் எனப்படுகின்றது. ஈண்டு பிராரத்துவத்தைமாத்திரம் விளக்குதற்குரிய ஊழ், விதி முதலிய சொற்களாற் சிறப்பித்துக்கூறாது இவ்விரண்டிற்கும் பொதுமையச்சொற்றொடரால் வினைப்பயன் என்றமையானும், இப்பிறவியிற் பிராரத்துவத்தை மாத்திரம் வென்றால் மிஞ்சிநின்ற சஞ்சிதம் வேறொரு பிறவியிற் பிராரத்துவமாகும்; ஆண்டும் இப்பிராரத்துவத்தை வெல்லினும் பின்னுமிவ்வாறே முடிவின்றி அனவத்தாதோஷமுண்டாம்; ஆதலின் எல்லா வினைவிளைவையும் வெல்லவேண்டுமென் றேற்படுதலானும், வினைப்பயன் என்பது வினைவிளைவாகிய சஞ்சிதம், பிராரத்துவம் என்னுமிரண்டையுமே விளக்குகின்றதென்பது சித்தம்.



மேலே வினைவிளைவு சஞ்சிதமாய் மனாகாயத்தி லடங்கிநின்று மறுமையிற் பிராரத்துவமாய் அனுபவிக்கப்படுமென்று சொல்லப்பட்டது. ஆயின், ஈண்டு அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே அனுபவிக்கின்றார்கள். அஃதாவது வேளாண்மை செய்தவன் உணவுப் பொருட்களைப் பெறுகின்றான். போசனஞ் சமைத்தவன் புசிக்கின்றான். இவ்வாறே மற்றைய வினைகளையும் கண்டுகொள்க. இஃது அனுபவசித்தம். இதனால் இம்மையிற் செய்த வினைவிளைவு சஞ்சிதமாய் மனாகாயத்தி லடங்கிநின்று மறுமையிற் பிராரத்துவமாகவில்லையென் றேற்படுகிறது. அதனால் ஒருமையிற் செய்த வினைவிளைவு அப் பிறவியிற்றா னனுபவமாகுமா? அன்றி, மறுமையினும் அனுபவமாகுமா? என்று விசாரிக்கவேண்டிற்று.

இம்மையில் ஒருவன் நயமடையவேண்டுமென்று சங்கற்பித்து அதற்கேற்பத் தொழில்செய்தும் நட்டமடைகின்றான். வேறொருவன் அவ்வாறு செய்து நயமடைகின்றான். மற்றொருவன் சுகமடையவேண்டுமென்று சங்கற்பித்து அதற்கேற்ப முயன்றும் துக்கமடைகின்றான். இன்னொருவன் அவ்வாறே முயன்று சுகமடைகிறான். இவை அனுபவசித்தம். இவ்வாற்றால் செய்தவினை உடனே பயன்றரவில்லை யெனினும் பயன்றந்ததெனினும் மறுதலை காணப்படுதலின் அவ்வியாப்திதோஷமுண்டாகிறது. ஆகவே, இம்மையிற் செய்த வினைவிளைவு முற்றும் உடனுடனே பயனாகின்றதென்பது மறுக்கப்படுகின்றது. படவே, சஞ்சிதமாய் மனாகாயத்தி லடங்கிநின்று மறுமையிற் பிராரத்துவமாகின்ற வினைவிளைவும் இம்மையிற் பலவுண்டென்பது சித்திக்கிறது.

எவரும் முயல்வது இம்மையில் அம் முயல்வின் பயனை நுகருதற்கேயன்றி மறுமையில் நுகருதற்கன்று. ஆனால், இம்மையிலே இப் பயனை யடையவேண்டுமென்று சங்கற்பித்து அதற்கேற்ப முயன்றால் அம் முயல்வின் பயன் இம்மையிற் றப்பாது வருவது நியதியன்றாயின் இம்மையில் யாதானுமோர் பயனை யடையவேண்டுமென்று நிச்சயித்து முயற்சி செய்யக்கூடா தென்றிருக்கிறதே. இங்ஙனமாயின், பயன்கருதி வினை செய்தல் நிலைபேறற்றதாகின்றதே. இவ்வாற்றால், யாதானும் பயன் பெறும்பொருட்டு வினை செய்யலாமா? செய்யலாகாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

சங்கற்ப மிருவகைப்படும். அவை பயன்சங்கற்பம், ஆகாமியசங்கற்பம் என்பனவாம். இவற்றுள் பயன்சங்கற்பமாவது முன் செய்த வினைவிளைவு பயனாதற் கேற்ப உண்டாகுஞ் சங்கற்பமாம். ஆகாமிய சங்கற்பமாவது முன் வினைவிளைவின்றிப் பயனை வேண்டிச் செய்யுஞ்

சங்கற்பமாம். ஆகவே, செய்த வினை உடனே பயனாக நுகரப்படுமாயின் அவ்வினைக்குச் செய்த சங்கற்பம் பயன்சங்கற்பமாம். அங்ஙனஞ் செய்த வினை அப் பயனை உடனே பயவாதாயின் அதற்குச் செய்த சங்கற்பம் ஆகாமிய சங்கற்பமாம். ஆதலின், குறித்த பயனை எல்லா வினையு முடனுடனே தருமென்று நினைத்து வினைசெய்யலாகாதென்பது சித்தம். ஆயின், பயனை யுடன்பெறவேண்டுமென்று நிச்சயிக்காது கொள்ளுஞ் சங்கற்பத்தால் வினையைச் செய்வது நியதியாம் என்பது இதனுலுகித்துணரக்கிடக்கின்றது.

பயன்சங்கற்ப வினை உடனே பயனுமென்று மேற் கூறப்பட்டது. இச் சங்கற்பங் கொள்ளுதற்குரிய நிலையை யுணரின் அச் சங்கற்பத்தை மாத்திரங் கொண்டு எல்லா வினையையும் பயனுக்கிக் கொள்ளலாம். ஆகவும், சீவர்களுக்குச் சங்கற்பங் கொள்ளத் தெரிகின்றதேயன்றி அச் சங்கற்பத்தாற் செய்யப்படும் வினை உடனே பயன்றருமா? தராதா? என்று தெரிகிறதில்லை. இவ்வாற்ருல் சங்கற்பங் கொள்ளத் தெரிந்த சீவர்களுக்கு அச் சங்கற்பத்தால் யாது பயக்குமென்னும் நிச்சயந் தெரியாததற்கு ஏது என்னையோ என்று விசாரிக்கவேண்டிற்று.

மனகாயம் ஞானகாயத்தினுல் இயக்கப்படுகின்றது. ஆகவும், அம் மனகாயம் தனக்கு ஆதாரமான ஞானகாயத்தைத் தஞ்சமென்றியங்காது மூடமான பூதாகாயத்தையே தனக்குத் தஞ்சமென்றியங்குகின்றது. இதனை உலகிலுள்ள விடயங்களில் அலைகின்ற அனுபவத்தால் நன்கு தெளியப்படும். ஞானகாயம் உண்மையை உணர்த்துகின்றதாதலின் அதனை இம் மனகாயம் பற்றின் நிகழுகின்ற உண்மைகள் யாவுந் தெரியும். பூதாகாயம் மூடமுடையதாதலின் அதனைப் பற்றிநிற்கின்ற சீவர்களின் மனதில் உண்மை தெரியாதென்பது எளிதில் விளங்குகின்றது. ஞானகாயத்தைப் பற்றியியங்குகின்ற தத்துவஞானிகளின் மனதில் உண்மை தெரிகிறது. அதனுல் அவர்கள் இன்ன காலத்தில் இன்ன பயன் இவ்வாறு நிகழுமென்று தம் மனதிற் றெரிந்துகொள்ளுகிருர்கள்.

இவற்றுள், முதலாவதாக, ஞானகாயம் உண்மையை உணருமா? உணராதா? என்று விசாரிக்குமிடத்து மனம் உண்மையை மறைக்கத் துணியும்போதெல்லாம் அம் மனதை அச்சுறுத்துவதும் தடுப்பதும் ஞானகாயமாதலின் அந்த ஞானகாயம் உண்மையை உணருமென்பது விளங்குகின்றது. அன்றியும், மனமடங்கித் துயிலும்போதும் ஆன்மாவாகிய தானடைந்த சுகத்தைத் தானே யனுபவிக்கின்றது. இச் சுகவுண்மையை ஞானகாய முணர்ந்திருந்தமையாலன்றோ மனகாயப் புடைபெயர்ச்சி யுண்டாகின்ற அவத்தையாகிய சாக்கிரத்தில் இச் சுகத்தினை வுடன் நான் சுகமாயுறங்கினேனென்று இயக்கிவிடுகின்றது. மனமடங்கி



யிருக்கின்ற சுழுத்தியி லனுபவித்த சுகத்தை மனமனுபவித்ததாகப் புறத்தே கூறினும் உண்மையில் அஃது மனமனுபவித்ததன்று. ஆதலின், இம் மனம் ஞானகாயத்தி னிகழ்ந்த சுகநிலையை அந்த ஞானகாயத்தி னியக்கத்தினுற்றுன் கூறிற்றேயன்றித் தன்னிடத்தில் அச்சுக மனுபவமாகவில்லையென்பது சித்தம். ஆகவே, ஞானகாயமே உண்மையை உணருமென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

இரண்டாவதாக, ஞானகாயம் மனகாயத்தைத் இயக்குகின்றதா? இல்லையா? என்று விசாரிக்கப்படுகிறது. சுழுத்தியவத்தையில் அடங்கி நின்று புடைபெயர்ச்சியின்றி யிருந்த மனம் தன்வயமாக நான் விழிப்பையடைகின்றேனென்று முயன்று விழியாது வானா புடைபெயருத லனுபவமாகலின், இம் மனதை இப் புடைபெயர்ச்சியில் இயக்கிவிட்டது ஞானகாயமென்பது விளங்குகின்றது. ஆதலின், ஞானகாயம் மனகாயத்தை இயக்குகின்றதென்பது சித்தம்.

மூன்ருவதாக, மனகாயம் ஞானகாயத்தா லியக்கப்படுகின்றதா? அன்றித் தன்னு லியங்குகின்றதா? என்று விசாரிக்கப்படுகிறது. மேற் கூறிப்போந்த இரண்டாம் பிரிவின் முடிவினுலும், மற்றைய அவத்தைகளான சாக்கிர சொப்பனங்களில் மனம் தன்வயமின்றி மாற்றப்படுதலானும், அஃதாவது: யானிதுகாறுஞ் சுழுத்தியிலிருந்தேன்; இனி, இதினின்று நீங்கிச் சாக்கிரத்தை அல்லது சொப்பனத்தை அடையவேண்டுமென்ருவது, இதுகாறும் சாக்கிரத்தி லிருந்தேன்; இனிச் சொப்பனத்தையாவது சுழுத்தியையாவது அடையவேண்டுமென்ருவது, இதுகாறும் சொப்பனத்திலிருந்தேன்; இனி இதினின்று நீங்கிச் சாக்கிரத்தையாவது சுழுத்தியையாவது அடையவேண்டுமென்ருவது தான் முயன்றியங்காது, ஒவ்வோர் அவத்தைகளினும் மாற்றப்படுத லனுபவசித்தம். இவ்வாற்ருல், மனகாயம் ஞானகாயத்தா லியக்கப்படுகின்றதென்பதூஉம், தன்வயமாகத் தானியங்குமாற்ற லில்லாததென்பதூஉம் வெளியாகின்றன.

நான்காவதாக, மனகாயம் ஞானகாயத்தை ஆதாரமாகக் கொண்டதா? அன்றித் தானொரு முதலா? என்று விசாரிக்கப்படுகிறது. மனம் சுழுத்தியில் ஒடுங்கும்போது தன்வயமாகத் தன்னிடத்தில் தானொடுங்காமையின் பிறிதொன்றி லொடுங்குகின்றதென்பது சித்தம். அஃதாவது: யானிதுகாறும் விடயங்களின் மொத்துண்டலைந்தேன், இனி இவற்றினின்று நீங்கி என்வசமாக விருத்தல்வேண்டுமென்று அடங்காது ஒடுங்குதலின், தன்னிற்றானொடுங்கவில்லையென்பதூஉம், பிறிதொன்றை யாதாரமாகக் கொண்டு ஒடுக்கியெழுகின்றதென்பதூஉம், அங்ஙனம் ஒடுக்கி

யெழுதற்கு ஆதாரமாகவுள்ளது ஞானகாயமென்பதூஉம், அதனால் இம் மனம் தானோர் முதலன்று என்பதூஉம் வெளியாகின்றன.

ஐந்தாவதாக, மனாகாயம் ஞானகாயத்தைப் பற்றிநின்று அதனை உணருமா? உணராதா? என்று விசாரிக்கப்படுகிறது. மனாகாயம் பூதாகாயத்தைப் பற்றி ஐவகை விடயங்களாலும் அனுபவித்தவையெல்லாம் நிலைபேறின்றி யழிதன்மாலையவாக அனுபவத்திற் காணப்படுதலால் அவ்வாறு பூதாகாயத்தைப் பற்றி நிற்பின் மீட்டும் மீட்டும் அழிகின்ற அனுபவங்களை அடையலாமேயன்றித் தானெடுத்துக்கொண்ட காரியமாகிய இடையறாவின்பத்தை அனுபவித்தல் கூடாதென்பதை யனுபவத்தி லுணரும். அன்றியும், தான் தோன்றுதலும் ஒடுங்குதலுமாகிய இயல்போடிருத்தலானும், என்று மிடையறா இன்பம் நுகரவேண்டுமென்று புடைபெயர்க்கப்படுதலானும் தானாதாரமாயிருக்கின்ற முதற்பொருள் ஒன்று உண்டென்றும், அது ஞானகாயமென்றும் உணர்வுண்டாக நேரிடும். இவ்வுணர்வால் தான் பற்றுக்கோடாக வாழுதற்கு இடையூறான பூதாகாயப்பற்றை விட்டு நிலைபேறான ஞானகாயத்தைப் பற்றி அதனை யுணருமென்பது சித்தம்.

ஆறாவதாக, மனாகாயம் பூதாகாயத்தைப் பற்றி நிற்குமா? நில்லாதா? என்று விசாரிக்கப்படுகிறது. பூதாகாயம் மனத்தா லுணரப்படுவதேயன்றி அஃது மனதைப் புடைபெயரச் செய்வதொன்றன்று. இயங்குந் தன்மையுடைய தான் இயங்காத் தன்மையுடைய பூதாகாயத்தைப் பற்றி நிற்கமாட்டாதென்பது சொல்லாமலே விளங்குகின்றது. ஆயின், இம் மனம் தனது பிரியத்தை நிறைவேற்றுதற்கு இடங்கொடுக்குமென்னுஞ் சங்கற்பமுண்டாய காலத்து மாத்திரம் பூதாகாயத்தைப் பற்றி நிற்கும்; கொடாதிருக்குங் காலத்தில் அப் பூதாகாயத்தைப் பற்றி நில்லாது என்பது அனுபவசித்தம். ஆகவே, தான் வாழுதற்கு ஆதாரமாகப் பூதாகாயத்தைப் பற்றாதென்பதூஉம் தனது சங்கற்பப் புடைபெயர்ச்சியை நிறைவேற்றுதற்கு மாத்திரம் அப் பூதாகாயத்தைப் பற்றிவிடுமென்பதூஉம் வெளியாகின்றன.

ஏழாவதாக, மனாகாயம் பூதாகாயத்தைப் பற்றி விடுமோ? விடாதா? என்று விசாரிக்கப்படுகிறது. மனம் முன் பற்றாதிருந்து பின் பூதாகாயத்தைப் பற்றுகின்றதேயன்றி என்றும் அதனோடு அமைந்துள்ளதன்று. முன் பற்றாது, பின் பற்றுகின்றமையின், முன் விடுபட்டிருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலின், மனாகாயம் பூதாகாயத்தைப் பற்றி நிற்பினும் அதனை விட்டு நீங்குமாற்ற லுடையதென்பது சித்தம்.



எட்டாவதாக, மனாகாயம் தனித்துநின்று உண்மையை உணருமா? உணராதா? என்று விசாரிக்கப்படுகிறது. மனம் தானே தனித்தியங்கும் வல்லமையின்றி ஞானகாயத்தா லியக்கப்படுகின்றமை முன் விளக்கப்பட்டது. அன்றியும், ஞானகாயத்தி லடங்கியிருந் தெழுந்துவருத லனுபவசித்தமாதலின், தான் தனித்துநின்று உண்மையை உணரமாட்டாதென்பது விளங்குகின்றது. ஆகவே, மனாகாயம் தனது முதலாகிய ஞானகாயத்தை உணருதலை விட்டுப் பூதாகாயத்தை யுணர்ந்தனுபவிக்கும்போது தன்னை ஓர் முதலாகக் கருதுகின்றதேயன்றி, அஃது உண்மையில் முதற்பொருளன்றென்பதூஉம், தோன்றியடங்குதலின் உண்மைப்பொருளன்றென்பதூஉம், உண்மைப்பொருளல்லாத இம் மனம் தனித்துநின்று உண்மையை உணரமாட்டாதென்பதூஉம், ஞானகாயத்தின் உதவியைக் கொண்டே உண்மையைக் காணுமென்பதூஉம் தெளிவாகின்றன.

ஒன்பதாவதாக, பூதாகாயம் ஞானகாயத்தை ஆதாரமாகக் கொண்டதா? அன்றா? என்று விசாரிக்கப்படுகிறது. பூதாகாயம் தானோர் முதலாயின் மனாகாயத்தாற் காணப்படினும் காணப்படாவிடினும் தன்னைத் தான் கண்டுகொள்ளு மாற்றலுடையதாதல் வேண்டும். அங்ஙனங் காணுமாற்றல் பூதாகாயத்துக் கின்மையின் அஃதோர் முதலன்றென்பதூஉம், மனாகாயம் உணரும்போதும் உணராப்போதும் உண்டாயிருத்தலின் அஃது நித்தியமான ஞானகாயத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றதென்பதூஉம் எளிதில் விளங்குகின்றன.

பத்தாவதாக, பூதாகாயம் மூடமுடையதா? அன்றா? என்று விசாரிக்கப்படுகிறது. இப் பூதாகாயம் மனாகாயத்தினாலே நன்றென்றாவது தீதென்றாவது உணரப்படுகின்றதேயன்றித் தான் தன்னையேனும் பிறிதொன்றையேனு முணராதிருத்த லனுபவசித்தம். அன்றியும், மனாகாயம் தானியங்குதற்கு ஆதாரமான ஞானகாயத்தை விட்டுத் தன் புடைபெயர்ச்சியால் மாத்திரம் பூதாகாயத்தைக் காணும்போது அப் பூதாகாயம் மனாகாயத்தைக் காணாதிருத்தலானும் இப் பூதாகாயம் மூடமுடையதென்பது சித்தம்.

இப் பத்து விசாரணையினாலும் மூன்றுவகையான ஆகாயங்களின் றன்மைகள் விளக்கப்பட்டன. இவற்றால் பின் விசாரணைகள் ஐயந்திரிபற விளங்கும். அன்றேற் கலக்கமுண்டாம். ஆதலின், இவை ஈண்டு விசாரித்துத் தெளிவிக்கவேண்டிற்று.

வினைப்பயனென்று மேற்கூறப்பட்டது. இதில் வினையாவது யாது? அவ் வினை செய்யப்பட்டாற் பயனாவது எவ்வாறு? அப் பயன் அனுபவமாவது எவ்வாறு? என்று விசாரிக்கப்படுகிறது.

வினையாவது: தான் கொண்ட சங்கற்பம் நிறைவேறவேண்டிக் கவரப்படுகின்ற புடைபெயர்ச்சியின் முடிபாம். அங்ஙனம் செய்யப்படும் வினை மூன்று வகைப்படும். அவை மனவினை, வாக்குவினை, காயவினை என்பனவாம். இவற்றுள், மனவினையாவது குறித்த சங்கற்பம் நிறைவேறுதற்கு இவ்வாறு செய்தல்வேண்டுமென்னும் மனப்புடைபெயர்ச்சியின் முடிபாம். இதனை அரூபவினை யெனவும் கூறுப. வாக்குவினையாவது குறித்த சங்கற்பம் நிறைவேறுதற்கு இவ்வாறு சொல்லல்வேண்டுமென்று மனம் சத்தத்தோடுகொண்ட புடைபெயர்ச்சியின் முடிபாம். இதனை அருவுருவவினை எனவும் கூறுப. காயவினையாவது குறித்த சங்கற்பம் நிறைவேறுமாறு இவ்வாறு செய்தல்வேண்டுமென்று மனம் தேகேந்திரியங்களோ டழுந்திக்கொண்ட புடைபெயர்ச்சியின் முடிபாம். இதனைச் சொரூபவினையெனவும் கூறுப. ஈண்டுக் கூறப்பட்ட முத்திறங்களுமே வினையின் சொரூபமாம். இவ் வினைக்குச் சங்கற்பமே நிமித்தோபாதான காரணமாம்.

வினை பயனாமாறு: மேலோதிப்போந்த வினை முடியுங்காறு முள்ள புடைபெயர்ச்சியினால் எவ்வுயிரின் சங்கற்ப வாழ்வுக்காயினும் எவ்வளவு இடையூறு நிகழ்ந்ததோ அவ்வளவு துன்பமும், எவ்வளவு சுகம் நிகழ்ந்ததோ அவ்வளவு சுகமும் சூக்குமமாக மனாகாயத்தி லடங்கிநிற்கும். இது அகப்பயனெனப்படும். வினை முடிந்து சங்கற்பம் நிறைவேறுதலாலுண்டான மகிழ்ச்சியும் நிறைவேறாததாலுண்டான கவலையும் புறப்பயனெனப்படும். இவ்வாறே வினை பயனாகின்றது.

வினைப்பய னனுபவமாமாறு: இவ்விருவகைப் பயனுள், புறப்பயன் சங்கற்ப ஒற்றுமை வேற்றுமைகளோடு ஏற்றபெற்றி உடனுடனே அனுபவமாகின்றது. அது சங்கற்ப முடிவோடு வினைமுடிவு ஒற்றுமையுடையதாயின் மகிழ்ச்சியும், வேற்றுமையுடையதாயின் கவலையுமாக நுகரப்படும். அகப்பயன் சஞ்சிதமெனப் பெயர்பெற்று, மனாகாயத்தி லடங்கியிருந்து, அப் பிறவியிற்றானே பிற்காலத்தும் பின்னுள்ள பிறவிகளிலும் சங்கற்பத்திற் றொடர்ப்புண்டு பிராரத்துவமாகித் தான் இவ்வனுபவங்களைச் சங்கற்பிப்பினும் சங்கற்பியாதொழியினும் மனாகாயத்திற் கலந்திருக்கின்ற அனுபவங்களை ஞானாகாய மியக்கும்போது அனுபவமாக உறைக்கும். இவ்வாறே அகப்பய னனுபவமாகின்றது.

ஒருவரின் வினைநிகழ்ச்சிக்கண் மற்றொருவரின் சங்கற்ப வாழ்வுக்கமைந்ததும் அமையாததுமான புடைபெயர்ச்சி நேரின் அவ்வுயிர்க்குற்ற சுகதுக்க சங்கற்பமே இவ்வுயிர்க்கு அகப்பயனாக மனாகாயத்தி லடங்கிநிற்குமென்று முன்னர்க் கூறப்பட்டது. இதில், ஒருயிரின் வினைப்



புடைபெயர்ச்சியால் மற்றோருயிருக் குண்டான சுகதுக்கானுபவ சங்கற்பம் அவ்வண்ணமே இவ்வுயிருக் கடையுமாறு எங்ஙனம்? என்று விசாரிக்கப்படுகிறது.

காரணகாரிய தத்துவ நெறிப்படி காரணத்தாலுண்டான காரியம் மீட்டும் காரணத்தி லடங்குகின்றது. உதாரணமாக, காரணமான மண்ணினின்றுந் தோன்றிய காரியமான குடம் உடைந்தழி மீட்டும் மண்ணாகின்றதேயன்றி வேறொன்றாகவில்லை. அதுபோல, பிறவுயிரின் சுகதுக்க சங்கற்பத்திற்குக் காரணமாக எதன் சங்கற்ப புடைபெயர்ச்சி யிருந்ததோ அதனிடத்தே இக்காரியமான சுகதுக்க சங்கற்ப மடங்கவேண்டியதே நியதியாமன்றி, வேறிடத்தடங்க லமையாது. இவ்வாற்றால் ஒருயிர் செய்த வினைநிகழ்ச்சிக்கண் பிறவுயிருக்குண்டான சுகதுக்கானுபவ சங்கற்பம் அவ்வினை நிகழ்த்திய வுயிரின் மனத்தி லடங்கிநிற்குமென்பது அனுபவசித்தமாகத் தெளிவாகின்றது. ஆகவே, அப்பயனை அவ்வுயிர் தனது சங்கற்ப வெளியீட்டிற் றப்பாது நுகருமென்பது சித்தம்.

இங்ஙனம் ஒருயிரின் சுகதுக்கானுபவம் மற்றோருயிரின் மனத்தி லடங்குமென்றால், எவ்வுயிருக்கும் மனாகாய மொன்றேயென் றேற்படுகிறது. படவே, ஒருயிரின் நினைவே மற்றைய வுயிருக்கு முண்டாகவேண்டும். ஒன்றின் நினைவை மற்றைய வுயிரு மறிதல்வேண்டும். அவ்வாறு அனுபவத்திற் காணப்படாமையின் எல்லா வுயிருக்கும் மனாகாய மொன்றா? அன்றா? என்று விசாரிக்கவேண்டிற்று.

ஆன்மப்பிரகாசத்தின் வெளியீடான சலனமே மனாகாயம் என்னுங் கருத்தமைய முன்னுங் கூறப்பட்டது. இவ்வான்மப்பிரகாச வெளியீட்டின் சலனம் ஒன்றேயாம்; பலவன்று. ஆதலின், மனாகாயம் யாவர்க்கு மொன்றேயென்று சித்திக்கிறது. இவ்வாறாயின், ஒரே மனாகாயத்திலிருந்தே யாவர்க்கும் நினைவு புடைபெயர்தல்வேண்டும். இப் புடைபெயர்ச்சி யாவருக்கு மொரேபெற்றித்தாதலும் வேண்டும். அவ்வாறின்றி, ஒவ்வோருயிரும் வெவ்வேறுபட நினைவுகூருகின்றமை அனுபவசித்தத்திற் காணப்படுதலின் இங்ஙனம் வேறுபடுதற்கு ஏதுவுண்டா? இல்லையா? என்று விசாரிக்கவேண்டிற்று.

சிவநிலை வேறுபட்டுத் தான் தான் என்று வேறுபடுத்துதலின் அவ் வேறுபாட்டிற் றொடர்ந்த நினைவும் வெவ்வேறாகத் தோன்றுகின்றது. அஃதாவது: மனாகாய மொன்றாயிருந்தாலும் அதன் சலனசத்தியால் சங்கற்பங்கள் பலவகைப்பட்டு, ஒவ்வோர் சங்கற்பமும் தான்தான் என்றும், அங்ஙனந் தானென்பவை ஒவ்வொரு சீவர்களென்றும் திடங்

கொண்டமையால் பலவேறு வகைப்பட்டுக் காணப்படுகின்றன. ஆயின், ஆன்மசுபாவத்திலுள்ள மனோகாய மொன்றேயென்பதற்கு நியாயம் வருமாறு:—

இம் மனோகாய சங்கற்பத்தினாலே சீவர்கள் பல்வாறு சங்கற்பிக்கினும், அதனாற் பலவேறு வகைப்படினும் எவ்வகைப்பட்ட பிறப்பிலுள்ள சீவர்களாயினும் இடையறாத இன்பத்தை அடையவேண்டுமென்ற ஓரிலக்கிற் புடைபெயராத லனுபவசித்தமாகலின் மனோகாய மொன்றேயென்பதூஉம், சலனசத்தியின் புடைபெயர்ச்சியினாலே பலவேறுவகைப் பட்டனவென்பதூஉம், அவ் வேறுபாட்டால் ஏகத்துவம் மாறி ஒன்றின் நினைவு மற்றொன்றிற்குத் தெரியாதிருக்கின்றதென்பதூஉம் தெள்ளிதிற் புலப்படுகின்றன.

நான் நான் என்னுங் கண்டிதத்தை விடின் ஒரே மனோகாயமாகும். அப்போது வேறுபாடுகளின்றி ஒன்றுதலின் வேறுபட்ட தூலங்களிலுள்ள மனப்புடைபெயர்ச்சிகளை ஒரேபெற்றித்தாக அறிதல் கூடும். நான் என்னும் கண்டிதத்தை அறவே யொழித்த தத்துவஞானிகள் ஞானகாயத்தோடு பொருந்தி மனோகாய நிலையைத் தெளிந்தவராதலின் கூறப்பட்ட சீவர்களுடைய மன எண்ணத்தை அவ்வாறே கண்டு சொல்லுகின்றார்கள். அதாவது, மனோகாயத்தைத் தம்முளுணர்ந்தவராகலின் அம் மனோகாயத்திற் கூறப்பட்ட சங்கற்ப வேறுபாடுகளையெல்லாம் அவற்றிற்கு ஆதாரமான மனோகாயவுணர்ச்சியிற் கண்டு உணருமாற்ற லுடையவராயிருக்கின்றார்கள். அதனாலவர் எவருடைய மனநிலையையும் காணுதல்கூடும்.

இதுகாறுங் கூறிப்போந்த நியாயங்களினால் மனோகாயமொன்றென்பதூஉம், அதன் சங்கற்பவிகற்பமே பலவகைப்பட்டு நான் நான் என்று சீவர்கள் பிரயத்தனப்படுதற் கேதுவாயிருக்கின்றதென்பதூஉம் எளிதில் விளக்கப்பட்டன.

செய்த வினையின் பயன் அனுபவத்துக்கு வந்தே தீருமன்றி, எவ்வாற்றானும் விலக்குதல் கூடாதாகலின், அப் பயன் அனுபவமாயினும், அதனோடு மொத்துண்டலையும் பிறவியை நீக்கிப், பிறவி வாராத நிலையில் நிற்பதற்கு என்பார் "வினைப்பயனை நீக்குதற்கு" என்னாது "வெல்வதற்கு" என்றார்.

இதில், பிறவியிலே நின்று செய்த வினையின் பயனை அனுபவித்துத் தீர்க்கவேண்டுமோ? அன்றி அனுபவியாமல் அறிவுநிலையிலே நின்று தீர்க்கவேண்டுமோ? அன்றி அறிவுநிலையி லனுபவமாகநின்று தீர்க்கவேண்டுமோ? என்று விசாரிக்கவேண்டிற்று.



பிறவிக்கு நிலைக்களமாயுள்ள தேகத்தினின்று அனுபவித்துத் தீர்க்கவேண்டுமாயின், சூக்கும அனுபவங்கள் தேகத்தையின்றி யனுபவப்படுதல் நியதியும் அனுபவமுமாகலின், பிறவியாகிய தேகத்தின் மாத்திரம் நின்று அனுபவிக்கவேண்டுமென்பது அமைவற்றதாகிறது. அன்றியும், சொப்பனாவத்தையில் தூலதேகத்தி னியக்கமின்றியே அஃதியங்கினாற்போன்ற அனுபவங்களை நுகருதல் அனுபவசித்தமாகலின், பிறவியாகிய தூலதேகத்தினின்று மாத்திரம் அனுபவிக்கவேண்டுமென்பது நியதியன்றாகிறது. இவற்றால் பிறவியாகிய தூலதேகத்தின் மாத்திரம் நின்று அனுபவித்துத் தீர்க்கவேண்டுமென்பது மறுக்கப்பட்டது.

அறிவினின்று அனுபவியாமல் நீக்கவேண்டுமெனின், செய்த வினையாண்டும் அனுபவியாமற் போதற்கோர் நியதியின்மையானும், வினையின் முடியே அனுபவமாதலானும், அவ் வனுபவம் சூக்குமமாகிய மனதில் அமைந்திருப்பது நியதியாகலானும் அறிவின் மாத்திரம் தனித்து நின்று அனுபவியாமற் தீர்க்கமுடியாதென்பது விளங்குகின்றது. ஆகவே, அறிவுநிலையில் உறுதிபெற நிற்பினும் மனோசங்கற்பமாகச் செய்த வினையின் பயன்கள் அவ்வந் நியதிப்படி மனோசங்கற்பமாகவே அனுபவித்துத் தீரவேண்டும். அங்ஙனம் அனுபவிக்குங்கால், தூலதேகத்திற் கேற்ற ஆகாமிய நிகழ்ச்சியின்மையினாற் பிறவியின்றிச் சூக்குமமாக வினைப்போகங்கள் அனுபவிக்கப்பட்டுத் தீருமென்பது சித்தம்.

வினைப்பயன் சூக்குமமாக மனோகாயத்தி லனுபவிக்குங்கால், மீட்டும் மீட்டும் தூலதேகத்திற்கேற்ற ஆகாமிய வினையின்றி வினைப்போகங்களை நுகர்ந்து நீக்கவேண்டும் என்பது போதா வெல்வதற்கு என்றார்.

இங்ஙனம் வினைப்போகங்களை வெல்லுதற்கேற்ற சூழ்ச்சி யாதென்று ஆராயுங்கால் மனோசங்கற்பத்தினாலேயே இவைகள் வினையாகி அனுபவமாயின என்றுணர்ந்து அம்மனோசங்கற்பத்தை நிறுத்தி, அதனை அறிவிலொடுக்கி நிற்றல்வேண்டுவதாகிய ஒன்றே பிரபல சுருதிகள் எவற்றினும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றதென்பதை விளக்குவார் நினைப்பது என் அகண் உறுவதல்லால் வேதம் முதலாம் அனைந்தாய நூலகத்தும் இல்லை என்றார். நூலகத்தும் என்னும் இறந்ததழீய எச்சவும்மையினாலே யுத்தி அனுபவங்களும் ஒத்திருக்கின்றன என்பது பெற்றாம். பெறவே, யுத்தியினாலும் அனுபவத்தினாலும் நினைப்பது என் அகண் ணுற்றால் வினைப்போகங்களை வெல்லலாம் என்று விளக்கவேண்டிற்று.

யாதானுமோர் சங்கற்ப மெழாதாயின் வினை யெழுவதில்லையென்பது அனுபவசித்தம். வினை யெழாது தடுக்கின், முன் செய்யப்பட்ட வினைப்போகங்கள் சங்கற்பநிலையி லனுபவிக்கப்படுமேயன்றி மீண்டும் தூலதேகமாகி நின்று அனுபவிக்கவேண்டா என்பது சித்திக்கிறது. இது யுத்தியாகும்.

மனச்சங்கற்பத்தினாலே சங்கற்பித்த வினையையும் அதன் பயனையும் தூலச்செயலின்றி நுகருத லனுபவமாகலின், தூலச்செயலின்றி முன் வினைப்போகங்களும் சங்கற்பமாக நுகரப்படுகின்றமையை அனுபவத்திற் காணலாம்.

சிவகோடிகளை நல்வழிப்படுத்தி, ஆன்மலாபத்திற் புகுத்தவேண்டுமென்னுங் காருண்ணியவயத்தினால் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட நூலாதலின் அதுவே எல்லா நூல்களுக்கு மாதாரமானதென்பதை விளக்குவார் வேதநூலென்னாது வேதமுதனூல் என்றார்.

இத்தனை யுத்தியனுபவங்களால் விளக்கி யனுபவிக்குந் தகுதியில்லாதார்க்குத் தெளிவிக்கும் பொருட்டு வேதங்களை ஆதாரமாகக் கொண்டு யுத்தி அனுபவங்கள் பெரிது மமையத் தத்துவஞானிகளாலே வரையறையாக விளக்கப்பட்ட உபநிடதங்களென்பார் வேத முதலாம் நூல் என்றார்.

இதில் வேதத்தான் மாத்திரம் விளக்குதல் கூடுமாகவும் அவ்வேத சாரங்களை விளங்காதாருக்காக அவர் எளிதில் உணரும்பொருட்டு உபநிடதங்கள் அமைக்கப்பட்டனவாயின் வேதம் விளங்காதார்க்கு உபநிடதம் விளங்குமா? என்னும் ஐயம் உண்டாகிறது. ஈண்டு வேதம் விளங்காதார்க்கு உபநிடதம் விளங்கும் என்னும் நியதி ஏற்படுதலால் அங்ஙனம் விளங்குதல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கவேண்டிற்று.

தத்துவ ஆராய்ச்சி தழைத்து விளங்குவோர்க்கு மாத்திரம் வேதத்திற் கூறப்பட்ட மகாவாக்கியங்களான "தத்துவமசி" முதலியவை எளிதிற் புலப்படும். அவ்வாற்றல் இல்லாதார்க்கு அத்துணைச் சுருக்க வசனங்களால் யாதும் விளக்குதல் கூடாமையானும், அத் தத்துவமசி முதலியவற்றின் பொருளைப் பிரித்து விளக்கிக் காட்டிய உபநிடதங்களின் சாரம் எளிதில் விளங்குமாதலானும், வேதத்தை விளங்குந் தகுதியில்லாதார்க்கு அதன் விரிவாகிய உபநிடதங்கள் விளங்குமென்பது சித்திக்கிறது. ஆயின், யாவர்க்கும் இத்தகைய விளக்கமுண்டாக வேண்டுமென்று ஏற்படாது.

வேதத்தை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட உபநிடதங்கள் மாத்திரமேயன்றிக் கீதைகள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய எல்லா நூல்களினு மென்பதும், வேதவிருத்தமாகச் செய்யப்பட்ட அற்பசுருதிகள் அன்றென்பதும் போதர அனைத்தாய நூலகத்தும் என்பதனோடு வேதமுதலாம் என்று தொடுத்துக் கூறினார்.

சங்கற்பநிகழ்ச்சி தாமதமாகுங்கால், ஆன்மசொரூபமே அனுபவமாக நிற்கின்றமை சித்தம். அவ் வனுபவம் காலாதீதமாக மாறுபடுதலின், மனத்தைச் சங்கற்பசலனமாகாது தடுக்கு மாற்றலில்லாதார்க்கு அவ்



வான்ம சொரூபம் கணப்பொழுதாயினும் அனுபவமாவதில்லை. ஆதலின், மனதின் சங்கற்பவயமாக நின்று வினைகளைச் செய்து பிறவிகளின் தொத்துண்டலைந்து வரவேண்டியது நியதியாகிறது. சங்கற்பத்தை யொடுக்கி அமைதியாக நின்று தனிக்குங்கால் ஆன்மசொரூபம் அனுபவமாதலைக் கண்டு அந்நிலையில் நீடித்து நிற்பின் மனோசங்கற்பத்தால் உண்டாகின்ற நிலைபற்ற அனுபவங்கள் எழா என்பது காணப்படும். அக் காட்சியினால் வினைகளும் அவற்றின் பயனும் சங்கற்பவயமானவை என்பதும், அச் சங்கற்பத்தை எழாதடக்கின் அது காரணமாக முன் வந்த வினைப்போகங்கள் நீடியாது அனுபவித்துத் தீரும் என்பதும் தெள்ளிதிற் புலப்படும். ஆகவே, அந்நிலையில் நின்றால் இவ் வினைப் போகத்தாலாம் பிறவிகளும் அனுபவங்களும் எளிதில் நீங்குமென்பது அனுபவத்திற் கண்டுகொள்ளலாம். இவ் வனுபவ நிலையை வெளிப் படுத்தின் வினைப்போகங்களை வெல்லுதல் ஒருதலை என்பது சுருதி யுத்தியனுபவங்களுக் கியைந்த துணிபென்பார் வினைப்பயனை வெல்வதற்கு நினைப்பதெனக் கண்ணுறுவதல்லால் வேதமுதலா மனைத்தாய நூலகத்து மில்லை என்றார்.

பிறவியினின்று முற்கூறிய அனுபவநிலைக்கண் இருக்குங்கால், முன் வினைப்போகங்கள் மனோசங்கற்பத்திற் சலனமான அனுபவமாகும். அவற்றைச் சங்கற்ப அனுபவமாக அனுபவித்துத் தீரின் மீண்டு சங்கற்பமும் வினையும் பிறவியும் இல்லையாகுமென்பதும், சங்கற்ப மெழாக்கால் ஞானவிண்ணாகவே இருக்க நேரிடுமென்பதும், அவ் விண்ணில் சங்கற்ப முதலியவற்றால் உண்டான வினைப்போகங்கள் சிறிதாயினுந் தீண்டுதற்கு இடமில்லையென்பதும் போதர மெய் விண்ணுறுவார்க்கு விதி யில்லை என்றார்.

விதி உண்டாவது சங்கற்பத்தாலாகலான் அச் சங்கற்பநாசத்தினாலேயே அவ் விதியை நீக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். சங்கற்பத்தை நாசஞ்செய்வது அறிவாகலின், அவ்வறிவே அனுபவமாக நிற்குங்கால், விதி பிறவி வினை என்பவை சிறிதுந் தீண்டாவென்பது நன்கு விளங்குகின்றது.

தேகம் முதலிய விடயப்பொருள் உண்டாதற்கு ஆதாரமான பூதாகாயம் அறிவின் சலனமுடமேயன்றி உறுதியானதொன்றன்று. ஆதலின், அது தோற்றமேயன்றி உண்மையன்றாம். அத்தகைய அநித்திய மின்றி என்றும் ஒரேபெற்றித்தாயிருக்கின்ற ஞானாகாய மென்பார் விண் என வாளா கூறாது மெய் விண் என்றார்.

மேலோதிப்போந்த நியாயங்களினால் பின் பிறவி எடாமலே முன் வினைப்போகங்களை யனுபவித்துத் தீர்க்கலாமென்பது தெள்ளிதிற் புலப்

படுதலின் மீட்டும் பிறந்திறந் துழலவேண்டுமென்று கவலை கொள்ளற்க வென்பார் நெஞ்சே கவலைப்படேல் என்றார்.

பின்னே செய்யப்படும் ஆகாமியநிலையை யொடுக்கினும் முன் செய்த வினைப்போகங்களுக்கு அஞ்சித் தடுமாறுவார்க்கு அப் போகங்களை நுகர்ந்து நீக்கும் உபாயங் கூறி, அவர்களை ஆன்மலாபத்திற் புகுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 38-ம் செய்யுள்.

### அவதாரிகை.

சங்கற்பநாசத்தால் வினைப்போகங்களை அறுக்கலாமென முற் செய்யுளிற் கூறப்பட்டது. ஆயினும், சங்கற்பநாசஞ் செய்தற்கு எவ்வாறு நின்று அனுபவிக்கவேண்டுமென்றும், அவ்வனுபவநிலை எத்தகையதென்றும் இச்செய்யுளில் விளக்குகின்றார்.

### விசாரணைத்தெளிவின் அனுபவம்

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்று
மன்றென்று மாமென்று மாகாதே—நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

இ - ள்: நன்று என்றும் - நன்மை என்றும்,—தீது என்றும் - தீமை என்றும்,—நான் என்றும் - நான் என்றும்,—தான் என்றும் - தான் என்றும்,—அன்று என்றும் - தகாததென்றும்,—ஆம் என்றும் - தகுந்ததென்றும்,—ஆகாது - (சங்கற்ப நியதி) கொள்ளாது,—நின்ற நிலை - (சங்கற்பவிகற்பமின்றித் தனித்து) நின்ற நிலையே,—சம்பு அறுத்தார் - சம்பு என்னும் புல்லை வெட்டினோர்,— யாக்கைக்கு - அதனைக் கட்டுதற்கு,— தேடும் பொருள் போனவா - தேடுகின்ற பொருள் (அப் புல்லையன்றி) வேறு கொள்ளாமைபோல்,—தான் அதுவாம் தத்துவமாம் - தானென்று சண்டிக் கப்பட்டு முன் அபிமானித்த சீவநிலை ஆன்மசொரூபமாக நின்ற உண்மை நிலையாம். எ - று.

நன்று தீது என்பன குணங்கள். நான் தான் என்பவை சுட்டுக்கள். நான் தான் எனத் தன்மையையும் படர்க்கையையுங் கூறியதனால் இனம் பற்றி நீ என்னும் முன்னிலைச் சுட்டையுங் கொள்க. அன்று ஆம் என்பவை வினையின் தகுதி தகுதியின்மைகளை உணர்த்துகின்றன. அது என்னும் முற்றியலுகர வீற்றிலுள்ள உகரங் கெட்டு அதாம் என்றாயிற்று. தத்துவம் - உண்மை. போனவாறு என்பதினீற்றிலுள்ள உகரங் கெட்டு போனவா என நின்றது. சம்பு என்பது வீடுவேய்தற் குபயோகப்படும்



ஓர்வகைப் புல்லாகும். ஏகாரம் தேற்றம். உம்மைகள் எண்ணுப்பொருள. ஆகும் என்பதில் நடுகின்ற குகர உயிர்மெய் கெட்டு ஆம் என நின்றது.

சங்கற்பமெழுங்கால் அதனை நன்றென்று துணியின் அவ்வனுபவத்திற்குரிய வினைகளை முடித்தற்கு முயன்று சகப்பொருட்களைப் பற்றியுழல நேரிடுமாகலின் அச்சங்கற்பம் ஆன்மலாபத்திற் கிடையீடுதரும். அதனால் அங்ஙனங் கொள்ளற்க என்பார் நன்றென்றும் ஆகாது என்றார்.

தீதென்று அதனைத் துணியின் அத்தீமையை நீக்குமாறு சகப்பொருட்களைப் பற்றியுழல நேரிடுமாகலின் அங்ஙனஞ் சங்கற்பித்தலுங் கூடாதென்பார் தீதென்றும் ஆகாது என்றார்.

சங்கற்ப எழுச்சியில் நான் என்னும் அபிமானமுண்டாவதும், அதனால் தான், நீ முதலிய வேறுபாடுகள் காணப்படுதலும் அனுபவசித்தம். ஆயின் நித்தியமாயில்லாது இடையில் நான் என்னுஞ் சங்கற்ப மெழுதலினாலே அது உண்மையாகிய ஆன்மசொரூபத்தைத் தெளிதற்கு இடையூறாகும். ஆதலின் சுட்டிச் சங்கற்பிக்கற்க என்பார் நான் என்றும் தான் என்றும் ஆகாது என்றார்.

நிகழ்காலத்து நேரிடுகின்ற வினை, அனுபவம் என்பவற்றைத் தகாதனவென்று சங்கற்பித்துத் தன்னின் தகுதியானவற்றை ஆராய்ந்து செய்து, அவற்றின் பயனை நுகரவேண்டுமென்னும் வேட்கை மிகுந்து சகப்பொருட்களைப் பற்றியுழல நேரிடும். அதனால் ஆன்மலாபத்திற் கிடையீடாமென்பர் ஆமென்றும் ஆகாது என்றார்.

நிகழ்காலத்து நேரிடுகின்ற வினை அனுபவம் என்பவற்றைத் தகுந்தனவென்று சங்கற்பித்துக் கொள்ளின் அவற்றின் வேட்கைமீதூர்ந்து சகப்பொருட்களைப் பற்றியுழல நேரிடும். அதனால் ஆன்மலாபத்திற் கிடையூறுண்டாமென்பார் ஆமென்றும் ஆகாது என்றார்.

நன்று தீது நான் தான் அன்று ஆம் என்னும் சங்கற்பமும் விகற்பமுமின்றி என்றும் ஒரேபெற்றித்தாய் நிற்குமாறு மிஞ்சிநின்ற நிலையென்பார் ஆகாது நின்றநிலை என்றார்.

இந்நிலையே யனுபவமாயின் நான் என்னுஞ் சங்கற்பம் ஒடுக்கிச் சுட்டிறந்த ஆன்மசொரூபம் அனுபவமாகுமென்பார் நின்றநிலை தானதாந் தத்துவமாம் என்றார்.

சம்புப்புல்லை அறுத்தவர்கள் அதனைக் கட்டுதற்கு அதனின் வேறாய கயிறு யாதுந் தேடாது அப் புல்லையே கயிறாக்கிக் கொள்ளுமாறுபோல, சங்கற்பத்தால் உண்டான நான் என்பதை விசாரித்துத் தன்னினோர்க்குத் தான் என்று முன் அபிமானித்து நின்றதும், தான் என்னுஞ்

சுட்டுப்பொருள் நித்தியமாக இல்லையென்று கண்டதும் ஞானஅறிவேயன்றி வேறன்றென்று தெளிவுண்டாகுமென்பர் சம்பறுந்தார் யாக்கைக்குத் தேடும் பொருள் போனவா தானநாந் தத்துவமாம் என்றார்.

சுழுத்தியினின்றும் சாக்கிராவத்தையிலாவது சொப்பனாவத்தையிலாவது புடைபெயரும்போது நான் என்னும் அபிமானம் உண்டாகிறதேயன்றிச் சுழுத்தியிலிருக்கும்போது அவ் வபிமானம் உண்டாகிறதில்லை. ஈண்டு நான் என்னும் சுட்டிறந்தால் ஆன்மசொரூபம் வெளிப்படுமென்று கூறப்பட்டது. அங்ஙனமாயின், மூடசுழுத்தியிலும் ஆன்மசொரூபம் அனுபவமாகின்றதென் றேற்படுகிறது. அவ்வாறு மூடசுழுத்தியில் ஆன்மசொரூபமாவது மற்றொன்றாவது அனுபவமாகாமையின், நான் என்னுஞ் சுட்டு எவ்வாறு ஒடுங்கினால் ஆன்மசொரூபம் அனுபவமாகுமென்று விசாரிக்கவேண்டிற்று.

மூடசுழுத்தி இந்திரிய ஓய்வுகளால் உணர்வு குன்றி உண்டாவது. அந்நிலையில் அறிவு வெளிப்படாமையின் அறிவாக நின்று அனுபவிக்கவேண்டிய ஆன்மசொரூபம் ஒருசிறிதும் வெளிப்படாது. ஆகவே, சாக்கிரத்திற் றோன்றுகின்ற விடயானுபவங்களை விசாரித்துத் தான் என்னும் எழுச்சியையுந் தெளிந்தால் மிஞ்சிநின்ற மெய்யுணர்வே ஆன்மசொரூபமாக அனுபவமாகும். ஆதலின், உணர்வொடுங்காக்கால் விசாரித்து, அவ் வுணர்வை அறிவிலொடுக்கி ஆன்மசொரூபத்தை அனுபவிக்கவேண்டுமென்பது சித்தம்.

இதில், ஆன்மசொரூபம் புடைபெயர்ச்சியின்றி என்றும் ஒரேபெற்றித்தாயிருப்பதென்று முன் கூறப்பட்டது. இத்தகைய ஆன்மசொரூபமானது விசாரித்துத் தெளிந்து சங்கற்ப எழுச்சியை யொடுக்குங்கால் அனுபவமாதற்கும், விசாரித்துத் தெளியாது சங்கற்பவயத்திற் கலந்து சாக்கிர சொப்பன சுழுத்திகளில் உழலும்போது அனுபவமாகாமைக்கும் காரணம் யாதென்று ஆராயவேண்டிற்று.

முன்னில்லாத சங்கற்பம் பின் தன்மாட்டெழுதலால் முன்னுள்ள தன்னினின்றே இச் சங்கற்பம் எழுகின்றதென்பது அனுபவசித்தம். தான் யாதொரு குறைவுபாடுமின்றி யிருப்பின் தன்மாட்டோர் சங்கற்பமெழக் காரணமில்லை. இன்பம் இடையறாது நுகரவேண்டுமென்னுஞ் சங்கற்பமே சகல உயிர்களிடத்தும் உண்டாகின்ற சங்கற்பங்கள் யாவுக்கும் மூலகாரணமாயிருக்கின்றது. இதனால் தாம் இன்பமயமென்பது சித்தித்தது. இதன் விரிவை முதற்செய்யுளுரையிற் கண்டுகொள்க.

யாதொரு சலனசங்கற்பமுண்டாங்கால், இச் சங்கற்பம் யாண்டையது? யாதின் புடைபெயர்ச்சியாலாயது? என்று விசாரியாது, அதன்வய



மாக அறிவு சலனமாயின் தன்னைத் தானே அஞ்ஞானமாக்கிக்கொண்டதாகும். இதுவே மாயை எனப்படும். இங்ஙனஞ் சங்கற்பங் கொண்டது தானென்றும், தன்னையன்றிச் சங்கற்பம் ஓர் முதலாக எழுவதன்றென்றும் விசாரித்துத் தெளிந்து சங்கற்ப மெழாதடக்கின் தானே ஞானமயமாக நின்று தனது சொரூபத்தை யனுபவித்தல் கூடும். இதனால் தானே அஞ்ஞானம் ஞானம் என்னுமிரண்டிற்கும் அதிகாரி என்பது இனிது விளங்குகின்றது. அஃதாவது: ஆன்மசொரூபத்தில் இரண்டு சத்திகள் இருக்கின்றன. அவை அபின்னசத்தி, பின்னசத்தி என்பனவாம். அவற்றுள் அபின்னசத்தியாவது அறிவை அனுபவமாகி வேறுபாடின்றி அமைப்பதாம். பின்னசத்தியாவது அறிவைச் சலனமாக்கி அதனின் வேறான அனுபவம் போல அமைப்பதாம். இவற்றின் தன்மைகளே இவற்றிற்கு ஆதாரமான ஆன்மசொரூபம் அனுபவமாதற்கும் அனுபவமாகாமைக்குங் காரணமென்பது இனிது விளங்குகின்றது.

தானே ஞானம் அஞ்ஞானம் என்னுமிரண்டிற்கும் ஆதாரமென்பதைத் தெளிந்து சங்கற்ப விகற்பங்களால் உண்டாகின்ற வினை பிறவி நிலையற்ற அனுபவம் என்பவற்றை நீக்கி, உண்மைநிலையை அனுபவமாக உறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 39-ம் செய்யுள்.

### அவதாரிகை.

மேலோதிப்போந்த ஆன்மசொரூப அனுபவத்தை இப் பிறவியில் விளங்கி உறுதிபெற நிற்றற்குரிய காலவரையறையை இச் செய்யுளில் விளக்குகின்றார்.

### சொரூபானுபவ காலநியதி.

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்
முலையளவே யாகுமா மூப்பு.

இ - ள்: முப்பது ஆம் ஆண்டு அளவில் - முப்பதாம் வயதளவில்,—மூன்று அற்று - சகம் சீவர் பரம் என்னும் மூன்று வேறுபாடுகளும் ஒழியப்பெற்று,—ஒரு பொருளை - இம் மூன்றிற்கும் ஆதாரமாயுள்ள பிரமத்தை,—தன்னுள் தப்பாமல் பெறான் ஆயின் - தன்னிலே தவறாது அனுபவிக்கப் பெறானாயின்,—(அவனுடைய பெறுபேறு),—செப்பும் கலை அளவே ஆகும் - (அவன்கற்ற) சாத்திர அறிவின் அளவே ஆகும்,—மூப்பு - (அவனது அறிவின்) முதிர்ச்சி,—காரிகையார் தங்கள் முலை அளவே

ஆகும் - பெண்களது முலை மூப்பினாற் றேய்வடைவதுபோல மூப்பினாற் றேய்வடையும். எ - று.

முப்பதாகும் என்பதில் குகர உயிர்மெய் கெட்டு முப்பதாம் என நின்றது. அற்று என்றதனால் அம் மூன்று பொருட்களும் தோற்றப் பொருளாம் என்பது விளங்கிற்று. அன்றியும், பின்னே ஒருபொருள் என்றதனால் முன்னைய மூன்றும் தோற்றப்பொருள் என்பதும் பெற்றாம். பெறான் என்றதனால் ஒருவன் என்பது வருவித்துரைக்கவேண்டிற்று. செப்பும் கலை என்பது இறந்தகால வினைத்தொகை. அது செப்பிய கலை என விரியும். அளவே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் பிரிநிலை. ஆகும் என்பவற்றிலுள்ள ஆம் என்பவை இசைநிறைப் பொருளில் வந்தன. முப்பதாம் ஆண்டில் என்னாது முப்பதாமாண்டளவில் என்றதனால் அம் முப்பது வயதிற்கு முன்பின்னுள்ள சில வயதுகளும் என்பது விளங்கிற்று. அவ் வயது இருபத்தைந்தின் மேல் முப்பத்தைந்து வரையாமெனக் கொள்க.

மானுடருக்கு நியதிசெய்த ஆயுட்பரப்பில் முப்பதாம் வயதும் அதன் முன்பின்னான சில வயதுகளுமே காயவல்லமை, அறிவுத்திட்பம், சுகநிறைவு, உறுதியுடைமை என்பனவற்றின் சிறப்பு மிகுந்திருக்குங் காலமென்றும், அக்காலத்து உறுதிபெற்ற அனுபவநிலை யாதோ அந்நிலையே ஆயுள்வரை நிற்குமென்றும் வலியுறுத்துவார் முப்பதாமாண்டளவில் பெறானாயின் என்றார்.

ஆன்மலாபமான முத்திபெறுந் தகுதியுடையாரான மக்கள் முயன்று நீக்கவேண்டியவை சகம் சீவர் பரம் என்னும் மூன்றன் வேறுபாடுகளாமென்பார் மூன்றற்று என்றார்.

சகம் சீவர் பரம் என்னும் மூன்று வேறுபாடுகளையும் நீக்கவேண்டுமென்றதனால் அவை உண்மையான பொருளொன்றின் வேறுபாடாமன்றி, தனித்தனியாக முதற்பொருள்களல்லவென்பது விளங்கிற்று. ஆதலின் இம் மூன்று பொருட்களும் தனித்தனியான சத்துப்பொருட்களா? அன்றி இன்னொன்றின் வேறுபாடான தோற்றப்பொருட்களா? என்று விசாரிக்க வேண்டிற்று. சத்தென்பது அநாதிநித்தியமாகப் பொருளாயுள்ளது. சகம் சீவர் என்னும் இரண்டும் கணந்தோறும் கணந்தோறும் வேறுபடுதலாலும், பரம் சீவர்களின்பொருட்டு ஒன்றற்கொன்று மாறுபாடான படைத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பவற்றைச் செய்தலாலும் என்றும் ஒரேபெற்றித்தான சத்துப்பொருட்கள் அன்றென்பது தெளிவாகிறது.

முற்கூறிய சகம் சீவர் பரம் என்னும் மூன்றற்கும் ஆதாரமாய என்றும் ஒரேபெற்றித்தாயிருக்கும் பிரமமென்பார் ஒருபொருள் என்றார்.



ஆன்மலாபத்திற்குத் தடையாயுள்ள அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் என்னும் மூன்றின் பாற்படாது பிரமானுபவத்தை யடைதல் வேண்டுமென்பதும், பூருவவாசனை காரணமாகச் சங்கற்பமுண்டாக, அது காரணமாக உலகானுபவங்களி லற்பமேனும் பற்றுக்கோடு செய்யாது பிரமானுபவத்தில் திடசித்தமாக உறுதிபெற நிற்றலேயன்றி, மற்றைய - அனுபவங்களிற் புடைபெயர்ச்சி யுண்டாயின், இவ்வுண்மை நிலைக்கு இடையூறுமென்பதும், ஏறக்குறைய முப்பதை யடுத்த வயதளவில் மெய்யுணர்வு பெறுதற்குரிய தகுதி நிறைவடைதலும் மேல் தேய்தலு மியல்பாதலின், குறித்த தகுதியமைந்த காலத்தைத் தவறவிடாது பயன்படுத்தி ஆன்மசுகத்தி லமைதல்வேண்டுமென்பதும் போதரத் தப்பாமல் பெறானாயின் என்றார்.

சகம், சீவர், பரம் என்னும் மூன்றன் வேறுபாடும் நீங்கிய வழி மிஞ்சிநின்று பேறடைவது தானாதலால் "ஒரு பொருளைப் பெறானாயின்" என்னாது தன்னுட் பெறானாயின் என்றார்.

இதில் தன்னுட் பெறுவதென்றதனால் - பெறும் பேறு தன்னின் வேறுபட்டதென்று ஏற்படுகிறது. படவே, 'தான் வேறு, பேறு வேறு என்று ஏற்பட்டு அத்துவைதம் சித்தியாமற்போகிறது. போமாயின், 'தானதாந் தத்துவமாம்" என்பதனோடு மாறுபடும். ஆதலின், ஈண்டு தன்னுட் பெறுதலென்பது தன்னையே தான் பேறாகக் கொள்வதா? அன்றி மற்றொன்றைப் பேறாகக் கொள்வதா? என்று விசாரிக்க வேண்டிற்று.

தன்னையன்றிக் காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்னும் மூன்று மின்மையானும், இவை தன்னின் வேறுபட்டனவென்று தன்மாட்டுள்ள அஞ்ஞானத்தினாற் றான் கொள்ளுதலானும், தத்துவ விசாரணையில் இம் மூன்றும் தானென்றே துணியப்படுதலானும், தன்னை யயலாகச் சுகித்தலே முன்னைய மூன்றற்கும் ஏதுவாகலானும், தான் தனக்குச் சம்பந்தமில்லாத பிறிதொன்றை நுகருதல் கூடுமென்றால், ஏகசாதிப்பொருட்கள் பிரிவு நீங்கி ஒன்றோடொன்று ஐக்கியப்படுமேயன்றி விகற்பமான சாதிப் பொருட்கள் எவ்வாற்றானும் ஒன்றோடொன்று ஐக்கியமாகல் கூடாதென்னுந் தத்துவ நியாயத்திற்கு மாறுபடுதலானும், தன்னையே தான் பேறாகக் கொள்ளுத லமையுமென்பது தெளிவாயிற்று.

மனதை யொடுக்கி ஆன்மானுபவத்தை இடையறாது நுகருவார்க்குக் காயவல்லமை, அறிவுத்திட்பம், திடசித்தம், சுகநிறைவு என்பவை தேய்வடையாது விளங்குதல் அனுபவமாகலானும், அந்நுகர்ச்சி யில்லார்க்கு, காலசக்கரத்தின் மொத்துண்ணலானும் விடயங்களா லலைப்புண்ணலானும் உண்மையனுபவமின்றி மேற்சொல்லிய காயவல்லமை, அறிவுத்

திட்பம் முதலியவை தேய்வடைந்து தளர்தலானும், அவரது அறிவு அனுபவவுறுதி பெருது, அவர் தாம் கற்ற நூலிற் சொல்லியவாறு கிளிபோற் கூறுவதையே பேருகக் கொண்டு காலாந்தரத்தில் தேய்ந்தொழிந்து போமேயன்றி யாதும் பயன் தராதென்பதை விளக்குவார் செப்பும் கலையளவே ஆகும் என்ருர்.

மகளிரது தேக உறுப்புக்கள் எத்தனை வல்லமையுடையனவாயிருப்பினும் வயதின் முதிர்ச்சிக் கேற்ப முலை தளர்வடைதல் இயல்பாதல் போல, ஆன்மானுபவமில்லார் ஒருவர்க்குச் சாத்திர உணர்வில் எத்தனை வல்லமை இருப்பினும், முப்பதாம் வயதளவின் மேல் அவரது அறிவின் வல்லமை உயராது தேய்ந்து குன்றுமென்பதை விளக்குவார் முப்பு காரிகையார் தங்கள் முலையளவே ஆகும் என்ருர்.

இதில், முப்பதாமாண்டளவில் ஆன்மானுபவம் பெறத் தவறினுர் அவ்வயதின்மேல் ஆன்மானுபவத்தின் முயன்று பேறுபெறுதல் கூடுமா? கூடாதா? என்று விசாரிக்கவேண்டிற்று. முப்பதாமாண்டளவின் முயலுதல் பல அனுகூலங்கள் அமைந்திருத்தலின் எளிதிற் பேறுபெறுதற் கேதுவாகும். ஆதலின், அக் காலத்தைத் தவறவிடாது முயலுதல் வேண்டுமென்று வலியுறுத்தற்பொருட்டு இங்ஙனங் கூறினுரேயன்றி, மற்றைய காலங்களின் முயலவேண்டா மென்று கூறிற்றிலர். ஆதலின், அறியாமை காரணமாக ஏற்ற இக் காலத்தைத் தவறவிட்டோர், இதன் மேலாயினும் விரைவின் முயன்று அரிதிற் பேறுபெறலாமென்பது சித்திக்கிறது.

தேகவல்லமை நிறைவடைந்திருக்குங் காலத்திலே விடயானுபவங்களை நுகருதும்; அஃதில்லாக் காலத்தில் ஞானத்தின் முயலுதும் என்னும் மயக்கத்தினின்று நீங்கி, ஏற்ற காலத்தில் ஆன்மநிலையை உணர்ந்து அனுபவமாக்கி உய்திபெறவேண்டுமென்று வற்புறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

## 40 ம் செய்யுள்

### அவதாரிகை

இதுகாறும் கூறிப்போந்த உறுதிமொழிகளால் உண்மையை உணர வேண்டியதே நியதி. ஆயினும், இந்நூலிற் சுருக்கமாகக் கூறப்பட்ட தத்துவ ஆராய்வை ஐயந்திரிபுடையார் விரிவாக விளக்கி யுறுதிபெற வேண்டுமாயின், இதன் சாரங்கள் விரிவாகக் கூறப்பட்ட நூல்களிவை யென்றும், அந்நூல்களில் அவற்றைக் கண்டு தெளிந்துகொள்க என்றும் இச் செய்யுளில் வற்புறுத்துகின்ருர்.



### மேற்கோணிலை

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்.

இ - ள்: தேவர் குறளும் - திருவள்ளுவநாயனுர் அருளிச்செய்த திருக்குறளும்,—நால் திருமறை முடிபும் - (இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும்) நான்கு பெருமைவாய்ந்த வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களும்,—மூவர் தமிழும் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநாவுக்கரசுநாயனுர், சுந்தரமூர்த்திநாயனுர் என்னும் மூன்று தத்துவ ஞானிகள் அருளிச்செய்த தமிழ்ப்பாடல்களாகிய தேவாரங்களும்,—முனி மொழியும் - வியாசமுனிவர் அருளிச்செய்த உத்தரமீமாஞ்சையென்னும் பிரமசூத்திரமும்,—கோவை திருவாசகமும் - மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார், திருவாசகம் என்பனவும்,—திருமூலர் சொல்லும் - திருமூலநாயனுர் அருளிச்செய்த திருமந்திரமும்,—ஒரு வாசகம் என்று - (இந்நூலிற் கூறப்பட்ட தத்துவவிசாரணை போன்ற) ஒரே தன்மைத்தான சாரங்களையுடைய நூல்களென்று,—உணர் - நீ அறிவாயாக. எ - று.

உம்மைகள் எண்ணுப்பொருள. தேவர் - திருவள்ளுவர். மூவர் - சைவசமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர், திருநாவுக்கரசுநாயனுர், சுந்தரமூர்த்திநாயனுர் என்னும் மூவர். முனி - வியாசமுனிவர்.

வேதங்களில் ஒன்றன்பின்னென்ருக வான்முறையே கூறப்பட்ட நியதிகள், ஒன்றினும் பார்க்க மற்றையது உயர்வைக் காட்டுதற்கேற்ற பெற்றித்தானவையென்றும், எங்ஙனம் ஆராய்ந்தழியும் முன்னுெபின் முரணின்றிக் கற்பாரை அவ்வந்நிலையினின்றும் மேலோங்கச் செய்யும் பெருமை வாய்ந்தனவென்றும் விதந்து கூறுவார் நான்மறையென வாளா கூருது திருநான்மறை என்ருர்.

இத்துணைப் பெருமைவாய்ந்த நான்கு வேதங்களிலுமுள்ள உண்மை முடிபுகளை ஒன்ருேடொன்று தொடர்புபடுத்தி, சிறந்த முறையானே ஏற்ற விளக்கங்களை ஆண்டுப் பெய்து அவற்றின் நிர்ணயங்களை நன்கு விளக்குகின்ற நூல்கள் உபநிடதங்களாமேயன்றி, வேதத்தின் நியதிகளுக்கு வேறுபட்டவற்றைக் கூறுபவை உபநிடதங்களாகா என்று விளக்குவார் உபநிடதம், மீமாம்சை என்னும் பெயரோடு விளக்காது, வேதங்களோடு தொடர்புபடுத்தி திருநான்மறை முடிபு என்ருர். இக் கருத்துப் பற்றியே தத்துவஞானிகள் உபநிடதங்களை வேதசிரசு, வேதாந்தம் என்னும் பெயர்களால் வழங்குவார்கள்.

இதில், வேதங்களிற் கூறப்பட்ட உண்மை முடிபுகளினாலேயே ஆன்மலாபமடைதல் கூடுமாயின், மேல் அவற்றின் சாரங்களைத் தொகுத்து உபநிடதங்களாகக் கூறவேண்டியதில்லையே. அங்ஙனமாகவும், வேதாந்தம், வேதசிரசு என்னும் நாமங்களால் வேதங்களுக்கு வேறாக நூல்கள் உண்டாக்கப்பட்டிருத்தலினால், வேதங்களிற் கூறப்பட்ட நியதிகள் உறுதியாக ஆன்மலாபத்தைத் தராவென்பது சித்திக்கிறது. ஆதலின், வேதங்களினால் ஆன்மலாப மடைதல் கூடுமோ? கூடாதா? என்று விசாரிக்க வேண்டிற்று.

வேதங்கள், ஒவ்வோர் தகுதியி னிற்பாருக்கும் ஏற்ற நியதிகளை விதித்து, அவ்வவ்வாறே நிற்றல்வேண்டுமென்று சாதிக்கின்றன. அதனால், முற்கூறியதற்கும் பிற்கூறியதற்கும் வேறுபாடு உள்ளதுபோலத் தோற்றும். ஆயின், இவ் வேறுபாடு யாதுபற்றிக் கூறப்பட்டது என்னும் உண்மையை உற்றுநோக்கவேண்டியது அதனைக் கற்றுணருவாரது கடனமையாம். அங்ஙனங் கற்பாருட் பலர் அவ் வேத நியதிகளாற் போந்த பொருளை உற்றுணர்ந்துகொள்ளும் ஆற்றலில்லாராதலின், அச் சாரங்களின் திறங்களை நியாயம், பொருத்தம், சோதனை என்னும் மூன்றற்கும் இயைய ஐயந்திரிபற விளக்கவேண்டியது காருண்ணியமுடைய தத்துவ ஞானிகளின் கடமையாகிறது. ஆகவே, அத் தத்துவஞானிகள் ஆன்மலாபத்திற்குரிய வேதசாரங்களை விவேகமில்லாரும் ஐயந்திரிபற எளிதின் உணருமாறு, உபநிடதங்களாக்கி விளக்கமாக அருளிச்செய்துள்ளார். அன்றி, வேத நியதிகளால் மக்கள் உய்திபெறமாட்டார் என்னுங் கருத்துடன் அவ் வுபநிடதங்கள் அருளிச்செய்யப்பட்டனவல்ல. ஆகவே, வேதங்கள் ஆன்மலாபத்தையே கொடுப்பனவென்பதும், வேதத்தில் ஆன்மலாபம் பயக்கும் நியதிகள் அரும் பெரும் நுட்பமாக உறுத்தப்பட்டிருத்தலின், அந் நுட்பங்களை எளிதின் உணர்த்தும் பொருட்டே உபநிடதங்கள் உண்டாக்கப்பட்டனவென்பதும் தெளிவாகின்றன.

உதாரணமாக: வேதத்தில் ஒரு நியதியில் மது, ஊன் என்பவற்றை நுகர விரும்பினால் யாகஞ் செய்து உண்ணல்வேண்டும் என்று உறுத்தப்பட்டிருக்கிறது. இங்ஙனமே, விரும்பியவற்றை இன்னவாறு செய்து நுகரவேண்டுமென்று முன்னர் வலியுறுத்திப்போந்து, அவற்றின் பின்னுள்ள நியதிகளில், யாகஞ் செய்யினும் மது, ஊன் முதலியவற்றை நுகராது மோர்ந்துவிட்டு நீக்கிவிடல் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இங்ஙனங் கூறிப்போந்ததனால் முற்கூறிய நியதிகளுக்கும் பிற்கூறிய நியதிகளுக்கும் பெரிதும் மாறுபாடு இருப்பதுபோலத் தோன்றுகிறது. தோன்றவே, அம் மது, ஊன் என்பவற்றை உண்ணலாமா? உண்ணலாகாதா? என்னும் ஐயப்பாடுண்டாகிறது. இந்நியதிகளை அதிநுட்பமாக உற்றுநோக்குங்கால், மதுவையும் ஊனையும் முற்றாய் நீக்கி



அவற்றை விரும்பவும் கூடாது என்று உறுத்தப்பட்டதென்றே துணிபாகிறது. இத் துணிபைக் குறைந்த விவேகமுள்ளவர் அறியாது மது, ஊன் என்பவற்றை விரும்பி, யாகஞ்செய்து உண்டு, அவற்றை விடாதிருத்தல் கூடும். இங்ஙனம் இருப்பாரைத் தெளிவித்து உய்திபெறச் செய்யுமாறு உபநிடதங்களில், இவற்றை விரும்பினோர் எவரும் காலகதியில் விடல்வேண்டுமென்பதே வேதத்தின் கோட்பாடு என்றும், பூருவ வாசனை காரணமாக இவற்றை விரும்பி உண்டுவருபவரை உடனே விடும்படி வலியுறுத்தினால் அவற்றை அவர் விடமாட்டார்; அதுவுமன்றி, அதுகாரணமாக வேதத்திலுள்ள மற்றைய நியதிகளை யனுசரிக்கத் தம்மால் முடியுமாயினும் அவற்றையும் அலட்சியஞ்செய்து வேதத்தை யனுசரியாது தீநெறி யொழுகிக் கெட முயல்வர் என்று கருதியே விலக்கப்படவேண்டியவைகளை விரும்பினாரை உடனே அவற்றை விலக்குமாறு வற்புறுத்தாது, அவரின் விருப்பத்திற்கு உடன்பாடு காட்டி, அவரை வேதநெறியிற் புகச்செய்து, அவ் வேதத்திலுள்ள நியதிகளை யனுசரிப்பித்துக் காலகதியில் அவரின் தகாத விருப்பத்தை முற்றாய் விடுவித்தற்கு இங்ஙனம் பூருவபக்கமாகக் கூறப்பட்டதென்றும் தெளிவிக்கப்பட்டன. இதுவே வேத உபநிடதங்களின் தொடர்பென்று கண்டுகொள்க.

இனி, இந் நல்வழியிற் கூறப்பட்ட நியதிகளும், இந் நியதிகளைப் பெரிதும் பொதிந்துள்ளனவாக இச் செய்யுளில் விதந்து கூறப்பட்ட நூல்களிற் கூறப்பட்ட நியதிகளும் ஒரேபெற்றித்தா யிருப்பனவற்றுட் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டுகின்றாம்.

நல்வழி 12-ம் செய்யுளில், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை என்பதற்குத் திருக்குறள் 104-ம் அதிகாரம் 3 ம் குறளில் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர் என்று கூறுதல் அமைகின்றது.

நல்வழி 28 ம் செய்யுளில், உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம் எண்பது கோடி நினைந் தெண்ணுவன என்பதற்குத் திருக்குறள் 104-ம் அதிகாரம் 7 ம் குறளில் ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப கோடியு மல்ல பல என்று கூறுதலமைகின்றது.

நல்வழி 22-ம் செய்யுளில், பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து.........பாவிகா ளந்தப் பணம் என்பதற்குத் திருக்குறள் 101-ம் அதிகாரம் 9-ம் குறளில் அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய வொண்பொருள் கொள்வார் பிறர் என்று கூறுதலமைகின்றது.

நல்வழி 38-ம் செய்யுளில் தானதாந் தத்துவமாம் என்பதற்குத் திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை 29 ம் செய்யுளில் தன்னிற் றன்னை யறியுந் தலைமகன், றன்னிற் றன்னை யறியிற் றலைப்படும் என்று கூறுதலமைகின்றது.

நல்வழி 15 ம் செய்யுளில், சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளுமில்லை என்பதற்குத் திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை 22-ம் செய்யுளில் நமச்சிவாய வென்பாருளரேல் அவர் தமச்சு நீங்கத் தவநெறி சார்தலால் என்று கூறுதல் அமைந்திருக்கின்றது.

நல்வழி 3 ம் செய்யுளில், இடும்பைக் கிடும்பை யியலுடம் பிதன்றே யிடும்பொய்யை மெய்யென் றிராதே என்பதற்குச் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம், திருக்கேதாரத் திருப்பதிகம் 1-ம் செய்யுளில் வாழ்வாவது மாயம் மிது மண்ணாவது திண்ணம், பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான், றாழாதறஞ் செய்ம்மின் என்று கூறுதலமைகின்றது.

நல்வழி 34-ம் செய்யுளில், இல்லானை இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல் என்பதற்குத் திருமந்திரம் 209-ம் செய்யுளில் புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை, யடையப்பட்டோர்களு மன்பில ரானார், கொடையில்லைக் கோளில்லைக் கொண்ட நட்பில்லை, நடையில்லை நாட்டி லியங்குகின்றார்கட்கே என்று கூறுத லமைந்திருக்கின்றது.

இவ்வாறே இந் நல்வழிக்கும் இதற்கு இணையாகக் கூறப்பட்ட நூல்களுக்கும் உள்ள பொருட் சம்பந்தங்களை அவ்வந் நூல்களிற் பார்க்கக் கண்டுகொள்க.

இந்நூலிற் சுருக்கிக் கூறப்பட்ட தத்துவ விளக்கங்களை இன்னும் விரிவாய் அறியவேண்டுமாயின், இதனோடமைந்த இன்ன இன்ன நூல்களிற் பார்க்கக் காணலாம் என்று வற்புறுத்துதலின் இச் செய்யுள் நல்வழியாயிற்று.

முற்றிற்று

## செய்யுள் முதற்குறிப்பு அட்டவணை


| இலக்கம் | செய்புள் முதற்குறிப்பு | செய்யுட் சாரம் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | புண்ணியமாம் பாவம்போம் | பேரின்ப நெறி | 9 |
| 2 | சாதி யிரண்டொழிய | சாதி விளக்கம் | 13 |
| 3 | இடும்பைக் கிடும்பை | யாக்கை நிலையாமை | 18 |
| 4 | எண்ணி யொருகருமம் | உண்மைவிசாரத்தினருமை | 23 |
| 5 | வருந்தி யழைத்தாலும் | ஊழினுறுதி | 29 |
| 6 | உள்ள தொழிய | உலக வாதனை | 33 |
| 7 | எல்லாப் படியாலு | தேக வாதனை | 38 |
| 8 | ஈட்டும் பொருண்முயற்சி | தேட்ட வாதனை | 47 |
| 9 | ஆற்றுப் பெருக்கற் | அறநிலை பிறழாமை | 50 |
| 10 | ஆண்டாண்டு தோறு | சுற்ற வாதனை | 53 |
| 11 | ஒருநாளுணவை யொழி | பசித் துன்பம் | 57 |
| 12 | ஆற்றங் கரையின் | பயிர்த்தொழிற் சிறப்பு | 62 |
| 13 | ஆவாரை யாரே யழிப்பார் | வினைப்போக உண்மை | 70 |
| 14 | பிச்சைக்கு மூத்த | சுயாதீன வாழ்வு | 73 |
| 15 | சிவாயநம வென்று | கன்ம நீக்கம் | 77 |
| 16 | தண்ணீர் நிலநலத்தாற் | உயர்ச்சியின் காரணம் | 86 |
| 17 | செய்தீவினை யிருக்கத் | தெய்வத்தை நோவாமை | 90 |
| 18 | பெற்றார் பிறந்தார் | உலோபத்தின் இழிவு | 95 |
| 19 | சேவித்துஞ் சென்றிரந்துஞ் | சீவனமுயற்சியின் சிறுமை | 100 |
| 20 | அம்மி துணையாக | கணிகையர்கூட்டக் கேடு | 103 |
| 21 | நீரு நிழலு | வஞ்சமிலார்க்கெய்தும் வளம் | 105 |
| 22 | பாடுபட்டுத் தேடிப் | வஞ்சகரின் பேறிழப்பு | 108 |
| 23 | வேதாளஞ் சேருமே | ஊர்ஞ்சொல்வதன் கேடு | 109 |
| 24 | நீரில்லா நெற்றிபாழ் | சிறப்பு நீங்குங் காரணம் | 110 |
| 25 | ஆன முதலி | கடன்படுதலின் கேடு | 114 |
| 26 | மானங் குலங்கல்வி | பசியின் கொடுமை | 116 |
| 27 | ஒன்றை நினைக்கி | அகங்கார நீக்கம் | 117 |
| 28 | உண்பது நாழி | அவாவின் கேடு | 120 |
| 29 | மரம்பழுத்தால் வௌவாலை | நிஷ்காமியத் தவப்பேறு | 121 |
| 30 | தாந்தாமுன் செய்தவினை | துன்பத்திற் கஞ்சாமை | 123 |
| 31 | இழுக்குடைய பாட்டிற் | தூயவை தெரிதல் | 126 |
| 32 | ஆறிடு மேடு | அறிவுறுதி | 127 |
| 33 | வெட்டெனவை மெத்தெனவை | சாத்விககுண மேன்மை | 129 |
| 34 | கல்லானே யானாலுங் | சுயாதீனசீவன மேன்மை | 130 |
| 35 | பூவாதே காய்க்கு | கடைத்தேறுந்தகுதித் திறன் | 133 |
| 36 | நண்டு சிப்பி வேய் கதலி | காமத்தின் கேடு | 135 |
| 37 | வினைப்பயனை வெல்வதற்கு | விசாரணைப் பேறு | 138 |
| 38 | நன்றென்றுந் தீதென்றும் | விசாரணைத்தெளிவினனுபவம் | 156 |
| 39 | முப்பதா மாண்டளவின் | சொரூபானுபவ காலநியதி | 159 |
| 40 | தேவர் குறளுந் | மேற்கோணிலை | 162 |

தப 9437

## எமது வெளியீடுகள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| சோதிட வினவிடை ... ... | 9 | 00 |
| ஜாதக பாஸ்கரன் ... ... | 8 | 00 |
| ஸ்ரீபதி அனுபவ ஜாதகம் .... ... | 2 | 00 |
| பரகிதஸ்புட கணிதம் ... ... | 1 | 50 |
| செகராசசேகரமாலை உரை ... | 3 | 00 |
| சந்தானதீபிகை உரை ... ... | 0 | 75 |
| அரிஷ்ட நவநீதம் (வசனம்) ... | 0 | 36 |
| ஜாதகசந்திரிகை விளக்கச் சருக்கம் ... | 0 | 25 |
| கனவுநூல் உரையுடன் ... ... | 0 | 18 |
| சரநூல் ... ... | 0 | 10 |
| Practical Horoscopy | 3 | 50 |
| Sripaty's Interpretations on Jathaka Chandrika | 1 | 25 |
| Summary of Interpretations on Jathaka Chandrika | 0 | 25 |
| சம்ஸ்கிருத முதலாம் பாலபாடம் ... | 0 | 25 |
| சம்ஸ்கிருத இரண்டாம் பாலபாடம் ... | 0 | 45 |

**சோதிடவிலாச புத்தகசாலை**

**46, பெரியகடை,**

**யாழ்ப்பாணம்.**